
ஒப்புரவு
இ.தியாகலிங்கம்

ஒப்புரவு

OPPURAVU

(A new novel from Norway)

BY

Thiagalingam Ratnam

First Edition
September 2022

ISBN: 978-1-4710-4831-9

Publication Editor
Thiagalingam Ratnam
Vetlandsveien 117
0686 Oslo
Norway
Email: ratnamt67@gmail.com
Pages: 262

Printed & Published by
Lulu

1

விரிந்த கட்டடக் காட்டிற்குள் புதைந்து கிடக்கும் நோர்வே நாட்டின் அறிவாலயம். அதுவே பல ஆயிரம் மாணவர்களின் தினசரி தரிசன அம்பலம். குட்டையாக, நடுத்தரமாக, உயரமாக, ஆண்களும், பெண்களும், சுதேசிகளும், ஐரோப்பியர்களும், ஆசியர்களும், ஆப்பிரிக்கர்களும், மத்தியகிழக்கினருமாகப் பல வர்ணங்களில், பல வடிவங்களில், பல உருவங்களில் ஏரியில் நீந்தும் வாத்துக்கள்போல எப்போதும் ஓய்வின்றி அலையும் மாணவர்களினதும், பேராசான்களினதும் சஞ்சார உலகம்.

பிளின்டரன் பல்கலைக்கழகம் நோர்வேயின் மூளைபோல. மூளை மாத்திரம் உடலிற்குப் போதாது என்பது உண்மை என்றாலும் மூளை இல்லாது உயிர் வாழ்வே இல்லை என்பதும் அதைப் போன்ற மாற்ற முடியாத உண்மையே.

இரண்டு பக்கமும் நின்ற அந்த மாணவப் பேராசான்கள் குழாத்தில்... ஒரு பகுதியினர் அவர்கள் பின்னே எழுந்து நின்ற நீலநிறச் சுவரில் இனி வரும் அமிழ் தண்டூர்தியின் எண்ணும், அது வந்தடையும் நேரமும் பொன்னாய் மின்னிய போதும், தீ மேல் நிற்பதான அவஸ்தையில்… நிலை கொள்ள முடியாத தவிப்பில்… ஏனோ இன்னும் வந்தடையவில்லையே என்னும் ஏக்கத்தில்… அவரவர் திசையில் நீல நிறம் உதயமாகிறதா என்று கடலுக்குப் போன கணவனைத் தேடுவது போலக் கண் வெட்டாது பார்த்தார்கள். காத்திருந்தார்கள். அவர்கள் அந்த நகர அட்டையின் வரவுக்காக நின்ற இடத்தில் சிறு தாண்டவம் ஆடினர்.

அந்தத் தரிப்பிடம் கண்ணாடியால் முகடு கட்டி, சீமேந்தால் நடை கட்டி, மாற்றுத்திறனாளிகள், குழந்தைகள் மற்றும் முதியோரின் வண்டிகள் போன்ற வாகனங்கள் ஏறியிறங்கும் வசதி படைத்ததாக இருந்தது. அது இந்த நாட்டின் அடிப்படை வசதிகளில் ஒன்றாக வரையறுக்கப்பட்டு இருக்கிறது. அதற்கேற்ப ஒழுகும் கண்ணியம் இவர்களிடம் உண்டு.

மனித முகங்களை இழக்கப்பண்ணிய இயற்கையின் கொடூர யுத்த காலம். கவசம் அணிந்த முகங்களின் கண்கள் மட்டும் காட்சியாக.

சுயநலம் பெரிதென எண்ணும் அகங்காரமான சில மனிதர்கள் முகக் கவசங்களை வீசி எறிந்து இயற்கைக்கும் சகமனிதர்களுக்கும் சவால் விடும் அற்பர்களாக… மனித யுத்தங்கள் செய்யமுடியாத சாதனையை இயற்கை செய்து முடித்த யதார்த்தம். உலக யுத்தங்கள் யாவும் இதற்கு முன்பு மண்டியிட்ட பரிதாபம். செவ்வாயில் சென்று இறங்கலாம்… அண்டங்கள் பற்றிக் கனவு காணலாம்… எங்கே சென்றாலும் என் கணக்கிற்கு உள்பட்டதே அற்ப மனித வாழ்க்கை என்கின்ற இயற்கையின் கடுமையான எச்சரிக்கை.

பிளக்க முடியாத நீலக் கடலாக வானம் எல்லையற்று வெளித்துக்கிடந்த நாள். சூரியனைத் தவிர புள்ளினம் போன்ற சில வெண் திட்டுக்களின் வெகுதூர மிதப்புகள் மட்டுமே அது கடல் அல்ல ஆகாயம் என்பதற்கான அடையாளமாக… தடைகள் இல்லாது பூமியை ஊடுருவி இறங்கிய குளிரில் விறைப்புக் கண்ட பனித் துகள்கள். அதில் பட்டுத் தெறிக்கும் சூரிய ஒளியில் அவை வயிரங்களாக…

மொட்டையான மரங்கள் திறந்த வானத்தைப் பார்த்து இளவேனில் காலத்திற்காக அசையாது தவம் செய்யும் கோலம். அகண்ட வளவுகளோடான தனித்தனி வீடுகள் காட்டும் வசதியின் மேட்டிமை. பல்கலைக்கழகம் இருக்கும் இடம் பணக்காரச் சுதேசிகள் குடியிருப்பாக வரையறுக்கப்பட்ட பல இடங்களில் ஒன்று. வெளிறிய காகங்கள் இரண்டிற்குப் பனியிலும் இரைதேடும் ஜீவித தாகம். அதை விரட்டியடித்த வெள்ளைக்கார் ஒன்றின் வேகப் பயணம். தெருவோரத்தில் வீசி எறியப்பட்ட சில முகக்கவசங்களின் காற்றைத் தீண்டும் படபடப்பு.

நீல நீள் அட்டையாகத் தொலைதூரத்தில் தோன்றித் தண்டவாளத்தில் நீந்தி வந்த அமிழ் தண்டூர்தி, உல்லவோல் தாண்டி, யோன் கொல்லத் பிளாஸ்-இல் தரித்து நின்று, மூச்சு விட்டுப் பயணிகளை வெளியே தள்ளி, உள்ளே இழுத்து, கதவை மூடிப் புறப்பட்டு வேகமாக வந்து, பிளின்டரனில் கதவைத்திறந்து மனித மூட்டைகளை வெளியே தள்ளி, உள்ளே இழுக்கும்பொழுது அவன் எங்கிருந்தோ ஓடி வந்து, சிறுத்தை ஒன்று இரையில் சிரத்தை கொண்டு பாய்ந்ததாக உள்ளே பாய்ந்தான்.

'யார் இவன்? அன்னியன்?'

உயர்ந்து வளர்ந்த தளிர் மரம் போல ஐந்தடி எட்டு அங்குலத்தைத் தொடும் அவன் உயரம். கண்ணிற்குத் தீட்டும் மையைவிடக் கருமையான அவன் அடர்ந்த கேசம்.

அவன் முகத்தை அனுமான் முகமாக்கிய வெள்ளை முகக்கவசம். வெள்ளைப் பளிங்கில் பதித்த கரும் பொட்டான அவன் விழிகள். அதிலிருந்து தெறித்துப் பாய்ந்து துளைக்கும் சீரொளிக்கற்றையின் வீச்சு. மரமுந்திரிப் பழம் போன்ற கொழுத்த மூக்காக இருக்குமா என்பது முகக்கவசத்தினூடே தெரியவில்லை. நாற்று நட்ட வயல் போன்று முகக்கவசத்தைத் தாண்டித் தெரியும் தாடி. அதன் ஏற்றத்தில் பிறை வடிவில் தடித்த உதடுகளாய் இருக்குமா? அதனூடே தெறிக்கும் வெண் முத்துக்களான பற்களாக இருக்குமா? மால் நிறமற்ற பளபளக்கும் எலுமிச்சைப்பழ நிறம். கறுப்பு நிற குளிர்கால மேலங்கி. முதுகில் குட்டிக் குரங்காகத் தொங்கிய முதுகுப் பை. தோலினாலான குளிர்கால கறுப்புப் பாதணிகள். இளைமையின் உச்சத்தில் இருக்கும் இளைஞனின் தோற்றம்.

பாய்ந்த சிறுத்தை, பக்குவமாய் கதவருகே இருக்கும் தடுப்பில் கை படாது சாய்ந்து நின்று கொண்டது. தொட்டுணரவே கைகள் என்பது மாறித் தொடாது இருப்பதே நலமாகும் என்கின்ற காலத்தில் அதைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு வாழும் இளைஞன் இவன். பெரும் தொற்று என்னும் வரலாற்றுப் பாடங்கள் இன்று வாழ்க்கையாகிய நிதர்சனம்.

பொதுப் போக்குவரத்துச் சாதனங்களுக்கு உள்ளே முகக்கவசத்தோடு பயணிக்க வேண்டும் என்கின்ற கட்டளையை ஏற்ற பலர். அது தன் நலனிற்கு அல்ல பிறர் நலம் கருதி என்பதை உணர்ந்த சிலர். பிறர் நலம் என்ன என் சுகமே ஏகபோகம் என்று கட்டளையை ஏற்காத சில ஆண்களும் பெண்களும். அதில் சில வெளிநாட்டினர். ஒருவன் வெள்ளை நிறம். அவன் சுதேசியா அல்லது வேற்று ஐரோப்பிய நாட்டினனா என்பது தெரியாத குழப்பம். முகக்கவசத்தை வாய்க்கவசமாக்கிய ஒரு பெண். அவளுக்கு நீலக் கண்கள். பொன்னிறக் கேசம். இளமையை மறுக்காத நிமிர்ந்த மார்புகள். முகக்கவசத்தை நாடிக்குக் கவசமாக்கிய ஒருசிலர். இந்த மனிதர்களின் முகக்கவசமே குழந்தைகளின் கையில் கொடுத்த ஆயுதமாக அதன் இலக்கிற்கு எதிராகச் செயற்படுவதாகவே இருக்கிறது என்பது அவன் எண்ணம்.

முகக்கவசத்தை எப்படி அணிவது எப்படிக் களைவது என்பதை அறிந்தவன் அவன். முகக்கவசத்தின் முன்பாகத்தைத் தொட்டு இழுத்து கீழே இறக்கி… அதே கையால் உணவைப் புசிப்பவர்களைப் பார்க்க அவனுக்குக் குடல் திரண்டு தொண்டைக்குழி வழியே வருவதான அவஸ்தை உண்டாகும். அதைவிட முகக்கவசத்தைக் கழற்றி

கைப்பைக்குள் வைப்பதும் அதை மீண்டும் எடுத்து அணிவதும்… சுத்தம் செய்யாத அதே கையால்… அவன் அருவருப்பின் உச்சத்திற்கே செல்வான்.

மருத்துவமனை ஊழியர்களான மருத்துவர்களும், தாதிகளும் படித்தது பற்றிக் கவலைப்படாது கைக்குச் சுதந்திரம் கொடுத்திருப்பது அவனைக் கதிகலங்க வைத்தது. பெரும் தொற்றிற்கு எல்லோரும் பிழையாக நடக்க வேண்டியதில்லை. ஒன்று பத்தாகப் பெருகும் தொற்று இது. சுகாதார அமைச்சகத்தில் வேலை செய்பவர்கள் பேட்டி கொடுக்கும்போது செய்யும் திருக்கூத்து அதைவிடக் கோமாளித்தனமாக இருக்கும். அதுவும் கொரோனாவுக்கு…? அது அல்பா, பீட்டா, காமா, டெல்டா என்று திரிபுற்று மனித அறிவின் விரிவிற்குச் சவால் விட்டவண்ணம் முன்னேறிக் கொண்டு இருக்கிறது. தடுப்பு மருந்தையும் மீறித் தாக்கும் திறமையைப் பெற்றுக் கொண்ட வலிமை அதனிடம். மனித மூளைக்குச் சவால்விடும் தீநுண்மி *RNA*–இன் தந்திரம். பாரமான மூளையைக்கொண்ட மனித உடம்பு தோற்றுப் போகும் பரிதாபம். அதன் பாதுகாப்பு அமைப்புக்கள் காகித அட்டையில் கட்டிய வீடுகள் போன்று கலைந்து போகும் நிதர்சனம்.

சுரங்க இரத நிறுவனம் அனைத்துக் கதவுகளையும் ஒரே நேரத்தில் தானாகத் திறந்து மூடினால் அது தேய்ந்து விடும் என்கின்றது. வரவு செலவிற்கு முன்பு மனித உயிர்கள் பெறுமதியற்ற செல்லாக்காசாக பலியிடப்படுவது தொழில் மயமாக்கப்பட்ட உலகில் புதுமை இல்லை.

அந்த இளைஞனுக்கு அருகில் ஒரு பொன்னிறக் கேசக்காரி. பருவத்திற்கு ஏற்பப் பள்ளம் மேடுகள் அமைந்த உடம்பு. அவளுக்குப் பச்சைப் பளிங்கான கண்கள். அதன் ஒளி இதயத்தைத் துண்டாடும் கூர்மையோடு வேகமாக வீசப்பட்ட வாளாக… அவள் ஒருமுறை இவனைப் பார்த்தாள். கண்ணும் கண்ணும் வெட்டிய ஒரு நொடி.
முகக்கவசத்தை நீக்கி வாய்க்குள் ஏதோ ஒரு இனிப்பைத் திணித்தாள். பின்பு அதைப் பட்டென்று அதனிடத்தில் இழுத்துவிட்டாள்.
தனது திறன் பேசியை எடுத்துக் குனிந்த வண்ணம் நோண்டத் தொடங்கினாள். அவன் மறுபக்கம் திரும்பிக்கொண்டான்.

முகக்கவசம் அணியக்கூடாது. தடுப்பூசி போடக்கூடாது. கொரோனா விதிகளுக்கு எதிராகக் கொடி பிடிக்க வேண்டும் என்கின்ற மனிதர்களின் மனநிலை அவனுக்கு வேற்றுக் கிரகவாசிகள் பூமிக்கு வந்து கலவரம் செய்ய முயல்வதாகத் தோன்றும்.

அப்படிதானா? பூமியில் ஏற்பட்ட பதட்டத்தை அறிந்து… வந்து… சீ எனக்கேன் இந்த எண்ணம் என்று தன்னை தான் கடிந்து கொண்டான்.

யாரோ சிறிது தூரத்தில் தும்மலை அடக்க முடியாது வெடிக்கவிட, அங்கிருந்து பதட்டத்தோடு பிரிந்து ஒதுங்கிய மனிதர்கள். அதை அனுசரித்துக் கூட்டத்தோடு சேந்து ஒதுங்கிய இவனும்.

வழுக்கி வந்த அமிழ் தண்டூர்தி போர்சிக்னிங்பார்க் நிறுத்தத்தில் தனது வேகத்தைத் தியாகம் செய்து அசைவிழந்து நின்றது. கதவுகள் தானாகத் திறந்துகொள்ளப் பலர் பிரசவித்து குழந்தை எழுந்து ஓடுவது போல அவசரமாக சுரங்க இரத நிறுத்தத்தை நோக்கி ஓடினர். அவனும் அவர்களில் ஒருவனாகப் படிகளில் துள்ளலுடன் தாவி மேலே வந்தான். முதுகில் பிள்ளை போலப் பை தொங்கியது. அவன் வந்து நின்ற இடம் நகரின் மத்திய பகுதியை நோக்கிச் செல்லும் சுரங்கரதங்கள் தரிக்கும் பகுதி.
'யாரிவன்?'
சித்தன்.

சித்தன் என்கின்ற இந்தப் பெயரை வைக்கும்போது எதை நினைத்து வைத்திருப்பார்கள் என்று அவனுக்குத் தெரியாது. சித்தி பெற்றோன், முருகக்கடவுள், அருகன், சிவன், வைரவன், வியாழன், உண்மையுள்ளவன், மாயவித்தை செய்பவன், இலவமரம், காந்தக்கல் என்று பல பொருட்கள் அதற்கு இருக்கிறது. எந்த அர்த்தத்தை நினைத்து இந்தப் பெயரைத் தனக்கு வைத்திருப்பார்கள் என்று அவனுக்கு விளங்கவில்லை.
சித்தி பெற்றோன், முருகக்கடவுள், அருகன், சிவன், வைரவன், வியாழன், உண்மையுள்ளவன், மாயவித்தை செய்பவன்?

சித்தி பெறுபவனாய் இருக்க வேண்டும் என்று வைத்திருக்கலாம். அப்பா அம்மாவிடமே அதைப்பற்றிக் கேட்கவேண்டும் என்பது அவனுக்கு விளங்கியது.

இந்த உலக ஜதார்த்த வாழ்வில் மனிதனால் தரிசிக்கக் கூடிய தெய்வங்கள் அப்பா அம்மாவே. அது சிலருக்குச் சாத்தானின் தரிசனமாவதும் உண்டு. இவ்வுலகில் பலருக்கு அவர்கள் கண்கண்ட தெய்வங்கள். அவர்கள் ஆசீர்வாதம் வேண்டி நிற்கும் அனேக பிள்ளைகள். அதைக்கூடத் தவறவிடும் பிள்ளைகளும் உண்டு. காலம்

ஒற்றைவழிப் பாதை போன்றது. தவறவிட்ட காலங்களை மீண்டும் எட்டிப்பிடிக்க முடியாது. அந்த துக்கத்தை, ஏக்கத்தை, தோல்வி நிலையை, ஆணவம் களைந்து சிந்தித்தால் தவிர்த்துக் கொள்ளல் சாத்தியமாகும்.

சுரங்கரதத் தரிப்பிடத்தில் நேற்றைய மழைக்குப் புதிதாய் முளைத்த காளான்கள் போன்று மனிதர்களின் பிரசன்னம். சுதேசிகள், ஐரோப்பியர்கள், மத்திய கிழக்கினர், ஆசியர், ஆப்பிரிக்கர் எனப் பல வண்ணம், பல கோலங்கள் அதில். இயற்கையின் பரிசோதனைக் கூடத்தில் இலட்சம் இலட்சமான வருடங்கள் பரிசோதிக்கப்பட்டதில் விளைந்த மேன்மையான வடிவங்களாக… இவற்றைக்கூட இறுதி வடிவங்கள் என்று சொல்லிவிட முடியாது. இன்னும் இலட்சம் வருடத்தில் இந்த மனித இனம் எப்படி இருக்கும் என்பது இப்போது யாருக்கும் தெளிவாகத் தெரியாது. சிலவேளைத் திறன்பேசிக்குள் தலையைப் புதைத்துக் கொண்டு அலைவதால் பின் கழுத்தில் கொம்பு முளைக்கலாம். முளைக்குமா? அல்லது கண்கள் உள்ளே போவதும் வெளியே வருவதுமாய் இசைவாக்கம் அடையுமா? கொரோனா போன்ற நோய்களை எதிர்க்க மூக்கு வாயின் அமைப்பு மாறுமா? மாந்தரினப் படிமலர்ச்சி அப்படித்தானே விரிவடைய வேண்டும்? 'இது என்ன எனது கற்பனை?" என்று எண்ணியவன் பின்பு கற்பனைகளாலும் கற்பிதங்களாலும் ஆனதுதானே மனித உலகம் என்று எண்ணினான்.

வெஸ்திலி செல்லும் ஐந்தாம் எண் வருவதற்கு இன்னும் மூன்று நிமிடங்கள் இருப்பதாக மின்காட்சிப்பலகை காட்டியது. உடலின் சூட்டை மெல்லும் குளிரால், வாய்களே புகைபோக்கியான கோலம்.
வாய்ப்புக் கிடைத்தால் நவ துவாரங்களாலும் சூட்டை உறிஞ்சி எடுக்கும் குளிரின் வேட்கை கொண்ட முத்தங்கள். பாதுகாப்பற்று நிர்வாணமாகக் குளிரில் விறைத்து சொர சொரக்கும் திறந்த தோல் பகுதிகள். மறுகரையில் சுரங்க இரதம் ஒன்று வந்து பிரசவித்து, கருக்கொண்டு புறப்பட்டு வேகமாகச் சென்றது. கீழே அமிழ் தண்டூர்தி ஒன்று தன்பணி செய்து செல்லும் ஓசை.

பிளின்டரனில் இருக்கும் சுரங்க இரதத்தரிப்பிலிருந்தும் சித்தனால் பயணிக்க முடியும். அதை விடுத்து இங்கு வந்தும் பயணிக்கலாம். இங்கே வந்து பயணித்தால் முதலாவது பெட்டியில் அவன் நிற்கும் மூலை நிச்சயம் கிடைக்கும். அந்த மூலையின் உரிமையை இழப்பது கர்ணன் கவசகுண்டலங்களை இழந்ததிற்குச் சமனானது என்பது அவன் எண்ணம்.

சித்தன் சுற்று முற்றும் பார்த்தான். சிலவேளைகளில் தொடர் பெட்டியுடன் போகும் இரும்பு இரதம் போலச் சிலர் அவனுடன் பல்கலைக்கழகத்திலிருந்து வருவது உண்டு. இன்று அவன் பெட்டிகள் அற்ற இரும்பு இரதம். தொடர் பெட்டிகளோடு வந்த இரும்பு இரதம் போன்று றிக்ஸ்கொஸ்பிற்றலிலிருந்து மனிதர்கள் வந்திருந்தார்கள். அவர்களுக்கு அருகாக இருக்கும் சுரங்க இரத நிறுத்தம் இதுவே.

சித்தனின் அருகே ஒரு பெண் வந்து நின்றாள். அவளுக்கு இருபது வயது இருக்கும். சுருண்ட பொன்னிறக் கேசம். துளைத்தெடுக்கும் அகண்ட நீலப் பளிங்கான கண்கள். நீண்ட கூரான மூக்கு. இதழுக்கு பளிச்சிடும் சிவப்புச் சாயம். கண்ணிற்கு மையாலான ஒப்பனை. கறுப்பு மேலங்கி, கறுப்பு ஜீன்ஸ், கறுப்பு நீண்ட பாதணிகள். கறுப்பின் காதலியாக இருக்க வேண்டும் என்று சித்தன் எண்ணிக் கொண்டான்.

சித்தனின் மேய்ச்சலை உணர்ந்தவளாக அவனை நோக்கி ஒரு பார்வையை வீசிச் சிரித்தாள். பின்பு கைப்பையிலிருந்து ஒரு முகக்கவசத்தை எடுத்து அணிந்து கொண்டாள். சித்தன் சிரித்ததை அவன் முகக்கவசத்தினூடாகப் பார்க்கும் சக்தி அவளுக்கு இருந்திருக்காது. முகக்கவசங்கள் தீநுண்மிக்கு மட்டும் தடைபோடாது ஆண் பெண் சரசத்திற்கும் வன்மையான தடைபோடும் சிலேடையானது.

சித்தனிற்கு இது மருத்துவம் என்னும் கற்கைக் கற்பத்தின் நான்காவது வருடம். இன்னும் இரண்டு வருடம் படிக்க வேண்டும். அதன் பின்பு ஏதாவது ஒரு துறையைத் தெரிந்து எடுத்து அதில் முன்னேற வேண்டும். குழந்தைகளுக்கு வைத்தியம் பார்ப்பது பற்றி நுணுக்கமாகப் படிக்க வேண்டும் என்பது அவன் இலட்சியம். மருத்துவம் படிப்பது என்றால் பல நாடுகளுக்குச் சென்று படிக்கலாம். பணம் இருந்தால் பட்டம் என்கின்ற காலம் இப்போது உலகம் எங்கும் வியாபித்த உண்மை. கல்வியும் வியாபாரமான கடைநிலை. இருந்தும் வெளிநாடு சென்று படித்தாலும் சமாளிக்கும் விதமாகப் படிப்பதற்குக் கடன்கள்…

சித்தன் அப்படி எங்கும் தன் திறமையை நம்பாது தப்பி ஓட விரும்பவில்லை. தன்னால் முடியும் என்றால் அது இங்கேயே முடியும் என்பதில் முடிவாக இருந்தான். மேற்படிப்பிற்கு வேண்டும் என்றால் வெளிநாட்டிற்குப் போகலாம் என்பதோடு அடிப்படையை இங்கேயே கட்ட வேண்டும் என்பதையும் வரித்துக்கொண்டான்.

சித்தனின் மறுகரையில் சுதேசி ஒருவன் சடுதியாக இருசக்கர மிதிவண்டியில் இடிப்பவன் போல் வந்து நின்றான். கருப்பாக வழிந்த கேசம். முதுகில் ஒரு கனமான பை மனிதக்குரங்கின் குட்டியாக. அகண்ட பழுப்பான விழிகள். அறுவடை காணாத வயல்கள் போன்று வழிக்கப்படாத தாடியும் மீசையும். அவன் நீல மேலங்கியும் கறுப்பு ஜீன்சும் அணிந்திருந்தான்.

குளிர்காலத்தில்கூடச் சிலர் இருசக்கர மிதிவண்டியைப் பயன்படுத்துவார்கள். அதற்கு ஆணி பதித்த சக்கரங்கள் உதவியாக இருக்கும். இப்போது பலர் மின்சார இருசக்கர வண்டிகளையே பயன்படுத்துகிறார்கள். சித்தனும் சிலகாலம் அதில் இலகு சவாரி செய்தான். இரண்டுமுறை விபத்தை முத்தமிட்டுத் தப்பித்ததோடு அந்த எண்ணத்தை அவன் மாற்றிக்கொண்டான்.

ஒஸ்லோவில் இருசக்கர வண்டிகளுக்கான பாதை துண்டு துண்டாக இடையறுந்து போய்விடப் பொதுச் சாலையைப் பாவிக்க வேண்டிய கட்டாயம். அல்லது நடைபாதையில் சவாரி செய்ய வேண்டிய நிர்பந்தம். பொதுச்சாலையில் மின்னல் வேகத்தில் வரும் வாகனங்களுக்கு இருசக்கர மிதிவண்டிகள் தொந்தரவாக வழியை மறைக்கும் ஊரும் ஜந்துக்கள்.
சாலைவிதி குறியீடுகள் துல்லியமற்ற இடங்களில் விபத்துக்கள் வேகமாக எட்டிப் பார்த்துவிடும். இருந்தாலும் பலர் தொடர்ந்து இருசக்கர மிதிவண்டியில் பயணிக்கிறார்கள். இது தனது வீண் பயமோ என்றுகூடச் சித்தன் எண்ணியது உண்டு. இறுதியாக நடுக்கம் இருந்தால் அதைச் செய்யாது விடுவதே மேன்மை என்று அவன் முடிவு செய்து கொண்டான்.

சுரங்க இரதம் விரவிருப்பதை உணர்ந்தவனாக முகக்கவசத்தை அந்த மனிதன் எடுத்து அணிந்து கொண்டான். சுரங்க இரதத் தரிப்பில் குழுக் குழுவாக நின்று கதைப்பதைச் சித்தன் பார்த்து இருக்கிறான். இப்போது தெரிந்தவர் என்றாலும் தள்ளி நின்றே கதைக்க வேண்டும் என்கின்ற எச்சரிக்கை மெது மெதுவாக மக்கள் மனதில் பதியத் தொடங்கிவிட்டது. அது பயத்தால் வந்ததா அல்லது அறிவால் வந்ததா என்பது பற்றிச் சித்தன் ஆராயவில்லை. இரண்டும் காரணமாக இருக்கும் என்பது அவனுக்குத் தெரியும். மரணத்திற்குப் பயப்படாத மனிதர்கள் இல்லை என்பது உலகறிந்த உண்மை. பிறப்பு என்பது ஆரம்பம் என்றால் அதன் பயணம் இறப்பு என்கின்ற முடிவை நோக்கியதே என்பதையும் அவன் அறிவான். அனைவரும் இதை அறிந்திருந்தாலும் மரணம் என்பது தனக்கு நேராது என்கின்ற மாயையில்

வாழும் மனிதர்கள். இங்கு வாழ்பவர்களும் அதற்கு விதிவிலக்கானவர்கள் இல்லை என்பதையும் அவன் அறிவான். தனக்குத் தனக்கு என இருக்கும் வரையும் அனுபவிப்போம் என்பதே இவர்கள் கொள்கை. பலருக்கு இறப்பின் பின்னர் மறுபிறப்பு இல்லை என்கின்ற கல்மேல் எழுத்தான தெளிவு. மறு பிறப்பு என்பது இருப்பதான எந்த ஆதாரங்களும் இல்லாத போது அதை நம்புவது மடமை என்கின்ற கோட்பாடு. மதத்தைத் தவிர ஆராய்ச்சி ஆதாரம் இன்றி ஐரோப்பியர்கள் எதையும் நம்புவதில்லை. எல்லையற்ற நம்பிக்கையோடு வாழ்வது எமது கண்டத்தில் வாழும் மனிதர்களின் இயல்பு. மனிதக் கற்பிதங்களும் கற்பனைகளும் உண்மையாகிவிட முடியாது. அறிந்தவரையில் நிரூபிக்கப்பட்ட வரையில் எது சரியோ அதையே கடைப்பிடிக்க முயல்வது கற்றுணர்ந்த மனிதர்களின் இயல்பு.

சித்தனுக்கும் அப்படியே. பிறந்தது தொடக்கம் அவன் இந்த நாட்டினன் என்று சட்டம் சொல்கிறது. இருந்தும் இலங்கைத் தமிழர்களால் வளர்க்கப்பட்டவன். இரு கலாச்சாரங்கள், இரு மொழி, பல வேளைகளில் இரண்டு தோணிகளில் கால் வைத்ததான அவஸ்தையைத் தரும் வாழ்பனுபவங்கள்.
சனி, ஞாயிறு என்கின்ற ஓய்வு நாட்களிலும், தமிழ்ப் பாடசாலையில் ஓய்வில்லாது சித்தனை இழுத்துச் சென்று படிப்பித்தார்கள். அவர்கள் ஆசைப்படுவதைத் தன்மேல் திணிக்கிறார்களோ என்று அவன் பலமுறை எண்ணியது உண்டு. அவர்களது பாரம்பரிய அடையாளங்கள் பலவற்றை இழந்து, மொழியை மாத்திரம் தமது அடையாளமாக்கிக் கொண்டவர்கள். இருந்தும் இயற்கை இட்ட பணியை அறிந்து கொள்ளாது, அதற்குக் கட்டுப்பட்டு, தானே அப்பா அம்மாவின் வாழ்விற்கான ஒரே இலட்சியமாய் இருந்ததை எண்ணி அவன் அப்படி எண்ணுவது தகுமா என்று கேட்டுக்கொள்வான். தமிழர்கள் தங்கள் சுகபோகங்களைத் துறந்து, பிள்ளைகளுக்காக மட்டும் வாழும் ஒருவித கலாச்சாரத்தைக் கடைப்பிடிப்பவர்கள். பிள்ளைகள் ஒருபக்கம், பெற்றவர்கள் ஒவ்வொரு பக்கமாகப் போகும் போக்கை அவர்கள் பொதுவாகக் கடைப்பிடிப்பதில்லை. சித்தன் தனது தாய் தகப்பனையும், அவனது நண்பர்களின் தாய் தகப்பனையும் பார்த்திருக்கிறான். அதே வேளை பல சுதேச நண்பர்களின் தாய் தகப்பனையும் அவர்களது வாழ்வையும் பார்த்தும் கேட்டும் அறிந்து இருக்கிறான். அது அவர்களின் கலாச்சாரம். அதிலிருந்து மாறுபட்டது தனது தாய் தந்தையரின் கலாச்சாரம் என்பதைக் கண்டிருக்கிறான். தமிழர்களின் உறவு பிரிக்க முடியாதது. பிரிந்தால் பெரும் பகையாவது. சுதேசிகளின் உறவு பட்டதும் தொட்டதுமானது. பிரிந்து போவதும் அவர்களுக்கு இயல்பானதே. தனக்காக வாழும் அப்பா அம்மா ஆசைப்படும் சிலவற்றையாவது செய்ய வேண்டும்

என்கின்ற விசுவாசம் அவன் மனதில் விளைகிறது. அந்த விளைவு அவனுக்குப் பிடித்திருக்கிறது.

மருத்துவம் படிக்க வேண்டும் என்பது பல தமிழர்களின் வாழ்நாள் கனவாக இருந்தது போல அவர்களின் எண்ணமும் இருந்ததோ தெரியவில்லை. அதை அவர்கள் ஒருபோதும் சித்தனிடம் பிரஸ்தாபித்தது கிடையாது. உனக்கு எது பிடிக்கிறதோ அதையே நீ படிக்கலாம் என்கின்ற சுதந்திரம் கொடுத்திருந்தார்கள். சித்தன் மனம் கடலை நோக்கி ஓடும் நதிபோல இயற்கையாகவே மருத்துவத்தை நோக்கியே சென்றது. அதுவே தனக்கு மன சாந்தி தரும் ஒரு துறை என்று அவன் நம்பினான்.

வீட்டிலிருந்து கடன் எடுக்காது மருத்துவத்தைப் படித்து முடி என்றார்கள். அங்கேதான் அவர்கள் சுதேசிகளிடம் இருந்து வேறுபட்டார்கள்.
ஆறு வருடம் எடுக்க வேண்டிய கடன் எதுவும் அவனுக்கு இல்லை. அதைவிடச் செலவிற்கும் பணம் கொடுப்பார்கள். பிள்ளைகளுக்காக வாழ்வதில் அவர்களுக்குத் தனி இன்பம். ஒருவகையில் இயற்கை இட்ட பணியை அறிந்தோ அறியாமலோ செவ்வனே செய்யும் மனிதர்கள். அல்லது இயற்கையிடம் ஏமாந்து போகும் அப்பாவிகள்.

விமானம் தரையிறங்குவதாகச் சுரங்க இரதம் காற்றைப் பிளந்து தண்டவாளத்தில் மிதந்து தரிப்பிற்குள் நுழைந்தது. தயங்கித் தயங்கி கதவில் கைவைக்கலாமா அல்லது உள்ளிருந்து வெளியே வருபவர்கள் திறப்பார்களா என்கின்ற தத்தளிப்பில் சிலர். எதையும் எண்ணாது நடப்பது நடக்கட்டும் என்று விரலை வைப்பவர்கள் சிலராகக் கதவுகள் திறந்து கொள்ளும். அப்படித் திறக்காத பட்சத்தில் கை வைக்காது திறப்பதற்கு என்ன வழி இருக்கிறது என்பது சித்தனின் ஆரம்பக்கால ஆராய்ச்சி. அதற்கு ஒரு பேனாவைப் பயன்படுத்தலாம் என்பதே அவன் முடிவாகியது. அதனால் ஒரு பேனாவை அவன் தனது பையின் பக்கப் பைக்குள் வைத்திருப்பான். தேவைப்படும்பொழுது அதை எடுத்துப் பாவித்துக் கொள்வான்.

இந்தக் கணத்தில் அவசரமாகத் திறந்த கதவு வழியாகச் சுதந்திரம் அடைபவர்களும், சிறைப்பட்டுக் கொள்பவர்களுமாக...

சுரங்க இரதம் மூன்று பெட்டிகளோடு அல்லது ஆறு பெட்டிகளோடு வரும். பொர்சிக்னிங் பார்க்கில் அனேகமாக ஆறு பெட்டிகளோடே வெஸ்திலி மற்றும்

வர்கிறிஸ்தால் செல்லும் சுரங்க இரதம் வரும். அதன் முதலாவது பெட்டியில் முன்னே உள்ள வலக்கைப்பக்க மூலையில் சித்தன் ஏறி நின்று கொள்வான்.
இந்த நடைமுறையை கொரோனா தொடங்கிய காலத்திலிருந்து சூரிய உதயம் போல அவன் கடைப்பிடித்து வருகிறான்.
காற்றில் மிதக்கும் நீர்த்துளிகளைக் கவசமாக்கிப் பிரயாணிக்கும் தீநுண்மிகளிடம் இருந்து தப்பித்துக்கொள்ள இதுவே மிகவும் வாய்ப்பான இடம் என்பது அவன் முடிவு.

சித்தன் தனது கையைச் சுரங்க இரதத்தின் எந்தப் பாகத்திலும் பட்டுவிடாது, விண்வெளி வீரர்கள் செயற்கைக் கோளில் பயணிப்பது போலப் பயணித்து, முதுகைச் சுவருக்கு முட்டுக் கொடுத்த வண்ணம் நின்று கொள்வான்.
தீநுண்மி முதுகுப் பையைத் தவிர வேறு எங்கும் பட்டுவிடாது, தொற்றிவிடாது பாதுகாப்பதான அவன் எண்ணம். தனது விண்வெளிப் பயணத்தை மேற்கொண்டு அந்த மூலையில் தரை இறங்கியதும் அவன் கண்கள் பெட்டியிலிருந்த மனிதர்களைத் தன்னிச்சையாகவே மேயத் தொடங்கியது.

மீண்டும் முகக்கவசம் அவன் மூளையை ஆக்கிரமித்தது. பலர் அதை அணிந்திருந்தனர். அதில் சிலர் ஏதோ கடமைக்கு அணிவது போல அணிந்து இருந்தார்கள். மீண்டும் சிலர் மூக்கிற்குச் சுதந்திரம் கொடுத்து முகக்கவசம் அணிந்திருந்தனர். சிலர் மூக்கிற்கும் வாய்க்கும் சேர்த்துச் சுதந்திரம் கொடுத்து இருந்தார்கள். சிலர் அப்படி ஒன்று இருக்கிறதா என்பது போல இருந்தார்கள்.

சித்தனுக்கு எதிராகக் கதவோடு அகலமான பழுப்புக் கண்கள் பளிங்காக மின்னிடும் ஆறடி உயரம்கொண்ட சுதேசி நின்றான். அவன் உயரம் இராமனின் வில்லுப் போன்று அவனில் ஒரு வளைவை உண்டு பண்ணியதான தோற்றம். பச்சை நிறத்தில் மேலங்கியும் நீலநிற ஜீன்சும் அணிந்திருந்தான். கால்களில் பழுப்புநிறப் பனிக்கால காலணிகள். பொன்னிறமாகத் தகதகத்த கேசம். தாடி தோலுடன் ஒட்டியதாகக் கட்டையாக வெட்டப்பட்டு இருப்பதை முகக்கவசத்தினூடாகவும் பார்க்க முடிந்தது. அவன் எப்பிடி இருக்கிறான் என்பதைவிட அவன் என்ன செய்கிறான் என்பதே சித்தனின் ஒரே கவலையாக இருந்தது. ஏறும்பொழுது அவன் திறன் பேசியில் யாருடனோ கதைத்துக் கொண்டே ஏறினான். ஏறிய பின்பும் ஓய்வின்றிக் கதைத்துக் கொண்டே இருந்தான்.

கதைப்பதால் இந்த தீநுண்மி அதிகம் பரவும் என்பது சித்தனுக்குச் சித்தம் தெளிந்த உண்மை. அந்த உண்மை நிஜமாகும் போது அவனுக்கு அவஸ்தையாக இருந்தது. தப்பி ஓடமுடியாத தற்காலிகச் சிறை இது. இருந்தும் அவன் கதைப்பதைத் தடுக்க முடியாது என்பதும் விளங்கியது. அது தனிமனித சுதந்திரத்தில் தலையிடுவதாக அமையும். அந்த அளவிற்கு யாரும் தங்கள் எல்லையை மீறமாட்டார்கள்.

சுரங்க இரதம் பிளின்டரனில் நின்று மூச்சுவிட்டுப் பறவை இறக்கை விரிப்பது போலக் கதவை விரித்து வெளியே போகும் மனிதரை வெளியே போகவிட்டு உள்ளே வரும் மனிதரை வரவழைத்தது.
மாணவர்கள் கூட்டம் கூட்டமாக இடிபட்ட வண்ணம் வந்து ஏறினார்கள். ஏறியவர்கள் பலர் ஆங்கிலத்தில் கதைத்தார்கள். வெளிநாட்டு மாணவர்கள். மீண்டும் இறக்கையைச் சுருக்குவதாகக் கதவைப் பூட்டி சுரங்க இரதம் அசையத் தொடங்கியது.

சுரங்க இரதப் பெட்டிக்குள்ளே வெளிறிய சுதேசிகள், ஆதியிலிருந்து மாறாத ஆப்பிரிக்கர்கள், முக்காடு போட்ட மத்திய கிழக்குப் பெண்கள், முழுமையாகப் போர்த்திக் கொண்ட சில சோமாலியா பெண்கள், குளிர்காலம் என்றாலும் சல்வார் கமிஸ் அணியும் பாகிஸ்தானியர், ஆசியர் என்று பல வண்ணங்களில், பல உருவங்களில், தீநுண்மிக்கு உதவி செய்யும் நெருக்கத்தில், அடையாளம் இட்ட இடத்தில் நிற்க முடியாது அவஸ்தைப்பட்டார்கள்.

வானம் திறக்கும்போது பூமி மேலங்கியை இழந்த நிர்வாண மனிதனாக விறைக்கின்றது. குளிர் எதிர்மறையாக கீழ்நோக்கிப் பயணிக்கின்றது. கதவு திறக்கும் போது சுரங்க இரதத்திற்குள் ஆலம் சிறகுகளை அது அடர்த்தியாக திடீரென விரிக்கின்றது. கதவு மூடியபின் செயற்கை வெப்பம் அந்த ஆலம் சிறகை உடைத்து எறிகிறது.

சுரங்கத்தில் பயணிக்காத சுரங்க இரதம் மஜர்ஸ்தாவாவை வந்தடைந்து, வேகத்தைத் தியாகம் செய்து, கதவுகளைத் திறந்தது. புற்றைவிட்டு வெளியேறும் எறும்புகள் போலப் பயணிகள் வெளியேறினர். அத்தோடு சித்தனும் வெளியே இறங்கினான். ஊசிக்குளிர் காற்று என்றாலும் சிலகணங்கள் சித்தனுக்கு உள்ளே புகுந்து இதம் தந்தது.

ஐந்தாம் எண் புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்தில் வால் போல மூன்றாம் எண் சுரங்க இரதம் வந்து கதவை விரித்துக் குளிர் காற்றை ஊசி ஏற்றுவதாக உள்ளே விட்டபோது அதனுடன் சேர்ந்து ஆண்கள், பெண்கள், குழந்தைகள், மாணவர்கள் என்கின்ற மனிதர்களின் ஆக்கிரமிப்பு. சித்தனும் அவர்களுடன். ஒருவாறு இங்கேயும் அவனின் மூலை கிடைக்கத் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான். அவனுக்குக் கண்களை மூடிக்கொள்ள வேண்டும் போலிருந்தது. இது துணிவா முட்டாள்த்தனமா?

குழந்தைகளை, வயது குறைந்தவர்களை பெரும் தொற்று அதிகம் தாக்காது என்கின்ற நம்பிக்கையா? கைகளால் தொட்டு அளைந்து அதனால் உணவை உட்கொண்டு... தீநுண்மி ஒரு ஜடம். அது மனிதனிடம் இருந்து மனிதனுக்குத் தொற்றுவதற்கு ஊடகம் தேவைப்படுகிறது. அந்த ஊடகத்தால் தொண்டைக்குழியை அல்லது சுவாசப் பாதையை அடையும் போதுதான் அதனால் செயற்பட முடிகிறது.

ஒவ்வொரு மனிதனின் மூளையும் ஒவ்வொரு விதமானது. அதை ஒன்றோடு ஒன்று ஒப்பிடுவது போல ஒரு மடமை எதுவும் கிடையாது. மூளையின் இரசாயனமும், அதில் பாயும் மின்னோட்டமும் பல விந்தைகள் செய்கின்றன. இது மனிதக் கட்டுப்பாடற்ற இயற்கையின் செயற்பாடு. இதற்காக ஒருவரைத் தூக்கித் தலைமேல் வைப்பதும் மற்றவரைத் தரையில் போட்டு மிதிப்பதும் மனித மடமைகளில் முதன்மையானது. நோபல் விருது என்னும் திருக்கூத்தும் அப்படியானதே. ஐரோப்பியக் கலாச்சார பார்வை மட்டும் அதற்கு விதிவிலக்கானது அல்ல... இலக்கிய உலகின் பரிசுகளும் விமர்சனங்களும் முகமனின் அடிமைகள். பணம் கொடுத்துப் பட்டங்களும் பாராட்டும் பெறுவது தமிழகத்தில் ஒன்றும் புதுமையானதும் இல்லை. இவை உலகத்தின் பல இடங்களிலும் தெரிந்தும் தெரியாமலும் நடப்பனவே. ஆழச் சிந்தித்தால் இரசாயனத்தில் பாயும் தவறான மின்னோட்டத்தில் உற்பத்தியாகும் தன்நல முடிவுகள். மனிதக் கற்பனைகள். அவனின் கற்பிதங்கள். விருதுகள் என்பது ஒரு கற்பிதத்திற்கு இன்னொரு கற்பிதத்தின் கைதட்டல். கற்பிதமே என்பது விளங்காதவன் புளகாங்கிதம் அடையலாம். கற்பிதங்களின் கற்பிதங்கள் காலம் காலமாய் தொடர்வன. மனிதன் அதற்குள் கட்டுண்டு உளர்கின்றான்.

சுரங்க இரதத்திற்குள் ஏறியவர்களில் சிலர் பயணப் பெட்டிகளுடன். அவர்கள் பயணம் செய்துவிட்டு வருகிறார்களா? அல்லது பயணம் செய்யப் போகிறார்களா?

அதில் ஒரு இளம் ஆணும் பெண்ணும். சுதேசிகளாகவும் இருக்கலாம் அல்லது வேற்று ஐரோப்பியராகவும் இருக்கலாம். முகக்கவசம் அணிந்திருந்தாலும்

கண்களால் கதை பேசினர். கைகளைப் பிடித்துக் கொண்டனர். முகக்கவசம் சுவராக அவர்களின் முத்தங்களுக்குத் தடையாகியது.

மனிதன் முதலில் சுயநலமி. அதைக் காப்பாற்றும் அபாரக் கற்பிதங்கள் அவனிடம். பயணம் செய்வது தமது உரிமை என்கிறார்கள். பெரும் தொற்றையும் பயணம் செய்தவர்களே காவி வந்தார்கள்.
காவிச் செல்கிறார்கள். பின் அதைப் பரப்புவதே தெரியாது பரப்புகிறார்கள். அதற்கு ஆதரவாகக் கொடி பிடிக்கிறார்கள். போராடுகிறார்கள். புதுவகைக் கற்பிதங்களை உருவாக்குகிறார்கள். தடுப்பூசிக்குள் தகவல் இயந்திரம் உள்ளது என்கிறார்கள். இணையத்தில் கூடிக் கூடி விவாதிக்கிறார்கள். தெருக்களை மறிக்கிறார்கள். வாகனங்களை நிறுத்துகிறார்கள். தாம் செய்யும் தவற்றினால் இறப்பில் வீழ்கிறார்கள். பின்பு கொரோனா என்று குறையும் சொல்கிறார்கள்.

சுரங்க இரதத்திற்குள் கடல் போன்ற மனிதக்கூட்டம். தண்ணீர் ஊற்று போல தன்னோடு உள்ளே புகுந்த மனிதர்களைப் பார்த்துக் கொண்டு நின்ற அந்தக் கணத்தில் மற்றைய கதவுகளால் என்ன நீரோட்டம் உள்ளே புகுந்தது என்பதை அவன் கவனிக்கவில்லை. கதவுகளைச் சாத்திய சுரங்க இரதம் மஜர்ஸ்துாவாவை விட்டுப் புறப்பட்டது.

எதிரே இருந்த கதவைவிட்டுத் தனது பார்வையைப் பிடுங்கிப் பின்னே எறிந்தான். கூட்டத்தோடு கூட்டமாக அது எப்படி நடந்தது என்று அவனுக்குத் தெரியாது. கடலில் சேரும் நதியைப் போல மனிதக்கூட்டம் சரணடைந்த காட்சி. பெட்டிக்குள் அடுக்கப்பட்ட நெருப்புக்குச்சி போன்ற மனிதத் தலைகள். சுவாசம் முட்டிவிடுமோ என்கின்ற தவிப்பு சித்தனிடம். அதனிடம் இருந்து தப்ப வேண்டும் என்று நினைத்தாலும் காற்றின் சுழற்சி அவன் கற்பனைக்கு இசைய மறுத்தது. அருகில் நிற்பவர்களின் மூச்சுக் காற்று அவனை அண்டிவிடுமோ என்கின்ற பரிதவிப்பு மேலிட்டது.

அப்போதுதான் இரண்டாவது வலப்பக்கக் கதவின் கிழக்கு மூலையில் அவள் நின்றாள். ஐந்தடி ஆறங்குலம் இருக்கலாம். பழுத்த தேசிக்காயின் நிறம்.
அந்தந்த இடத்தில் அங்கங்கள் பொருந்திய வளைவுகளின் திமிர்த்த அழகு. பொட்டு வைக்கும் கறுப்பில் அவள் இடையைத் தாண்டிய சுருள் கூந்தல். நீலத்தில் வெள்ளை கலந்த ஜீன்ஸ். சிவப்பு நிறத்தில் மேலங்கி. கருப்பு தோலிலான குளிர்காலப் பாதணிகள். மென் நீல நிறத்தில் முகக்கவசம். கரு மயில் இறகுக் கண் போன்ற

அகண்ட விழிகள். அதில் உயிரைக் கொல்லும் ஒளியின் தெறிப்பு. அந்தப் பார்வையை அவன் எவரிடமும் இதுவரை சந்தித்தது இல்லை. இதயத்தைப் பிளந்தது போன்ற ஒரு வலி. வலி என்றாலும் பிடித்தமான உணர்வு.

'இது கற்பனை அல்ல… ஏன்…? எனக்கு என்ன நேர்ந்தது…?' என்று அவன் குழம்பினான். இலங்கையாக இருக்கும் சந்தர்ப்பம் அதிகம். அதைவிட இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் என்று வேறு சந்தர்ப்பங்களும் உண்டு. எதுவாக இருந்தாலும் தமிழாய் இருந்தால் நன்றே என்று எண்ணிக்கொண்டான்.

அதையும் மீறி யாராய் இருந்தால் என்ன? இந்தச் சிறிய இரயில் பயணங்கள் வாழ்க்கையை மாற்ற இது ஒன்றும் திரைக்கதை அல்ல… வாழ்க்கையில் காண்பதும் பிரிவதும் எப்போதும் எங்கும் நடக்கிறது. சுரங்க இரதத்தில் காணும் யாரின் முகமும் அடுத்த கணமே ஞாபகம் இருக்காது. கனவிற்கு இருக்கும் காத்திரத்தைவிட அது அற்பமானது.

சுரங்கத்திலிறங்கிய சுரங்க இரதம் நசுனால்தியேட்டரை நோக்கிப் பறக்கும் குதிரை போலப் பயணிக்கத் தொடங்கியது. பெட்டியிலிருந்த மனிதர்கள் மறைந்து போயினர். அவர்கள் அவன் நினைவிலிருந்து துடைத்து எடுக்கப்பட்டது போல இருந்தது. அர்ச்சுனனுக்குத் தெரிந்த குருவி போலச் சித்தனுக்கு அவள் மட்டுமே தெரிந்தாள். கண்டதும் காதல் என்கின்ற தமிழ்த் திரைப்படப் புல்டாவை அவன் நம்புவதில்லை. இருந்தும் இந்தக் கணத்தில் தனக்கு என்ன நடக்கிறது என்பதை நிதானிக்க முடியாத தவிப்பில் அவன் கைகள் வியர்த்தன. இதயம் அலறியது. இடைக்கிடையே அது சந்தம் தவறித் துடித்தது. சுவாசம் சூடாக மேலோட்டமாக வந்தது.

துணையாக… தோழியாக… அவளை அவன் ஒரு கணமும் மனதில் இதுவரை எண்ணியது இல்லை. இருந்தும் ஏன் இந்தத் தடுமாற்றம்? இது அவன் என்றும் சந்தித்திராத பிறழ்வு. அவனுக்குத் தன்மீதே ஒருவித வெறுப்பு வந்தது. எண்ணங்களின் குழப்பம் பயணங்களைக் குழப்பிவிட முடியாது என்பதாகச் சுரங்க இரதம் தரை தட்டும் விமானம் போலச் சென்றது. கண்ணை மூடிக்கொள்வதால் எதுவும் மாறப் போவதில்லை. 'யாரிவள்?' இதற்கு முன்பு ஒருபோதும் சித்தன் அவளைக் கண்டதில்லை. ஆயிரக்கணக்கான தமிழர்கள் ஒஸ்லோவில் மட்டும் வாழ்கிறார்கள்.

ஒஸ்லோவில் வாழ்ந்தாலும் வாழ்நாள் முழுவதும் சந்திக்காமல் பல மனிதர்கள் வாழ்ந்து மடிகிறார்கள். அவர்கள் யார் என்பது எமக்கும் தெரியாது. நாம் யார் என்பது அவர்களுக்கும் தெரியாது. அப்படியானவர்களில் ஒருத்தியே இவளும் என்று சித்தன் எண்ணினான். இது ஒரு ஒற்றைச் சந்திப்பு என்று எண்ணியவண்ணம் ஒருமுறை அவளைப் பார்த்தான். அவளும் மீண்டும் சித்தனைப் பார்த்தாள். அவள் கண்ணின் ஒளி வயிரத்தால் கண்ணாடியை அறுப்பது போன்ற கூர்மையோடு பாய்ந்தன. சித்தன் மீண்டும் நடுங்கினான். அவள் சிறிது நேரம் குறுகுறுப்பாய் பார்த்துவிட்டு தனது பார்வையை விலக்கிக்கொண்டாள்.

இவளுக்கு என்ன பெயராக இருக்கும்? குமுதினி, வினோதினி, செல்வி, மலர், அனித்தா... பெயர் மனிதனைத் தற்காலிகமாக இந்த உலகில் அடையாளப்படுத்துகிறது. பெயரற்ற பூதவுடல்களால் இந்த உலகு ஆக்கிரமிக்கப்பட்டு இருந்தால்? இருந்தும் பூதவுடல் போன பின்பு பெயர் என்னவாகிறது? உலகமயமாக்கல் பெயர்களையும் இன்று விட்டு வைக்கவில்லை. எந்த மொழி கதைப்பவளும் எந்தப் பெயரையும் வைத்திருக்கலாம். என்றாலும் அவளைப் பார்க்கத் தமிழாகவே இருக்க வேண்டும் என்கின்ற எண்ணம் சித்தனிடம் உண்டாகியது.

'இது என்ன பார்வை? இதயத்தைத் துண்டாக்கிப் போடும் கூர்மையான வாளை எறிவது போல...' சித்தனுக்கு மீண்டும் போன மூச்சு வந்தது போல இருந்தது. அவளை மறந்துவிட்டு கதவினூடே வெளியே மட்டும் பார்க்க வேண்டும் என்று சித்தன் முடிவு செய்து கொண்டான்.

மஜார்ஸ்துாவாவில் அவர்கள் ஏறியது சித்தனின் பார்வைப் பரப்பிற்குள் அகப்படவில்லை. அவசரம், பயம், இடைவெளி என்கின்ற எண்ணங்கள் அவன் மூளையை நிறைத்து இருந்தன. அப்போது அடுத்த கதவால் ஒரு பெண்ணும் அவளைச் சுற்றி மூன்று சிறுவர்களும் ஏறியிருக்கிறார்கள். அவர்கள் எதேச்சையாகச் சித்தன் நின்ற மூலைப்பக்கம் வந்து தடுப்பைத் தாண்டி இருந்த ஆசனத்தில் அமர்ந்தார்கள்.

சித்தனுக்கு அவர்கள் உறவுமுறை முதலில் தெளிவாகவில்லை. பிள்ளைகளாக இருக்கலாம் என்பதே அவன் முதல் எண்ணம்.
அல்லது அவள் அவர்களின் பாதுகாவலராக இருக்கலாம். இளமை கழிந்து முதுமை தாவும் உரமான உடல் அவளுக்கு. மெலிவுக்கும் பருமனுக்கும்

இடைப்பட்ட உருவம். பச்சைப் பளிங்கான அகண்ட கண்கள். வாழைத் தண்டு போன்ற வழவழப்பான கைகள். பொன்னிறக் கேசம். வெள்ளை நிறத்தில் முகக்கவசம்.

அவளுடன் வந்த சிறுவனுக்குப் பன்னிரண்டு வயதிருக்கும். ஸ்கண்டிநேவியரின் அச்சாகப் பொன்னிறமாய்த் தகதகத்தான். ஆழக்கடலின் நீலத்தில் கண்கள். மெல்லிய உருவம். வழிந்த பொன் கேசம். பற்களை ஒழுங்கு செய்ய கிளிப். நீல நிறத்தில் மேலங்கியும் ஜீன்ஸ்சும்.

அவளோடு இரண்டு சிறுமிகளும் இருந்தார்கள். ஒரு பெண் பத்துவயதுச் சிறுமி. தலைமயிர் ஆசியர்களைப் போலக் கறுப்பாக இருந்தது. பழுப்புநிற பளிங்குக் கண்கள். குட்டி வாழை போன்ற மெல்லிய உடல். அந்நிய விழிகளுக்கு அஞ்சும் வெருட்சியான பார்வை. இடைக்கிடையே கசியும் கள்ளச் சிரிப்பு. இளம் சிவப்பு நிறத்தில் மேலங்கி. நீலநிறத்தில் ஜீன்ஸ்.

அவளது சகோதரிக்கு ஒன்பது வயது இருக்கும். அவள் அண்ணனைப் போன்று பொன்னாகத் தகதகத்தாள். பச்சைப் பளிங்கான அகண்ட விழிகள். தாயின் பிரதி போன்ற தோற்றம் என்றாலும் கொடி போன்ற உடல். அக்காவைப் பிரதி எடுத்ததான ஆடை அலங்காரம். ஓயாத மந்தகாசச் சிரிப்பு.

அவர்கள் இருந்த ஆசனத்தில் மொத்தமாக ஆறு நபர்கள் இருக்கலாம். அவர்களோடு ஒரு சோமாலியா ஆண் இருந்தான். அவன் கையில் ஒரு செபமாலை இருந்தது. அந்த மாலையின் காய்களை ஒவ்வொன்றாக நகர்த்தியவண்ணம் ஏதோ வாய்க்குள் சொல்லிச் சொல்லிப் பிரார்த்தனை செய்துகொண்டு இருந்தான்.

சித்தனுக்கு திடீரென அந்தத் தமிழ் பெண்ணைப் பார்க்க வேண்டும் என்கின்ற எண்ணம் ஏற்பட்டது. 'சீ என்ன அற்பமான சபலம்? எங்களைப் போன்று இரண்டு கலாச்சாரத்திற்குள் நசிபடுபவர்களுக்குத்தான் இது உண்டாகுமா? அல்லது தமிழர்களுக்கு மட்டுமா?

அன்றில் உலகத்து அனைத்து ஜீவராசிகளும் இப்படிதானா?' சித்தனால் அதற்கு மேல் சிந்திக்க முடியவில்லை. மென்பொருளின் கட்டளைகளுக்குப் பணியும் இயந்திர மனிதன்போல் அவன் பார்வை அவளை நோக்கித் திரும்பியது. அவள் இவனைப் பார்த்துக்கொண்டு நின்றாளா? அல்லது எதேச்சையாகப் பார்த்தாளா?

சித்தனுக்கு ஒருகணம் மின்னல் தாக்கியதான அவஸ்தை. உடல் தீப்பற்றியதாக தகதகத்தது. அதன் உக்கிரம் தாங்க முடியாது ஒருவித வெட்கத்தோடும் அவமானத்தோடும் அவன் தனது பார்வையைச் சட்டெனத் திருப்பிக்கொண்டான்.

அடுத்த கணம் அவனுக்கு அவளை மீண்டும் பார்க்க வேண்டும் என்று கொதிக்கும் பால் போன்று பொங்கி எழுந்த அடக்க முடியாத அவா. 'பார்ப்பது என்ன கொலைக்குற்றமா?' என்கின்ற கேள்வி அவனுள். 'அதுவும் இங்கே?' அவன் மீண்டும் துணிவைத் திரட்டி எடுத்து மனித இயந்திரத்திற்கு அதை ஊட்டி, தலையைத் திருப்பி அவளைப் பார்த்தபோது, அவள் முன்னே இருந்த கதவினூடே வெளியே ஏதோ கடுமையான சிந்தனையோடு முறைத்துக்கொண்டு நின்றாள். அது அவனுக்கு அவகாசத்தோடு அதீத துணிவையும் கொடுத்தது. அவன் அவளை மீண்டும் பார்த்தான். மிதப்பும் வாளிப்பும் நிறைந்த அவள் வெளித்தோற்றம் பார்ப்பதற்கு அவனுக்கு மகிழ்வை ஊட்டியது. மனக்களிப்பை மழைபோல அள்ளி அவன்மீது கொட்டியது. அவள் யார் என்றே தெரியாது, என்ன மொழி பேசுவாள் என்பதும் தெரியாது, இருந்தும் உருவத்தைப் பார்த்து அவள் தமிழ் என்கின்ற கற்பனை அவனிடம் மேலும் வளர்ந்தது. பொட்டு வைத்திருப்பதால் மதம் தனக்கும் அவளுக்கும் இடையூறாகாது என்கின்ற நம்பிக்கை மலர்ந்தது.

வெளித்தோற்றம் ஒன்று மட்டும் அல்ல மனிதன். புறம் ஒன்று. அகம் மற்றையது. புறத்தைவிட அகமே நீண்டகால இணைவுக்கு அத்தியாவசியமானது. அது பிழைத்தால் புறத்தின் அழகு உப்பில்லாப் பண்டமாய்க் குப்பைக்குத்தான் போகவேண்டும்.

புறத்தை இந்த ஊனக்கண்களால் சில கணத்தில் பார்த்துவிடலாம். மூளையின் சுரப்பு கூடினால் அவளின் ஒவ்வொரு அசைவையும் வாழ்நாள் பூராகவும் பார்த்துக்கொண்டு இருக்கலாம் என்று தோன்றலாம். சேர்வதற்கு அகமும் சரியாக இருக்க வேண்டும்.
அகம் பிழைத்தால் புறம் எப்படி இருந்தாலும் தெறிப்பும் தெவிட்டலும் சட்டென்று குறுக்கே வந்துவிடும்.

சித்தனுக்கு இவளின் அகம் எப்படி இருக்கும் என்று தெரியாது. அதைத் தெரிந்து கொள்ளும் சந்தர்ப்பம் தனக்குக் கிடைக்குமா என்பதையும் அறியான். அறிய வேண்டும் என்கின்ற ஆசை நெஞ்சம் பூராகப் பூத்து, அந்த நந்தவனத்திற்குள் இதயத்தைச் சிறை வைத்ததான அவஸ்தை அவனுக்கு ஏற்பட்டது.

அவளிற்கு யாரோ தன்னைப் பார்ப்பதான உணர்வு வந்திருக்க வேண்டும். சட்டெனச் சித்தனை நோக்கித் திரும்பினாள். சித்தன் இந்த மின்னல் வெட்டை எதிர்பார்க்கவில்லை. அவன் அந்த மின்னல் வெட்டின் அதிர்ச்சியில் என்ன செய்வது என்று அறியாது விறைத்துப்போய் நின்றான். சட்டென அவள் வந்து 'என்னை ஏன் இப்படிப் பார்க்கிறாய்?' என்று கேட்டால் அவனுக்கு நா எழாது பிண்டம் உறைந்து சிலையாகும் என்பது தெரியும். இல்லை என்றால் வியர்த்துக்கொட்டி மயக்கம் வரலாம் என்பதும் தெரியும். அப்படி யாரும் செய்துவிடமாட்டார்கள் என்கின்ற அற்பத் துணிவு அவனிடம் இருந்தது.

அவன் துணிவோ அல்லது அவள் கனிவோ? அவன் வியர்த்து நிலத்தில் விழாது அவனைப் பார்த்து அவள் ஒருகணம் சிரித்தாள். பின்பு மெதுவாக சூரியகாந்தி பூப்போல தலையைக் கதவை நோக்கித் திருப்பிக் கொண்டாள்.

சித்தனின் சித்தம் பல முத்தங்களே பெற்றதாகப் பொங்கியது. அந்தச் சிரிப்பு இனி உனக்கு ஆபத்து இல்லை என்று கட்டியம் கூறியது. சித்தன் அவளை மீண்டும் பார்த்தான். இப்போது பயம் இல்லை. ஒளிவு இல்லை. கண்களைத் தாழ்த்தும் அவசரம் அவனிடம் இல்லை.

சுரங்க இரதத்தில் பார்த்துச் சிரிப்பதற்கு ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? அவள் அடுத்த நிறுத்தத்தில் இறங்கிச் சென்றுவிட்டால் எந்த அர்த்தமும் அதற்கு இல்லாது போய்விடும் என்பதை எண்ண நெஞ்சாங்கூட்டைப் பிளந்து இதயத்தை நெரிப்பதாக நோக் கண்டது.
இருந்தும் இது நியாயமற்ற உணர்வு என்பதும் அவனுக்கு விளங்கியது. அவன் மனது ஆற்றில் அடித்துச் செல்லப்படும் இலையில் நிற்கும் எறும்பாக, இலையிலும் நிற்க முடியாது நீரிற்குள்ளும் குதிக்க முடியாது அந்தரப்பட்டது.

2

சுரங்க இரதம் நாசுனால்தியேட்டரில் அமைதியாகி, அடங்கி, இராட்சச வாய்களான கதவுகளைத் திறந்து, கசிந்து போகும் மனிதர்களைக் கசியவிட்டு, கட்டுடைத்த வெள்ளமாக வருபவர்களை உள்ளெடுத்து, மீண்டும் தனது வாயை மூடி, இரையை விழுங்கிய மலைப்பாம்பாக, இரும்புத் தடத்தில் வழுக்கியவண்ணம் நகரத் தொடங்கியது.

உள்ளே மீண்டும் ஒஸ்லோ பல்கலாசார நகரம் என்பதை நிரூபிப்பது போல உள்வாங்கப்பட்ட பயணிகள் தங்கள் தங்கள் இடங்களில் உட்கார்ந்து அல்லது நின்று பயணிக்க முதலே தள்ளாடி வந்த அந்தச் சுதேசி, சுற்றி இருக்கும் இரும்பை இழுக்கும் காந்தம் போல அனைவரது கவனத்தையும் களவாடித் தனது திருக்கூத்தை ஆரம்பித்தான்.

மதுவை மனிதன் அறிவுடைநிலையோடு, அளவோடு, சில வேளைகளில் மட்டும் அருந்தலாம். அது தவறினால் மது மனிதனின் விழிப்புநிலையைத் தின்று, தனக்கு அவனை அடிமையாக்கிக் கொள்ளும். இது தொன்மையான சர்வதேச வியாதி. இங்கே மேலும் வசதியான பொருளாதாரமும் கொள்வனவு வசதிகளும். இந்த வசதிகள் இருந்தாலும் பலர் ஏற்றிவிட்டு வீட்டிற்குள்ளேயே இருந்து கொள்வார்கள். அது வெளியே தெரிவது மிகவும் குறைவு. வெளியே பல கேளிக்கை இடங்களில், அல்லது பொது இடங்களில் மதுவின் பிடியில் நிதானம் இழந்து திரிபவர்களின் கூத்துக்கள் தனிமனித விழுமியங்களை அசிங்கத்திற்குள் தள்ளுவதாக அமைந்துவிடும். தொடர்ந்து மதுவைத் துஷ்பிரயோகம் செய்பவர்கள் மறதி உடையவர்களாக, ஆக்ரோஷமான கோபம் கொண்டவர்களாக, வன்முறையைக் கையில் எடுப்பவர்களாக மாறிவிடுகிறார்கள் என்பதும் சித்தனுக்குத் தெரியும். சித்தன் அப்படியான சிலரைச் சந்தித்து இருக்கிறான். தள்ளுவண்டியைத் தூக்கிக் கொண்டு அடிக்க வந்த முதியவரைக் கண்டிருக்கிறான். அதற்கு மதுவால் வந்த மறதி வியாதியும் அது பிரசவித்த ஆக்ரோஷமுமே காரணம். மதுவின் வெறியில் வன்முறை உருவெடுத்த மிருகமாகப் பாயும் பலர் உண்டு. அதற்கு மாறாகக் கோமாளிக் கூத்துக்களை நடத்துபவர்கள் உண்டு. மறந்தவர்களை நினைத்து அழுபவர்கள் உண்டு.

இழந்ததை நினைத்து ஏங்குபவர்கள் உண்டு. சொற்களை எடுத்துப் போர் புரிபவர்கள் உண்டு. அதற்கும் கீழே இறங்கிக் கொலை செய்பவர்கள்கூட உண்டு.

இந்தச் சுதேசிக்கு அறுபது வயது இருக்கும். சூறாவளிக்குப் பின்னான வயல் போன்ற வெளித்த மண்டை. இனியும் உயிர் வாழ்வேன் என்று தொங்கும் சில அழுக்கான பொன்னிறத் தலைமுடிகள் வழிந்து கன்னங்களில் ஒழுகின. யானைக் கண் போன்று சிறுத்த கண்களுக்குள் நாவற்பழக் கறுப்பான விழிகள். ஐந்தடி ஆறங்குலம் இருப்பான். காகம் பிறாண்டியதான அடையாளங்கள் நிறைந்த முகம். கைகலப்பு அவனுக்குப் பழக்கப்பட்ட ஒன்றாகும் என்பது சித்தனுக்கு விளங்கியது. குருத்து பச்சை நிறத்தில் மேலங்கி, கடும் நீலநிறத்தில் ஜீன்ஸ். அங்கங்கே அவற்றில் அழுக்குகளின் திட்டுக்கள். அலையில் அகப்பட்ட ஓடம் போன்ற அவன் நடை.

எங்கே இருப்பதற்கு இடம் கிடைக்கும் என்கின்ற பருந்துப் பார்வை அவனிடம். இருப்பதற்கு இடம் கிடைக்காவிட்டால் நிலத்தில் வீழ்ந்துவிடுவேனோ என்கின்ற கலக்கமாக இருக்கலாம். அவன் தளும்பிய நடையோடு இலக்கற்று முன்னேறுவதாய் சித்தன் எண்ணினான். தனது மூலையில் வந்து விழுந்து விடுவானோ என்கின்ற கலக்கம் சித்தனுக்கு.

உலாஞ்சிய வண்ணம் வந்த அந்த மனிதன், தாயும் பிள்ளைகளும் இருந்த ஆசனத்திற்கு எதிர் பக்கத்தில் அமர்ந்தான். பின்பு சாதுவாகத் திரும்பி அந்தத் தாயையும் பிள்ளைகளையும் பார்த்தான். அவன் இதழ்களில் ஒரு வன்மமான சிரிப்பு.

சுரங்க இரதப் பிரயாணம் என்பது விமானத்தில் பயணிப்பது போலப் பொதுவாகப் பாதுகாப்பானதே. அதற்குப் புறநடையான சந்தர்ப்பங்களும் உண்டு. சில வேளைகளில் துப்பாக்கிப் பிரயோகம் செய்பவர்களுக்கு இடையில் அகப்பட்டு அலங்கோலப்படும் சந்தர்ப்பங்களும் வந்திருக்கின்றன. கத்தியோடு ஏறிக் கலவரம் செய்து இரத்தபலி கேட்கும் வெளிநாட்டவரும் உண்டு. மனநிலை பாதிக்கப்பட்டவர்களை விரைவாகச் சமுதாயத்திற்குள் தள்ளும் வர்த்தக நோக்குப் பொறிமுறையால் வரும் கேடு அது. அதைவிட மதத்திற்காகக் கண்ணை இழந்து மற்றைய மனிதர்களைக் கொல்ல முயலும் மனித மிருகங்களும் உண்டு.
இருந்தாலும் இவன் ஒரு சாதாரண குடிகாரனே என்று சித்தன் எண்ணிக்கொண்டான். சித்தனின் கவனம் இரும்பை உருக்கி ஒட்டியது போன்று அசைய மறுத்து அவன்மேல் பதிந்து இருந்தது.

குடிப்பவர்கள் அனைவரும் கேடு விளைவிப்பவர்கள் இல்லை. மற்றைய மனிதர்களுக்குக் கேடு விளைவிப்பவர்கள் எல்லோரும் குடிப்பவர்கள் என்றும் இல்லை. இவன் எப்படிப்பட்டவன் என்பது யாருக்கும் தெரியாது. மனதைப் படமெடுக்கும் முழுமைபெற்ற கருவி எதுவும் மனிதனிடம் இல்லை என்று சொல்லலாம். அதைவிட மனது என்பதே மனிதன் சேர்த்துக்கொள்ளும் நினைவுக் குப்பைகளின் மேல் கட்டப்படும் சரி பிழை என்கின்ற கற்பிதமே.

இவன் அமைதி காப்பானா என்பதில் அங்கிருந்த பலருக்கும் சந்தேகமாகவே இருந்தது. சித்தனும் அந்த உணர்விலேயே தத்தளித்தான். அது உண்மையாக இருந்தால்கூட அவனால் எதுவும் பெரிதாகச் செய்துவிட முடியாது. வன்முறையை, கைகலப்பை அவன் விரும்புபவன் இல்லை. அதற்கான துணிவும் அவனிடம் இருக்கவில்லை. வேண்டும் என்றால் காவலுக்கு அறிவிப்பான். அவர்கள் கடமையைச் செய்யட்டும் என்று காத்திருப்பான். அதுவே சட்டத்திற்கும் உவப்பான செயலாகும்.

அந்தக் குடும்பத்திற்கு எதிர் இருக்கையில் மறுபக்கம் வந்திருந்த குடிகாரன் அந்தச் சிறுவர்களைப் பார்த்து வன்மச் சிரிப்பை வீசிப் பின்பு முறைத்தான். அவன் செய்கைக்கான அர்த்தம் யாருக்கும் விளங்கவில்லை. அவனுக்கு இப்படியான குடும்பம் வாய்க்காத வெறுப்பாய் இருக்கலாம் என்று சிலர் எண்ணிக்கொண்டார்கள். யாரோ ஒரு அந்நிய மனிதன் தங்களைப் பார்த்து முறைப்பது; பயங்கரக் காட்டு மிருகம் ஒன்று தங்களை உண்ணப் பலி கேட்பதான பயத்தை உண்டு பண்ணியது. அவர்கள் வதனங்கள் வெளிறிப் போயின. அச்சத்துடன் தாயின் முகத்தைப் பார்த்தார்கள். தங்களுக்குள் பார்த்துக்கொண்டார்கள். தாயோடு அண்டி இருந்தார்கள். அவர்களின் தாய் 'பயப்படாதீர்கள்' என்று அவர்களுக்குச் சமிக்கை செய்தாள். ஒஸ்லோவில் உள்ள சுரங்க இரத நிலையங்களில் ‘ஸ்ருட்திங்கத்’ சுரங்க இரத நிலையத்திற்கு முதல் முறை வருபவர்களுக்குச் சிக்கலானதாய்த் தோன்றலாம்.

அதற்குப் பல பாதைகளும் பல நடைபாதைகளும் உண்டு. இரண்டு திக்கிற்கு வெளியே செல்லும் அல்லது உள்ளே வரும் வசதிகள். அவை பல திக்கில் பல தெருக்களில் போய் முடியும் வசதி. வாய்க்காலைச் சுவரில் புரட்டி வைத்தது போன்ற சுவர் அமைப்பு. மஞ்சளாக வழுக்கி வந்து அது சிவப்புத் தளத்தில் சங்கமிக்கிறது. அதற்கு மதவு கட்டுவது போல நீலப் பலகைகளின் செங்குத்து இருப்பு. அது கலை வடிவம் புதைந்த சுவர்களாக நிலையத்தை நிரப்பி நிற்கும். அகண்ட வில் போன்ற கூரையை உருக்குச் சட்டங்கள் பலமாக்கின. மேலே உயரத்திற்கு ஏற்றிச் செல்லும்

இயங்கு பாதைகள். அவற்றின் முடிவில் திறந்து கொள்ளும் பல பாதைகள். இந்தக் கணத்தில் அதி நவீனம் இல்லை என்றாலும் நவீனமான சுரங்க இரத நிலையத்தில் இதுவும் ஒன்று.

சுரங்க இரதம் ஸ்ருட்திங்கத் தரிப்பில் நின்று மூச்சுவிட்டுப் பசியோடு வந்த மிருகம் வாயைத் திறப்பதாகக் கதவைத் திறந்து, கக்கி, புசித்து மீண்டும் மூடிப் புறப்பட்டது. பல தலைகள் மறைந்தன… பல தலைகள் புதிதாய்த் தோன்றின…

குடிகாரன் சும்மாய் இருக்கவில்லை. கண்களால் அவர்களை 'என்ன?' என்று கேட்பது போலக் கேட்டு வெருட்டத் தொடங்கினான். அந்தப் பிள்ளைகள் ஒருவர் கையை ஒருவர் பற்றிக் கொண்டார்கள். குஞ்சைக் காக்கும் கோழி போன்று அவர்கள் தாய். அவர்களைத் தனது இருபக்கத்திற்கும் அணைத்துக் கொண்டாள். பிள்ளைகள் இரைதேடும் கொடும் மிருகத்தைக் கண்டதாக அவஸ்தை உற்றார்கள். குடிகாரனுக்கு அவர்கள் பயம் மேலும் துணிவைத் தந்தது. அவன் அவர்களைப் பார்த்து, 'உங்களை நான் கொல்லப் போகிறேன்' என்றான். அவர்கள் பயத்தோடு தாயுடன் மேலும் நெருங்கி இருந்து கொண்டார்கள்.

'வாயை மூடு. குழந்தைகளோடு என்ன கதைப்பது என்று தெரியாதா உனக்கு? இனியும் தொந்தரவு செய்தால் பொலிசைக் கூப்பிடுவேன்' என்று பொறுக்க முடியாது அவர்களின் தாய் எச்சரித்தாள். அவன் அவளைப் பார்த்து ஏளனமாக, நம்பாதவன் போல் முகபாவனை காட்டினான். பின்பு, 'இயலும் என்றால் கூப்பிடு. எப்படி அவர்கள் உள்ளே வருகிறார்கள் என்று நான் பார்க்கிறேன். ம்… நீ என்னைப் பயமுறுத்துகிறாயா?' என்று கேட்டான்.
பின்பு அந்தப் பிள்ளைகளைப் பார்த்துக் கழுத்தில் கையைக் கத்திபோல் வைத்துக் கழுத்தை அறுத்துவிடுவேன் என்பது போல இழுத்துக் காட்டினான். இப்போது தாய் இருந்தும்கூட பிள்ளைகளின் கண்களிலிருந்து கண்ணீர் முத்துக்கள் வழியத் தொடங்கின.

சித்தனுக்கு இப்போது எட்டிக் குடிகாரனுக்கு அறைய வேண்டும் போல் கோபம் கொப்பளித்தது. இருந்தும் சட்டம் அதற்கு இடம் கொடுக்காது. காவல் வந்தால் பாரபட்சம் இல்லாது குடிகாரனை மாத்திரம் இல்லை தன்னையும் அழைத்துச்

செல்வார்கள் என்பது உறைத்தது. ஏதாவது செய்ய வேண்டும் போலிருந்தது. அதேவேளைச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டால் எதுவும் செய்ய முடியாது என்பதும் விளங்கியது. கோபத்தோடு அந்தக் குடிகாரனைப் பார்த்தான். குடிகாரனின் பார்வை எதிர்த்திசையிலிருந்ததால் சித்தனின் பார்வையால் அங்கே எந்தக் கலவரமும் ஏற்படவில்லை.

அவன் செய்வது மன்னிக்க முடியாத தப்பு என்றாலும் யாரும் துணிந்து அதைத் தடுக்க முன்வரவில்லை. சிங்கத்தைக் கண்ட மான்களாக அச்சமே அவர்கள் கண்களில் மிச்சமாக இருந்தது. சட்டம்கூட வெறியில் செய்வதை மன்னித்துவிடும். வெறி காரன் மேல் வன்முறை பாவித்தால் அதுவும் சட்டப்படி குற்றமாகும். அநீதி என்று தெரிந்தாலும் யாரும் எதுவும் செய்யமுடியாத தர்மசங்கட நிலை.

சுரங்க இரதம் மலைப்பாம்பு விமானத்தின் வேகத்தில் இயங்குவதுபோல வேகமாகத் தனது அடுத்த தரிப்பை வந்தடைந்தது. அது யாண்வார்ணத்தோர்கெத். இதுவே ஒஸ்லோவின் மத்திய சுரங்க இரத நிலையம். இதிலிருந்து கிழக்கும் மேற்குமாகப் பிரிந்து செல்லும் பல பாதைகள். பலதலைப் பாம்பாக வாயைத் திறந்து, தேவையற்றதைக் கக்கி, தேவையானதை உள்ளே இழுத்து, மீண்டும் வாயை மூடி அது வேகம் காட்டத் தொடங்கியது.

பல பழைய தலைகள் கழிந்து உள்ளே புதிய தலைகளின் பிரசன்னம். குடிகாரன் அதைப் பற்றிச் சிந்திக்காது அந்தப் பிள்ளைகளைச் செய்கையாலும் சொற்களாலும் வெருட்டத் தொடங்கினான். உள்ளே வந்தவர்களில் மத்திய கிழக்கு நாட்டைச் சார்ந்தவன் ஒருவனும் இருந்தான்.
அவன் நடப்பதைப் பற்றி அறியாது அந்தக் குடிகாரனுக்கு முன் இருக்கையில் வந்து அமர்ந்தான். அவன் வந்திருந்ததைப் பற்றிக் கவலைப்படாமல் அந்தக் குடிகாரன் தனது சேட்டையைத் தொடர்ந்தான். அந்த மத்திய கிழக்கு நாட்டுக்காரனுக்கு அதைப் பார்க்கப் பொறுக்க முடியவில்லை. அவன் மனிதாபிமானம் அவனைக் கோபமாக்கியது. அதற்குமேல் பொறுக்க முடியாதவனாய் அந்தக் குடிகாரனைப் பார்த்து,
'நீ என்ன செய்கிறாய்? குழந்தைப் பிள்ளைகளைப் பயமுறுத்துகிறாயா? தயவு செய்து நீ செய்வதை நிறுத்து' என்று தன்மையாகக் கூறினான்.
'நீ யார் அதைக் கேட்க? உன்னால் என்னை என்ன செய்ய முடியும்?' என்றான் குடிகாரன் அதிகாரத்தோடு. அந்த அதிகாரம் அவனோடு கூடப்பிறந்தது என்கின்ற

பாவனை அவனிடத்தில். தோலின் நிறமா? இனத்தின் கனமா? சிலவேளை அப்படித்தான் இருக்கிறது என்பது சித்தனின் எண்ணம்.

அந்தப் பிள்ளைகள் அழுதுகொண்டு இருப்பதைப் பார்த்த மத்திய கிழக்கு நாட்டுக்காரன், 'அழாதீர்கள். இவன் குடித்துவிட்டு சும்மாய் உங்களை வெருட்டுகிறான். இவனால் உங்களை ஒன்றும் செய்ய முடியாது. அதற்கு நான் அனுமதிக்கமாட்டேன். நீங்கள் அழாமல் அமைதியாக இருங்கள்' என்றான். பின்பு அந்தக் குடிகாரனைப் பார்த்து, 'குடித்திருந்தாலும் நீ செய்வது மிகவும் பிழையான காரியம். தயவு செய்து பிள்ளைகளை வெருட்டுவதை இத்தோடு நிறுத்திக்கொள்' என்றான்.

'அது என் ஸ்ரம். உன்னால் அதற்கு ஒன்றும் செய்ய முடியாது' என்று குடிகாரன் பதிலளித்தான்.

சுரங்க இரதம் குரண்லான்டில் வேகமிளந்து, தரித்து, கதவுகளைத் திறந்து, பிரியாவிடை கொடுத்து, வரவேற்று, கதவுகளை மீண்டும் மூடி, மெதுவாக நகரத் தொடங்கியது.

மத்திய கிழக்கு நாட்டுக்காரனுக்கு ஈர விறகில் நெருப்புப் பற்றுவதுபோலச் சிறிது சிறிதாகக் கோபம் பற்றத் தொடங்கியது. ஒரு பெண்ணையும் சிறு குழந்தைகளையும் வெருட்டுவது அவனைக் கொதி கொள்ள வைத்தது.

இருந்தும் எதிராளி வெறியிலிருக்கிறான் என்பதை அறிந்து அவனோடு அமைதியாகத் தொடர்ந்தும் பேச முயன்றான்.

'நான் உங்களைக் கொல்லப் போகிறேன். ஆஹஹஹஹ...' அந்தக் குடிகாரன் குழந்தைகளைப் பார்த்துக் கொக்கரித்தான். மீண்டும் கையால் கழுத்தை அறுத்துக் காட்டினான்.

குடிகாரனைத் தவிர மற்றவர்கள் அமைதியின் பிடியில். என்ன செய்வது என்கின்ற அவஸ்தையின் இடறலில். எதுவும் செய்ய முடியவில்லையே என்கின்ற குற்ற உணர்வின் சாடலில். எதுவும் செய்யாமலும் இருக்க முடியவில்லை என்கின்ற அவஸ்தையின் நச்சரிப்பில். ஏதாவது செய்து, அது வன்முறையில் முடிந்து விடுமோ என்கின்ற பயத்தில், கவலையில்...

இந்த மூலையில் நடக்கும் நாடகம் இப்போது எல்லோரது கவனத்தையும் ஈர்த்து இருந்தது. அந்தப் பெண்ணின் பார்வையும் இந்தப் பக்கம் திரும்பி நிலைத்தது. அவள் கண்கள் சித்தனை நோக்கி 'என்ன நடக்கிறது?' என்று கேட்பது போல இருந்தன. சித்தன் இமைகளை நெளித்து அந்தக் குடிகாரனைக் காட்டினான்.

அந்தக் குடிகாரனின் வாயை அல்லது செய்கையை யாராலும் நிறுத்த முடியவில்லை. அந்தத் தாயும் குழந்தைகளும் ஆபத்தைக் கண்டு தாய் பறவையின் இறக்கைக்குள் அடைக்கலம் தேடிய குஞ்சுகளைப் போன்று ஒருவருக்குள் ஒருவர் செருகிய வண்ணம் இருந்தனர்.

அங்கே பூனைக்கு யார் மணிகட்டுவது என்கின்ற குழப்பம். சட்டம் பூனைக்கு மணிகட்டினாலும் முட்டி மோதும் என்கின்ற பயம். சித்தனுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று தோன்றினாலும் இதில் கதாநாயகனாக வேடம் போட முடியாது என்கின்ற நிலை... காவல் பின்பு கைவிலங்கோடு அழைத்துச் செல்லும் என்கின்ற நடைமுறைத் தெளிவு.

'நான் உங்களைக் கொல்ல வருகிறேன்' குடிகாரன் மீண்டும் கைகளால் கழுத்தை அறுத்தான். பல்லை நறுமிய வண்ணம் எழுந்திருக்க முயற்சி செய்தான்.

'ஆ... ஆ...' என்று குழந்தைகள் அலறினர். பெண்பிள்ளைகள் பாய்ந்து தாயை மேலும் இறுக்கி அணைத்துக் கொண்டனர். அவள் மகன் அதிர்ச்சியில் நடுங்கினான். வெறிகாரன் 'ம்ம்ம்.... ம்ம்ம்.....' என்று பலமாகச் சிரித்தான்.

'நிறுத்து இதை' மத்திய கிழக்கு நாட்டுக்காரன் கோபமாகக் கத்தினான்.

'இல்லாவிட்டால் நீ என்னை அடிப்பாயா? வா... வந்து அடி பார்க்கலாம்' குடிகாரன் அவனிற்கு அறைகூவல் விடுத்தான்.

அமைதி. புயலுக்கு முந்திய அமைதி. சித்தனுக்கு தலையைப் பிய்த்துக்கொள்ள வேண்டும் என்கின்ற அவஸ்தை. வன்முறையிலிறங்குவதை அவன் மனம் ஒப்புக் கொள்ளவில்லை. வாளாதிருப்பதையும் அது ஏற்றுக் கொள்ளவில்லை. மத்திய கிழக்கு நாட்டுக்காரனைத் தவிர மற்றவர்கள் அமைதியிடம் சரணடைந்த அடிமைகளாக... அடிமைகள் மற்றவர்களுக்கு விடுதலை பெற்றுத்தர முடியுமா? சித்தனுக்குத் தமிழ் பாடசாலையில் படித்த பாரதியின் பாடல் நினைவிற்கு வந்தது.

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சகத்து ளோரெலாம் எதிர்த்து நின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
துச்சமாக எண்ணி நம்மைச் துறுசெய்த போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை பெற்று விட்ட போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சைகொண்டே பொருளெலாம் இழந்துவிட்ட போதிலும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே

கச்சணிந்த கொங்கை மாதர் கண்கள்வீசு போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
நச்சைவாயி லே கொணர்ந்து நண்ப ரூட்டு போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
பச்சையூ னியைந்த வேற் படைகள் வந்த போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழு கின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே

தலைபற்றி எரிந்து கைகால்கள் முறுகின. எட்டிப்போய் உதைக்க வேண்டும் என்கின்ற கோபம் பொங்கி எழுந்தது. அவனை எட்டிப் பிடித்து அடித்து, உதைத்து வெளியே தள்ளி… செய்துவிடலாம். அதைச் செய்வதால் வரும் பின்விளைவுகள் எப்படி இருக்கும் என்கின்ற எண்ணம் எட்டிப் பார்த்தது. கைகால் உறைந்து போயின. சித்தன் அசையாது நின்றான்.

மத்திய கிழக்கு நாட்டுக்காரன் அவனைக் கோபமாகப் பார்த்தான். பின்பு அந்தத் தாயையும் பிள்ளைகளையும் மீண்டும் பார்த்து அவர்களைச் சமாதானப் படுத்துவது போல, 'நீங்கள் பயப்படாதீர்கள். என்னை மீறி இவன் எதுவும் செய்துவிட முடியாது. அதற்கு நான் இடம் கொடுக்கமாட்டேன். நீங்கள் பயப்படாது, கவலைப்படாது இருங்கள்' என்று தைரியம் ஊட்டினான்.

'இவனால் எதுவும் செய்ய முடியாது. நான் உங்களை…' குடிகாரன் கையால் கழுத்தை மீண்டும் வெட்டிக் காட்டினான்.

'உனக்கு இது கடைசி எச்சரிக்கை. அமைதியாக இரு. எனது பொறுமைக்கும் ஒரு அளவு உண்டு' என்று மத்திய கிழக்குக் காரன் மீண்டும் எச்சரித்தான்.

சுரங்க இரதம் தொய்யனை வந்தடைந்தது. சிலதலைகள் காற்றில் அடித்துச் செல்லப்பட்ட சருகுகளாக மறைந்துபோக புதிய சில தலைகள் நேற்று பொழிந்த மழைக்கு இன்று முளைத்த செடிகளாகத் தோன்றின. சித்தன் நின்ற மூலைக்கு எதிரே இருந்த கதவு வழியாக ஒரு இளம் பெண் தயங்கியபடி ஏறினாள். அவளுக்குப் பதினெட்டு வயது இருக்கும். பாம்பு போன்று நீண்ட பொன்னிறக் கேசம். முகத்திற்குப் பச்சை நிறத்தில் முகக்கவசம் அணிந்திருந்தாள். மெல்லிய வாழை போன்ற உடல்வாகு. கனத்து நிமிர்ந்த மார்புகள். அதைச் சினத்தோடு தாங்கும் அவள் மெல்லிடை.

அவள் சித்தனுக்கு அருகாக வந்து இடைவெளி விட்டு நின்று கொண்டாள். பின்பு சித்தனை ஒருமுறை விழித்தாள். அதையடுத்து அவள் பார்வை சூரியனைக் கண்ட சூரியகாந்தி போல அந்தக் குடும்பத்தை நோக்கித் திரும்பியது. அவள் பார்வையில் பயம் அப்பி இருந்தது.

'நீ இப்பிடிப் பேசக் கூடாது. பிள்ளைகள் பயப்படுகிறார்கள்' என்ற வண்ணம் நடுக் கதவுச் சுவரோடு ஆசனத்திலிருந்த சுதேசி எழுந்து வந்து குடிகாரனைப் பார்த்துக் கூறினான். அதில் கோபம், அதிகாரம் ஆகிய இரண்டும் கலந்திருந்தன.

அவன் ஆறடி இரண்டு அங்குலம் இருப்பான். பரந்த உடல். கறுப்பும் வெள்ளையும் கலந்த கேசம். பச்சை வயிரம் போன்ற கண்கள். அதில் மின்னித் தெறிக்கும் கூர்மையான ஒளி. கறுப்பு ஜீன்சும் நீல மேலங்கியும் அணிந்திருந்தான்.
இருந்தும் குடிகாரன் பயப்பட்டதாய் தெரியவில்லை.

'ஓ நீயும் என்னை அடிப்பாயா? வா அடிபடலாம்' என்றான்.
'வாயை மூடு. நாங்கள் யாரும் உன்னோடு அடிபடுவதற்கு இங்கே வரவில்லை'
'நன்றி. அப்பொழுது வாயை மூடிக்கொண்டு உன் இருக்கையில் சென்று இரு'
'நீ ஏதாவது செய்… அப்போது உன்னைப் பார்த்துக் கொள்கிறேன்' என்று கூறிய வண்ணம் அந்த ஆசாமி சென்று தனது இருக்கையிலிருந்தான்.

சுரங்க இரதம் என்சோவில் நின்றது. சித்தனுக்குப் பக்கத்தில் நின்ற பொன்னிறத் தலைமுடி கொண்ட பெண் குடிகாரனைப் பார்த்து மிகவும் பயப்படுவது போல இருந்தது. அவள் வெளியே போகக் காலை அசைத்தவள் பின்பு மனதை மாற்றிக்கொண்டு சுவரோடு நின்றாள்.

சுரங்க இரதம் தனது சடங்கை முடித்துக் கதவை இழுத்து மூடிப் புறப்பட்டது. எப்போது இந்தக் குடிகாரன் இறங்குவான் என்பது பலரது ஏக்கமாக இருந்தது. அத்தனை நபர்களுடைய ஏக்கத்தையும் நிர்மூலம் செய்வது போல அவன் அசையாத பூதமாக அங்கே நிலைத்து இருந்தான். அவன் பேசாது இருந்தால் யாரும் கவலைப்பட்டு இருக்கமாட்டார்கள். அவன் வாய் வாளாக எட்டுத்திக்கிலும் மனங்களை வெட்டி வீழ்த்தியது.

குடிகாரன் தொடர்ந்தான். 'என்ன... அவனும் ஏதோ கதைக்கிறான் எண்ட துணிவில இருக்கிறீங்களா? யார் என்ன கதைச்சாலும் நான் நினைத்தால்...' மீண்டும் அவன் கையால் கத்தி செய்து கழுத்தை வெட்டினான்.

'சாத்தான்' மத்திய கிழக்கு நாட்டுக்காரன் கையால் ஓங்கி ஆசனத்தில் குத்தினான். குடிகாரன் கோபமாக அவனைப் பார்த்தான். 'என்ன அடிக்கப்போறியா... வா அடிபடுவம்' என்று மத்திய கிழக்கு நாட்டுக்காரனைப் பார்த்துக் கூறினான்.

சித்தனுக்கு என்ன செய்வது என்று விளங்கவில்லை. காவலைத் திறன்பேசியில் தொடர்புகொள்வோமா என்று யோசித்தான்.

'ஆனால் இந்தக் குடிகாரன் எங்கே இறங்குவான் என்பது தெரியாது. அடுத்த இறக்கத்தில் இறங்கிவிட்டால்... காவல் வந்து என்னை அல்லவா கேட்பார்கள்' என்று எண்ணினான்.

அந்தத் தமிழ் பெண் சித்தனை மீண்டும் இப்போது பார்த்தாள். அவள் முகத்திலும் கவலையும் பயமும் கருமேகமாய் அப்பி இருந்தன. சில கணங்கள் கனமான அவள் பார்வை சித்தனையும் அழுத்தியது. அவள் தொடர்ந்தும் அவனை வதைக்க விரும்பாதவள் போலத் தனது பார்வையைத் திருப்பிக் கொண்டாள். அவள் பார்வையைத் திருப்பினாலும் அதன் சுவடுகள் அவன் நெஞ்சைத் தொடர்ந்து அழுத்திக்கொண்டு இருந்தன.

சுரங்க இரதம் கெல்ஸ்பியூரை வந்தடைந்து மூச்சுவிட்டுக் கதவு திறந்து தப்பி ஓடுபவர்களைத் தப்பி ஓடவிட்டுச் சரணடைபவர்களை ஏற்று, மீண்டும் நாகாஸ்திரமாகத் தனது இலக்கை நோக்கிப் புறப்பட்டது.

'எல்லாரையும் அடித்து முறித்துப்போடுவன். யாருக்கும் துணிவிருந்தால் வாருங்கள் பார்ப்போம்...' குடிகாரன் மல்யுத்த வீரனாக மாறி அங்கிருந்தவர்களுக்கு அறைகூவல் விடுத்தான்.

'நீ பொறுமையைச் சோதிக்கிறாய். தயவு செய்து அமைதியாய் இரு' என்று மத்திய கிழக்கு நாட்டுக்காரன் மீண்டும் குடிகாரனுக்குப் புத்திமதி கூறினான்.

'உனக்குச் சண்டைக்குப் பயமா... நீ பயந்துவிட்டாயா...? சும்மா கதைத்துக்கொண்டே இருக்கிறாய்...' என்று குடிகாரன் உசுப்பினான்.

'நான் எழும்பினால் நீ தாங்கமாட்டாய்.... பேசாமலிரு... அதுதான் உனக்கு நல்லது' மீண்டும் மத்திய கிழக்கு நாட்டுக்காரன் எச்சரித்தான்.

'உன்னோடு எனக்கு என்ன கதை' என்று கூறிய குடிகாரன் மீண்டும் அந்தக் குடும்பத்தைப் பார்த்து,

'உங்களை யாரும் காப்பாற்றமாட்டார்கள். உங்களுக்கு யாரும் உதவி செய்யமாட்டார்கள். நான் என்ன செய்ய வேண்டும் என்றாலும் செய்யலாம். இப்பொழுது அதைச் செய்யவா?' அவன் கழுத்தை மீண்டும் வெட்டிக் காட்டினான்.

'வாயை மூடு. இனியும் பிள்ளைகளை வெருட்டினால் நான் பொலிசை கூப்பிடுவேன். நீ வெருட்டுவதை இத்தோடு நிறுத்து' என்று அந்தத் தாய் கத்தினாள்.

சுரங்க இரதம் பிறின்செங்கை வந்தடைந்து மூச்செடுத்தது. அதிலும் சிலதலைகள் தொலைய, சிலதலைகள் வெடிக்கும் சோளம் போல முளைத்தன. சுரங்க இரதம் தனது சடங்கை முடித்துக்கொண்டு பனியில் சறுக்கி ஓடுபவன் போலத் தண்டவாளத்தில் வழுக்கி ஓடத்தொடங்கியது.

'உங்களை நான் வெட்டி எறிவேன்' என்று பிள்ளைகளை நோக்கிக் குடிகாரன் துள்ளி எழுந்தான். அதற்குமேல் பொறுக்க முடியாதவனாய் மத்திய கிழக்கு நாட்டுக்காரன் அவன் கையைப் பிடித்து இழுத்து இருத்த முயன்றான். அதைப் பொறுத்துக் கொள்ளாத குடிகாரன் அவனின் மூக்கில் கைமுட்டியால் பலமாகக் குத்தினான். மத்திய கிழக்கு நாட்டுக்காரன் இதை எதிர்பார்க்கவில்லை. அவன் ஒரு கணம் கிறுகிறுத்துத் தலை சுற்றித் தடுமாறினான். அத்தோடு மத்திய கிழக்குக்காரன்

தன் பொறுமையையும் நிதானத்தையும் இழந்தவனாக அவனைப் பாய்ந்து தள்ளி உதைத்தான். குடிகாரன் நிற்க முடியாது தளும்பியவண்ணம் சித்தனருகே வந்து திடீரென வேரற்ற மரமாக விழுந்தான். சித்தன் இதை எதிர்பார்க்கவில்லை. தன்னிச்சையாகத் துள்ளி இடம்மாறி ஒதுங்கிக் கொண்டான்.

குடிகாரன் தான் தோற்றதாய் சோர்ந்துவிடவில்லை. அவன் பாய்ந்து வெறிகொண்ட புலியாக எழுந்தான். வேட்டைக்குப் பாய்வதாக மத்திய கிழக்கு நாட்டுக்காரனை நோக்கிப் பாய்ந்தான். மத்திய கிழக்கு நாட்டுக்காரன் அவனைப் பூட்டுப்போட்டு அடக்க முனைந்தான். அது அதிகநேரம் நீடிக்கவில்லை. மீண்டும் பலம் கொண்ட மட்டும் குடிகாரனைத் தள்ளிவிட்டான்.

குடிகாரன் சித்தன் முதலில் நின்ற மூலையில் போய் வெட்டிச் சாய்த்த காட்டு மரம்போல மீண்டும் விழுந்தான். அவன் தலையிலிருந்து சிறிது குருதி கசிந்தது. மத்திய கிழக்கு நாட்டுக்காரனின் மூக்கால் இரத்தம் வந்தது. அவன் அதைத் துடைப்பதற்குச் சித்தனின் அருகில் நின்ற பெண் தனது பையிலிருந்து துடைக்கும் காகிதம் ஒன்றை எடுத்துக் கொடுத்தாள்.

இத்தனை நடந்தும் குடிகாரனின் மதுபோதை தணியவில்லை. அவன் மீண்டும் வேகமாக உயிர்த்தெழுந்தான்.

அப்போது அந்தச் சுதேசி மீண்டும் எழுந்து வந்து 'பேசாமல் போய் ஒரு இடத்திலிரு. இல்லாவிட்டால் நானும் உன்னை நொறுக்க வேண்டிவரும். விளங்குதா?' என்று கத்தினான்.

'ஓ நீயுமா...? வா... நான் தயாராகத்தான் இருக்கிறேன். என்னை வெருட்டுகிறாயா? முதல் இவன் முடியட்டும். பிறகு உன்னிடம் வருகிறேன்' என்று கூறியவன், மத்திய கிழக்கு நாட்டுக்காரனை நோக்கிப் பாய்ந்தான்.

சுரங்க இரதம் ஹெல்லறுட்டிற்கு வந்து தனது வேகத்தைக் குறைக்கும் அந்த நேரத்தில் குடிகாரன் மூர்க்கமாக மத்திய கிழக்கு நாட்டுக்காரன் மேல் பாய்ந்தான். குடிகாரன்மேல் தலை வெடிக்கும் கோபத்திலிருந்த மத்திய கிழக்கு நாட்டுக்காரன் அவன் கைமுட்டியால் மூஞ்சையில் குத்தி பலமாகக் கதவுப் பக்கம் தள்ள அவனோடு சுதேசியும் சேர்ந்து குடிகாரனைத் தள்ளிவிட்டான். அதேசமயம் கதவு திறந்தது. குடிகாரன் திறந்த கதவின் வழியே பிடரி அடிபட வெளியே போய் விழுந்தான்.

இதை யாரும் எதிர்பார்க்கவில்லை. மின்னல் தாக்கியதாய்ப் பலரும் விறைத்துச் செயலற்றுப் போயினர். சுரங்க இரதம் நிறுத்தப்பட்டது. சாரதி இறங்கிவந்து பார்த்துவிட்டுக் காவலுக்கும் அம்புலன்ஸிற்கும் அறிவித்தான். இதைப் பார்த்த மத்திய கிழக்கு நாட்டுக்காரனும் அந்தச் சுதேசியும் புறப்பட்டு வெளியே சென்றார்கள்.

வெளியே விழுந்த குடிகாரன் மூச்சுப் பேச்சு இல்லாது கிடந்ததைப் பார்த்த சித்தனுக்கு முதல் என்ன செய்வது என்று விளங்கவில்லை. பின்பு தான் கற்றுக்கொண்ட தொழிலுக்கு ஏற்பத் தன்நிலையை உணர்ந்தவனாக வெளியே இறங்கி அந்தக் குடிகாரனைப் பரிசோதிக்கத் தொடங்கினான்.

அது அவன் கடமை மட்டும் அல்ல சட்டமும் அதை வலியுறுத்துகிறது என்பதாலேயே அவன் மனம் இல்லாது அதைச் செய்தான். சித்தன் அவன் அருகே சென்று குனிந்து அவனுக்குச் சுவாசம் இருக்கிறதா என்று பரிசோதித்தான். மூச்சு சாதுவாக வந்துகொண்டு இருந்தது.

அப்போது 'உங்களுக்கு உதவி ஏதும் வேண்டுமா?' என்று ஒரு பெண்குரல் நோர்வே மொழியில் கேட்டது. சித்தன் திரும்பி அவளைப் பார்த்தான்.

ஓ... அவனின் கனவுப்பெண் கண்ணைக்கட்டி மாயம் செய்து கொண்டு வந்து விட்டதாக அவன் அங்கே நின்றாள். முகக்கவசத்தை நாடிக்கு இழுத்துவிட்டு இருந்தாள். ஏன் அப்படிச் செய்தாள் என்பது தெரியாது. அவனால் வேலையைச் செய்ய முடியுமா என்று விளங்கவில்லை. என்றாலும் கடமை முக்கியம் என்பதை மீண்டும் மூளையில் பலமாக ஏற்றினான். தனது அலுவலில் கவனம் செலுத்தினான்.

'உங்களுக்கு மருத்துவம் பற்றி ஏதும் தெரியுமா?'

'ம்... நான் தாதியாய் வேலை செய்கிறேன். தொடர்ந்து மருத்துவராய் படிக்க வேண்டும் என்பது என் ஆசை'

'ஓ அப்பிடியா... நல்லது... நல்லது... இவருக்குச் சுவாசம் இருக்கிறது. வலப்பக்கம் திருப்பி இடக்கையை அவன் தலையின் கீழ் வைத்து இவன் நன்கு சுவாசிக்குமாறு படுக்க வைக்க வேண்டும். மிகுதியை அம்புலன்ஸ்காரர்கள் பார்த்துக் கொள்வார்கள்'

'சரி நான் உதவி செய்கிறேன்'

இருவருமாக அவனை மூச்சு விடுவதற்கு ஏதுவாகப் பக்கவாட்டில் படுக்க வைத்தனர். அது முடிந்ததும் பக்கத்தில் நின்ற அவளைப் பார்த்து, 'நீங்கள் தமிழா?' என்று தமிழில் கேட்டான்.

'ம்… என்ர பெயர் அமுதினி…' என்றாள் அவள்.

'சித்தன்' என்று தனது பெயரைக் கூறிவிட்டு அவன் முழங்கையைத் தூக்கி அவள் முழங்கையை முட்டக் கொண்டு சென்றான். அவளும் பறவை சிறகை விரிப்பது போலத் தனது கையைத் தூக்கி முழங்கையால் முட்டிவிட்டுச் சிரித்தாள்.

காவல் வந்து அந்தக் குடும்பத்தை விசாரித்துக்கொண்டு இருந்தது. அதேவேளை அம்புலன்ஸ்காரர்கள் வந்தார்கள்.
சித்தன் அவர்களிடம் அவனது நிலையைக் கூறினான். அவர்கள் கழுத்திற்குக் கட்டுப்போட்டு அவனைத் தாங்கள் கொண்டு வந்த கட்டிலில் வைத்துத் தள்ளிக்கொண்டு சென்றார்கள்.

அதன் பின்பு அமுதினியைப் பார்த்த சித்தன், 'நீங்கள் எங்க இருக்கிறியள்?' என்று கேட்டான்.

'அடுத்த ஸ்ரொப்'

'ஓ… விபரமாகத்தான் இருக்கிறியள். சரி… உங்கடை நம்பர் கிடைக்குமா?'

'ஆ… நல்லாய் இருக்குது இது… கண்ட உடனேயே துணிவாக் கேட்கிறியள்… உங்களுக்கும் எனக்கும் சந்திக்கோணும் எண்டு விதி இருந்தால்… அடுத்தமுறை அப்பிடிச் சந்தித்தால்… நான் உங்களுக்கு நம்பர் தாறன். சரியா?'

'ஆங…'

சுரங்க இரதம் அடுத்த நிறுத்தத்தில் நின்றது. அவள் சிரித்துக்கொண்டு இறங்கிச் சென்றாள். சித்தனுக்கு,

'இதயம் போகுதே
எனையே பிரிந்தே
காதல் இளங்காற்று
பாடுகின்ற பாட்டு
கேட்காதோ
இதயம் போகுதே… ' என்பதான வேதனை அவன் இதயத்தையும் ஆத்மாவையும் பிழிந்து சக்கையாக்கியது.

அவன் அவள் போவதைப் பார்த்துப் புழுவாய்த் துடித்தான். அவன் துடிப்பைப் பொறுக்கமுடியாத சுரங்க இரதம் ஒரே இழுவையில் அவளை மறைத்து அவனுக்கு உதவாதவற்றைக் காட்சியாக்கியது.

'இதயம் போகுதே
எனையே பிரிந்தே...'

அவன் மீண்டும் முழுமுழுத்தான். இது எப்படிச் சாத்தியமாகிறது? அவனுக்கு விளங்கவில்லை. ஏதோ போதைவஸ்தை உண்ட மயக்கம் அவனிடம். மீண்டும் அவன் உதடுகள் 'இதயம் போனதே எனையே பிரிந்தே...' என்றது. மற்றவர்கள் இதைக் கேட்டால் சிரிப்பார்கள். கண்டதும் காதலா என்று கிண்டல் செய்வார்கள் என்பதும் அவனுக்கு விளங்கியது.

3

நீலத்தைக் கரைத்து வார்த்ததாக 'ஒஸ்லோபியூட்' கடலும் வானமும் பரந்து விரிந்து கிடக்கக் கண்ணைக் குத்தும் வெள்ளிக் கூர் ஊசிகளாகச் சூரியக்கதிர்கள் செங்குத்தாக இறங்கிக்கொண்டு இருந்தன. குளிரைக் களைந்து இளவேனில் காலம் இறந்து போக, முதுவேனில் காலம் பிறந்து, தென்றலைப் புணர்ந்து, கதகதப்பாய் தழுவிச் சென்றது. அத்தென்றல் ஓயும் கணத்தில் நிர்வாண தோலைத் துளைத்து எடுத்த சூரியன். அங்கும் இங்குமாகப் பல வடிவங்களில் கடலில் வாத்துக்களாய் மிதந்த ஓடங்கள், படகுகள். திருவிழாவிற்குத் திரண்டு வந்ததாய் ஆடவர், பெண்டிர், குழந்தைகளின் ஓயாத அலை மோதல். இறக்கை இழந்த பறவைகளாய் குளிர்கால உடைகளைத் தூக்கி எறிந்துவிட்டு தொடை காட்டும் உடைகளோடு சென்ற ஆண்கள், பெண்கள், குழந்தைகள். அதுவே கசகசக்கும் அவஸ்தையில் நெளிந்த குமரிகளும் இளைஞர்களும். அந்த அவஸ்தையிலிருந்து விடுபடக் கடலுக்குள் பாய்ந்து ஆழம்தேடி மிதந்த சிலர்.

இது கோடைக்காலத் திருவிழா! பட்டிக்குள் அடைக்கப்படும் மாடுகள் செல்லும் நெருக்கத்தில் ஆக்கர்பிறிக்கைக் கப்பல் தளத்தில் அசைய வேண்டிய அவதி. அதிலிருந்து விடுபட்டுக் கடற்கரைக்குச் செல்பவர்கள் சிலர். அல்லது மறுகரையிலிருக்கும் உணவு விடுதிகளுக்குள் அடைக்கலமாகின்றவர்கள் சிலர். மதுக்கூடங்களுக்குள் அவாவுடன் நுழைபவர்கள் சிலர். கடலில் சங்கமமாகும் நதிபோல அவர்கள் கரைந்து போயினர்.

ஆக்கர்பிறிக்கையின் நடைபாதை நீட்டிற்கு வயிரத்தைப் பதித்ததாகக் கண்ணாடிச் சுவர்களோடு கம்பீரமாய் இருந்த பல உணவு விடுதிகள். காளான்களாய் முளைத்த மனிதத்தலைகளால் ஒவ்வொன்றும் நிரம்பி வழிந்த கோலம். பியர் குவளையிலிருந்து நுரை பொங்கி வழிவது போன்ற வாடிக்கையாளரின் படையெடுப்பு. அதற்கு வெளியே நாற்காலிகளும் மேசைகளும் பரப்பி வரவேற்கும் சாதுரியம். அதிலிருந்து தங்களது பியரைக் குடித்துக் குடித்து சத்தமாகக் கதைப்பதும் சிரிப்பதுமாக இருந்த ஆண்களும் பெண்களும்.
அவர்கள் சந்தோஷ அலையில் அதிரும் சுற்றுப்புறம். பலவித உணவுகளின் வாசம் காற்றில் தாவி வந்து வயிற்றில் அமிலம் சுரக்கவிட்ட யதார்த்தம். அந்த

உணவுகளை வாங்கி உண்டுவிடு என்று அதன் வாசம் மனித மூளைகளைச் சலவை செய்து, சபலம் கொள்ள வைத்த கணங்கள்.

மதுவும் உணவும் ஐரோப்பிய நாகரிகத்தின் கருவூலம் என்று சொல்லலாம். பிள்ளை பெற்றால், பிணமாய்ப் போனால், புதுவருடம் பிறந்தால், பிறந்தநாள் வந்தால், நத்தார் என்றால், ஈஸ்டர் என்றால், நண்பர்களோடு வெளியே செல்வது என்றால், புதுப் பெண்ணை அல்லது ஆணைப் பார்ப்பது என்றால், திருமணம் நடந்தால், நண்பர்கள் சேர்ந்தால், நண்பர்கள் பிரிவது என்றால், வேலைத் தோழர்களோடு வெளியே செல்வது என்றால், மதுபானவிடுதிக்குச் சென்று குடித்து... உணவு விடுதிக்குச் சென்று உண்டு... மீண்டும் மதுபானவிடுதிக்குச் சென்று குடித்துத் தள்ளாடும் நிலையில்... உல்லாசமாய் நகரை வலம் வந்து,... பல களியாட்ட நிலையங்களுக்குள் புகுந்து வெளியே வந்து... ஒருவித போதை உலகில் ஞானம் பெறுதல் இவர்கள் கனவு இரவு வாழ்க்கையாகும். இதற்கு மேலாகவும் கஞ்சா அடிப்பதும், கோகோயின் பாவிப்பதும் அது தரும் பித்தில் வித்துவம் காண்பதும் மேற்கொண்டு தொடரும்.

மது உணவு மது என்கின்ற சுழற்சி முடிந்து, இறுதியாக நிர்வாண புணர்வில் முடிவது இங்கே சர்வசாதாரணம். சத்தமே கேட்காது போர்த்திய ஆடைகளுக்குள் சூடான மூச்சைவிடும் தென்கிழக்காசிய வித்தை இவர்கள் அகராதியில் கிடையாது. புணர்தல் அவர்களைச் சந்தோஷப்படுத்துகிறதோ இல்லையோ அவர்களைச் சுற்றி இருப்பவர்களைச் சங்கடப்படுத்திவிடும். அதுவும் குழந்தைகளுடன் இருக்கும் குடும்பங்களுக்குக் காதைப் பொத்துவதைவிட வேறு வழிகள் எதுவும் இருக்காது. சிலவேளை அவர்கள் வீட்டைவிட்டு அவசரமாக வெளியேறி, கடைகள், பூங்காக்கள் என்று அலைந்துவிட்டு, அடங்கியபின்பு வீட்டிற்கு வரும் பரிதாப நிகழ்வுகளும் நடப்பதுண்டு.

ஆக்கர்பிறிக்கை இப்போது களிப்பின் மொட்டான நிலையில், இனி அது மலர்ந்து, புணர்ந்து, கருவுற்று, காய்த்து, பழுத்து, இரவிரவாகத் தொடர்ந்து அதிகாலையில் பறிப்பதற்குத் தயாரான கனியாகும். இருந்தாலும் இங்கு வரும் அனைவருக்கும் அவைகள் நோக்கமாக இருப்பதில்லை.
சிலர் நண்பர்களைச் சந்தித்துக் கதைத்து ஒன்று இரண்டு பியரைக் குடித்துவிட்டுச் சிறு கிறுக்கத்தோடு வீட்டிற்குச் செல்வதற்காகவும் வருவதுண்டு. அப்படிக் குடிப்பதற்கு இது மலிவான இடம் இல்லை. இருந்தும் இப்படியொரு வெயில் பொழியும் கோடைக்கால நாளில், இங்கிருந்து பியர் அருந்துவதற்கு அந்த விலைகளைத் தாங்கிக் கொள்ளலாம் என்பது பலரின் எண்ணம்.

வானம் வெண் திரையை அகற்றி... சூரியனை மாத்திரம் உலாவவிட்டு... பூமியில் குதுகலத்தை இந்த நாளில் உண்டு பண்ணும் என்பதைப் பற்றி அறியாது... செந்தில் தரகர் மனோகரனை இங்கே இன்று சந்திப்பதாக ஏற்பாடு செய்திருந்தான்.

இந்த உலகத்தில் பல மனிதர்கள் பலவிதமான பிரச்சனைகளுடன் வாழ்கிறார்கள். மலை போன்ற பிரச்சினையாகச் சவால் விடுபவை ஏதோ ஒருவைகையில் தீர்வு காணும்போது இவ்வளவுதானா என்பது போல ஊதித்தள்ளச் சொல்லும். அது பிரச்சினையாக மனிதனோடு வாழும் காலத்தில் அதை யாரும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. அதுவே ஒவ்வொரு கணமும் அவனது தலையைக் குடைவதாக இருக்கலாம். அவரவர் பிரச்சனைகள் அவரவர்களை ஆளுமைப்படுத்தி வைத்திருக்கும் என்பதில் ஐயம் இல்லை. அது உறவாக இருக்கலாம். பணமாக இருக்கலாம். அந்தஸ்தாக இருக்கலாம். அது எம்மோடு இருக்கும் உயிராகக்கூட இருக்கலாம். அல்லது எம்மிடம் வராத உயிராக இருக்கலாம்.

மகாபாரதம் சிலவேளைப் பல எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதிய இதிகாசமாக ஏன் இருக்கக் கூடாது? அது எப்படி எழுதப்பட்டது என்பதற்குக் கற்பனையான கதைகள் மட்டுமே இருக்கின்றன. நிரூபிக்கப்பட்ட உண்மை என்று எதுவும் இல்லை. எது எப்படி இருந்தாலும் அது மனிதர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளையும் அதைத் தீர்த்துக் கொள்வதற்கான வழிகளையும் பல இடங்களில் நுட்பமாகக் கூறிச்சென்றிருக்கிறது. அந்தக் கருத்துக்களில் பல இந்தக் காலத்திற்கு ஒவ்வாததாக இருந்தாலும் சில இன்றும் என்றும் பொருந்துவதாக அசையாது நிலைத்து நிற்கின்றன. அவர்கள் எழுதிய காலத்திலிருந்த மனித நாகரிகத்தை உற்று நோக்கினால் வேற்றுக் கிரகத்திலிருந்து யாரோ பூமிக்கு வந்து அதை எழுதிக் கொடுத்துவிட்டுப் போனது போல இருக்கலாம். அதைப் படைத்தது இவ்வுலகில் பிறந்த அறிவாளிகளே. அதில் தேடினால் தனக்கும் விடை கிடைக்குமா என்பது செந்திலுக்கு விளங்கவில்லை.

செந்தில் அமிழ் தண்டூர்தியில் வந்து ஆக்கர்பிறிக்கவில் இறங்கினான். திருவிழாக் கூட்டமாக அலைமோதும் மக்களைப் பார்த்தபோது அவனுக்குப் பிரமிப்பாக, திகைப்பாக இருந்தது. இருப்பதற்கு இடம் இருக்குமா என்கின்ற சந்தேகம் நீரில் துள்ளும் மீனாக அவன் மூளையில் துள்ளியது. இருப்பதற்கு இடம்

இல்லாவிட்டாலும் பறுவாய் இல்லை. பியரை வாங்கிச் சென்று துறைமுகப் படியிலிருந்து கதைக்கலாம் என்று எண்ணிக்கொண்டான்.

செந்திலுக்கு முப்பது வயது. ஆனாலும் பார்ப்பவர்கள் இருபத்தி ஐந்து வயது என்று கூறும் உடல்வாகு. இளமை மாறாது முதுமை மறைந்திருக்கும் உடலமைப்பின் இரகசியம் அவனிடம். எண்ணெய் பூசியது போன்று வழுவழுப்பான தோல். மாநிறத்திற்கும் குறைவான நிறம். அடர்த்தியான வளைவுகள் கொண்ட தலைமுடி. தடித்துப் பரந்த வவ்வால் போன்ற மீசை. கறுப்பு வயிரம் போன்ற விழிகளின் ஊடுருவும் பார்வை. பரந்த முகம். இரட்டை நாடி. முன்னோக்கி வளைந்த காதுகள். அகண்ட நீண்ட பெரிய முன் பற்கள். அதை எப்போதும் திரை நீக்கும் அவனது சிரிப்பு.

அமிழ் தண்டூர்தி தரிப்பிலிருந்து நடந்து வந்த செந்திலுக்கு வியர்க்கத் தொடங்கியது. ஓடிப்போய்க் கடலுக்குள் பாய்ந்தால்... உகுகு... அவனுக்கு வெப்பத்தைத் தணிப்பதைவிட நீர் குளிராக இருக்குமோ என்கின்ற பயமே உண்டாகியது. அவன் தனது மேற்சட்டையை உடலோடு ஒட்டாது இழுத்துவிட்டுக் கொண்டான். சில சுதேசிகள் அதைக் கழற்றி விட்டுக் காற்சட்டையுடன் மல்யுத்த வீரர்கள்போலச் சென்றார்கள். அவனுக்கும் அப்படிச் செல்ல வேண்டும் போலவே இருந்தது. இருந்தாலும் ஒருவித கூச்சம். நிறமும் கலாச்சாரமும் அவன் எண்ணத்தை நிந்தித்தன.

அவன் அந்த எண்ணத்தைக் கைவிட்டு மேற்கொண்டு தான் தேடிவந்த விடுதியை நோக்கி விரைவாகச் சென்றான். மனோகரனை அங்கே வருமாறு ஏற்கனவே அலைபேசியில் கூறியிருந்தான். அவன் சொல்லிய நேரத்திற்கு வந்துவிடுவான் என்கின்ற நம்பிக்கை செந்திலிடம் இருந்தது. இருந்து கதைப்பதற்கு ஒரு மேசை கதிரைக் கிடைத்தால் சௌகரியமாக இருக்கும் என்கின்ற எண்ணம் எழுந்தது.

செந்தில் அந்த விடுதியை அடையாளம் கண்டுகொண்டான். நாவால் நக்கும் பசுவை நாடிச் செல்லும் கன்றாய் அவதியாக அவன் அங்கே சென்றான். அவன் அதிர்ஷ்டம் விடுதியின் சுவரோடு இருந்த நிழல் பரப்பிய மூலையில் இரண்டு கதிரைகளோடு ஒரு மேசை மனிதர்களின்றி வெற்றிடமாக இருந்தன. செந்தில் பாய்ந்து சென்று அங்கே இருந்த கதிரை ஒன்றில் அமர்ந்து கொண்டான்.

மனோகரன் வருகிறானா என்று செந்தில் எட்டிய தூரம்வரைக்கும் கண்களால் ஆழத் துழாவினான். திருவிழாக் கூட்டத்தில் அவனை எப்படிக் கண்டுபிடிப்பது? எங்கும் அவன் தோன்றுவதாகத் தெரியவில்லை. கடலில் தொலைந்த கடுகைத் தேடியது போல அவன் கண்கள் சலித்தன.

மனோகரன் தரகராய் ஊரில் வேலை செய்து பழம் தின்று கொட்டையும் போட்டவன் என்று கேள்விப்பட்டிருக்கிறான். நோர்வேக்கு வந்தபின்பு அந்தப் பழம் தின்று கொட்டை போட்டவனுக்கே மூச்செடுக்க முடியாது போய்விட்டது. நோர்வேயில் எல்லாவற்றிற்கும் கட்டமைப்புக்கள் இருக்கின்றன. அவன் தரகு வேலைக்கு இங்கே அதிகம் வாய்ப்பு இருக்கவில்லை. பல தரகு வேலைகளை இணையம் தத்தெடுத்துக் கொண்டது. இருந்தாலும் சிலரின் சிங்கப்பூர் நகைகள், புடவைகள் என்பனவற்றின் பரிமாற்றம் அவன் கட்டுப்பாட்டிற்கு வந்திருந்தன. அத்தோடு தமிழர்களின் வீடுகளைத் தமிழருக்கு இரகசியமாக வாடகைக்குக் கொடுக்கும் சந்தையிலும் அவனுக்கு ஒரு பங்கு இருந்தது. அதைவிட வேறுசில அரிய தரகு வேலைகளும் செய்து வந்தான். அத்தோடு சாவி வேலை என்று செல்லமாகச் சொல்லப்படும் இரண்டு மூன்று மணித்தியாலம் கழுவும் வேலையும் செய்து வந்தான்.

மனோகரன் இன்று செந்திலைப் பார்க்க வருவது அவனுக்கு ஆயிரத்தில் ஒன்றாக இருக்கும் ஒரு சிறு தரகு வேலை. அது மனோகரனுக்குச் சிறு தரகு வேலையாக இருந்தாலும் செந்திலுக்கு இது வாழ்க்கையின் மிகவும் முக்கியமான பணியாக இருந்தது. அதை எப்பிடியாவது நிறைவேற்றித் தனது வாழ்வை ஒழுங்கு செய்ய வேண்டும் என்பது அவனது நீண்டகாலப் போராட்டமாகியது. உள்ளே சென்று ஒரு பியரை வாங்கி வரலாம். அப்படிப் போனால் அந்த நேரத்தில் யாராவது வந்து இந்த மேசையிலிருந்தால் இருப்பதற்கு வேறிடம் கிடைக்காது போய்விடும் என்கின்ற உண்மை உறைக்க அவன் தனது அந்தத் திட்டத்தைக் கைவிட்டான்.

இப்படியே இருந்தால் எதுவும் நடவாது என்பது விளங்கியது. அவன் தனது அலைபேசியை எடுக்கான். அது உடல் பூராகவும் கண்கள் கொண்ட ஒரு குட்டிப் புது ஜந்துவான Nokia 6110. அகண்ட ஒற்றைப் பெரும் விழியாகச் சிறிய திரை ஒன்று அதற்கு. அதில் வரும் போகும் அழைப்பு எண்களின் விபரங்கள் பொங்கித் தணியும். அல்லது செய்தி வந்ததான அறிவிப்புத் துள்ளி எழும். அதைவிட மின்சாரத்தின் கொள்ளளவு, அலைபேசி வலைப்பின்னலின் முழுத் தழுவு அளவு என்பன உட்பட இன்னும் பலவசதிகளைப் பொதிந்து தன்னுள் வைத்திருந்தது.

செந்திலிடம் மனோகரனின் எண் இருந்தது. அவன் மனோகரனுடன் தொடர்பை ஏற்படுத்தினான். இரண்டு முறை அடித்ததும் மறுமுனை உயிர் பெற்றுக் கொண்டது.

'நான் செந்தில். நீங்கள் எங்க நிக்கிறியள். அக்கர்பிறிக்கைக்கு வந்திட்டீங்களா இல்லாட்டி இப்பதான் வந்து கொண்டு இருக்கிறியளா?'

'உண்மை என்ன எண்டால் நான் இப்பதான் வந்து கொண்டு இருக்கிறன். *I am very sorry. Just give me five minute. I will be there... Okay?*'

'ம்... சரி'

என்ன மனிதர்கள் என்கின்ற சலிப்பு முள்ளந்தண்டால் ஏறி மூளையைப் பிய்ப்பதாய் தோன்றியது? நேரத்திற்கு வர வேண்டும் என்கின்ற அக்கறை, கண்ணியம் துளியும் கிடையாது. இவர்களிடம் உள்ள நல்ல பழக்கவழக்கங்களை ஏன் நாம் இலகுவில் கற்றுக்கொள்வதில்லை? செந்தில் அதைக் கற்றிருந்தான். அவன் ஐந்து நிமிடமாவது முந்தியே பிரசன்னமாகுவான். சிலவேளை அவன்தான் முதல் ஆளாகக்கூட இருப்பான். ஆனால் பல தமிழர்கள் அவனைப் போல இல்லை என்பது பச்சைப் பாகற்காயைப் புசிப்பது போல அவனிற்குக் கசக்கும்.

மனோகரனால் நேரத்திற்கு வரமுடியவில்லை. அதை மறைக்கத் தங்கள் புலமையைக் காட்டுவதாக ஆங்கிலத்தில் அளவளாவல்.
அந்நிய மொழியில் கதைத்தால் செய்யும் தவறு சரியாகுமா? ஆங்கிலம் என்கின்ற மொழி தகவல் தொடர்பிற்கானது மட்டுமே தவிர, தவறுகளை மறைப்பதற்கானது இல்லை.

செந்தில் அலைபேசியை மேசையில் வைத்துவிட்டு எழுந்து முதலை சூரிய வெப்பம் தேடுவது போல வெயில் பட நின்றான். சில கணங்கள் நன்றாக இருந்தது. திடீரெனக் காற்று விழுந்து படுத்ததாய் செந்திலுக்கு கமக்கட்டிற்குள் கசகசத்தது. நிர்வாணத் தோலில் செவ்வெறும்பாய் கடித்த சூரியக் கதிர்கள். வியர்க்காத தோலை அனல் பட்டதாய் எரிக்கும் கொடுமை அதனிடம். உள்ளே சென்று கடும் குளிர் கொண்ட வியரை வாங்கி வந்து குடித்தால் பருவாய் இல்லை என்று அவனுக்குத் தோன்றியது. அதற்கு இன்னும் மனோகரனைக் காணவில்லை என்பதால் அவன் கண்களுக்குக் காட்சி புலப்படும் எல்லைவரை தனது பார்வையைச் செலுத்தி நோக்கியவண்ணம் நின்றான்.

வெள்ளை மேற்சட்டையும், காக்கி காற்சட்டையும், நீலத் தொப்பியும் அணிந்த அந்த உருவம் தூரத்தில் தோன்றிச் சிறிது சிறிதாக முன்னேறிக்கொண்டு வந்தது. அது மனோகரனாகவே இருக்க வேண்டும் என்பதைச் செந்தில் ஊகித்தபின் வைத்த கண் வாங்காது அவனைப் பார்த்துக்கொண்டு நின்றான். மனோகரனுக்குப் பிந்தி வந்ததில் குற்ற உணர்வு சுண்டியிருக்க வேண்டும். அவதி அவதியாகவே வந்தான். அவனுக்குக் கழுகுக் கண்கள் என்று நினைத்தான்.

செய்த குற்றத்தை மறைப்பது போல மனோகரன் நகைப்பைக் குடம் குடமாய் வழியவிட்ட வண்ணம் செந்திலை நோக்கி அவசரமாக வந்தான். அந்த வழியலில் செய்த குற்றத்திற்கு மன்னிப்புக் கேட்கும் பாவனை தூக்கலாய் இருந்தது. அப்படி அவசரமாக வந்தவன் தானாகவே சமாதானம் செய்வது போலக் கதைக்கத் தொடங்கினான்.

'*Sorry Senthil. I am very sorry...*'

'அது பிரச்சினை இல்லை. நீங்கள் இதில இருங்க... நான் போய்க் கூலா இரண்டு பியர் வாங்கிக்கொண்டு வாறன். வெயில் இடைக்கிடை வாட்டி எடுக்குது'

'சரி... வாங்கிக்கொண்டு வாரும். பிறகு கதைப்பம்'

செந்தில் இரையைப் பிடிக்கும் மிருகம் போன்ற வேகத்தில் உள்ளே சென்றான். வெளியே இருந்த சூரியக் கதிர்களின் கூர்மைக்கு உள்ளே சென்றபோது அமாவாசை இருட்டிற்குள் அகப்பட்டதாய் அவன் சற்றுத் தடுமாறிப் போய்விட்டான்.
பின்பு நின்று நிதானித்து இருட்டு வெளித்து வழி தெரிய, உள்ளே சென்றான். உள்ளே பலர் ஆசனங்களிலிருந்து குடிப்பதும் புசிப்பதுமாய் இருந்தார்கள். செந்திலால் உடனடியாகத் தான் வாங்குவதற்கு வந்ததை வாங்கமுடியாத அவஸ்தையில் நெளிந்தான்.

உணவும் குடிவகைகளும் வழங்குவதற்கு இரண்டு ஆண்களும் இரண்டு பெண்களும் தயாராக நின்றார்கள். அந்த இரண்டு பெண்களுக்கும் இருபதுவயது இருக்கும். ஒரு பெண்ணின் கேசம் சிவப்பாக இருந்தது. அவள் அதைக் கோவா போலக் கத்தரித்திருந்தாள். உதட்டிற்கு இரத்தச் சிவப்பில் சாயம். பழுப்பு வயிரமான கண்கள். தொழிலுக்காகவோ அல்லது இயற்கையாகவோ புன்னகை மாறாத வதனம். இளம் வாழைத் தண்டான வழுவழுப்பான மெல்லிய உடல்.

மற்றைய பெண்ணிற்குத் தங்கத்தில் செய்ததான பொன்னாய் மின்னும் கேசம். கடலின் நீலத்தை விஞ்சும் ஒளி தெறிக்கும் விழிகள். கோடு வரைந்தது போன்ற மெல்லிய இதழ்கள். அதற்குக் கரும் செம்மையாகத் தீட்டிய சாயம். பள்ளம் மேடுகள் கண்ணைத் துருத்தும் மேனி.

அதைவிட இரண்டு ஆண்கள். அதில் ஒருவன் பருமனாக இருந்தான். அவனுக்குப் பழுப்புநிற விழிகள். தடித்த உதடு. தாடி, மீசை, தலை ஆகியவற்றையும் வழித்துப் பௌத்தத் துறவியான நவீன ஆண்களின் கோலம்.

அடுத்தவன் ஒல்லிப் பனை போன்ற மெல்லிய இளைஞன். கண்மை போன்ற கருப்பான கேசம். கோடு வரைந்ததான மீசை. கறுத்த முத்தாக ஒளிர்ந்த விழிகள். பார்ப்பதற்கு இத்தாலியனைப் போன்று இருந்தான்.

செந்திலின் முறை இரையுண்ட பாம்பாக அவனை வந்தடைந்தது. சிவப்புக் கேசக்காரி செந்திலைப் பார்த்து மென் புன்னகை விரித்த அதரத்தால் 'உங்களுக்கு என்ன வேண்டும்?' என்று கேட்டாள். அவளைப் பார்ப்பதே செந்திலுக்குள் ஒருவித குளிர்மையைப் பரப்பியது. அனுபவிக்க முடியாது என்பது தெரிந்தாலும் இரசிப்பதில் ஒரு திருப்தி ஏற்பட்டது. 'இரண்டு பியர்கள்' என்றான்.
அவள் இரண்டு கொத்து போன்ற கண்ணாடிக் குவளையில் பியரை இரண்டு கைகளாலும் ஒரே நேரத்தில் நிரப்பி மேசையில் வைத்துவிட்டுக் கல்லாவில் தொகையை அடித்தாள். செந்தில் தனது அட்டையைப் பாவித்துப் பணத்தைச் செலுத்திவிட்டுப் பியர்களோடு வெளியே வந்தான். மீண்டும் சூரியக் கதிர்கள் கண் இமைகளைச் சுருங்க வைத்தன.

செந்தில் பியர்களோடு வருவதைப் பார்த்த மனோகரன் உவப்போடு சிரித்தான். அவனுக்கு அடிக்கடி இப்படியான இலவச பியர்கள் கிடைப்பது வழக்கம். அந்த இலவசங்களை அவன் ஆற அமர அனுபவித்துக் கொள்வான். இன்றும் அவன் காட்டில் மழை என்கின்ற சந்தோஷத்தில் முன்வரிசைப் பற்கள் முத்துக்களாய் பளீரிட்டன.

செந்தில் அருகே வரவும், 'கொண்டா செந்தில்... இந்த வெக்கைக்கு இதைவிட மருந்து வேற என்ன இருக்கப் போகுது. இங்க குளிர்தான் சரி. வெயில் எறிச்சா

மேல் எல்லாம் மசுக்குட்டி பட்டகணக்கா எரியத் தொடங்கீடும்… பிறகு கொஞ்சம் வெயில் சாய ஐஸ்கட்டியால உடம்பில தேய்க்கிற மாதிரிச் சட்டெனக் குளிரத் தொடங்கீடும்' என்றான்.

'நீங்கள் சொல்லுகிறது உண்மை மனோ. சனத்தைப் பாருங்க… திருவிழாபோல வாழ்க்கையை அனுபவிக்கிறாங்கள். எங்கடை நாட்டில குஞ்சு குருமன்கள் எல்லாம் தங்கடை உயரத்திற்கு மிஞ்சின ஆயுதத்தைத் தூக்கிக்கொண்டு அதுகளின்ரை எதிர்காலத்தை நாசமாக்குதுகள்'

'ஊம்… சூரியத்திருவிழா. ஆனால் தைப்பொங்கல் எங்களைவிட இவங்கள்தான் கொண்டாட வேணும் எண்டு நான் நினைக்கிறன். வெள்ளைச் சருமத்தை பழுப்புச் சருமமாக்கி கொடுக்கிற அற்புதம் சூரியனிட்டத்தானே இருக்குது. அதுக்குத்தானே இவங்கள் சூரியனைப் பார்த்து மணிக்கணக்கில நிர்வாண யாகம் செய்கிறது. என்ன நான் சொல்லுகிறது சரியே? நாட்டில இலக்குத் தெரியாத போராட்டத்தில சின்னன் சிறுசுகளின்ர உயிர் ஆகுதியாகுது. அது அந்தப் பிள்ளையளின்ரை விருப்பத்தோடையா நடக்குது?'

'சரிதான் மனோ. யார் யாருக்கு எது எது கிடைக்குதில்லையோ அது அது அவர் அவர்களுக்குப் பெரிய விசயமாகத்தான் இருக்கும். எதையும் வைச்சிருக்கிறவனுக்கு அதுகின்ர அருமை தெரியாது. இல்லாதவனைத்தான் அதுகின்ர ஏக்கம் மேய்ஞ்சு தள்ளும். பேய்க்கு அடிமையா இருக்கக் கூடாது எண்டு நினைச்சு பிசாசுகளுக்கு அடிமையான கதையாப் போச்சுது எங்கட நாட்டுக்கதை'

'நீங்கள் கொஞ்சம் உங்கடை அனுபவத்தைச் சொல்லுற மாதிரி இருக்குது?' செந்தில் செத்த சிரிப்பு ஒன்றை பிரசவித்தவண்ணம் பியரை வைத்துவிட்டு இருந்தான். அதுவரை காத்திருந்த மனோகரன் அதைக் கையில் எடுத்து 'சியேஸ்' என்று முட்டக் காத்திருக்க, செந்தில் அவனைத் தாமதப்படுத்த விரும்பாது எடுத்து முட்டிவிட்டு ஒரு இழுவை இழுத்து வைத்தான்.

'பூனைக்கு விளையாட்டு எலிக்கு வாழ்க்கை எண்டுகிற கதை மாதிரிதான்'

'ஐயோ அப்பிடி எல்லாம் நான் நினைப்பனா செந்தில்…? நான் உங்களைக் காயப்படுத்தோணும் எண்டு சொல்லவில்லை'

'எனக்கும் தெரியும்'

வெப்பம் காற்றில் தாவிப் படர, சூரியக் கதிர்கள் வெள்ளித் தகடாக மினிங்கின. நீள் சிறகு கடற்பறவைகள் சில கே... கே... எனச் சத்தமிட்ட வண்ணம் ஆகாயத்தில் வெள்ளைக் கழுகுகளாகச் சுற்றின. சில அடுத்த கரையில் ஓடுதளத்தில் ஓடாத விமானம்போல் இறங்கி உணவு தேடின. அங்கே சில படகுகள் அன்று அகப்பட்டதை எடுத்துக்கொண்டு வந்து கரையொதுங்கியிருந்தன. அவர்களிடமிருந்து தங்களுக்கு இரை கிடைக்கலாம் என்கின்ற எதிர்பார்ப்பு அவற்றிற்கு.

எதிரே கடலில் முளைத்ததாக எழுந்து நின்ற மலை போன்ற கோட்டை. கறுப்பும் சிவப்பும் கலந்த ஒரு பழுப்பு நிறத்தில் மதில்களும், சுவர்களும் நிறைந்த அரண் அது. அங்கே பச்சைக் குடை போன்ற சில கூரைகள். கறுப்பு நிறத்திலும், சிவப்பு நிறத்திலும் சில வேறு கூரைகள். அதன் பின்னே சுறாவின் பற்கள் போன்ற ஒஸ்லோவின் கட்டடக்காடு. அதை ஆசீர்வதித்துப் பின்னே எழுந்து நின்ற பச்சை மலைகள். கோட்டையின் பாதங்களில் ஒரு நீளமான கப்பற்றளம். அரச கப்பல்கள் வந்து நிற்பதற்கான இடம் அது.

கடலில் பல தோணிகள், ஓடங்கள், படகுகள் என்பன பல வர்ணங்களில் வேக வாத்துக்களாக அங்கும் இங்கும் விரைந்து சென்றன. துறையில் மேலும் ஒரு பெரிய பயணிகள் படகு வந்து அமைதியாகியது. பல வர்ணங்களில், பல உருவங்களில், பல இன மக்கள் ஆடை பாதி அம்மண உடல் பாதியாகப் படகால் இறங்கி விட்டதைப் பிடிக்கும் அவசரத்தில் விரைந்தார்கள். சிலர் ஆக்கர்பிறிக்கவில் உணவுவிடுதிகள் மற்றும் மதுக்கூடங்கள் இருக்கும் இப்பக்கத்திற்குக் காந்தத்தால் இழுக்கப்பட்ட இரும்பாக ஓட்டமும் நடையுமாக வந்தார்கள்.

மனோகரன் கையில் ஒரு *Siemens S10* இருந்தது. அது ஒரு கையடக்கக் கறுப்பியாக மின்னும் பல கண்களும் சிறிய திரையையும் கொண்டது. திரையில் கொஞ்சம் வர்ணமாகப் படங்களுடன் இந்த நாட்களுக்கே உரிய அடையாளங்களையும் அடக்கிய குட்டிப் பெண்ணாகக் கவர்ச்சி காட்டியது. அவன் அதை எடுத்து அதன் குரலை அடக்கி வைத்துவிட்டுச் செந்திலைப் பார்த்தான்.

'ம்... நாங்கள் இனி விஷயத்தைக் கதைக்கலாம் செந்தில்'

'அதுக்குத்தானே நான் உங்களைத் தேடி வந்து இருக்கிறன். முதல்ல நீங்கள்தான் அந்த ஆள் யார் எண்டு, என்ன செய்யிறார் எண்டு, எப்பிடிப்பட்டவர் எண்டு எனக்கு

விபரமாகச் சொல்ல வேணும். அது முதல்ல மிகவும் முக்கியமான ஒண்டு. போடுகிறது நல்லதா இருந்தாத்தானே விளைகிறதும் நல்லதா இருக்கும்'

'ம்... அதெல்லாம் அறியாமல் கேட்காமல் இதை நான் உங்களுக்கு ஒழுங்கு செய்வனா? எனக்கு அவரைத் தெரியும். ஒருமுறை ஆளையே நேர சந்திச்சு கதைச்சு இருக்கிறன். ஆனா நீங்கள் அப்பிடி அவரோடை கதைக்க முடியாது. நல்ல உடம்பான உயரமான வாட்டசாட்டமான கெட்டிக்காரன். இல்லாட்டி இங்க வந்து மொழி படிச்சு, மெடிசீன் படிக்கிறது ஒண்டும் லேசான விஷயம் இல்லைத்தானே? அவன் யூனிவர்சிட்டியிலும் ரொப்பாம். நல்ல சுகதேகியான பிள்ளை. நீங்கள் அதைப் பற்றி எல்லாம் கவலைப்படத் தேவையில்லை'

'நீங்கள் நல்ல தரகர் எண்டு என்னிட்டையே நிரூபிக்கிறியளோ என்னவோ...?'

'அப்பிடி எல்லாம் உனக்குச் செய்வனா செந்தில்? எதில பிழைவிட்டாலும் இதில பிழைவிடக் கூடாது எண்டு எனக்கு நல்லாய் தெரியும். இது உங்களுடைய வண்ண வண்ணக் கனவுகள் பொங்கி வழியிற ஈடுசெய்ய முடியாத வருங்காலம். அதைப் பற்றி எல்லாம் நான் சிந்திக்காமல் செயல்படுவனா என்ன? நீங்கள் அவரை பற்றித் துளியளவும் கவலைப்படத் தேவையில்லை. அவர் உங்களுக்கு மாத்திரம் இல்ல வேற சிலருக்கும் இந்த உதவிய செய்திருக்கிறார்' என்றான் மனோகரன்.

'இப்பிடிச் செய்கிறதால தனக்கு பிற்காலத்தில் பிரச்சினை ஏதாவது வரலாம் எண்டுகிற பயம் இல்லையா அவருக்கு?' என்று கேட்டான் செந்தில்.

'அப்பிடி தெரியேல்ல... அதுக்கு அந்தப் பிள்ளைக்குக் கஸ்ரப்படுகிற மற்றவைக்கு உதவி செய்ய வேணும் எண்ட மனப்பான்மை இருக்கிறதோடை மருத்துவ அறிவும் உதவியா இருக்குது. அதால இதைச் செய்யிறதில தெளிவாக இருக்கிறார். நிச்சயம் நீங்கள் எதைப்பற்றியும் கவலைப்படத் தேவையில்லை. ஆனால் நீங்கள் அவரை நேரில சந்திக்க முடியாது. அவரைப் பற்றின உண்மையான விபரங்கள் தர முடியாது'

'பருவாய் இல்லை. நீங்கள் இப்படி சொல்லுகிறது நிம்மதியாய் இருக்குது. இருந்தாலும் மனசுக்க இது சரிதானோ என்கிற கேள்வியும் பூனை நகம்போலப் பிறாண்டிக்கொண்டு இருக்குது. வாரிசுகள் எண்டாலே தங்களுடைய பிரதியாக இருக்கோணும் எண்டதுதான் உலகத்தில இருக்கிற எல்லா உயிர்களினதும் நோக்கமாக இருக்கும். அதுக்கு உலகத்தில இருக்கிற மனிசரோ அல்லது வேறு எந்த ஜந்துவோ புறநடையாக இருக்க முடியாது இல்லையா? அதைவிட

எங்களுடைய சமுதாயத்தின்ரை கட்டுப்பாடுகள், எதிர்பார்ப்புகள் எல்லாம் எப்பிடி இருக்கும் எண்டதை நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. வேணும் என்கிற தாகம் தணியாது. அதுக்கு வேற வழியும் இல்லை. மனது செக்கு மாடுபோல விருப்பத்தையும், பிரச்சனைகளையும் இழுத்துக்கொண்டு சுற்றிச் சுற்றி வருகுது' என்றான் செந்தில்.

'இது இப்ப தேவையில்லாத குழப்பம். 'செய்வது துணிந்து செய்' என்று பாரதி சொன்ன மாதிரி செய்திட்டுப் போய்க்கொண்டு இருக்கோணும். தேவையில்லாததுக்கு எல்லாம் கவலைப்பட்டுக்கொண்டு இருந்தால் வாழேலாது' என்றான் மனோகரன்.

'சொல்லுகிறதை லேசாச் சொல்லீட்டுப் போகலாம். ஆனா நடைமுறை வாழ்க்கை எண்டுகிறது வாழைப்பழம் மாதிரி இல்ல நாகதாளி மாதிரி இருக்கும்'

'நீங்கள் செய்கிறது ஒண்டும் அந்த அளவுக்குப் பெரிசான விடயமோ, தவறான விடயமோ இல்லை... பிறகு எதுக்கு உந்தத் தேவையில்லாத குழப்பங்கள்?'

'நீங்கள் எப்பிடிச் சொல்லுறியள் மனோகரன்?'

'ம்... நீங்கள் அறியாததில்லை. இது எல்லாருக்கும் தெரிஞ்ச விசயம் ஒண்டுதான். நியோக் எண்டுறதைப் பற்றி நீங்கள் இப்பவும் ஞாபகம் வைச்சிருப்பியள் எண்டு நினைக்கிறன்'

'எங்கயோ கேள்விப்பட்ட ஞாபகம். சரியாப் பிடிபடுகுதில்லை. ஆ... மகாபாரதத்திலையா?'

'ம்... அதிலைதான். விதை சரியானதாக இல்லாவிடில் ராஜ்யத்திற்கே ஆபத்தாக முடியலாம் என்று சத்தியவதி கவலையுறுகிறாள். அதைச் சரி செய்ய எண்ணி முதல்ல பீஷ்மரைக் கூப்பிட்டு அம்பிகா மற்றும் அம்பாலிகாவோடு சேர்ந்து 'நியோக்' முறையில் குழந்தையைப் பெற்றுக் கொடுக்குமாறு கேட்கிறாள். அதற்குப் பீஷ்மர் தனது பிரம்மச்சாரிய விரதத்தைக் கூறி முற்றுமாக மறுக்கிறார். அத்தோடு பீஷ்மர் தனது விரதத்தை எதற்காகவும் விட்டுக் கொடுக்க முடியாது என்ற நிலையில் நின்று கொண்டதால் வேறு வழியின்றி சத்தியவதி தனது மகனான வியாசரை அழைக்கிறாள். வியாசர் சத்தியவதிக்கு எப்படி மகன் ஆவார் என்பதற்கு வேறொரு கதை இருக்கிறது. அது என்ன வென்றால்; மத்ஸ்யகந்தா கங்கையின் இக்கரையிலிருந்து எதிர்க் கரைக்கும், எதிர்க்கரையில் இருந்து இக்கரைக்கும் படகில் மக்களை ஏற்றிச் செல்வாள் சத்தியவதி. ஒரு நாள் படகில் முனிவர் பராசரர் பயணம் செய்தார். பாதி பயணத்தின்போது சத்தியவதியின் மீது மோகம் கொண்டு... படகைச் சுற்றிப் பனிப் படலம் ஏற்படுத்தி... யாரும் அறியாமல் தாயாகிப் பின்னர்

கன்னியும் ஆகி விடுவாய் என்றும், அவளிடமுள்ள மீன் வாடையும் போகுமென்றும் உறுதியளிக்க, சத்தியவதி உடன்பட்டாள். அவரது தவவலிமையால் படகு எதிர் கரையை அடையும் முன் மத்ஸயகந்தா தாயுமாகிப் பின் கன்னியும் ஆனாள். படகு பயணத்தின்போது மத்ஸ்யகந்தாவுக்கும் பராசர முனிவருக்கும் பிறந்தவரே கிருஷ்ண த்வைபாயனர் என்ற வியாசர் ஆவார். இவரைச் சத்தியவதி யமுனை ஆற்றின் ஒரு தீவில் பெற்றெடுத்தார் என்று அதற்கான கதை உண்டு. பின்பு வியாசர் வந்து அம்பிகாவிடம் பேசும்போது 'விதைக்கு எந்தவித மகத்துவமும் இல்லை மகத்துவம் எல்லாம் நிலத்திற்கே' என்று கூறுகிறார். நல்லாகக் கவனியும். அதன் அர்த்தத்தை விளங்கிக் கொள்ளும். அதன் பின்பு வியாசர் புணர்ந்தது, அப்போது அம்பிகா கண்ணை மூடிக்கொண்டது, அதனால் குருடனான திருதராட்டிரனைப் பெற்றது, அம்பாலிகை அவரது தோற்றத்தைக் கண்டு வெளிறி வெலவெலத்ததால், அவளுக்குப் பிறந்த குழந்தை பலவீனமாகப் பிறந்தது, என்று கதை போவது உங்களுக்குத் தெரியும்.

அதைவிடக் குந்தி பெற்ற பிள்ளைகள் உடல் உறவால் இல்லாது தேவர்களால் தொடாது பிறந்தன என்று புனையப்பட்டு இருந்தாலும், அது சாத்தியப்படாத ஒன்று என்பதை இப்போது இருக்கும் நவீன உலகம் விளங்கிக் கொள்ளும். அங்கேயும் ஏதாவது 'நியோக்' முறை பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இல்லாமல்கூட வெறும் கற்பனையாகவும் இருக்கலாம்.

மகாபாரதம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இப்போது நாங்கள் பாவிக்கும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களைக் குட்டிக் குட்டிக் கதைகளாகச் சொல்லிச் சென்று இருக்கிறது. அதுவே கருவறைக்கு வெளியே கருவை வளர்த்து எடுக்கலாம் என்றும் சொல்கிறது. அதுவே கணவனால் கிடைக்காவிட்டால் கடனாகப் பெற்றுக் கொள்ளலாம் என்கிறது.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அவர்களால் இப்படியான கருத்துக்களைச் சொல்ல முடிந்தது மாபெரும் சுனாமியான கருத்துப் புரட்சியே. அப்பிடி இருக்க நாங்கள் இந்த நவீன உலகிலிருந்துகொண்டு அவர்கள் கதைப்பார்கள் இவர்கள் கதைப்பார்கள் என்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது எண்டு நினைக்கிறீர்?

'விதைக்கு எந்தவித மகத்துவமும் இல்லை மகத்துவம் எல்லாம் நிலத்திற்கே' எண்டுகிறதை நீங்கள் ஞாபகம் வைச்சிருந்தியள் எண்டா உங்களுக்கு எந்தக் குழப்பமும் வராது. இந்த உலகத்தில் ஒவ்வொரு உயிரினத்தையும் படைத்து, அதற்கான செயற்பாட்டையும் கொடுத்து, அதன் முடிவையும் இயற்கை தெளிவாகவே எழுதி வைத்திருக்கிறது. பரம்பரை விருத்தியை மீறி எந்த உயிரினத்தாலும் இந்த உலகில் வாழ முடிந்ததில்லை. அதற்காகவே வாழ்ந்து மடிவதை நாங்கள் நினைத்தாலும் தடுக்க முடியாது. இது பல பத்து இலட்சம் வருடங்கள் பரிசோதித்து இயற்கை கண்டுபிடித்த முடிவு. அப்படி இயற்கையின் ஆட்சியில் இருக்கும் இந்தச் சிறிய வாழ்க்கையில் அடுத்தவர் கருத்துக்கு மட்டும் காது கொடுத்துக்கொண்டு இருந்தால் எங்கள் வாழ்க்கையை நாங்கள் வாழ முடியாது. ஆக மொத்தத்தில் போன கணங்கள் திரும்பி வராத இந்த வாழ்க்கையில் உங்களுக்கு எது சரி எண்டு படுகிறதோ அதைச் செய்துகொண்டு போக வேண்டியதே சரியாக இருக்கும். என்ன நான் சொல்லுகிறது சரியா?"

'நீங்கள் என்னுடைய கலங்கிய குட்டையான மனதைக் கண்ணாடியாக மாற்றி இருக்கிறியள். நீங்கள் சொல்லுகிறதில இருக்கிற அர்த்தம் எனக்கு விளங்குது. நாங்கள் இதைக் கட்டாயம் செய்யத்தான் வேணும். எங்களால இந்த உலகத்துக்குச் செய்யக்கூடிய பணி இதுதான், அத்தோடை நாங்களும் இந்த இயற்கைக்குக் கட்டுப்பட்ட சாதாரண மனிதர்கள் எண்டதும் விளங்குது'

மனோகரனின் கண்ணாடிக் குவளை ஏற்கனவே வெறுமையாகி இருந்தது. தனது குவளையிலிருந்த கடைசிச் சொட்டையும் உறிஞ்சிய செந்தில் மனோகரனைப் பார்த்து, 'ஒரு நிமிஷம் மனோகரன்... நான் பியர் வாங்கிக்கொண்டு ஓடியாறன். அப்பதான் கொஞ்ச நேரம் இருந்து கதைக்கலாம்' என்று கூறியவன் தாமதியாது பியர் வாங்க உள்ளே சென்றான்.

நிறைந்து வழியும் பயணிகளோடு செல்லும் பேருந்திற்குள் ஏறுவது போன்று மதுப்பிரியர்களால் விடுதிக்கு உள்ளே இடம் இல்லாது பிதுங்கி வழிய நுழைய வேண்டி இருந்தது. அதற்காகத் திரும்பிச் சென்றுவிட முடியாது என்பதை விளங்கிக்கொண்ட செந்தில் அவர்களின் பின் சென்று நின்று கொண்டான். வரிசை மெதுவாக நகரத் தொடங்கியது. மனோகரனிடம் மேலும் என்ன கேட்க வேண்டும் என்கின்ற எண்ணம் அவன் மூளைக்கலங்களில் வெடிக்கத் தொடங்கின.

விதை நிலத்தில் விழலாம். விழுந்த விதையெல்லாம் முளைக்கும் என்பதில்லை. அதற்கான காலம் சூழ்நிலை முளை விடத் தேவையான காரணிகள் அனைத்தும் அங்கே இருக்க வேண்டும். அதில் ஏதாவது ஒன்று பிழைத்தால் போட்ட விதை கழிவாகிப் போவது மட்டும் திண்ணம்.

விமானத்தை ஏற்றி இறக்குவது போல அனைத்தையும் கவனமாகச் செய்ய வேண்டும் என்பதாகச் செந்தில் எண்ணிக்கொண்டான்.
பிழை விடுவதற்கு இங்கே இடம் இல்லை. பிழைவிட்டால் மொத்தமும் நொறுங்கிப் போய்விடும். அதை எண்ணவே அவனுக்கு வேப்பெண்ணெய்யாகக் கசந்தது.

ஒருவாறு செந்திலின் முறை வந்தது. இப்போது அங்கே ஏற்கனவே இருந்தவர்களோடு வேறொரு ஆப்பிரிக்கப் பெண்ணும் நின்றாள். சுருள் சுருளாகத் தொங்கிய கரும் சர்ப்பங்களான கேசம் அவளுக்கு. கரு முத்தாகத் தகதகத்த விழிகள். சந்திரனைப் போன்ற வட்ட முகம். குடையாக ஆடிய காதணிகள். மெல்லிய இதழ்கள். தட்டையான பரந்த மூக்கு. உதட்டிற்கு கரும் சிவப்பிலான சாயம். அரிசி முத்து போன்ற பற்கள். கறுப்பிலான அவர்கள் சீருடைகள். அதற்குமேல் அணிந்த சமையல் மேலாடை. அவள் செந்திலைப் பார்த்தாள். அந்தப் பார்வை செந்திலின் இதயத்தை ஒருமுறை அழுத்திப் பிடித்ததாக இருந்தது. 'இது தப்பு' என்று செந்திலின் மனது அவனுக்கு எச்சரிக்கை விடுத்தது.

அவள் செந்திலைப் பார்த்துச் சிரித்தாள். பின்பு, 'உங்களுக்கு என்ன வேண்டும்?' என்று கேட்டாள். செந்தில் தனக்குத் தேவையானதைக் கூறி, அதைப் பெற்றுக்கொண்டு மீண்டும் மனோகரனை நோக்கி அவசரமாகச் சென்றான்.

வெள்ளிக் கதிர்கள் வெப்பத்தை அள்ளி வந்ததாக வெளியே காற்றில் அனல் தகதகத்துக் காதல் மொழி பேசியது. மனோகரன் தாகத்தோடு காத்திருப்பதாகச் செந்திலுக்கு விளங்கியதால் வேக நடையோடு அவனை நோக்கி விரைந்து சென்றான்.

வெளியே ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், ஓயாத அலைகள் ஓய்வின்றிப் பிரசவிப்பதாக... அதில் பல முத்தமிடும் இளைஞர்களும், கைகள் பிணைத்த காதலர்களும்... அதில் பலர் தாகம் தணிக்கும் வேகத்துடன் விடுதிகளுக்குள்

நுழைபவர்களாக… அவர்களை விலத்திக் கொண்டு செந்தில் மனோகரனிடம் வந்து சேர்ந்தான். செந்தில் வருவதைக் கண்ட மனோகரன் அகல விரிந்த மலரான முகத்தோடு, 'வா செந்தில் வா. வெயில் வாட்டி எடுக்குது. தாகமா வேற இருக்குது' என்றான்.

'சொறி மனோகரன். நிறையக் கூட்டம்… அதுதான் மினக்கெட்டுப் போச்சுது'

'அது எனக்கும் தெரியும். வயல்ல விழுந்த வெட்டுக்கிளி மழை போலச் சனத்தின்ர நெருக்கம். உதுக்குள்ள போய் வாறதே பெரிய சாகசம்தான்'

செந்தில் பியரை வைத்துவிட்டு நாற்காலியிலிருந்தான். மனோகரன் கண்ணாடிக் குவளையை எடுத்தவண்ணம் செந்திலைப் பார்த்தான். செந்தில் அதை விளங்கிக்கொண்டு தனது குவளையை உயர்த்த, 'சியேஸ்' என்று முட்டிவிட்டு மனோகரன் குளிரில் வியர்த்து வழிந்த குவளையிலிருந்த பொன்னிறத் திரவத்தை ஒரு இழுவை இழுத்தான். செந்திலும் தனது தாகத்தைத் தீர்த்து உதடுகளைச் சுற்றித் தங்கிவிட்ட நுரையைப் புறங்கையால் துடைத்துக்கொண்டு, 'எங்களுக்கு அவரைப் பற்றி, இதை எப்பிடிச் செய்கிறது எண்டதைப் பற்றி நீங்கள் விபரமா சொல்ல வேணும்' என்றான்.

'அது எல்லாம் விபரமாச் சொல்லலாம். ஒவ்வொண்டும் எப்பிடி படிமுறையா கவனமாய் செய்ய வேணும் எண்டு நான் உங்களுக்கு விளங்கப்படுத்துறன். அதுக்கு முதல் நீங்கள் உங்கடை உச்ச நாளைக் கண்டு பிடிக்க வேணும். அப்பதான் ரிக்கெற் புக் பண்ண, ஹோட்டல் புக் பண்ண, அதுக்கு ஏத்தமாதிரி அங்க மேற்கொண்டு ஒழுங்கு செய்யச் சாத்தியமா இருக்கும்' என்றான் மனோகரன்.

'அது… என்ன உச்ச நாள் எண்டா… விளக்கமாச் சொல்லுங்க?' என்று செந்தில் கேட்டான். அவனுக்கு அது விளங்கியும் விளங்காதது போன்ற குழப்பம்.

'அது செந்தில் பெம்பிளையளின்ர மாதவிடாய் சக்கரத்தில கரு வெளியேறுகிற நாள். அப்பக் கவனமா இருந்தால் கருத்தரிக்காது எண்டு நினைச்சுக்கொண்டு தொடங்கி அவதியில கட்டுப்பாட்டை இழந்து வெளிய உள்ள தெரியாமல் கற்பமாகி அவஸ்தைப் படுகிறதை கேள்விப்பட்டிருப்பியள். அதை *Ovulation* எண்டு சொல்லுவினம். பொதுவா பதினான்காம் நாள்ல வரலாம். ஆனா அது ஆளுக்கு ஆள் வித்தியாசப்படும். அதை நீங்கள் சில அறிகுறிகள் அதாவது *Signs of Ovulation* வைச்சும் கண்டு பிடிக்கலாம். ஆனால் நாங்கள் அப்பிடியான அறிகுறிகளை மட்டும் வைச்சு கணிக்காமல் *Clearblue Ovulation test*-ஐ பயன்படுத்திச் சரியான

நாளைத் துல்லியமாக் கண்டுபிடிக்க வேணும். அதை நீங்கள் மூண்டு மாதம் செய்து உறுதிப்படுத்தினால் அந்த நாளுக்கு முதல்நாள் நீங்கள் அங்க இருக்கிற மாதிரி ஏற்பாடு செய்யலாம். அப்பிடிச் செய்தால் அனேகமாகச் சரியாய் வரும்'

'ஓ நீங்கள் சொல்லுகிறமாதிரி கேள்விப்பட்டு இருக்கிறன். ஆனால் உதையெல்லாம் யார் கவனிக்கிறது'

'இனிக் கவனியுங்க... ரெஸ்ற்றை செய்யுங்க... கலண்டரில மார்க் பண்ணுங்க... சரியான முடிவோடை வந்தியள் எண்டா, மிச்சத்தை நாங்கள் கதைச்சு ஒழுங்கு செய்யலாம்'

'இதைப் பற்றி நானும் கொஞ்சம் வாசிக்க வேணும். நான் அப்ப உங்களை மூண்டு மாதம் கழிச்சுத் தொடர்பு கொள்ளுறன். எனக்குக் கொஞ்சம் அலுவல் இருக்குது... அப்பப் போட்டு வரட்டே?' என்றான் செந்தில்.

'சரி வாரும் நானும் வெளிக்கிட வேணும்'

'ஓகே வாய்'

'வாய்'

செந்தில் நசுநால்தியேட்டர் சுரங்க இரத நிலையத்தை நோக்கி நடக்கத் தொடங்கினான். சில படகுகளில் அவித்த இறால் விற்றார்கள். அதன் அருகே பலர் நின்று அதை வாங்கினார்கள். கடைகளைவிட இங்கு வாங்குவது மலிவாக இருக்கும் என்று செந்தில் கேள்விப்பட்டு இருக்கிறான். அவர்களைச் சுற்றிச் சில நீள் சிறகு கடற்பறவைகள் தங்களுக்கு இரை ஏதாவது கிடைக்குமா என்கின்ற எதிர்பார்ப்பில் தலையைத் தூக்கித் தூக்கிப் பார்த்தன. அமிழ் தண்டூர்தித் தடங்களை அவன் தாண்டிச் சென்றபோது பல ஜப்பானியர்கள் கூட்டமாக, நூதனம் பார்க்கும் ஆர்வத்தோடு சென்றார்கள். அவர்களுக்கு வழிகாட்டியாக ஒரு சுதேசி விளங்கப்படுத்திய வண்ணம் சென்றான்.

தலைக்கு மேல் ஆளக்கடல் நீலமாக வானம் வெளித்துக் கிடந்தது. ஒஸ்லோ நகரம் கண்ணாடிப் பெட்டியில் வைத்த காட்சிப் பொருட்கள்போலத் தெளிவாகக் காட்சி தந்தது. செந்தில் தனது திட்டத்தை மாற்றி முதலில் நூல்நிலையத்திற்கும் பின்பு மருந்துக் கடைக்கும் செல்வதாக முடிவு செய்து கொண்டான்.

4

போலர் (*Bøler)* ஒஸ்லோவிலிருக்கும் குட்டிக் குட்டி நகரங்களில் ஒன்று. ஒஸ்லோவின் இரத்த நாடியாக விரிந்து பரந்து ஓடும் சுரங்க இரதத் தடத்திற்கு அருகிலிருக்கும் வசதி அதற்கு. அதைவிட இரத்த நாளம் போன்ற பேருந்துச் சேவையின் ஒரு பகுதியாகச் செல்லும் (*General Ruges vei*) ஜெனரல் றுகேஸ் வேய்யும் அதில் பயணிக்கும் எழுபது, எழுபத்து ஆறு, எழுபத்து ஒன்பது ஆகிய பேருந்துகளும். இதில் பிராணவாயு கரியமிலவாயு என்கின்ற வேறுபாடு கிடையாது. இந்த உயிரோட்டத்தையும் போலர் சென்ரர் பக்கம் இருந்து வரும் போக்குவரத்தையும் ஒழுங்கு செய்து பிரதான பாதையில் கலக்க விடுவதற்கு சட்டம்பி போல நிற்கும் தன்னிச்சையாக இயங்கும் சமிக்கை விளக்குகள். சென்ரருக்கு மறுகரையில் வாகனங்களின் தண்ணீர் தொட்டியாக இருக்கும் '*Circle K*' எரிபொருள் நிலையம்.

அந்த புறநகர்ப் பகுதியின் நடுநாயகமான போலர் சென்ரர். சென்ரருக்கு மேலேயும் எதிர் பக்கமாகவும் நவீனமாக முளைத்து நிற்கும் கிழக்குக் காட்டை எட்டிப் பார்க்கும் கலங்கரை விளக்கம்போல எட்டடுக்கை எட்டும் மாடிக் குடியிருப்புகள். சுரங்க இரதப் பாதையையும் தெருவையும் கடந்து மறுகரையிலிருக்கும் ஆப்பிள், பியர் மரங்கள் நிறைந்த காடான பாரம்பரிய வீடுகளின் தொடர். அதற்கு இடையிலும் சில கலங்கரை விளக்கங்கள். அவை நான்கு அடுக்குகள் மட்டும் கொண்ட கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட தாழ் அடுக்குமாடிக் கட்டடங்கள்.

சுரங்க இரதப் பாதை கீழே வாய்க்கால் அமைத்துச் செல்ல, அதற்கு மேல் ஒரு பாலம் சென்ரரிலிருந்து பாரம்பரிய வீடுகளுக்குச் செல்லும் பாதையாக… அந்தப் பாலத்தின் ஓரத்தில் சுரங்க இரதப் பாதைக்கு மேலே இருந்த '*Narvesen*' நர்வேசன். பெட்டிக்கடைகளின் சந்தையில் பெரும்பகுதியைப் பிடித்துக்கொண்ட நிறுவனத்தின் ஆளுமைக்கு உள்பட்டது. பெரும் முதலாளிகளும் அவர்களின் கிளைகளும் உண்டு ஏப்பம்விடும் வியாபாரமாக… அதில் உதிர்ந்த உணவை உண்டு உயிர்வாழும் சிறு வியாபாரிகள்.

சென்ரரைத் தாண்டித் தெற்குப் பக்கத்திற்குச் செல்ல 'போலர்லியா' அரவம் போல வளைந்து செல்கிறது. நெருப்புப் பெட்டிகளைச் சரித்து அடுக்கியது போன்ற பன்னிரண்டு மாடிகளைக்கொண்ட இளஞ்சிவப்புக் கட்டடங்கள் இரண்டு. அவற்றில்

நீட்டிக்கொண்டு இருக்கும் தொட்டிகள் போன்ற பல்கணிகள். அவை இரண்டும் ஒரு கரையை ஆக்கிரமித்தவண்ணம் நின்றன. அதைவிட மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு என்பதாக நான்கு ஐந்து மாடிகளைக் கொண்ட பல கட்டடங்கள் இரு கரையிலும். அவை வாயிலிருக்கும் பற்களைப் போன்று நெருக்கமாகப் பல வடிவங்களில், பல திசைகளில், இரு கரையிலும். அவற்றின் இடையே பச்சைக் கம்பளங்களை விரித்ததுபோல் முற்றங்கள் அமைந்தனவாக…

போலரில் குடியிருப்புக்களைத் தவிர்த்து நீச்சல் தடாகம், நூல் நிலையம், பாடசாலை, குழந்தைகள் காப்பகம் என்பதாகப் பல்வேறு வசதிகளும் சேவைகளும் குவிந்திருந்தன.

நர்வேசனும் அதன் தளமும் மேலே குடையாக, கீழே அதன் நிழலில் சுரங்க இரத நிலையம். போலர் சென்ரர் பக்கத்திலிருந்து சித்தன் அவசரமாக வந்துகொண்டு இருந்தான். சுரங்க இரதத்தைத் தவறவிடக் கூடாது என்கின்ற பதட்டம் அவனிடம். தனது திறன்பேசியை எடுத்து அந்த ஓட்டத்தினூடே நேரத்தை மீண்டும் பார்த்தான். அவனுக்கு நம்பிக்கை வந்தது. நேரத்திற்கு முன்பாகவே சுரங்க இரத நடைபாதைக்குச் சென்றுவிடலாம் என்கின்ற நம்பிக்கை தாராளமாக இருந்தது.

சித்தன் 'திறிம் குஸ்தா' என்கின்ற மருத்துவரைச் சந்திக்க வருவதாகக் கூறியிருந்தான். அவரைச் சந்திப்பதில் ஏதாவது தாமதம் ஏற்பட்டுவிடுமோ என்கின்ற பதட்டம் அவனிடம். அதனால் தோன்றிய அவசரம் தணியாத வேகத்தோடு சுரங்க இரத நடைபாதையை வந்தடைந்தான்.

திறிம் குஸ்தா மோத்தன்ஸ்றுாட்டில் உள்ள '*Kantarellen legesenter*'-இல் வேலை செய்கிறார். அவர் குழந்தைகள் மருத்துவத்தில் மிகவும் திறமையானவர். தானும் அதையே படிக்க வேண்டும் என்பது சித்தனின் வாழ்நாள் கனவு. உள்ளும் புறமும் ஓமகுண்டத்தின் ஆகுதியாய் அவன் அதற்காக எரிந்தான்.
திறிமை றிக்ஸ் கொஸ்பிற்றலில் ஒருநாள் சந்திக்க முடிந்தது. அப்பொழுது இருந்தே சித்தனுக்கு அவர்மேல் ஒரு மரியாதை. அது அவரது அறிவு, திறமை, நற்குணம் என்பனவற்றிற்குக் கொடுக்கும் மரியாதையும், பணிவும்.

சித்தன் மன வேகத்தில் நடைபாதைக்கு வந்துவிட்டான். இன்னும் சுரங்க இரதம் வரவில்லை என்பது கோடைக்காலத்தில் ஓய்வெடுப்பதான அமைதியை அவனுக்குத் தந்தது. சித்தன் கண்ணை மூடியவண்ணம் மூக்கால் ஆழமாக, அமைதியாகக் குளிர்ந்த காற்றைச் சுவாசித்து, காற்றின் பிராணவாயுவைக் கலன்களுக்குள் கடத்தி, கரியமில வாயுகொண்ட அசுத்தக் காற்றை ஆர்ப்பாட்டம் இல்லாது வெளியேற்றும் அமைதி கொண்டான். நடைபாதையில் பல கிழக்கு ஐரோப்பியர்கள் மோத்தன்ஸ்றூாட் பக்கமாகச் செல்வதற்காகக் காத்துக்கொண்டு நின்றார்கள். அவர்கள் கட்டட வேலை செய்பவர்கள். கறுப்பான ஜீன்ஸ் போன்ற வேலை உடுப்பில் சிவப்பு மற்றும் பச்சை நிறம் துண்டு துண்டாகப் பதித்து இருந்தது. அழுக்கேறிய சாம்பல் நிறமான பாதணிகள். பச்சை நிற மேலங்கியில் PIP என்கின்ற நிறுவனக் குறியீடு சுட்டு இருந்தது. அவர்கள் தங்கள் நாட்டு மொழியில் ஏதோ கதைத்தார்கள். சித்தனுக்கு அந்த அறியாத மொழி துளியும் விளங்கவில்லை.

அவன் பார்வை மேலும் மேயத் தொடங்கியது. ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று பல வண்ணங்களில், பல உருவங்களில் பஞ்சாமிர்தத்தில் விழுந்த பழங்களைப் போல ஒன்றாகக் கலந்து அங்கே நின்றனர். உண்மையாகவே ஒன்றாகக் கலந்ததா? சித்தனுக்கு ஒன்றாகக் கலந்தது போல என்பது மட்டும் நன்கு தெரியும். அவனுக்கு அந்த அனுபவம் அதிகம் இல்லை என்றாலும் அந்த அனுபவமே இல்லாது போனதும் கிடையாது. முக்கால் பகுதி முகக்கவசத்தால் மறைக்கப்பட்ட மனிதர்களின் முகத்தில் கண்களே காட்சியாக. அடையாளம் தெரியாத மனிதர்களாக அவர்களின் அனாமோதய நடமாட்டம்.

இதை அல்ல எதையும் சிலகாலம் பார்க்க முடியாது, இரசிக்க முடியாது, அவனது உள்ளத்தைச் சூறையாடி உருக்குலைத்துப் போட்டதான அவஸ்தை. அந்தக் கணங்களில் விழுந்த பாதாளத்திலிருந்து அவனால் வெளியேற முடியவில்லை. உடனே அனுபவித்த வேதனையைவிட அதன்பின்பு அனுபவிப்பது கொடுமையாக, வெட்டுக்காயம் சிதல் பிடித்து வலிப்பது போல இருந்தது. வெட்டு விழும்போது பலவேளை வேதனையே தெரிவதில்லை.
விழுந்தபின் ஒருவித வேதனை உண்டாகும். நாள்கள் செல்லச் செல்ல வேறு ஒருவிதமான இழுக்கும் வலி உருவாகும். அதுவே சிதல் பிடித்தால்? சித்தனின் மனது சிதல் பிடித்திருந்தது.

ஒரு பெண் அவசரமாக ஆத்துப்பறந்து குழந்தை இழுபெட்டியை வேகமாகத் தள்ளியவண்ணம் சுரங்க இரத நடைபாதைக்கு வந்து சேர்ந்தாள். அவள் நீரிற்கு

மேலே தலையை நீட்டிச் சுவாசிக்கும் மீனைப் போல அவசரமாக மூச்சை இழுத்துவிட்டுக்கொண்டாள். அவளின் இயக்கத்திற்குக் கிட்டாத பிராணவாயுவைப் பற்றிக்கொள்ளும் முயற்சியில் அவசரமாகச் செயற்பட்டாள்.

சிதல் பிடித்த மனது சித்தனுக்கு அடிக்கடி சுண்டி வலித்தது. அவள் 'மீண்டும் சந்திப்போம்' என்கின்ற எறிகணையைச் சொற்களாகத் திடீரென மனதிற்குள் எறிந்துவிட்டு மாயமாகிவிட்டாள். அது வெடித்து அவன் நிலைகுலைந்து... காயங்கள்... குருதிகள்... சீழ் வடியும் இன்றைய நிலையாக... சுண்டி இழுக்கும் மரண வலியாக...

ஏன் அப்படிச் செய்தாள் என்று இன்றுவரையும் தெரியாது. விளையாட்டாகச் செய்தாளா? அது வலியாக நெஞ்சைப் பிளக்கும் என்று எண்ணாது செய்தாளா? இரக்கம் இல்லையா? அனுதாபம் சுரக்கவில்லையா? என்நிலையில் தான் இருந்து, என்வலியைத் தன்வலியாக அனுபவிக்கும் மனப்பான்மை இல்லையா...? இருந்திருந்தால்... கொஞ்சம் இரக்கம் காட்டியிருந்தால்... இன்று... இப்படி...?

அது ஒரு விபத்து. சித்தன் நெஞ்சு காயப்பட்டது தெரியாதே தென்றல் பூவில்பட்டது போல அவள் சிரித்துக்கொண்டு சென்றுவிட்டாள். இனி வாழ்வில் சந்திப்பேன் என்கின்ற எண்ணமே அவளிடம் இருந்திருக்காது. நடவாது என்று தெரிந்தே கூறிச் சென்றதாய்ச் சித்தனால் இன்று உணர முடிந்தது. 'சுரங்க இரதத்தால் இறங்கி அந்த இடத்தைச் சல்லடை போட்டுத் தேடினால் கண்டுபிடிக்க முடியுமா? எப்படி? ஒவ்வொரு வீடாகச் சென்று கதவைத்தட்டி? அவள் பெயர் ஞாபகம் இருக்கிறது. அதை இனி மறக்க முடியாது. அமுதினி இங்கேதான் குடியிருக்கிறாளா என்று கேட்க முடியுமா?
சுதேசிகள் என்றால் கேட்காமலே திரும்பிவிடலாமா? சுதேசிகள் மட்டுமா? பாகிஸ்தானியர்கள், இந்தியர்கள், ஈரானியர்கள், ஈராக்கியர்கள், லத்தின் அமெரிக்கர்கள், ஆப்பிரிக்கர்கள்... எப்படிக் கண்டு பிடிப்பது? அல்லது எங்களைப் போன்று யார் இருந்தாலும் அமுதினி என்பவள் இங்கேதானா இருக்கிறாள் என்று கேட்பதா? தெரியாதவர்கள் கதவைத் தட்டினால் சிலர் அடிக்க வரலாம். அப்போது அங்கிருந்து தப்பி ஓடுவதா? இல்லை நின்று எதிர்த்து அடிப்பதா? எத்தனை நபர்களுடன் அடிபடுவது?

சாத்தியப்படாத விடயம். பயித்தியக்காரன் என்பார்கள். அன்றே அவள் பயித்தியம் ஆக்கிவிட்டுத்தான் சென்றிருந்தாள். பயித்தியம் மாத்திரம் இல்லை. ஒருவித தரையில் கால் பதியாத போதையும் ஏற்றி இருந்தாள்...' இன்றுவரை மூளைக்குள் என்ன நடந்தது என்று அவனுக்குத் தெரியவில்லை. 'டோபமைனையும்' போதைவஸ்தையும் கலந்து இடைவெளி இல்லாது ஏற்றுவது போல இருந்தது. எப்போதும் ஏக்கம். எங்கும் தெரியும் அவள் வின்பம். அவள் நினைவின் சுமை தாங்காது இடையறாது கசியும் அவன் கண்கள். இயற்கைக்கு இப்படியொரு வலு இருக்கிறது என்பதை அந்த இயற்கையின் வசத்தில் கட்டுண்டு அனுபவிக்கும்போதே உணர முடியும் என்பதை உணர்ந்தான். அதன் பிடியிலிருந்து, அந்தச் சிறையிலிருந்து, அவனால் சிறிதுகூட விலக முடியாது என்பதை அறிந்து துடித்தான்.

வீடுவீடாகத் தேடத் தொடங்கினால் அவளைக் கண்டுபிடிக்க முடிகிறதோ இல்லையோ தனக்குத் தெரிந்த தன்நிலையை, ஊருக்குப் படம் போட்டுக் காட்டுவதாய் முடியும். பயித்தியம் பிடித்தவன் என்று மடக்கிப்பிடித்து மனநல வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துவிடுவார்களா? நிச்சயம் அனுப்ப முயலலாம். அதற்கான நபர்கள் வந்து தன்னைப் பிடித்து, இழுத்து, ஏற்றிச் செல்லலாம்.

அவனுக்கு அவனது எண்ண ஓட்டமே வெறுத்தது. பயணிகளின் கண்கள் சுரங்க இரதத் தடத்தில் வழிமேல் விழிவைத்து அதன் வரவிற்காய் எதிர்பார்த்துக் காத்திருந்தன. பார்ப்பதும் பிரிவதுமான சுரங்கரதப் பயணத்தில் ஆயிரம் ஆயிரம் நபர்களைப் பார்த்தாலும் அடுத்த கணமே நீர்மேல் எழுத்தாக நிலைக்காது போய்விடும் ஞாபகங்கள்.
முகக்கவசம் அணியும் இந்தக் காலத்தில் கண்களைத் தவிர எதையும் பார்க்க முடியாதபோது மின்னல் போல வெட்டி மறையும் காட்சியாக அவர்களின் கண்கள் மட்டுமே. அதுவும் நொடிப் பொழுதே. அவள் கண்கள் மட்டும் அவன் இதயத்தில் ஆளப் புதைந்து கிடந்தன.

கண்கள், கண்கள், கண்கள்... பார்க்கும் இடமெல்லாம் மனிதக் கண்களாக இருந்தாலும் முழுமையாகப் பார்க்கமுடியாத மனிதமுகங்கள். இந்த முகக்கவசங்களுக்குப் பின்னே ஒளிந்திருக்கும் மனித முகங்களைத் தேடி, அதில் அமுதினி என்பவளைக் கண்டுபிடிக்க முடியுமா என்கின்ற ஒரு மலைப்பு அவனிடம். அவள் கண்கள் மாத்திரம் இல்லை, அவள் நிறமும் ஞாபகம் இருந்தது. நெற்றியின் அந்த அழகிய வளைவு இன்றும் ஞாபகம் இருக்கிறது. அவள் கழுத்து... கேசம்... என்பன ஓவியம்போல இன்றும் நினைவில் இருக்கிறது. இருந்தாலும்

முகக்கவசத்தைத் தாண்டி முகத்தைக் கண்டு பிடிக்க முடியுமா என்கின்ற சலிப்பு மேலெழுந்தது.

துப்பாக்கியிலிருந்து புறப்பட்டு வந்த சன்னம் போன்று சுரங்க இரதம் காற்றைக் கிழித்துக்கொண்டு சட்டென வந்து சுரங்க இரத நடைபாதையில் நின்றது. துடித்துப் பதைத்து நினைவு வந்தவர்களாகப் பல முகக்கவசம் அணிந்த முகங்கள் இறங்கிச் சென்றன. வெளியே வந்த கையோடு சிலர் தங்கள் முகக்கவசத்தைக் கழற்றிக் கையில் வைத்திருந்தனர். சிலர் குப்பைத் தொட்டித் தேடிச் சென்றார்கள்.

வெளியே நின்றவர்கள் சுரங்க இரதத்தை விட்டு வெளியேறியவர்களால் வெளித்த இடங்களில் வெற்றிடத்தை நிரப்பும் வாயுவாக அவசரமாக அடைத்துக் கொண்டனர். அந்த அவசரத்தில் அருகில் வந்த மனிதர்களையே கவனிக்கும் அவகாசம் அற்றவர்களாகப் பலர்… சித்தன் தனது மூலையில் இடம் பிடித்து வசமாக நின்று கொண்டு, தனது தத்தளிக்கும் ஆசையோடு பெட்டியிலிருப்பவர்களை ஒவ்வொருவராகப் பார்க்கத் தொடங்கினான். அந்த மனிதர்களிலே ஆண்கள், அழகான பெண்கள், முதியோர், சிறுவர்கள், அலுவலகங்களுக்குச் செல்பவர்கள்,
வேறு வேலைகளுக்குச் செல்பவர்கள், அதைவிடச் சோமாலியர்கள், பாகிஸ்தானியர், கிழக்கு ஐரோப்பியர்களென வண்ணம் வண்ணமாகப் பல வடிவங்களில் மனிதர்களின் தொடராக…

அதற்கிடையில் அந்த எலுமிச்சை நிறம். அதே இளம் வாழைத் தண்டான கழுத்து, மின்னித் தெறிக்கும் அதே கண்கள். பிறை வடிவு மாறாத நெற்றி… சோரம் போகாத அதே கேசம்… சித்தனுக்கு மயக்கமே வந்துவிடும் என்று தோன்றியது. மயக்கமா அல்லது இந்த மறுபிறவியைப் பற்றிக் கொள்வதா என்கின்ற கேள்வி எழுந்தது. அதற்கு அவனிடம் ஒரே ஒரு தெளிவான பதிலிருந்தது. பற்றிக் கொள்வது. அவள் அங்கே நிற்கிறாள். அவளாக வரமாட்டாள். தானே ஈர்ப்பிற்குக் கட்டுப்பட்டவனாய் அருகே இழுபட்டுச் செல்ல வேண்டும் என்பது விளங்கியது. அந்த ஈர்ப்பைத் திடீரெனச் சுயகௌரவம் என்பது தடுத்து நிறுத்தியது. தானே தேடிச் செல்வது அவமானமாகும் என்று தோன்றியது. காதலும், ஆசையும் போவென்றது. கௌரவம் காலைப் பிடித்து இழுத்தது. அவன் போரின்போது இரு எதிரிகளுக்கு இடையே பாலத்தில் அகப்பட்ட அப்பாவி போன்று அவஸ்தைப்பட்டான். காதல் என்பது இராஜ போதை. அதை வெல்லும் சக்தி இந்த உலகில் எந்த மனிதனுக்கும் கிடையாது. புதைந்த மலர்க்கணைகளை நெஞ்சிலிருந்து யாரும் எடுத்ததாக வரலாறு

கிடையாது. அவனால் அதற்குமேல் இன்றுவரை கடைப்பிடித்து வந்த மூலையில் நிற்கும் விரதத்தைக்கூடக் கடைப்பிடிக்க முடியாத அவசரத்தோடு அவளை நோக்கிச் சென்றான்.

மனது தொடர்ந்தும் வசப்படாது அந்தரத்தில் கெந்திப் பாய்ந்தது. அடுத்த கணமே நிலத்தில் வீழ்ந்து இடைவிடாது துடித்தது. மீண்டும் மீண்டும் அவளிடம் போ என்று அவசரமாக ஏவியது. உண்மையில் காதல் என்று ஒன்று உண்டா? அல்லது வெறும் இயற்கையின் கைப்பாவையாக மனிதனை ஏமாற்றும் தந்திரமா? ஆண் மிருகத்தைப் பெண் மிருகமும், பெண் மிருகத்தை ஆண் மிருகமும் மயக்கி, இயற்கை இச்சை தீர்க்கும் தந்திரமா?

காதலுக்கு இந்த மனிதர்கள் சொல்லும் வரைவிலக்கணம் என்ன? மது போதை என்றால் என்ன? அதற்கான வரைவிலக்கணம் என்ன? காதல்... ஹார்மோன்களின் சுரப்பில்... அதன் போதையில் தலை கால் தெரியாது மனிதன் மதில் ஏறிக்குதிப்பது, மகா தத்துவம் பேசுவது, கவிதை வடிப்பது, பாட்டுப் பாடுவது, கனவில் புதைந்து காலத்தைப் போக்குவது, பெண்ணின் பின்னே தெருத்தெருவாய் அலைந்து பித்தாகுவது என்று ஆயிரம் குறும்புகளாய் தொடரும். ஹார்மோன்களின் சுரப்பால் உலகை மறந்து போதையில் மயங்கிக்கிடக்கும் இயற்கையின் அழகான மாயப்பொறி காதல். இது இயற்கையின் கட்டாயத் தேவை.
அதுவே பல மில்லியன் ஆண்டுகள் கூர்ப்பு எய்தி, மறுசீரமைத்து, மறுசீரமைத்து மகத்துவம் பெற்ற இனப்பெருக்க வித்தை.

தயக்கம் களைந்து இரையை நோக்கிப் பாயும் காட்டு விலங்கைப் போலத் துணிவை வரவழைத்துக்கொண்டு அவளிடம் சென்றான். அவன் வருவதைக் கண்ட அமுதினிக்குச் சந்தோஷ மின்னல்கள் சரமாரியாகத் தாக்கியதான உணர்வு. அவளுக்குத் துள்ள வேண்டும் போல இருந்தாலும் இன்னும் தமிழ் என்பதால் அவனை மோகித்துப் பார்த்தவண்ணம் தேவதையாய் அங்கே நின்றாள். அவள் இப்படி நடக்குமென்று சொற்பனத்திலும் கற்பனை செய்தவளில்லை. அது நிஜத்தில் நடந்தபோது அதை விதி என்று சொல்வதா என்கின்ற திகைப்பே மேலிட்டது. வாழ்க்கையில் இனி மீண்டும் தாங்கள் சந்திக்க வேண்டி வராது என்கின்ற துணிவில் சொல்லிவிட்டுச் சென்றாள். ஆனால் அத்தனை விதியையும் மாற்றியது போல இந்தக் கணத்தில் நிலைமை தலைகீழாக மாறிப்போய் இருந்தது.

அருகே வந்த அவன் அவள் கண்களைக் கவ்வுவதாய் தொடர்ந்து பார்த்தான். அதன் சிரிப்பை, குறும்பை, ஆச்சரியத்தை அவனால் மறக்க முடியவில்லை. சித்தன் காற்று பட்ட பட்டம் மேலே எழுவது போல அவசரமாக அவளை நோக்கி மேலும் அருகாகச் சென்றான்.

அருகே அவசரமாக வந்த சித்தனைப் பார்த்துக் களையாத முகக்கவசத்திற்குள் களையாகச் சிரித்தாள். அவளுக்கு இது நம்பமுடியாத அதிசயம். மீண்டும் அவனைச் சந்திப்பது நிச்சயம் வாழ்க்கையில் நடவாது என்றே அவள் எண்ணி இருந்தாள். ஆறு இலட்சம் மக்கள் இருக்கும் இந்தப் பரந்த நகரத்தில் பார்த்த ஒருவனை மீண்டும் பார்ப்பது என்பது அதிஷ்டலாப சீட்டிழுப்பில் பரிசில் கிடைப்பது போல. அதுவே அவனுக்கு இன்று கிடைத்ததான மகிழ்வு. அதிலும் பெரும் தொகையே கிடைத்ததான மகிழ்வு. வந்தாகிவிட்டது. அவள் கண்களை அருகில் கண்டாகிவிட்டது. அதன் ஒளித் தெறிப்பில் சித்தம் திகைத்தாகிவிட்டது. அப்படியே நின்றால். நிற்க முடியாது. ஏதாவது கதைக்க வேண்டும். என்ன கதைப்பது என்கின்ற தயக்கம் அவனுக்கு. என்னவென்றாலும் கதைக்க வேண்டும் என்கின்ற கட்டாயம்.
அவன் கைகள் வியர்த்தன. நா எழாது பிசினில் அகப்பட்ட ஈயாக அண்ணத்தில் ஒட்டிக்கொண்டது. இது என்ன அவஸ்தை என்கின்ற குழப்பம். இதிலிருந்து விடுபட வேண்டும் என்கின்ற கட்டாயம். அவன் ஒட்டிய நாவை வெட்டி எடுப்பதாக மிகுந்த பிரயத்தனத்துடன், 'எங்கை போறியள்?' என்று தட்டுத் தடுமாறிக் கேட்டான். கூச்சமாக இருந்தது. அவளைப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் என்று எக்கமாக இருந்தது. அப்படிப் பார்ப்பதற்குப் பயமாகவும் இருந்தது. ஏதாவது சொல்லிவிட்டால் என்கின்ற கலக்கம் வந்தது.

'ஓலோ... *(WOW)*... உங்களுக்கு நல்ல துணிவுதான்'

'என்ன? அதுவா நீங்கள் போகிற இடம்?'

'சூப்பர் பகிடி... நான் மோத்தன்ஸ்றுாட் போறன். எனக்கு அங்க வேலை... துணிஞ்சு வந்து கதைக்கிறீங்க... அதைப் பாராட்டத்தான் வேணும்'

'ஓ... எனக்கென்ன கதைக்கிறதுக்கு? உங்களால மாத்திரம்தான் துணிவாக் கேள்வி கேட்க முடியுமே? எப்பிடித் தெரியாத பொம்பிளைப் பிள்ளையோடை கதைக்கிறது எண்ட தயக்கம்தான்'

'இப்ப தெரிஞ்ச பொம்பிளை ஆகீட்டனா...?'

'ஒப்பந்தம் அப்படித்தானே!'

'என்ன ஒப்பந்தம்?'

'பகிடிதானே கூடாதெண்டுகிறது?'

'அது என்ன ஒப்பந்தம். நீங்கள் என்ன விளங்கி வைச்சிருக்கிறியள்?'

'மறுமுறை மீண்டும் சந்தித்தால் எண்ட ஒப்பந்தம். மறந்து போயிட்டியளா?'

'ஓ… அதுவா? மறுமுறை மீண்டும் சந்தித்தால் நட்பு மலரும் என்பது அதன் அர்த்தம். நீங்கள் என்ன நினைச்சு இருந்தீங்கள்?'

இவள் என்ன இப்படிச் சொல்கிறாளே என்று எண்ணிய சித்தனுக்கு உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை வியர்த்தது. வெப்பமாக உடல் திடீரெனத் தகதகத்தது. நிற்க முடியாத சோர்வு திடீரென ஏறி மிதித்தது. சித்தன் சுரங்க இரதத்தின் கண்ணாடிச் சுவரோடு சாய்ந்துகொண்டான். 'ஓ என் மனம் மட்டுமே தன்னிலை இழந்ததா?' என்கின்ற கவலை மேலோங்கியது.
இவளுக்கு ஏன் தன்னைப் போல ஏக்கமாக, காதலாக, தவிப்பாக, உறக்கமற்று அலையும் நிலையாக, போதையில் நடப்பதாக, ஒவ்வொரு கணமும் எனது நினைவில் பித்துப் பிடிப்பதாக இல்லாது, இப்படிச் சிரித்து விளையாடுகிறாளே என்கின்ற தவிப்பாக இருந்தது. ஊமைக் கோபம் வந்தது. 'இது நட்பு என்று சொல்கிறாள். உண்மையாக இது நட்பு மட்டும்தானா? காதல் இல்லையா?' அவனுக்குக் குழப்பமாக இருந்தது. நடுக்கமாக இருந்தது. தயக்கமாக இருந்தது. அவன் அவளைப் பார்த்தவண்ணம் நின்றான்.

'என்ன நான் சொல்லுகிறது சரியா?' அவள் அவனைப் பார்த்து மீண்டும் துணிவாகக் கேட்டாள். அவனது நினைவோட்டத்தைச் சிதறு தேங்காய் போலச் சிதறடித்தாள்.

'என்ன?' அவன் தடுமாறினான். தத்தளித்துத் தன்னிலையை எட்டிப் பிடித்தான்.

'நாங்கள் இப்ப நண்பர்கள்… சரியா?'

'அது உங்களுடை உணர்வு. அதுக்காக என் உணர்வும் அப்படி இருக்க வேணும் எண்டு நீங்கள் எதிர்பார்க்க மாட்டீங்கள் இல்லையா? ஒரு காட்சியே பலருக்குப் பலவிதமான உணர்வுகளைத் தரலாம். சிலர் சிரிக்கலாம். சிலர் அழலாம். சிலர் அதிசயத்தில் உறைந்து போகலாம். காட்சி ஒன்று என்றாலும் அதன் கனதியும் உணர்வும் நபருக்கு நபர் வித்தியாசமாக இருக்கலாம் இல்லையா?'

'*OMG.* நீங்க நல்லாத் தமிழ் கதைக்கிறியள். சரி நீங்கள் என்னை மாதிரி உணராட்டி, என்ன மாதிரி உணருறியள்? நீங்கள் என்ன மாதிரி உணர்ந்தாலும் அதை நான் மதிப்பன். அதேவேளை நீங்கள் அதை யார் மேலையும் திணிக்க மாட்டியள் எண்டும் நம்புறன்' என்றாள் அமுதினி.

'திணிக்க முடியாது. நான் திணிப்பதையும் விரும்புவது இல்லை. திணிக்கிறதால வெறுப்பைத் தவிர நன்மைகள் வேறு எதுவும் உண்டாகும் எண்டு நான் நம்புகிறவனும் இல்லை. என் உணர்வுகளின் வக்கிர மோகம் எனக்கு மட்டுமே தெரியும். என்னால் மட்டுமே அதை உணர முடியும். உணர்வுகளுக்கு அடிமையாவது மனிதனின் முக்கிய பலவீனங்களில் ஒன்று.
அந்தப் பலவீனங்களால் நான் அதிகம் பாதிக்கப்பட்டவன். இதைச் சொல்வதற்காய் வெட்கப்பட வேண்டும் என்று எண்ணவில்லை' என்றான் சித்தன்.

'நீங்கள் டொக்ரருக்கு படிக்கலாம். அதுக்காக நேரடியாகப் பதில் சொல்லக் கூடாது எண்டு விரதம் பிடிக்கக் கூடாது' என்றாள் அமுதினி.

'நீங்கள்தானே திணிப்பு கூடாது எண்டு சொன்னீங்கள்' என்றான் சித்தன்.

'உங்கடை உணர்வுகளைக் கேட்பதும் திணிப்பாகுமா? அது பகிர்ந்து கொள்வதால் ஆறுதலைத் தருவதாக அமையாதா?' என்றாள் அமுதினி.

'அது விரும்பிக் கொட்டும்போது திணிப்பாக அமையாது. விரும்பாதபோது கறப்பது, மனவியல்ரீதியான திணிப்பேயாகும்' என்றான் சித்தன்.

'*Sorry... Sorry...* நான் இனி உங்களிடம் அதைப் பற்றிக் கேட்கமாட்டேன். கேட்டதற்கு மன்னித்துவிடுங்கள். நண்பர்கள் என்றால் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளலாம் என்கின்ற உரிமையில் கேட்டேன்' என்றாள் அமுதினி.

'நீங்கள் நண்பர்கள் எண்டு சொல்லி உங்கடை உரிமையைக் கட்டுப்படுத்திக் கொண்டியள் எண்டு நினைக்கிறன்'

'ம்... விளங்குது? நீங்கள் இங்கே வாழ்ந்தாலும் வித்தியாசமாக இருக்கிறீங்கள்' என்றாள் அமுதினி.

'நாங்கள் இந்தியத் திரைப்படங்கள்மூலம் அறிந்தது இதுதானே? அது தப்பென்று நினைக்கிறீங்களா?' என்றான் சித்தன்.

கதையின் சுவாரசியத்தில் இரண்டு தரிப்புக்களை மென்று விழுங்கிச் சுரங்க இரதம் ஸ்குல்லறுட்டை வந்தடைந்து மூச்சைத் தள்ளுவதாக மனிதர்களை வெளியே தள்ளி, மூச்செடுப்பதாகப் புதிதாக வந்தவர்களை உள்ளே எடுத்து மீண்டும் புறப்பட்டது.

பல புதிய மனிதர்களின் வரவு. அவர்களில் பலரின் கண்கள் மட்டுமே அடையாளமாக முகக்கவசம் அணிந்த முகங்கள். கொரோனாவின் திரிபுகளாகிய ஆல்ஃபா, பீட்டா, காமா, டெல்டா ஆகியவற்றால் குற்றுயிராய் போன மனித சுதந்திரம். அருகே வேற்று மனிதன் வருவதைக் கண்டு துள்ளி எட்டி விலகித் தூரே ஓடும் காலம் இது. ஆரம்பத்தில் இருந்த சிறுகதையாக இருக்கலாம் என்கின்ற நம்பிக்கையை ஏமாற்றிப் பெரும் தொடர் நாவலாக விரிந்த அவலக் கதையிது.
மனித சுதந்திரத்தை முடக்கியது மட்டுமல்லாது பொருளாதாரத்தையும் முடக்கி மனிதர்களை அடிபணிய வைத்தது. அணுவாயுதங்கள் செய்வதைவிட மிகவும் வேகமாக, வலுவாக ஜடம் மனிதனில் தாவி, உயிராயுதமாக யுத்தம் செய்கிறது. இருந்தும் மனித சுயநலத்தின் துணையுடனே அது நடக்கிறது என்பதைப் பலரும் மறந்து போயினர். தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டாலும் பணக்கார நாடுகளின் வக்கிரக் கொள்முதலாலும், வளர்ந்துவரும் நாடுகளின் வறுமையாலும், மனிதர்கள் எவ்வளவு காலத்திற்குக் கொரோனாவின் விளைநிலமாவார்கள் என்பது விளங்காது தொடர்கிறது. அதற்கு மேலும் மருந்து தயாரிப்பதற்கான உரிமையைக் கைநழுவவிடாது வைத்துக் கொள்ளும் பணக்கார நிறுவனங்களின் கஞ்சல்த்தனம் மனிதத்தைக் கொல்கிறது.

'நீங்க எந்தக் காலத்தில, எந்த உலகத்தில இருக்கிறியள்? இப்பபோய் கண்டதும் காதலா? அதுவும் நோர்வேயில இருந்துகொண்டு… இந்தியத் திரைப்படங்கள் ஜதார்த்தம் அற்ற கற்பனை நிறைந்தவை. அதிலிருந்து நீங்கள் வாழ்க்கையைக் கற்றுக்கொள்ள முடியாது' என்றாள் அமுதினி.

'அது உங்களுடை கருத்து. காதல் என்பது சர்வதேச மொழிமாதிரி. அதில் கண்டதும் காதல் எண்டுறதும் சாதாரணமாக நடக்கிற விஷயம்தான். பெண் ஆணைத் தெரிவு செய்கிறதுக்கு சில நொடிகள்தான் வேணும் எண்டுகிறது விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சி. அப்படி இருக்க கண்டதும் காதல் இல்லை எண்டு சொல்வதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது' என்றான் சித்தன்.

'ம்… உங்கடை உணர்வை மதிக்கிறன். உங்கடை உள்மனது அதை நம்பினால் அதுக்கு நீங்கள் செவிசாய்க்கத்தான் வேணும். அதேவேளை அதை மற்றவையிட்ட இருந்து எதிர்பார்க்கக் கூடாது. நான் சொல்கிறது சரியா?'

'என் நிலை வேறு. என் தவிப்பு வேறு. அதன் ஞானம் வேறு. உங்களுக்கு இருக்கும் பொறுமையும் தெளிவும் எனக்கு இல்லை எண்டு விளங்குது. என்னை அப்படியான ஒரு மயக்கமும் போதையும் ஆட்டிப்படைக்குது. நான் சொல்கிறதைக் கேட்டு என்னை நீங்கள் பயித்தியம் எண்டு நினைக்கலாம். என் நினைவுகள் என்வசம் இல்லாது தன்பாட்டில் அலைகின்றன. உண்மையைச் சொன்னால் அவை உங்களை எண்ணி அலைகின்றன. ஏங்குகின்றன. அழுகின்றன.

இது உங்களுக்கு விளங்க வேண்டும் எண்டு இல்லை. என்றாலும் நீங்கள் அறிய வேண்டும் எண்டு நினைக்கிறேன்' என்றான் சித்தன்.

'உங்கடை உணர்வை நான் மதிக்கிறன். அதேவேளை எனக்கு உங்களை மாதிரி எந்த எண்ணமோ, உணர்வோ, சிந்தனையோ கிடையாது. நீங்கள் எனக்கு *Bror* 'நண்பன் அல்லது தோழன்' மாதிரி. அதைவிட வேறு ஒண்டும் இல்லை. சிலவேளை நாங்கள் தொடர்ந்து சந்திக்க நேர்ந்தால் அந்த எண்ணம் மாறலாம்' என்றாள் அமுதினி.

'சரி அதை விடுங்கள். இது சொல்லி விளங்கும் விடயம் இல்லை. உணர வேண்டும். ஒவ்வொரு அணுவும் அந்த வேதனையில துடிக்க வேணும். அப்பதான் அதின்ர வலியை விளங்கிக்கொள்ள முடியும். அந்தக்காலம் வருகிறபோது வரட்டும். இப்ப நீங்கள் சொன்ன மாதிரி மறுமுறை சந்தித்ததால் போன் நம்பர் தரவேணும். தருவீங்களா இல்லையா?" என்று கேட்டான் சித்தன்.

'ஓ நீங்கள் அதை மறக்கேல்லையா *Bror*?"

'தயவுசெய்து இந்த *Bror* வேண்டாமே? சித்தன் எண்டு கூப்பிடுங்க... நீங்கள் போன் நம்பர் தாறன் எண்டு சொன்னது என் மனசுக்குள்ள ஆழமாகப் பதிஞ்சு இருக்குது. அதை நான் எப்படி மறப்பன்?"

'*Wow* நீங்கள் தமிழ் சினிமாவால் ஆட்கொள்ளப்பட்டவராய் இருக்கிறியள். உங்கடை வசனங்கள் அப்படித்தான் இருக்குது. உங்கடை ஜதார்த்தத்தையோ கனவுகளையோ நான் குழப்ப விரும்பேல்ல... என்னுடைய நம்பர் தாறத்துக்கு முதல்ல உங்கடை நம்பரைத் தாங்க... சந்தர்ப்பம் கிடைக்கிற நேரம் பார்த்து நானே உங்களைத் தொடர்பு கொள்ளுறன். நான் சொல்லுகிறதை தயவு செய்து நீங்கள் ஏற்றுக்கொள்ள வேணும்' என்றாள் அமுதினி.

சித்தனிடம் அதற்கு மனம் இல்லாது இருந்தாலும் மறு வழி இருப்பதாகத் தெரியவில்லை. வேண்டாத ஒப்பந்தத்தில் கையெழுத்து வைப்பது போன்ற சங்கடம். சித்தன் தனது எண்ணைக் கூறினான். அவள் சித்தன் கூறிய எண்ணைத் தனது திறன் பேசியில் பதிந்தாள். தனது எண்ணைப் பதிந்த பின்பு தன்னைத் திறன்பேசியில் தொடர்புகொண்டு எண்ணை உறுதி செய்வாள் என்கின்ற நப்பாசை அவனுக்கு.
நப்பாசை நிராசையானது. அதற்காக அலுத்துவிட முடியாது என்பதை உணர்ந்தவன் வெட்கம் மானம் என்கின்ற பாம்புச் செட்டைகளைக் கழற்றி எறிந்துவிட்டு, 'சரி… போன் நம்பரை இப்ப தராட்டியும் பறுவாய் இல்ல. உங்கடை பேஸ்புக் ஐடி தாங்கள். அதில் நாங்கள் நண்பர்களாக இருக்கலாம்' என்று வழிந்த வண்ணம் கேட்டான்.
'ஏன் உங்களுக்கு இந்த அவசரம்? மெல்ல… மெல்ல… போகலாம் இல்லையா?' என்றாள் அமுதினி.
'சரி…' என்றான் சித்தன்.

அந்தச் சொல்லை அவன் வாய் மாத்திரமே இயந்திர மனிதனின் குரல்போலச் சொன்னாலும் மனது முழுவதும் இன்றே இவள் எனக்கு வேண்டும் என்று அடம்பிடித்தது. மனதில் அவன் அவளோடு வாழ்க்கை நடத்தினான். அதை அவள் அறியமாட்டாள். அறிந்தாலும் அறிந்ததாய்க் காட்டிக்கொள்ளமாட்டாள். அவனால் அதை வெளியே சொல்லவும் முடியாது. இதன் பின்பும் அதைச் சொல்வது அவமானத்தோடு கூடிய அசிங்கம் என்று விளங்கியது.

சுரங்க இரதம் குகைக்குள் புகுந்தது. அவனுக்குப் புறக்காட்சிகள் மறைந்து பெட்டியில் உள்ள மனிதர்கள் மாத்திரமே கண்ணிற்குப் புலப்பட்டார்கள். அதிலும் அவள் மாத்திரமே அர்ச்சுனனின் கண்ணில் எய்ய நோக்கப்படும் குறியாகத் தெளிவாகத் தெரிந்தாள். அந்தக் குறியிலிருந்து கண்ணை எடுத்தால் இதயம் நின்று விடுமோ என்கின்ற தவிப்பு அவனிடம். இதயம் தாளம் மாறித் தவண்டை அடிப்பதான அவஸ்தை. உள்ளங்கை வியர்த்துக் கை நடுங்குவதான அந்தரம். நெஞ்சு நீரெல்லாம் வறண்டு அந்தரமாக, அவதி அவதியாகத் திறந்து வைத்த சோடாவாகக் கொட்டாவிகள் தொடர்ந்து வந்தன. விரும்பிய பெண்ணிடம் சரணடைவதும் இறைவனிடம் சரணடைவதும் ஒன்றே என்று அவனுக்குத் தோன்றியது. இறைவனிடம் எல்லோரும் சரணடைந்து விடுவதில்லை. ஆனால் பெண்ணிடம் அனேகர் சரணடைய வேண்டியது கட்டாயமாகிறது. இவளிடம் அவன் பார்த்த அன்றே சரணடைந்துவிட்டான். அதை அவள் இன்னும் விளங்கிக்கொள்ளவில்லை.

அபயம் அளிக்கவில்லை. அவள் அபயத்திற்காய் அவன் காத்திருக்கிறான். வேதனையில் துடித்து வாழ்கிறான்.

அவன் நிலையை அவளிடம் சொல்ல முடியாது. சொன்னால் நிச்சயம் பயித்தியம் என்றே எண்ணுவாள். அவள் எதனாலும் பாதிக்கப்படாத விளையாட்டுப் பிள்ளையின் மனதோடு. மேலும் அவளிடம் பழிகிடந்தால் காதலைத் தொலைத்து அவன்மேல் பரிதாபம் கொள்ளலாம் என்று அஞ்சினான். இதனிடையே அவளைப் பிரிய வேண்டும் என்கின்ற கட்டாயம் வேறு கழுத்தைக் கொத்தாகப் பிடித்து நெரித்தது. சுரங்க இரதம் மொத்ன்ஸ்றுட்டில் நின்றால் அவள் தன்பாதையில் போய்விடுவாள். அதன் பின்பு இனி எப்போது என்பது அவனுக்குத் தெரியாது. அதை அவள்தான் முடிவுசெய்வாள். அது சில கிழமையில் நடக்குமா, சில மாதத்தில் நடக்குமா, சில வருடத்தில் நடக்குமா என்பதை அவன் அறியான்.

சுரங்க இரதம் இருள் குகையைத் துறந்து, வெளியுலகை வேகமாகத் தரிசித்து, தனது வேகத்தைத் தியாகம் செய்து, அமைதியாக மோத்தன்ஸ்றூட் சுரங்க இரத நிலையத்திற்குள் பிரவேசித்து அடங்கியது.

சித்தனால் அவளைப் பார்க்க முடியவில்லை. பார்த்தால் அழுதுவிடுவேன் என்கின்ற பயம் அவனிடம். அதற்காக அவளிடம் விடைபெறாது பிரிந்து செல்லவும் முடியாது என்கின்ற உண்மையும் உறைத்தது. கண்கள் பனித்துவிடக் கூடாது என்று கடவுளை வேண்டியவண்ணம் அவளைப் பார்த்தான். அப்போது அவள் அவனைக் குறுகுறுப்போடு பார்த்துக்கொண்டு இருப்பது அவனை மேலும் நடுக்கம் கொள்ள வைத்தது. இருந்தும் துணிவைச் சுனாமியின் பலம்போல ஒன்றுதிரட்டி அவளைப் பார்த்து, 'அப்ப சரி சந்திப்பமா?' என்றான்.

'ம் சந்திப்பம்'

'அது இப்ப உங்கடை கையில இருக்குது'

'தெரியும். நான் அதைப் பற்றி யோசிக்கிறன்'

'ஓகே. வாறன்' என்ற சித்தன் மேற்கொண்டு அங்கே நிற்காது சட்டெனத் திரும்பி விரைவாக வெளியே நடந்தான். மேற்கொண்டு அங்கே நின்றால்… தான் அழுது… அவள் அதைப் பார்த்து… என்கின்ற நடுக்கம் குறையாத செய்கை அது.

சித்தன் போக அவன் பின்னே இறங்கிய அமுதினிக்கு அவனைப் பற்றி எண்ண விசித்திரமாய் இருந்தது.
கண்டதும் கூட்டிக்கொண்டு போகலாம் என்று எண்ணுகிறானா என்கின்ற கேள்வி எழுந்தது. ஏதோ போதை வயப்பட்டவன் போல உணர்ச்சிகளின் பிடியில் தத்தளிப்பதைப் பார்க்கப் பரிதாபம் எழுந்தது. அந்தப் பரிதாபத்தில் உறவு முளை விடக் கூடாது என்பதில் அவள் கவனமாக இருந்தாள். அதேவேளை தான் விரும்புபவனைவிடத் தன்னை விரும்புபவன் உத்தமம் என்கின்ற எண்ணமும் அவளிடம் இருந்தது. அது ஒரு நிதானமான நிலையிலிருந்து எடுக்கும் முடிவாக இருக்க வேண்டும். சித்தனால் இப்போது எந்த நிதானமான முடிவையும் எடுக்க முடியாது. உணர்ச்சிக் கொந்தளிப்பில் எடுக்கும் எந்த முடிவும் மூன்று மாதங்கள் கழிய தலைகீழான பெறுபேறுகளை விளைவிக்கும் என்பதாக அவள் எண்ணிய வண்ணம் தான் போக வேண்டிய இடத்தை நோக்கிச் சென்றாள்.

சித்தனின் மனது உணர்ச்சிக் கொந்தளிப்பில் மழைக்கால அலைகடலாக. கவலையும் ஏக்கமும் கருமேகங்களாக இறங்கிக் கிரகண நாள்போல அவன் முகம் இருண்டு கிடந்தது. அமுதினிக்கு குழப்பமாக இருந்தாலும் அவள் தனது தெளிவான நோக்கால் அந்தச் சுழிக்குள் அகப்படாது, அதை அத்தோடு விட்டுவிட்டுத் தனது வேலைத்தளத்தை நோக்கி நடந்தாள்.

வெளியே வெள்ளி ஊசிகளைச் சாய்வாக இடைவிடாது அள்ளி எறிந்துகொண்டிருந்த சூரியன். அது கண்களைத் துளைக்கும் கோரம் தாங்க முடியாது மூடிக்கொள்ள வேண்டிய அவஸ்தை. சித்தன் அவசரமாகத் தனது கறுப்புக் கண்ணாடியை எடுத்து அணிந்துகொண்டான். அது அவனது கண்ணை மறைப்பது போல அவனது மனதையும் மறைக்கும் என்கின்ற நப்பாசை.

பஞ்சுப் படையாகப் பறக்கும் ஒரு பொட்டு முகில்கூட இல்லாது வானம் நெடுந்தூர நீலக்கடலாக அம்மணமாக வெளித்துக் கிடந்தது. அது பிரபஞ்சத்திற்கும் பூமிக்குமான வாசலை அகலத்திறந்து வைத்திருப்பதானதொரு காட்சி. நீலம் என்பது ஆழம் தெரியாத பரப்பு என்பதை விளம்புகிறதா? கடலின் ஆழம் அதற்குக் கீழே என்ன மறைந்து கிடக்கிறது என்பது தெரியாத மர்மம். அண்டத்தின் நீலம் அங்கே என்ன பதுங்கி இருக்கிறது என்பது தெரியாததின் மர்மம். அந்த நீலத்தின் பின்னே எத்தனை விண்மீன் பேரடைகள்...? எத்தனை சூரியக் குடும்பங்கள்.
மணல் குறுணி போல எண்ண முடியாத எண்ணிக்கையில்... எமது கண்களுக்குப் புலப்பட்ட ஒன்று இரண்டைத் தவிர மற்றவை மறை பொருளாக... மனதும்

அப்படிதானா? நீலமான முகத்தின் காட்சியில் ஆழமான மனதின் எண்ணங்களைக் கண்டு பிடிக்கவே முடியாதா?

அந்த ஆழ் மனதின் எண்ணங்கள் இங்கே பிறந்து இங்கே வாழ்வதால் மட்டும் இவர்களைப் போல இருப்பதில்லை. இங்கே ஊன்றிவிட்டாலும் அடி வாழை எப்படி இருக்கிறது என்பதைப் பொறுத்தே குட்டி வாழையின் செழிப்பும் வாழிப்பும் இருக்கிறது. அதைவிடக் குட்டிகளின் பிரச்சனைகள் மேலும் சிக்கலாகின்றன. வாழும் கலாச்சாரமா அல்லது வாழ்வைத் தந்தவர் கலாச்சாரமா என்கின்ற இழுபாட்டில் அகப்படுகிறது. தாய் தந்தை விசுவாசம் அவர்கள் சுதந்திர வாழ்வைச் சூறையாடுகின்றது.

அமுதினிக்கு தாய் தந்தை, அவர்கள் கலாச்சாரம் என்பவற்றில் அளவு கடந்த மரியாதை இருந்ததோடு தன்னைப் பெற்று வளர்த்தவர்கள் மேலே மலை போன்ற விசுவாசமும் இருந்தது. அதனால் அடிமேல் அடிவைப்பது போல அவதானமாக வாழ வேண்டும் என்று வச்சிர உறுதியோடு இருந்தாள். அவளின் உறுதி பற்றி அறியாத சித்தன் காதலால் வந்த ஏக்கத்தில் அனல் பட்ட மெழுகாகக் கரைந்தான்.

5

அன்று மொல்லர்காத்தாவில் மனோ தனக்கு ஒரு அலுவலிருப்பதாயும், அது முடிந்த பின்பு நான்கு மணிபோல ஸ்துார்காத்தாவில் இருக்கும் மெக்டொனால்ஸ்–இற்கு வருவதாயும், அங்கே செந்திலை வந்து சந்திக்குமாறும் அழைத்திருந்தான். கடைசியாக அவனைச் சந்தித்து மூன்று மாதங்கள் கோடை வெயிலைக் கண்ட பனியாகச் சட்டெனக் கரைந்து போயிற்று. செந்தில் அதை மனோவிற்கு ஞாபகப்படுத்தத் தாமதித்தாலும் கல்லில் எழுதியதாக மூளையில் ஏற்றி வைத்திருந்த மனோ அதை நினைவூட்டி, அங்கே வருமாறு அழைத்திருந்தான். அதையிட்டுச் செந்திலுக்கும் சித்தம் மெழுகாகக் கரைந்த சந்தோஷம். இருண்டுகிடக்கும் அவர்கள் வாழ்வில் சிறிய ஆதவன் வந்து உதிக்கப்போவதான துள்ளிவந்த களிப்பு அவனிடம். மனோவை சந்தித்து ஒவ்வொன்றையும் விபரமாகக் கதைக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தோடு புறப்பட்டு ஸ்துார்காத்தாவில் இருக்கும் மெக்டொனால்ஸ்–இற்கு வந்தான்.

உணவின் சுவையின் உச்சம் அல்ல மெக்டொனால்ஸ் சாப்பாடு. உடல் ஆரோக்கியத்திற்கு உகந்த உணவும் இல்லை மெக்டொனால்ஸ் சாப்பாடு. தரமான உணவு விடுதிகள் என்று பெயரெடுத்த இடங்களில் சாப்பிடுவதைவிட இங்குச் சாப்பிடுவது மேற்குலக நாடுகளில் ஓரளவு மலிவாக இருக்கும். இருந்தும் சிறு பிள்ளைகள் தொடக்கம் கிழண்டிப் போனவர்கள்வரை போதைப் பொருளை உண்டவனுக்கு உள்ள வெறியோடு அங்கே சாப்பிட அலைவது ஏன் என்று செந்திலுக்கு என்றும் விளங்கியதே இல்லை. சுவையில் வெறியா? மணத்தில் வெறியா? அதன் அழகில் வெறியா? செந்திலுக்கு இவை எல்லாம் சாதாரணத்திற்கும் கீழாகவே தோன்றின. இருந்தும் சாதாரண பல மனிதர்களை அது கவர்ந்து இழுக்கிறது. உலகத்தில் இப்படிப் பல விடயங்கள் இருக்கின்றன. அதற்கான முழுமையான காரணத்தை யாரும் இலகுவாக விளங்கப்படுத்திவிட முடியாது.

செந்திலின் ஆத்ம தேடல் வேறு. அன்றாட உணவைத் தாண்டி அதற்கும் மேலானது. உள்ளும் புறமும் அவன் தியானம் ஒரு மகவின் வரவிற்காகக் காத்திருந்தது. அதற்காக அவன் எதையும் செய்யத் தயாராக இருந்தான்.

இயற்கையின் படைப்பின் இலக்கணமே பிறந்து வளர்ந்து இனத்தை விருத்தி செய்து, மடிந்து போ என்பதாகும். மனித வாழ்க்கையில் அது மகவைப் பெற்று சந்ததி பெருக்கித் தகனமாகு என்கிறது. சமுதாயமும் உனக்குப் பிள்ளை இருந்தால்

வாழ்த்தும், அதே நேரம் இல்லை என்றால் மலடன் என்று தூற்றும். தனக்கு ஒரு வாரிசு வேண்டும் என்பதே ஒவ்வொரு தனி மனிதர்களின் எதிர்பார்ப்பாக; வாழ்வின் இலட்சியமாக அமைகிறது.

செந்திலுக்கு இது இலட்சியம் மட்டும் அல்ல; வாழ்வதே அதற்காகத்தான். அப்பாக்கியம் கிடைக்காவிட்டால் இவ்வுலக வாழ்வையே நீக்கிவிடலாம் என்கின்ற எண்ணமே அவனை ஆட்டிப் படைத்தது. மகவு இல்லாத வாழ்க்கை என்பதே அர்த்தமற்ற வாழ்வாக அவனுக்குத் தோன்றியது. தனி மரமாக… காய்க்காது… கனியாது வாழ்ந்து மடிவதற்கு ஏன் இந்த வாழ்க்கை என்கின்ற எண்ணமே மேலோங்கி நிற்கும். அந்த வறட்டு, மலட்டு வாழ்க்கையிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்கின்ற அவா வெறியாகி இருந்தாலும் அதை மனோ கூறியது போல மிகவும் கவனமாக, ஒழுங்காகச் செய்ய வேண்டும் என்பது அவனுக்கு விளங்கியது. இந்த இராஜசூய யாகத்தில் எந்தக் காரணத்திற்காகவும் தோல்வியைத் தழுவிக்கொள்ளக் கூடாது என்று மிகவும் கவனமாக இருந்தான். தவறுவதற்கான எந்தச் சந்தர்ப்பமும் அவனிடம் இல்லை. அப்படித் தவறினால் அவன் வாழ்வதற்கே தகுதியற்றவனாய் போய்விடுவான் என்பதை நன்கு விளங்கி வைத்திருந்தான்.

இந்த மெக்டொனால்ஸ் ஸ்துார்காத்தாவின் முக்கிய சந்தி ஒன்றில் காவலரண் போன்று இருக்கிறது. எந்தப் பாதையால் யார் வந்தாலும் அவர்கள் கண்ணில்படும் கொடுப்பினை அதற்கு. அதுவே வியாபாரிகளின் தெரிவு என்பதை இதுவும் பறைசாற்றியது. ஆசை இருந்தாலும் மனதை அடக்கிப் பதுங்கிப் போகும் சந்தர்ப்பத்தைக் கொடுக்காது பசியைத் தூண்டும் கவர்ச்சியான காட்சி.

இதன் அருகாகச் செல்லும் பாதையால் நான்கு எட்டு வைத்தால் 'யுன்ங்ஸ்தோர்கை' வருகிறது. யுன்ங்ஸ்தோர்கை நோர்வேத் தொழிலாளர்களின் இரத்தினக் கம்பளம் விரித்த முற்றமாக, அவர்களின் எழுச்சிக் களமாக, ஆர்ப்பாட்டத் தளமாக, சிறு சந்தையாக, மக்கள் சந்திப்பு இடமாக, உணவுவிடுதிகளும் மதுக் கூடங்களும் நிறைந்த கலகலப்புக் களைகட்டும் நகரத்தின் கருவறையாக…
ஸ்துார்காத்தா ஒரு பக்கமாகவும், மொல்லர்காத்தா மறுபக்கமாகவும் தொர்காத்தா நடுவிலுமாக யுன்ங்ஸ்தோர்கை 1846 இல் உருவாக்கம் பெற்றது. இது வியாபாரியும் பாராளுமன்னற உறுப்பினருமான *Jørgen Young* என்பவரின் பெயரை வைத்தே

அழைக்கப்படுகிறது. இந்த இடமே அவரின் சொந்த இடமாக இருந்து பின்பு பொது இடமாக மாற்றம் பெற்றதாக வரலாறு கூறுகிறது.

யுன்ங்ஸ்தோர்கை வயிர முற்றம் என்றால் அதன் நகர மையப் பக்கமாக ஸ்துார்காத்தவுக்கும் யுன்ங்ஸ்தோர்கை இடையே போல்க்கதியாத்தரத் (மக்கள் அரங்கம்) இடை மறித்து மலை போன்ற சுவராக எழுந்து நிற்கிறது. அதன் மேற்தளம் தொழிற்கட்சியின் தலைமை அலுவலகமாகச் செயற்படுவதோடு கீழே பல உணவு விடுதிகள், மதுக் கூடங்கள் மற்றும் கடல் உணவுக் கடை என்பனவை பொத்தியிலிருக்கும் சோளம் போன்று நெருக்கமாக அடைக்கப்பட்டு இருக்கின்றன. அதைத் தொடர்ந்து தபால் அலுவலகம், மொல்லர்காத்தாவில் 'வென்ஸ்ர கூஸ்' அதையடுத்து எதிர்த் திசையில் மஞ்சள் மலையாகப் பாலத்தின் மேல் ஏறி இருப்பதாக மூன்றுமாடிகளில் எழுந்து நிற்கும் பழைய காவல் நிலையம்...

இவற்றை எல்லாம் தாண்டி ஒஸ்லோவில் முக்கியமான கட்டடமாக, கண்ணாடி மலையாக, தன் காலடியில் மரங்கள் நிரையாக இருக்கும் *'Folkets Hus'* என்கின்ற மக்களின் மனை. இது நோர்வேயின் மிகப் பெரிய தொழிலாளர் அமைப்பின் அலுவலகமாகச் செயற்படுவதோடு பல அரங்கங்களையும் அதனுள் அடக்கி வைத்திருக்கிறது.

இவை அந்த மெக்டொனால்ஸ்–இன் பின்பக்கத்தின் காட்சி என்றால் அதன் முன்னே ஒஸ்லோவின் மையமே அகலத் திரையாக விரிந்து செல்கிறது. அதில் மத்திய இரும்பு இரதம், மத்திய சுரங்க இரதம், பல்பொருள் அங்காடிகள், வானுயர்ந்த விடுதிகள் என்பதோடு நீல அட்டையாக ஒஸ்லோவின் மக்களின் பயணத்தைத் தன் பணியாக ஏற்று நல்கும் அமிழ் தண்டூர்தி தடம் கடையின் முன்பாகவும், அதில் பிரிந்து ஒஸ்லோ சிற்றி தாண்டி ஆக்கர்பிறிக்க பக்கமாகவும் வாலில்லாத பாம்பாக ஓடிச் செல்கிறது.

இந்த மெக்டொனால்ஸ்–இற்கு முன்பு கண்ணாடிக் கட்டடங்களாக *XXL, H&M, Oslo city, Gunerius* உட்பட பல வியாபார நிலையங்கள் சுறா வாயின் பற்களாக, பூக்களை நாடும் செறிந்த தேனீக்களின் கூட்டமாக மக்களின் நடமாட்டம் அங்கே. அந்த நடமாட்டத்தின் செழிப்பை நன்கு அனுபவிக்கும் இந்த மெக்டொனால்ஸ்.

செந்தில் அங்கே வரும்போது நான்கு மணியாகிவிட்டது. ஏற்கனவே மனோ வந்திருப்பானோ என்கின்ற பதட்டம் அவனுக்கு முதலில் உண்டாகியது. என்றாலும்

நேரத்தை அவன் உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொள்பவன் இல்லை என்கின்ற ஆறுதலிருந்தது. நேரத்தைக் கடைப்பிடிப்பது அவன் ஆத்ம கடமையல்ல. நடப்பதுபோல் கிடைப்பதுபோல் ஏற்றுக்கொள்வது அவன் இயல்பு. ஆறுதலாக, அவதிப்படாது அவன் மெக்டொனால்ஸ்—இற்குள் நுழைந்தான். அங்கே இருப்பதற்கு இடம் இருக்கவில்லை. மனோவையும் காணவில்லை. ஒருகணம் என்ன செய்வது என்பது விளங்காத திகைப்பு. அந்தத் திகைப்பிலிருந்து தன்னை வன்முறையாக விடுவித்துக் கொண்டவன் எங்காவது இடம் கிடைக்கிறதா என்பதை ஆவலோடு அவதானிக்கத் தொடங்கினான்.

குழந்தை ஒன்றுடன் சாப்பிட்டுக்கொண்டிருந்த பெண் தனது மேசையைத் துப்பரவு செய்துவிட்டுக் கழிவுகளைத் தட்டிற்குள் வைத்தவண்ணம் எழுந்தாள். செந்தில் விட்டால் போதும் என்கின்ற அவசரத்தில் அதில் போய் அவசரமாக இருந்தான். அவனுக்கு முன்பு பதின் ஐந்து வயது மதிக்கத்தக்க மாணவர்கள் சாப்பிட்டுக்கொண்டு இருந்தார்கள். அவனது மேசைக்குப் பின்னே வேலைக்கு வந்த ஒரு ஆணும் இரு பெண்களும் சாப்பிட்டுக்கொண்டு இருந்தார்கள். அவர்கள் சாப்பிடுவதைவிட தங்கள் வேலைபற்றிக் கதைப்பதில் மிகவும் அக்கறை செலுத்தினர். கொள்முதலுக்கு வந்த மனிதர்கள், வேலைக்கு வந்த மனிதர்கள் என்று மீதி இருக்கைகளை நிரப்பிய மனிதக் கூட்டம்.

செந்தில் தனது அலை பேசியை எடுத்து மனோவுடன் தொடர்பு கொண்டான்.

மனோவிற்கு சுடலைஞானம் கிடைத்திருக்க வேண்டும். அல்லது அவனது அகமும் புறமும் மாற்றமடைந்து புது மனிதனாகப் பிறவி எடுத்திருக்க வேண்டும்.
அலைபேசி ஒருமுறை அடிக்க முதலே அவன் மெக்டொனால்ஸ்—இற்குள் நின்றான். செந்தில் இதை எதிர்பார்க்கவில்லை. அரை நாள் வேலையை மிச்சம்பிடித்த நிம்மதி அவனுக்கு.

சங்குப் பற்கள் சகலதும் வெளிக்கச் சிரித்தவண்ணம் வந்த மனோ, 'வந்து கனநேரமே? நான் நேரத்திற்கு வந்ததால அப்பிடி இருக்கச் சந்தர்ப்பம் இருக்காது. இல்லையே?' என்றான்.
'ம்... அத்தி பூக்கிறது போல...'

'உண்மையில அத்தி பூக்காது செந்தில். அது மொட்டே காயாகிப் பழமாகி உணவாகிடும் செந்தில். இதுவும் இனி நடக்கும் எண்டு நினையும்'

'ம்… எப்பிடி எண்டாலும் உங்கட விளக்கத்துக்கு நன்றி. இது எனக்குப் புதிசு. சரியண்ண என்ன சாப்பிடுறியள்?'

'எனக்கு *Crispy Chicken Sandwich, French fries, Coca cola light* வாங்கியாரும்'

'நானும் அதைத்தான் நினைச்சிருந்தன்' என்று கூறிய செந்தில் தாமதிக்காது அதை வாங்கி வருவதற்குச் சென்றான். சென்றதும் வாங்கி வரும் நிலை அங்கே இருக்கவில்லை. அதற்கான நிரையில் நின்று அதை வாங்கி வருவதற்குச் சிறிது நேரம் எடுத்தது.

மணமும் உணவின் தோற்றமும் வயிற்றில் நெருப்பை வார்ப்பதாகப் பசியைக் கிளப்ப மனோ மேசையில் மெல்லிய தாளம் போட்டவண்ணம் செந்திலுக்காகக் காத்திருந்தான்.

செந்தில் தட்டு நிறைய உணவுடன் தடை தாண்டும் ஓட்டம் ஓடிவருவதாக வந்து சேர்ந்தான்.

'கொண்டா கொண்டா… இதுக்க இருக்கிற மணத்துக்கு பசி வயித்தை நெருப்பா எரிக்குது. ஏதாவது போட்டு ஊத்தினாத்தான் அது அடங்கும்' என்றான் மனோ.

'உண்மைதான். சாப்பிடுகிற நேரம்தானே'

'அதுதானே இருக்க முடியாத கூட்டம் இங்க' என்றான் மனோ.

இருவரும் சாப்பாட்டுப் பொதிகளைத் திறந்து சுடச்சுட ஒருவாய் கடித்துவிட்டு ஆளையாள் பார்த்தார்கள். பின்பு விஷயத்தைத் தானே தொடக்க வேண்டும் என்று உணர்ந்த மனோ கதைக்கத் தொடங்கினான்.

'பிறகு உங்கட முயற்சிகள் எல்லாம் எப்பிடி இருக்குது செந்தில்?'

'ம்… அது ஒரு வழியாய் கண்டு பிடிச்சாச்சுது. *Clearblue ovulation test* மூண்டு மாதம் செய்து 11ம், 12ம் நாள்தான் எங்கடை லக்கி நாளா இருக்கிறதைக் கண்டு பிடிச்சிருக்கிறம். அதுக்கு ஏத்த மாதிரி *København* போகிறதுக்கு நாங்கள் தயார். ஆனால் நீங்கள் அவரைப் பற்றி இன்னும் கொஞ்சம் விபரமாய் கூறினால் நல்லாய் இருக்கும். எங்களுக்கு ஒரு பிள்ளைக்குமேல பெத்துக்கிறதா எந்த எண்ணமும் இல்லை. அதால பிறக்கிறது ஒழுங்காப் பிறக்கோணும். அதுதான் நீங்கள் அவரைப்

பற்றிக் கொஞ்சம் விபரமாய்ச் சொன்னியள் எண்டா மனசுக்கு நிம்மதியாய் இருக்கும்'

'விளங்குது செந்தில். நீங்கள் பயப்பிட வேண்டிய எந்தக் காரணமும் இல்லை. அந்தப் பிள்ளையின்ரை சொந்தப் பெயரை நான் சொல்ல முடியாது. அதுதான் ஒப்பந்தம். நான் ஏற்கனவே சொன்னது போல எனக்கு ஆளை நல்லாய் தெரியும். அவருக்கு நல்ல சேவை மனப்பான்மை இருக்குது. அதாலதான் இதைச் செய்யிறார். டொக்ரருக்குப் படிக்கிற பிள்ளை எண்டா எப்பிடிக் கெட்டிக்காரனாய் இருப்பார் எண்டது உங்களுக்கு விளங்கோணும். எல்லாருக்கும் அந்தளவுக்கு கெட்டித்தனம் இருக்காதுதானே? *You know that.* எனக்குத் தெரிஞ்ச அளவில அந்தப் பிள்ளைக்கு எந்தக் கெட்ட பழக்கமும் இல்லை. நீங்கள் எதுக்கும் பயப்பிட வேண்டிய அவசியம் இல்லை. நான் அவரோடை ரெஸ்ரரண்டுக்குப் போய்ச் சாப்பிட்டிருக்கிறன். பியர் மாத்திரம் குடிப்பார். இங்க யார்தான் அதைக் குடிக்கேல்ல... அதுவும் டென்மார்க்கில இருந்துகொண்டு குடிக்காட்டித்தான் வித்தியாசமாய் நினைக்கோணும். தன்னுடைய அடையாளம் தெரியக் கூடாது எண்டு சொல்லுறதால அவரும் பிறகு உரிமை கோரிக்கொண்டு வரமாட்டார் எண்டதுதான் ஒப்பந்தம். அவருக்குக் கலியாணம் செய்து குடும்பமா இருக்கிற எண்ணம் இருக்கும். அதோடை உங்கட பிறைவேசியையும் காப்பாத்துறதுதான் ஒப்பந்தத்தின்ரை நோக்கம்'

'அப்பிடி எண்டா வயதுபோன காலத்திலும் அவரால எந்தத் தொந்தரவும் வராது எண்டுறியள்?'

'பிறக்கிற பிள்ளையள் தேடிப்போனால் நாங்கள் தடுக்க முடியாது. ஆனால் அவராத் தேடி வரமாட்டார் எண்டது நிச்சயம்'

'அது நல்ல விஷயம். சரி இந்த **20, 21** எங்கட லக்கி டே. அவருக்கு வசதி வருமா?'

'நான் அவரோடை முதல்ல கதைக்கோணும். அவர் ஓகே எண்டா நீங்கள் போகலாம். சரியா?'

'சரி'

'இவங்களிட்டைச் சாப்பிடுகிற *Biff burger* விட *Chicken sandwich* நல்லாய் இருக்குது இல்லையே?'

'எனக்கும் *Biff burger* பிடிக்கிறேல்ல. அது சிலவேளை உளுத்த மாதிரி இருக்கும்'

'அதுக்கு சுவை ஒரு காரணம் எண்டால் எங்கட கலாச்சாரம் மற்றக் காரணம். எந்த உணவு எங்களுக்குச் சுவையா இருக்குது எண்டது நாங்கள் எந்தக் கலாச்சாரத்தில பிறந்து வாழ்ந்திருக்கிறம் எண்டதைப் பொறுத்தது. இல்லை எண்டால் திமிங்கல இறைச்சிக்கு இவங்கள் கொடுக்கிற மதிப்பை ஏன் நாங்கள் அதுக்குக் கொடுக்கிறது இல்லை. அதே மாதிரி சுறா சாப்பிடுவம் எண்டா இவங்களுக்கு விஷத்தைக் குடிக்கிற மாதிரி இருக்கும். அதைப் போல ஊரில எங்களால மாட்டிறைச்சியை நினைச்சுப் பார்க்கேலுமே? அதுகின்ரை தொடர்ச்சிதான் இது'

'நீங்கள் சொல்லுகிறது உண்மைதான். *Biff burger* சாப்பிடுகிறதைவிட அரைக்காத இறைச்சித் துண்டாய் சாப்பிடலாம் எண்டது என்னுடைய அனுபவம்'

'அதுவும் உண்மைதான். சுத்தமான இறைச்சிக்கு இருக்கிற சுவையும் மணமும், அரைச்சுக் கலந்த இறைச்சிக்கு இருக்காது தானே'

'அதுதான் நான் சொன்னனே கிறில் பண்ணினா இதைவிட ரேஸ்ற்ரா இருக்கும்'

'அது உண்மை. *Burger*-உம் ஊன் வெளியே போகாமல் றையாகமல் ஸ்ரேக் பண்ணினால் ரெஸ்ற்ரா இருக்கும். *MAC*-இல அது சிலவேளைச் சரியா வாறேல்ல' என்றான் மனோ.

'சரி இனி எப்ப நான் உங்களைச் சந்திக்க வேணும்?'

'இனி நீங்கள் என்னைச் சந்திக்க வேணும் எண்டு இல்ல... அது தேவையில்லாத அலைச்சல். நான் எல்லாம் கதைச்சுப்போட்டு போன் பண்ணுறன். அப்ப உங்களுக்கு மற்ற விஷயங்களைச் சொல்லுறன்.

அதோடை ஹோட்டல் சென்ரல்ல இருக்கிறதா இருக்கோணும். தூர எங்கையும் போட்டியள் எண்டா அவருக்குச் சிக்கலாகிடும். அவர் படிக்கிற நேரம் வீணாப்போயிடுமாம்'

'அது பிரச்சினை இல்லை. அதைப் பற்றி எல்லாம் கவலைப்படத் தேவையில்லை. இதுக்குத் தாராளமாகச் செலவழிக்காமல் வேற எதுக்குச் செலவழிக்கப் போகிறம்'

'அது உண்மைதான். அப்பிடியே என்ர கொமிசனையும் மறந்து போக வேண்டாம்'

'அது எப்ப தரவேணும் எண்டு சொன்னியள் எண்டாத் தந்திடுவன்'

'முதல்ல போயிட்டு வாங்க... அதுக்குப் பிறகு நாங்கள் அதைப் பற்றிக் கதைப்பம். எனக்கு அனேகமாக் காசைக் கையில தரவேண்டி இருக்கும்'

'ஓ ரைக்ஸ் கட்டாத உழைப்பா?'
'எப்பவாவது இருந்திட்டு ஒருக்கா. இதில என்ன பெரிசாவே வரப்போகுது'
'சரி… சரி…'

*

இரண்டு நாள்கள் தாமரை இலையில் பட்ட தண்ணீராக வழுக்கி ஓடிவிட, மூன்றாம் நாள் மனோ செந்திலை அலைபேசியில் தொடர்பு கொண்டான். செந்திலுக்கு அவனது எண்ணைப் பார்த்தபோது ஆயிரம் மின்னல்கள் தாக்குவதான பதட்டம். கனதியான எதிர்பார்ப்போடும் தடுமாற்றத்தோடும் அதை அவசரமாக எடுத்தான். அதேவேளை அது நல்ல செய்தியாக இருக்க வேண்டும் என்று தனக்குத் தெரிந்த கடவுள்களைத் துணைக்கு அழைத்தான். தன்வசப்படாத மனித காரியங்களுக்கு அவனையும் மிஞ்சிய ஏதோ ஒரு சக்தி இருக்கிறது; அதுவே கடவுள் என்பதை அவன் நம்பினான். அந்த நம்பிக்கையோடு அலைபேசியை எடுத்துக், 'ஹலோ' என்றான்.
'நான் மனோ செந்தில்'
'தெரியும்… சொல்லுங்கோ'
'இல்ல அவரோடை கதைச்சன். 20, 21 தனக்கும் ஓகே எண்டு சொல்லி இருக்கிறார். நீங்கள் அதுக்கு ஏற்ற மாதிரி ரிக்கேற்றையும் ஹோட்டலையும் புக்பண்ணுங்க.
பிறகு அங்க போய்ச் சேர்ந்த பிறகு எந்த ஹோட்டல்ல எந்த அறையில தங்கி இருக்கிறியள் எண்டு எனக்கு மசேஜ் பண்ணிவிடுங்க… அங்க நீங்கள் இருக்கேக்க யாராவது வந்து கதவைத் தட்டுவினம்… ஒரு நிமிஷ இடைவெளிவிட்டு போய்க் கதவைத் திறந்து பாருங்க… அப்ப அங்க உங்களுக்குத் தேவையானது இருக்கும். நான் சொல்லுறது விளங்குதா?'
'விளங்குது மனோ. நான் உடனடியா ஒழுங்கு செய்யிறன்'
'சரி நீர் அந்த அலுவலைப் பாரும். காத'
'காத'

அலைபேசியைத் துண்டித்துக் கொண்ட செந்திலுக்கு எப்படி *København* போவது என்கின்ற குழப்பம் உண்டாகியது. மலிவாகச் செல்வது என்றால்

பேருந்தில் செல்லலாம். அல்லது விமானத்தில் பயணிக்கலாம். பேருந்தில் பயணிப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. அது அதிக நேரம் எடுக்கும். அங்கே போய்ச் சேரும்போது அடித்துச் சூடு மிதிக்கப்போட்ட அருவிக் கட்டாகக் கசங்கிப் போய்விடுவோம் என்பது அவனுக்கு விளங்கியது. அந்த நிலைமையில் எதைச் செய்தாலும் வெற்றி அளிக்காது போய்விடலாம் என்பதும் அவனுக்குத் தெளிவானது. இதைச் செய்யும்பொழுது மனதும் உடலும் ஆரோக்கியமாக, அமைதியாக, ஒருவிதமான இன்பமான சூழ்நிலையில் இருக்க வேண்டும் என்பதைச் செந்தில் அறிவான். அதற்குப் பேருந்தில் செல்லும் பயணம் சரிவராது என்பது விளங்கியது. விமானமே சிறந்த வழி என்பதை முடிவு செய்துவிட்டு, குரன்லாண்டில் இருந்த தனக்குத் தெரிந்த பயண முகவரிடம் சென்று விமானப் பயணச்சீட்டை ஒழுங்கு செய்தான். அவரிடமே நகரின் மையப் பகுதியில் உள்ள சில விடுதிகளின் எண்ணையும் பெற்றுக் கொண்டு வந்தான். பின்பு வீட்டிற்கு வந்து அலைபேசி மூலம் தொடர்புகொண்டு *Hotel Mayfair*–இல் தங்களுக்கான அறையையும் பதிவு செய்து கொண்டான். **20** ஆம் திகதி பகல் பயணம் செய்வதாக ஒழுங்கு செய்ததில் அவனுக்குப் பரம திருப்தி.

*

வரும் வழியில் ஒஸ்லோசிற்றியில் இருக்கும் *Vinmonopolet*-(மதுக்கடை) விற்குச் சென்றான். அது நிலக்கீழ் தளத்திலிருந்தது.
அதன் முன்னே ஒரு உணவு விடுதி. அங்கே ஆண்கள், பெண்கள் குழந்தைகள் என்று பலரும் இருந்து சாப்பிட்டுக் கொண்டும் கதைத்துக் கொண்டும் இருந்தார்கள். இரண்டு குழந்தைகள் தாயின் சொல்லையும் மீறிச் சுற்றி ஓடினார்கள். அந்தத்தாய் அவர்கள் பின்னால் ஓடினாள். ஒரு பக்கத்தில் காதல் சோடி ஒன்று ஆழ முத்தமிட்ட வண்ணம் உலகை மறந்து நின்றனர். காதல் இயற்கையான போதை. அப்போது டோபமைன் உடன் பல கலவைகள் உடலில் சுரக்க வேண்டும். அந்த நிலையில் யாரைப் பற்றியும் கவலை இருக்காது. இங்கே அது பாவப்பட்ட செயலும் இல்லை என்பது செந்திலுக்கு விளங்கியது.

செந்தில் அவற்றைக் கடந்து *Vinmonopol*-இற்கு விரைந்தான். அங்கே ஆண்களும், பெண்களும் கண்கள் மின்ன மதுப் போத்தல்களைக் காதலிப்பது போலப் பார்த்து, ஆராய்ந்து, இரசித்து, தெரிவு செய்து கொண்டு இருந்தார்கள். உலகில் மனித நலத்திற்குக் கேடாக இருக்கும் பல விடயங்கள் அழகாக, கவர்ச்சியாக, பல வர்ணங்களில், பல உருவங்களில் கண்ணைக் கவர்ந்து, மனதை மயக்கி, தம்மை

நுகர்ந்து களியுங்கள் என்று வலைவிரிக்கின்றன. அதில் மதுவிற்கு முதலிடம் இருக்கிறது. அதுவும் ஒரே இடத்தில் அத்தனை வகைகளையும் சொர்க்கம் போலக் குவித்து வைத்துத் தெரிவு செய் என்றால் பலவேளைத் தடுமாற்றம்தான் உண்டாகிறது.

செந்தில் அந்தத் தடுமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு என்ன வாங்க வேண்டும் என்பதை மனதில் திடமாக முடிவு செய்து கொண்டே அங்கே சென்றான். அங்கே விஸ்கிப் பகுதியைச் சென்றடைந்து அந்தத் தங்கத் திரவப் போத்தலை எடுத்துப் பார்த்தான். மது என்றாலே விற்பனை கொடிகட்டும். அதற்கு வேறு தங்க எழுத்தில் குறுக்காகப் பட்டி போட்ட அழகு.

செந்தில் *'Red Label'* ஒன்றை எடுத்தான். தாமதியாது கல்லாவிற்குச் சென்றான். அங்கே சிறிது கூட்டமாக இருந்தது. அது அவனுக்குச் சலிப்பை உண்டுபண்ணியது. வேறு வழி இல்லை என்பதை உணர்ந்தவனாய் அமைதியாக நின்று அதை வாங்கிக் கொண்டு வந்தான்.

செந்தில் வீட்டிற்கு வந்ததும் மலர்விழியிடம் நடந்ததைக் கூற அவளும் கண்கள் வாளாகக் கன்னங்கள் குங்குமமாக வெட்கத்தில் அல்லாடினாள்.
தங்கள் ஆசைக்கு ஒன்று என்பது இத்தோடாவது நிறைவேறி விட வேண்டும் என்பதே அவளது ஒரேயொரு விருப்பமாக இருந்தது. அவள் மனம் குளிர் அருவியின் கீழ் நின்றதாகக் குளிர்ந்து போயிற்று.

பின்பு செந்திலின் கையிலிருந்த *'Red Label'*-ஐப் பார்த்து, 'உது என்ன வாங்கிக் கொண்டு வந்து இருக்கிறியள்?' என்று கேட்டாள்.

'இண்டைக்கு கொஞ்சம் சந்தோஷமாய் இருக்கோணும்'

'உதைக் குடிச்சிட்டுச் சந்தோஷமாயே இருப்பியள்? சரி அதை விடுங்க, உங்களுக்குச் சையிட் டிஸ் என்ன வேணும்?'

'நீ ஒரு தேவதை மலர். கொஞ்ச ஆட்டிறைச்சியும், முட்டையும் பொரிக்கிறியா?'

'சரியப்பா... நான் செய்தாறன்'

'மலர் ஸ்பிறைற் இருக்கா?'

'இல்ல கோலாதான் இருக்கு'

'ஸ்பிறைற் தான் நல்லா இருக்கும். நான் வாங்கிக் கொண்டு வாறன்… நீ பொரியலைச் செய்'

*

செந்தில் கடையால் வந்து ஆலம் கட்டியிட்ட *Red Label*-உடன் ஸ்பிறைற்றும் கலந்து, குளிரில் வியர்த்து ஒழுக அதைக் கையில் எடுத்து மெதுவாக அருந்துவதும், மலரின் படையலிலிருந்து சிறிது எடுத்துச் சுவைப்பதுமாகத் தொலைக்காட்சியில் போகும் *First Blood* படத்தைப் பார்த்துக்கொண்டு இருந்தான். மலருக்கு வேறு வேலைகள் இல்லாததால் சற்றுப் பயம் இருந்தாலும் அவனருகில் வந்தாள். குடித்தால் மற்றவருடன் வன்முறை பயிலுவது அவன் வழக்கம் இல்லை. அதற்கு மாறாக அவன் அழத் தொடங்கிவிட்டால் அடம் பிடிக்கும் குழந்தைப்பிள்ளை போல அதை நிறுத்த யாராலும் முடியாது.
அந்தப் பயம் மலருக்கு இருந்தாலும் அதிலிருந்து தப்பியோட முடியாத தர்மசங்கடமான நிலை அவளுக்கு.

செந்திலுக்குச் சாதுவாக ஏறியிருந்த நிலையில், 'வா மலர், வந்து பக்கத்தில இரு' என்றான். மலர் சிரித்தவண்ணம் வந்து அவன் பக்கத்திலிருந்தாள். சிறிது நேரம் அவளைப் பார்த்துப் பார்த்து படத்தை பார்த்துக்கொண்டு மதுவை அருந்தினான். கொஞ்சம் ஏறத் தொடங்கவும் அவன் கண்கள் கட்டுப்பாடு இல்லாது கண்ணீரைக் கொட்டத் தொடங்கியது. மலருக்கு இது பழக்கப்பட்டதே. இருந்தும் 'ஏனப்பா இப்ப அழுகிறியள்?' என்று கேட்டாள்.

'நான் உனக்குப் பச்சைத் துரோகம் செய்திட்டன். ஓ… ஐயோ… நான் உனக்குப் பச்சைத் துரோகம் செய்திட்டன். ஆ… கடவுளே. நான் தெரிஞ்சு செய்யேல்ல மலர். ஓ… ஆமி இழுத்துக்கொண்டே அடிச்சான். அதுவும் துவக்கால வக்கிரமா விதையில அடிச்சான். செத்துப் போறது போல வலிச்சுது. ஓ… ஐயோ… நான் செத்துப் போகேல்ல. செத்துப் போயிருந்தா இந்த வேதனை எனக்கோ உனக்கோ இருந்து இருக்காது… ஐயோ கடவுளே…'

'அழாதேங்க… இதில உங்களில என்ன பிழையிருக்குது? நீங்கள் என்ன தெரிஞ்சா செய்தியள்? அழாதேங்க பிளீஸ்'

'ஐயோ… நான் உன்ர வாழ்க்கையைக் கெடுத்துமா நீ இப்பிடிக் கதைக்கிறா? உனக்குக் கடல்போலப் பெரிய மனசு. நான் செய்தது உனக்குப் பிழையாத் தெரியலையா? ஐயோ கடவுளே!'

'நீங்கள் என்ன செய்துபோட்டியள் எண்டு இப்பிடி அழுகிறியள்? ஆமி அடிச்சது தெரியும். ஆனால் அதால பிள்ளை பிறக்காது எண்டு உங்களுக்குத் தெரியுமா?'

'அதுதான் எனக்குத் தெரியாமல் போச்சுதே. நான் அதைத் தெரிஞ்சிருக்கோணும். உன்னைக் கலியாணம் கட்ட முதல்ல ஒருக்கா டொக்ரரிட்ட போய்ச் செக் பண்ணி இருக்கோணும். ஐயோ நான் செய்யேல்லையே. அதே உனக்குச் செய்த பெரிய துரோகம் இல்லையா? ஐயோ கடவுளே'

'அங்க டொக்ரரிட்ட போயிருந்தாலும் கண்டு பிடிச்சு சொல்லி இருப்பினமோ தெரியாது. ஒரு விதை எடுத்தாலும் மற்ற விதை இருக்குது எண்டுதானே சொல்லி இருப்பினம்'

'அப்பிடிதான் சொல்லிச்சினம். இதை வேற யாருக்கும் சொல்லத் தேவையில்லை எண்டுச்சினம்.

நானும் அப்பிடியே விட்டிட்டன். ஆனால் அது துரோகம் இல்லையா? ஐயோ நான் என்ன செய்வன்? நான் அந்த டொக்ரர் சொன்னதை நம்பீட்டன். நான் யோசிச்சு இருக்கோணும். வேற டொக்கரிட்டை போயிருக்கோணும். என்னை மன்னிச்சிடு மலர்'

'எதுக்கு நீங்கள் தேவை இல்லாமல் உங்களில பழிபோடுறியள்? இங்ககூட முதலில யாராவது உங்களுக்கு ஏதாவது பிரச்சினை இருக்கு எண்டு சொன்னவங்களா? பிள்ளை பிறக்கேல்லை எண்ட பிறகுதானே செக்பண்ணிக் கண்டுபிடிச்சவங்கள். மற்ற விதையிலும் விந்து உற்பத்தியாகாது எண்டு யாருக்கு தெரியும். இது உங்கடை குற்றமா என்ன? இதுக்குப்போய் எதுக்கு நீங்கள் குற்றவாழியா பீல் பண்ணுறியள். தயவு செய்து கவலைப் படாதேங்க… அழாதேங்க… இதுக்குத்தான் உங்களை நான் குடிக்க வேண்டாம் எண்டு சொல்லுறனான்'

'ஐயோ… எண்டாலும் துரோகம்தான். நீ வேறயாரையும் கலியாணம் செய்திருந்தா பிள்ளை குட்டியோட சந்தோஷமாய் இருந்திருப்பாய். எல்லாத்தையும் நான் கெடுத்துப் போட்டன்'

'தொடர்ந்து இப்பிடிக் கதைச்சுக்கொண்டு இருந்தியள் எண்டா எனக்கு விஷர் வந்திடும்'

'ஓகே. ஓகே. நான் இனி அதைப் பற்றிக் கதைக்கேல்ல... இனி அழவும்மாட்டன்'

'ம்... இது காணும் அப்பா... சாப்பாடு எடுத்தரட்டே?'

'கொஞ்சம் பொறு... நான் இனி அழமாட்டன். பயப்படாத'

'சரி நான் உங்களை நம்புறன்'

*

Fornebu விமானநிலையத்திலிருந்து *Kastrup*-இற்கு பயணம். *Fornebu* விமானநிலையத்திற்குச் சென்றபோது செந்திலை ஒருவிதமான சோகம் அழுத்தியது. இதுதான் இந்த விமானநிலையத்தால் செய்யும் கடைசிப் பயணமாக இருக்கும் என்பது அவனுக்குத் தெரியும்.
ஷேடம் இழுக்கும் கிழவரைப் பார்ப்பதான சோகம் மனதை முறித்தது. ஆனால் இது கிழமா? இலங்கையோடு ஒப்பிட்டால் வீட்டிற்கும் அரண்மனைக்கும் இருக்கும் வித்தியாசம். இருந்தும் இலங்கையைப் போலக் கால்வாசி மக்களுக்கு வசதியாக இல்லாமல் போன விமானநிலையம்.
ஒரு நாட்டின் பொருளாதாரம் அந்த நாட்டின் கட்டமைப்பை எப்படிப் புரட்டிப் போடுகிறது என்கின்ற அதிசயம் அவனிடம். இலங்கையின் பொருளாதாரம்? அவனுக்கு வெறுப்பாக இருந்தது. சிங்கப்பூர் என்ன வானத்திலிருந்தா குதித்தது? அசிங்கம் பிடித்த இனவாதிகளின் ஊழல் ஆட்சி. சிங்கப்பூர் ஆகிவிடுவோம் என்று கனவு காண்பதிலும், இனவெறி ஊட்டுவதிலும் அவர்கள் காலம் கழிகிறது.

ஐப்பசியில் இந்த விமானநிலையத்திற்கு மூடுவிழா நடத்தி கர்டமூவன் என்னும் இடத்தில் பெரிதாக விமானநிலையம் ஒன்று திறக்கப்பட இருக்கிறது. அந்த எண்ணம் பரபரப்பைத் தந்தாலும் இந்த விமானநிலையத்தை எண்ணச் சோர்வு தயவு தாட்சண்ணியமின்றி ஏறிமிதித்துச் சென்றது.

Kastrup விமான நிலையத்திலிறங்கி இரும்பு இரதத்தைப் பிடித்து, *København* மத்திய இருபு இரத நிலையத்திற்குச் செந்திலும் மலரும் புட்பக விமானத்தில் பயணித்தது போல வந்தடைந்தனர். *Hotel Mayfair* மத்திய இரும்பு இரத நிலையத்திலிருந்து நடந்து போகும் தூரத்தில் சட்டென வந்துவிட்டது. மலர் களைத்துவிடக் கூடாது என்பதால் பெட்டி இழுக்கும் வேலையைச் செந்தில்

பார்த்துக் கொண்டான். மலருக்கு இப்போது மாத்திரம் மகாராணியான கவனிப்பு என்று சொல்லிவிட முடியாது. செந்தில் எப்போதும் அப்படிக் கவனித்துக் கொள்வதே வழக்கம்.

அது மூன்று நட்சத்திர விடுதியைவிட வசதியாக இருந்தது. இருவரும் உள்ளே சென்றபோது வரவேற்பறையில் ஒரு பெண் நின்றாள். தகதகக்கும் பொன்னிறக் கேசம் அவளுக்கு. வயிரமாக மின்னிய நீலக் கண்கள். புன்னகை மாறாத மெல்லிய இதழ்கள். விடுதியின் சீருடையில் வானத்தால் இறங்கி வந்த தேவதையின் அழகு. அதற்குமேல் செந்தில் அவளை நோக்க விரும்பவில்லை. வரவேற்பறைக்கு முன்பு இருந்த சோபாவில் ஒரு குடும்பம் குந்தி இருக்க முடியாத அவஸ்தையுடன் காத்திருந்தனர். அவர்களில் ஏதோ ஒருவித பதட்டம். அவர்களின் மகள் சோபாவில் துள்ளிக்கொண்டு இருந்தாள். அவர்கள் இடாய்ச்சு மொழியில் மகளிடம் எதற்காகவோ மன்றாடினர்.

இவர்களுக்குப் பின்னே ஆறடி உயரமான ஐரோப்பியர் ஒருவர் தனது முறைக்காகக் காத்திருந்தார். அந்தக் காத்திருப்பில் எந்த அவசரமும் தெரியவில்லை. நடப்பது நடக்க வேண்டிய நேரத்தில் நடக்கும் என்கின்ற ஒருவித மெத்தனம் அவரிடம்.

வரவேற்பறையில் நின்றவள் புன்னகை மழை மாறாது விபரங்களைக் கேட்டு எழுதிவிட்டு, முந்நூற்று ஐந்தாம் எண் அறைத் திறப்பான இரு அட்டைகளைக் கொடுத்து, மின்தூக்கி எங்கே இருக்கிறது என்றும் காட்டினாள். இருவரும் அவளுக்கு நன்றி கூறிவிட்டு மின்தூக்கியை நோக்கிச் சென்றார்கள்.

அட்டையைப் போட்டுக் கதவைத் திறந்தான். பின்பு அந்த அட்டையை மின் இணைப்பு பெட்டியில் சொருகினான். மின் விளக்குகள் பற்றிக்கொண்டன. இருவரும் உள்ளே நுழைந்தனர்.

அரச அரண்மனையின் அறையாக விரிந்த விடுதியின் அறை. அகல விரிந்த சாம்பல்நிற மேலாடை போர்த்திய இரட்டைப் படுக்கை. கறுப்பான முதுகு தாங்கிச் சுவர். வெள்ளையில் நான்கு தலையணைகள். அதே நிறத்தில் இரட்டை சோபா ஒன்று. அதிலும் இரண்டு வெள்ளைத் தலையணைகள். வட்டமான கறுப்பு சோபா மேசை ஒன்றின் மேல் வெள்ளைச் சாடி ஒன்று. அதில் இன்று வெட்டி வைத்த விதவிதமான பூக்கள் தண்டுடன். வெள்ளை, ஊதா, சிவப்பு, நீலம் என்று பல

வர்ணங்களில் உயிர்த் துடிப்போடு கூடிய அவற்றின் மலர்ச்சியுடனான நறுமணம். ஜன்னலுக்கு வெள்ளையில் கறுப்பு பூப்போட்ட திரைச்சீலை. கட்டிலின் தலைமாட்டில் இரண்டு இரவு விளக்குகள். குளியல் அறையை மலர் எட்டிப் பார்த்தாள். அது ஐந்து நட்சத்திர விடுதியிலிருப்பதைவிட அழகாக இருந்தது. மலருக்கு இது விரலுக்கு ஏற்ற வீக்கம் இல்லை என்று தோன்றியது. அவளுக்கு அங்கே வதிவது மிகவும் பிடித்துக் கொண்டாலும் ஒரு பொறுப்பான துணைவியாக அதிகம் செலவு செய்கிறோமோ என்கின்ற கவலை வாட்டியது.

'இதுக்கு ஏன் அப்பா இப்பிடி செலவு செய்யிறியள்? இது கொஞ்சம் ஓவர்தான். இல்லையா?' என்று கேட்டாள்.

'மலர் நீ என் மகாராணி. உனக்குச் செலவு செய்யாமல்... இல்லாட்டி எங்களுக்குச் செலவு செய்யாமல்... யாருக்குச் செலவு செய்யிறது சொல்லு பார்ப்பம்?'

'சரி... சரி... பிறக்கிறதுக்கும் செலவு செய்யோணும் எண்டு ஞாபகம் இருக்குதா?'

'அதையெல்லாம் நான் மறப்பனா? நீ எதுக்கும் கவலைப்படாத'

'சரியப்பா இனி என்ன செய்யிறது?'

'நல்ல வேளை நீ ஞாபகப்படுத்தினாய்... மனோவுக்கு எந்த ரூமில தங்கிறம் எண்டு *SMS* அனுப்போணும். அப்பதான் எத்தினை மணிக்கு அது வரும் எண்டு தெரியும்'

'ரூம் நம்பர் மட்டும் கொடுத்தாச் சரியா? இங்க வர விடுவாங்களா?'

'அது பிரச்சினை இல்லை. ரிசப்சனில போய்க் கேட்டுக்கொண்டு நிக்கமாட்டார். நேரடியா எங்க ரூம் இருக்கோ அங்க வருவார். அதைவிடப் பெயர் மனோவிட்ட இருக்குதுதானே. அது தேவையெண்டா மனோவுக்குப் போன் பண்ணி அவர் வாங்குவார்'

'ஓ அப்ப சரி'

'ரிசப்சனில இருந்து போன் பண்ணிக் கேட்டால் 'ஓ ஆளைத் தெரியும்' எண்டு சொல்லு. அவர் வைச்சிட்டு ஹோலிங் பெல் அடிச்சிட்டுப் போவார். ஒரு நிமிஷத்துக்குப் பிறகு போய் எடுத்து வந்தால் சரி. நான் நிற்பன். ஆனால் ஏதாவது அவசரம் எண்டு ரொயிலற்றுக்கு போயிட்டா நீதான் எடுத்தர வேண்டி இருக்கும்'

'சரி நீங்க *SMS* அனுப்புங்க'

செந்தில் *SMS* அனுப்பினான். ஏழு மணிக்குப் பொருள் வரும் என்று பதில் *SMS* மனோ அனுப்பி இருந்தான். சொர்க்கத்திற்கு அழைத்துச் சென்ற சந்தோஷம் செந்திலுக்கு. அவன் அதை மலருக்கும் கூறினான். அவள் முகம் சூரியனைக் கண்ட

தாமரையாகியது. குங்குமமாய்ச் சிவந்த அவள் கன்னத்தைப் பார்த்தான். இருந்தும் அதைப் பற்றி அவன் எள்ளளவும் கவலைப்படத் தயாராக இல்லை.

நேரம் நாலைத் தொட்டது. நெருப்பை வார்த்ததாகப் பசி செந்திலின் வயிற்றை எரிக்கத் தொடங்கியது. எழு மணியென்றால் அறைக்குள் இருப்பதில் அர்த்தமில்லை என்பது விளங்கியது. மலரைப் பார்த்து, 'பசிக்குது... வெளியே போய்ச் சாப்பிட்டிட்டு வருவமே' என்று கேட்டான்.

சொப்பன்கவுன் ஒஸ்லோ போல வற்றிய ஆறில்லை என்பது வெளியே சென்றபோது விளங்கியது. கடற்கரை பக்கமாக இருந்த உணவுச் சந்தைக்குள் இருவரும் சென்றார்கள். விதம் விதமான உணவுகள். நோர்வேயுடன் ஒப்பிடும்பொழுது அவை மலிவாகவும் இருந்தன. முதலில் சிவப்பு *Sausage* உடன் *Potato salad, Beetroot salad* வாங்கிச் சாப்பிட்டார்கள். பின்பு பொரித்த மீன்... அதன் பெயர் *Fish Sandwich with a Remoulade* என்று கூறினார்கள். அதையும் வாங்கிச் சாப்பிட்டார்கள். அதன் பின்பு ஐஸ்கிரீம் சாப்பிட்டார்கள். மேற்கொண்டு சாப்பிட முடியாவிட்டாலும் பொரித்த பண்டி இறைச்சியும் *Baguette* (நீட்டுப் பாண்) — உம் வாங்கியதோடு செந்தில் தனது சந்தோஷத்திற்கான பொருட்களாகிய *Read label*, *potato chips*, கச்சான், *Sprite* ஆகியவையும் வாங்கினான். மலருக்கு அதைப் பார்த்தது தொடக்கம் அடிவயிறு கலங்கியது.

'இதைக் குடிச்சிட்டு அழுவீங்க... பிளீஸ் வேண்டாமே' என்றாள்.

'இல்லை மலர்... நான் இண்டைக்கு அழமாட்டன். அழுகிறதுக்கான எந்தக் காரணமும் நான் இதைக் குடிக்கேக்க இருக்காது. பிறகேன் நான் அழப்போகிறன்?' என்றான்.

'சரி ஏதோ சொல்லுறியள் பாப்பம்' என்றாள் மலர்.

பின்பு வீதிகளையும், கட்டடங்களையும், நடந்து செல்லும் மனிதர்களையும், துவிச்சக்கர மிதிவண்டியில் செல்பவர்களையும், வாகனங்களில் பயணிப்பவர்களையும் பார்த்தவண்ணம் ஆடிப்பாடி நடந்து விடுதிக்கு வந்து சேர்ந்தார்கள்.

மீண்டும் அவர்கள் விடுதிக்கு வந்தபோது நேரம் ஆறு முப்பது ஆகியிருந்தது. அறைக்கு வந்து தொலைக்காட்சியை இயக்கிவிட்டு இருவரும் சோபாவில் இருந்தனர்.

National Geographic இல் போய்க்கொண்டு இருந்த *Food factory* பார்த்தார்கள். அது அவர்கள் கவனத்தை முழுமையாகத் தன்னிடம் ஈர்த்து விழிகளையும் செவிகளையும் கட்டிப்போட்டு வைத்திருந்தது. இருந்தும் ஏதோ ஒருவித அவஸ்தை அவர்களை அலைக்கழித்தது. தொலைக்காட்சி இறுக்கிப்பிடித்தாலும் இருப்புக்கொள்ளமுடியாத அந்தரம் அவர்களை இழுத்தடித்தது.

ஏழுமணியும் வந்தது. தொலைக்காட்சி நிறுத்தப்பட்டு ஊரடங்குச்சட்டம் பிறப்பித்த அமைதி கொண்டுவரப்பட்டது. கடிகார முள்ளின் அசைவு இதயத்திற்கு உள்ளே புகுந்து இடறுவதான வேதனை உண்டாக்கியது. இதயம் அதற்குச் சவால் விடுவதாக நெஞ்சாங்கூட்டிற்குள் இருந்து வெளியே பாய வேண்டும் என்று எத்தனித்தது. அமைதி, மௌனம், நிசப்தம், திகில் ஒன்றுகூடிக் கும்மியடிப்பதான கணங்கள். தொலைபேசி அடிக்கிறதா என்று காதைத் தீட்டிவைத்துக் காத்திருந்தனர். ஏழு ஐந்து கடந்து போனது. ஏழு பத்து வந்தது. இருவரும் ஆளையாள் பார்த்துக் கொண்டனர்.

தொலைபேசி அடித்தது. செந்தில் அதைப் பாய்ந்து எடுத்தான். '*Yes Yes*' என்றான். பின்பு தொலைபேசியை வைத்தான். மலர் பொறுக்க முடியாது, 'என்னவாம்?' என்றாள்.

'அவர் வாறாராம்'

'ஓ...' அவள் வதனம் ஆதவனைக் கண்ட மலராக மலர்ந்திற்று.

அதன் பின்பு இருவரும் அழைப்பு மணிக்காகக் காத்திருந்தார்கள். இரண்டு நிமிடம் ஆவதற்கு முதல் அழைப்பு மணி ஒருமுறை அடித்தது. அதன் பின்பு இரண்டு நிமிடங்கள் கடிகாரத்தை வைத்த கண் வாங்காது பார்த்தார்கள். இரண்டு நிமிடங்கள் முடியவும் செந்தில் ஓடிச்சென்று கதவைத் திறந்து பார்த்தான். அங்கே ஒரு காகிதப் பை இருந்தது. அவன் அதை எடுத்துக்கொண்டு உள்ளே வந்தான். மலர் எழுந்து சென்று ஜன்னல் திரைச்சீலையை நன்கு இழுத்து மறைப்பை உண்டு பண்ணினாள்.

செந்தில் அந்த *Urine test tube*–ஐ பையிலிருந்து வெளியே எடுத்தான். நொங்கு போன்று திரவத்தில் வாழும் உயிரணுக்கள்… அவன் முகம் சந்தோசத்தில் ஒளிபடும் வைரமாகப் பிரகாசித்தது.
அவன் அதை வைத்து விட்டுத் தாங்கள் கொண்டு வந்த கையுறை மற்றும் மருந்தேற்றுக்குழலை (*Syringe*) வெளியே எடுத்து வைத்தான்.

'கவனமாய் செய்யுங்கப்பா…'

'ஓகே நான் கையைக் கழுவீட்டு வாறன். நீ உடுப்பைக் களட்டீட்டு அடி முதுகுக்கு அந்த இரண்டு தலையணையையும் வைச்சு அகலக் கால விரிச்சுக்கொண்டு படு' என்றான். அவள் வெட்கப்பட்ட வண்ணம் 'சரி…' என்றாள்.

செந்தில் கைகளைக் கழுவிவிட்டு வந்து கையுறையைப் போட்டுக்கொண்டு, மருந்தேற்றுக்குழலைப் பிரித்து வெளியே எடுக்கக்கூடியது போன்று வைத்துவிட்டு, அந்த *Urine test tube* திறந்து மருந்தேற்றுக்குழலின் மூலம் அந்தத் திரவத்தை உள்ளே கவனமாக இழுத்தான்.

மலர் கண்களை மூடிக்கொண்டு காலை அகல விரித்தவண்ணம் படுத்திருந்தாள். செந்தில் முட்டுக்காலிலிருந்து மருந்தேற்றுக்குழலை அவளது யோனிக்குள் கவனமாகச் செலுத்திய பின்பு அதன் பிடியை வீச்சாக அழுத்தினான். இயற்கை ஒவ்வொரு உயிரிடமும் எதிர்பார்க்கும் முக்கிய விடயம் இங்கே பாதி செயற்கையாக முடிந்தது. அது இயற்கையாக நடப்பது வழமை. இப்போது செயற்கையாக நடப்பதற்குத் தொழில்நுட்பம் உதவுகிறது. உயிரணுபற்றிய அறிவியல் தெரியாதபோது குழந்தை கடவுளின் வரப்பிரசாதம் என்று எண்ணினார்கள். இப்போது கருவறைக்கு வெளியையும் மனிதக் கரு சூல் கொள்கிறது. மனிதனையே பிரதி எடுக்க முடிகிறது. விஞ்ஞானம் புறநடையான புரட்சிகளைச் செய்தாலும் இயற்கையின் பொது விதியின் பிடி இன்னும் தளர்ந்து விடவில்லை.

மலரை அப்படியே படுத்திருக்குமாறு கூறிவிட்டுத் தனது சந்தோஷத்தைக் கொண்டாடுவதற்கான ஏற்பாட்டைச் செந்தில் செய்யத் தொடங்கினான்.

அன்று செந்தில் அழவில்லை. அவன் வதனத்தில் சிரிப்பின் நிரந்தரக் குடியிருப்பு. மலரைப் பார்த்துச் சிரிப்பு. அவளுக்கு முத்தம் கொடுத்துக் கொடுத்துச் சிரிப்பு.

சிரித்துச் சிரித்துக் குடித்துக் குடித்து முதல் முறை அவன் இவ்வளவு சந்தோஷமாய் இருப்பதை நீண்ட காலத்தின் பின்பு அன்று மலர் கண்டாள்.
அவள் மனம் அமைதி அடைந்தது. குற்றவாளிக்கூண்டிலிருந்து வெளியே வந்த சுதந்திரத்தை அனுபவித்தாள்.

அடுத்த நாள் காலை எட்டுப் பத்து அளவில் மீண்டும் அழைப்பு மணி அடித்தது. செந்தில் சென்று அதை எடுத்து வந்து அலுவலை முடித்தான். மலருக்குச் சந்தோஷத்தில் கண்கள் திரையிட்டுக் காட்சி கலங்கிற்று. அவள் கண்களை மூடிச் செந்திலின் அன்பை எண்ணி உருகினாள்.

6

கொழும்பில் அன்றைய நிலைமைக்கு ஏற்ப தொன்னூற்று ஐந்தில் அவசர அவசரமாகச் சுபனும் தேவிகாவும் திருமணம் செய்த பின்பு மலேசியா சென்று அங்கிருந்து நோர்வேக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் இங்கே வருவதற்கு இடையில் சந்தித்த சோதனைகளைச் சுபன் நண்பர்களுக்கு நாவல் போலத் தொடர்கதையாகச் சொல்வதுண்டு. அதைக் கேட்பதற்குப் பலருக்கு நேரம் இருப்பதில்லை. கேட்டாலும் அதை ஞாபகம் வைத்திருக்கப் பலருக்கு மூளையில் இடம் இருப்பதில்லை. அப்படி மூளையில் இடம் ஒதுக்கி இவன் கதையைப் பாதுகாத்து வைத்திருக்குமளவிற்கு இது ஒன்றும் தனித்துவமான கதையாகாது. ஈழத்திலிருந்து புறப்பட்ட ஒவ்வொரு மனிதனிடமும் ஒவ்வொரு குரூரம் கலந்த சோகக் கதை இருக்கிறது. வேதனையிலும் சோதனையிலும் ஆழப் புதைந்த கதைகள் அவை. என்றாலும் கால ஓட்டத்தோடு மறக்கப்பட்டு, கடக்கப்பட்டு வரவேண்டியதாகிறது. இருந்தும் சுபன் போன்றவர்களால் சிலவேளைகளில் அவற்றைக் கடக்க முடியாது, நினைவு மீட்புச் செய்யப்படுவதுண்டு.

அவனது அந்தக் கதை முதலாவது நாவல் என்றால் அவன் நோர்வேக்கு வந்த பின்பு நடந்தவை இரண்டாவது புதினமாகும்.

சுபனும் தேவிகாவும் வந்த தொடக்கத்தில் சண்வீக்காவில் வாழ்ந்து வந்தார்கள். வந்த தொடக்கத்தில் என்ன வேலை செய்தாலும் பணம் கிடைத்தால் போதும் என்கின்ற அவசரம். கழுவல் வேலைக்குக் கேட்டுக் கேள்வி இல்லாது சென்றார்கள். இரவு பகல் என்கின்ற வித்தியாசம் இல்லாது வேலை என்னும் யாகம் இயற்றினர். பணத்தைக் காணக் காண ஒருவித வெறி ஏறியது. மேலும் மேலும் உழைக்க வேண்டும், சேர்க்க வேண்டும் என்கின்ற அடங்காத வெறியாகியது. பணம் என்பதும் போதை தரும். அதிகாரம் தரும். ஆணவம் தரும். சேர்க்கச் சேர்க்க மேலும் மேலும் சேர் என்கின்ற ஆசையைத் தூண்டும். அது ஒருவித அடங்காத வெறி. அசுரனாய் அகத்தின் உள்ளே வளரும் வெறி. மனிதனை அரக்கனாய் நிரந்தரமாக மாற்றும் வெறி.

அந்த வெறியோடு உழைத்தவர்களுக்கு வேலை செய்து சம்பாதிப்பது அகோரப் பசிக்கு ஒரு சிறங்கை சோளம்பொரி கொடுத்தது போல அவர்கள் வேட்கையை அது முழுமையாகத் தீர்க்கவில்லை. அதைவிட அவர்கள் வேறு ஒரு இரகசியத்தையும் கண்டு பிடித்தார்கள். தங்களை வைத்து வேலை வாங்கும் நிறுவனம் தங்களுக்குத் தரும் சம்பளத்தைவிட இருமடங்கு பணத்தை வேலை கொடுப்பவர்களிடம் இருந்து வாங்குகிறார்கள் என்கின்ற இரகசியம் அது.

அதன் பின்பு அவர்களால் வேற்று மனிதர்களின் நிறுவனத்தில் வேலை செய்ய முடியவில்லை. தாங்களே ஒரு நிறுவனத்தைப் பதிந்து ஆரம்பித்தார்கள். தங்களுக்குத் தெரிந்தவர்களிடமும், முதல் வேலை செய்த நிறுவனங்களிடமும் மலிவாகத் தங்களால் வேலை செய்து தரமுடியும் என்று கூறிப் பல ஒப்பந்தங்களைப் பெற்றுக் கொண்டார்கள். பணம் கூரையைப் பிய்த்துக்கொண்டு கொட்டத் தொடங்கியது. மேலும் மேலும் ஒப்பந்தங்கள் வர வர வேலைக்கு ஆட்களை வைத்து வேலை வாங்கிச் சம்பாதித்தனர். பணம் மேலும் மேலும் பொலியைக் கிண்டி மூட்டை கட்டுவது போலப் புரண்டது. அது புரண்ட மகிழ்ச்சியில், குதுகலத்தில், மயக்கத்தில் காலம் தங்களை விட்டு மின்சாரத்தின் வேகத்தில் ஓடுவதை அவர்கள் கவனிக்கத் தவறிவிட்டனர்.

பணத்தின்மேல் இருந்த பேராசையில் தங்களுக்கு இதுவரையும் வாரிசொன்று உருவாகவில்லை என்பதையே மறந்துபோயினர். அந்த உண்மை ஒரு பிறந்தநாள் கொண்டாட்டத்தில் நக்கலாக வெறியில் ஞாபகப்படுத்தப்பட்டபோது அவர்கள் திகைத்துப் போயினர். பின்பு நடந்த போராட்டத்தின் பயனாக வந்து பிறந்தவளே அமுதினி. அந்தக் கதைபற்றி அவளும் சில துளி கேள்விப்பட்டு இருக்கிறாள். இருந்தும் அதைப்பற்றி அவளால் இப்போது சிந்திக்க முடியவில்லை.

மூளை நினைக்கக் கூடாது என்று முடிவெடுத்ததைப் பற்றி அவள் மனம் அடிக்கடி சட்ட விரோதமாய் இரை மீட்புச் செய்தது. ஏன் என்று விளங்கவில்லை. அதை எப்படி நிறுத்துவது என்பதும் தெரியவில்லை. எதைத் தான் செய்யக்கூடாது என்று நினைத்திருந்தாளோ அதையே செய்யும் அவள் கட்டுப்பாடற்ற நிலை. பகிடியாக அவனை 'மறுமுறை சந்தித்தால்' என்று சொன்னாள்.
விதியா என்பது தெரியவில்லை. மீண்டும் அவனைச் சந்திக்க வைத்து விட்டது. இருந்தும் அவன் வலைக்குள் அகப்படவில்லை என்றே எண்ணி இருந்தாள். அவனின் திறன்பேசி எண் தன்னிடம் இருந்தாலும் தனது எண்ணைக் கொடுக்காதது இராஜதந்திரம் என நினைத்தாள். ஆனால் அந்த இராஜதந்திரம்

பொடிப் பொடியாக உடைந்து சிதறும் என்கின்ற கற்பனை அவளிடம் இருந்ததில்லை. அது நடந்தபோது அனைத்தையும் இழந்து இராமன் முன்னே நிராயுதபாணியாக நின்ற இராவணனைப் போன்று உணர்ந்தாள். இராமன் இன்று போய் நாளை வா என்றான். நினைவுகள் என்றும் அப்படி விடைகொடுத்து விடுவதில்லை. அது தொடர்ந்தும் அவளை வாட்டி எடுத்தது. ஒரு கணம்கூட இடைவெளி கொடுக்காது அவளை வாட்டி எடுத்தது.

வேண்டாம் வேண்டாம் என்று புத்தி சொன்னாலும் மனது கேட்கவில்லை. திறன் பேசியில் அவனைத் தொடர்பு கொள்ளலாம் என்கின்ற மனதின் ஆசையை, அவாவைப் புறக்கணிக்க முயன்றும் அது பலனளிக்கவில்லை. மனது வென்றுகொண்டு இருந்தது. புத்தி தோற்றுக் கோபத்தில் கனன்றது.

இந்தக் கொரோனாதான் எல்லாவற்றிற்கும் காரணம் என்கின்ற கோபம் வந்தது. அது இல்லாவிட்டால் சிறை போல வீட்டிற்குள்ளே அடைபட்டுக் கிடக்கவேண்டிய எந்தக் கட்டாயமும் வந்திருக்காது என்று தோன்றியது. வீட்டிற்குள் அடைபட்டுக் கிடக்காவிட்டால் இந்த நினைவுகளின் ஏறிமிதிப்பு இவ்வளவு வக்கிரமாக இருக்காது என்று விளங்கியது. 'சரி மனிதரை மனிதர்தானே சந்திக்கக்கூடாது. மனிதரை மனிதர் சந்திக்காது வெளியே போய் வருவதற்கு வழிகள் இல்லையா? இருக்கிறது. காடும் மலையுமாக இயற்கை விரிந்து பரந்து கிடப்பதை ஏன் நான் மறந்தேன்? அங்கே சென்று அதன் ஒவ்வொரு அழகையும் இரசித்து, ஓடிக் களைத்து, உடம்பு சோர்ந்து வந்தால் மனது அடங்கிவிடாதா? அடங்கிவிடும்' அவள் முடிவு செய்தவளாய் தனது பயிற்சிக்கான உடைகளை அணிந்தாள். வெளியே சென்றவள் முதலில் '*Trasop*' பாடசாலையை நோக்கி ஓடினாள். பின்பு தெருவைக் கடந்து மற்றைய பக்கம் இருந்த காட்டிற்குள் புகுந்தாள். மலைகள், மரங்கள், ஏரிகள், சிற்றோடைகள், மனிதர்கள். மனிதர்களில்தான் எத்தனை வித்தியாசம்? நாய்களோடு செல்பவர்கள்.
தனியே செல்பவர்கள். பிள்ளைகளோடு செல்பவர்கள், பேரப்பிள்ளைகளோடு செல்பவர்கள் என்று பலவிதம். முன்பு நண்பர்களோடு கூட்டம் கூட்டமாகச் செல்வார்கள். இப்போது அவர்கள் எங்கே போய்த் தொலைந்தார்கள் என்பது தெரியவில்லை.

கொரோனா வந்த பின்பு மனிதனுக்கு மற்றைய மனிதனே ஆபத்தான ஜதார்த்தம். விட்டு விலகித் தூரே ஓட வேண்டிய பரிதாபம். இன்னும் எத்தனை காலம் இது என்பது மனித அறிவுக்கு எட்டாது சவால்விடும் உயிரியல்.

அமுதினி வேகமெடுத்து ஏற்றமான அந்தச் சிறு மலையில் ஓடினாள். நாயோடு சென்ற ஒரு பெண் இவளை ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டு செல்வது போன்று இருந்தது. எதனால் இந்த ஏக்கம் என்பது அமுதினிக்கு விளங்கவில்லை. தன்னால் ஓடமுடியவில்லை என்பதால் இருக்குமா? நாயோடுதானே செல்கிறாள்... ஏன் அவளால் ஓடமுடியாது? ஏதாவது இயலாமை? அல்லது பெண்மேல் ஈர்ப்புக் கொண்டவளாக இருப்பாளோ? பல விடையில்லாத வினாக்கள். அமுதினி வேகமாக ஓடினாள். ஏற்றம் முடிந்து இறக்கம் தொடங்குமிடத்தில் ஒரு குடும்பம் இரண்டு பிள்ளைகளுடன் நடந்து கொண்டு இருந்தார்கள். அதற்கிடையில் பல ஆண்களும் பெண்களும் அவளைத் தாண்டி நடந்தனர். சிலர் ஓடினர். கொரோனாவால் வீட்டிற்கு அலுவலகத்தை மாற்றியதின் விளைவு இது என்பதை அவள் அறிவாள். அதனாலே பலருக்கு இந்தக் காடும் மலையும் அறிமுகமாகி இருந்தன.

காடும், மலையும், ஏரியும் மனிதர்களைப் போன்று கொரோனா என்கின்ற எந்தக் கவலையும் இன்றிச் சிரித்தவண்ணம், என்றும் போல் இன்றும் கையசைத்த வண்ணம்... இயற்கைக்கு மனிதனும் அதன் படைப்பே. அவன் இருப்பதும் அழிவதும் அவன் இயற்கைக்கு என்ன செய்கிறான் என்பதைப் பொறுத்தது. 'ஏன் இந்த மனிதர்களை மாத்திரம் கொரோனா பீடித்தது? இயற்கை முடிவெடுத்துவிட்டதா?' அமுதினிக்கு அது விளங்கவில்லை. அவள் ஓடினாள்.

'ஏன் சித்தன் எனது எண்ணைக் கேட்டான். கொடுத்திருந்தால் தொடர்பு கொண்டிருப்பானா? நிச்சயம் தொடர்பு கொண்டிருப்பான்.
தொடர்புகொண்டு? வந்து கதைக்க வேண்டும் என்று கேட்டிருப்பானா? கேட்டிருக்கலாம்...' அமுதினியின் எண்ணம் அவனிடம் தாவியது.

அமுதினி காட்டிற்குள் ஓடினாள். திடீரென மரங்களுக்கு இடையில் அப்படியே அசையாது நின்றாள். தலையைக் கொண்டு சென்று மரத்தில் முட்ட வேண்டும் என்று தோன்றியது. நிலத்திலிருந்து ஐயோ என்று கத்தி அழலாமோ என்கின்ற எண்ணம் எழுந்தது. 'காட்டிற்குள் இருந்து ஐயோ என்று கத்தி அழுதால் என்ன

நினைப்பார்கள்? தேவை இல்லாத அவமானம். தேவையில்லாத கேள்விகள்... ஆறுதல் மொழிகள்... இது எனக்கு வேண்டுமா?"

அமுதினி வெளிப் பாதைக்கு வந்தாள். வேகமெடுத்து ஓடினாள். சித்தன் நினைவுகள் அவள் ஓடுவதைவிட வேகமாகத் துரத்தின. யார் வெல்வார்கள்? யார் தோற்பார்கள்? மனிதன் தனது மனதிடம் என்றும் தோற்றுக்கொண்டு இருக்கிறான். அமுதினி அதற்கு எம்மாத்திரம்? அவள் ஓடுவதை நிறுத்தி நடக்கத் தொடங்கினாள். உடல் ஓய்ந்ததோ இல்லையோ மனது ஓய்ந்து போயிற்று.

அமுதினி வீட்டிற்கு வந்து முழுகிவிட்டு வேலைக்குப் புறப்பட்டாள். மனிதருக்கு அருகே மனிதர்கள் செல்வதே ஆபத்து என்றாலும் சில மகத்துவமான வேலைகளைச் செய்தாக வேண்டிய கடமை, கட்டாயம். அமுதினியின் வேலை அப்படிப்பட்டது. அமுதினி மட்டும் அல்ல கோடான கோடி மக்கள் அப்படித்தான் தங்களுக்கு ஆபத்தாக இருந்தாலும் மற்றவர்களுக்காய் சேவை செய்ய வேண்டிய நிலை. இது அவசியமான தியாகம்.

அமுதினி புறப்பட்டுச் சுரங்க இரத நிலையத்தை நோக்கிச் சென்றாள். பயப்பட்டுப் பயப்பட்டு வேலை. பயப்பட்டுப் பயப்பட்டுப் பயணம். மீதி நேரம் தனிமையில் அடைபட்ட சிறை வாழ்க்கை. எல்லாம் அதற்கு ஏதுவாக இருந்தது. அத்தோடு புதிதாகச் சித்தனின் நினைவு மீண்டும் மீண்டும் அவளை இடைவிடாது விட்டுக்கலைத்தது.

முகக்கவசம் அற்ற பயணம் கிடையாது. அமுதினியைப் பொறுத்தவரை சுகாதார அமைச்சகம் என்ன சொல்கிறது என்பது ஒரு பொருட்டல்ல.
அவர்கள் ஒரு நேரம் ஒன்று சொல்வார்கள். இன்னொரு நேரம் இன்னொன்று சொல்வார்கள். உண்மை என்னவென்றால் எல்லோரும் அறியாத ஒன்றைக் கற்றுக் கொள்கிறார்கள். அல்லது கற்றது போன்று பிதற்றுகிறார்கள். உண்மையின் உண்மையை யாரும் அறியார் என்பது அமுதினியின் எண்ணம். அதனால் அவள் முகக்கவசத்திற்கு விடுதலை கொடுப்பதில்லை.

இன்று வேலைக்குச் சென்றபோது முதியோர் இல்லத்தின் நடைமுறையே மாறி இருந்ததாகத் தோன்றியது. உள்ளே வேலை செய்யும் அனைவரும் முகக்கவசம்

அணிந்திருந்தனர். இதுவரை அமுதினி உள்ளே முகக்கவசம் அணிந்தது கிடையாது. அது அங்கே வதியும் பாவனையாளரை அந்நியப்படுத்திப் பயமுறுத்திவிடும் என்பதாக எண்ணி இருந்தனர். அந்த நடைமுறை இன்று தலைகீழாக மாறியிருந்தது.

அமுதினி அலுவலகத்திற்குச் சென்றாள். முதியோர் இல்லத்திற்குள்ளும் கொரோனா புகுந்துவிட்டதான அதிர்ச்சி அறிக்கை கொடுக்கப்பட்டது. அமுதினிக்கு முள்ளந்தண்டால் குளிர் ஏறியது. அதற்கு எதிராக உடல் குப்பென்று வியர்த்தது. கபாலத்தால் அக்கினி பீறிட்டது. இப்படி முதியோர் இல்லத்தில் கொரோனா தொற்றுவதைக் கேள்விப்பட்டிருந்தாலும் அதுவே தமது இல்லத்திற்கும் வரும் என்கின்ற எதிர்பார்ப்பு அவளிடம் இருந்ததில்லை. பொதுவான மனித இயல்பு. அந்த நம்பிக்கையை உடைத்தெறிவது போல இன்று கொரோனா தொற்றுக்கு உள்ளான மனிதர்களுக்கு மத்தியில் வேலை செய்ய வேண்டிய கட்டாயம்.

அமுதினி வியர்வையைப் பொருட்படுத்தாது காப்பி அருந்தினாள். பின்பு தனது உடைகளை மாற்றி முகக்கவசம் உள்பட பல கவசங்களை தீநுண்மிக்கு எதிராக உறுதியாக அணிந்து கொண்டு, பயத்தைக் கிடப்பில் போட்டுவிட்டு வேலையைத் தொடங்கினாள்.

*

அமுதினி கொரோனாவால் பாதிக்கப்பட்ட முதியவர்களுக்குச் சேவை செய்தாலும் வீட்டிற்கு வந்த போது வழமை போலவே இருந்தது. எந்த மாற்றமும் அவளில் இருக்கவில்லை.
கொரோனா தொற்றி மூன்று நான்கு நாள்களின் பின்புதான் அதன் வேலை ஆரம்பமாகும் என்பது அவளுக்குத் தெரியும். அவள் முதியோர் இல்லத்தில் வேலை செய்வதால் முதலாவது தடுப்பூசி ஏற்கனவே ஏற்றி இருந்தாள். முதியோர் இல்லத்தில் வசிக்கும் அனைவருக்கும் முதலாவது தடுப்பூசி ஏற்றிவிட்டார்கள். இருந்தும் அது சிலரைப் பீடிக்கிறது. சிலரைப் பீடிப்பதே இல்லை.

கொரோனா யாரைப் பீடிக்கும் யாரைப் பீடிக்காது என்பதை எவராலும் சொல்ல முடியாத காலம். சிலரைப் பலமுறை பாதிக்கிறது. சிலரை அது எதுவும் செய்வதே இல்லை. ஏன் என்ற உயிரியல் காரணம் எவருக்கும் முழுமையாக விளங்கவில்லை. ஆராய்ச்சிகள், பரிசோதனைகள் முழுமையான விடையைத் தந்துவிடவில்லை. இதன்

உண்மை சிறிது சிறிதாகவே வெளிக்கும். அதற்கிடையில் எவ்வளவு மக்கள் பலியாவார்கள் என்பது தெரியாது. கொரோனாவின் திரிபுகள் மனிதரை மேலும் கலங்கடிக்கின்றன. ஒன்றுக்கு விடைகாண எண்ணும் போது மற்றையது முளைத்து நிற்கின்றது. மனிதர்களின் பேராசை, கருத்து முரண்பாடு, பொருளாதாரத்தின் மீது உள்ள அதீத அக்கறை, மனித நடமாட்டத்தில் கொண்ட மோகம், பொதுநலத்தைவிடச் சுயநலத்தில் மோகம் கொண்ட மக்கள், உயிரியல் அறிவு அற்ற மக்களின் செயற்பாடு, பணக்கார நாடுகளின் வக்கிரமான தடுப்பூசிக் கொள்முதல், ஏழை நாடுகளின் வறுமை என்று பல காரணங்கள் அதன் விரிந்த விளைநிலமாக, மனிதர்களைத் தனது உயிரியல் யுத்தத்தால் தோற்கடித்துச் சரணடைய வைத்துள்ளது.

கொரோனா வந்த பின்பு யாருடைய வீட்டிற்கும் செல்வது இல்லை. படலையில் நின்று கதைக்கும் வழமைகூட இங்கு இல்லை. அப்படி அதிசயமாகத் தெரிந்தவரைக் கண்டுவிட்டால் தூரத்தே நின்று 'ஹாய்' சொல்லிவிட்டு ஓடி மறையும் காலமிது. அமுதினியின் அப்பா அம்மாவின் வேலை சண்வீக்காவில் என்பதால் அவர்கள் அலுவலகத்திலேயே அநேகம் தங்கிவிடுவது உண்டு. அவர்களுக்கு அங்கே படுக்கை அறையும் சமையல் அறையும் இருக்கின்றன. இப்பொழுதும் அவர்களின் முதல் தெரிவு ஏனோ பணமாகவே இருக்கிறது. அவர்கள் அப்படி என்பது அமுதினிக்குத் தெரியும். தனக்காக அவர்கள் மலையைத் தலைமீது சுமந்து வாழ்கிறார்கள் என்பதையும் அவள் அறிவாள். அதனால் ஆறாகப் பாயும் அனுதாபம் அவளிடத்தில் வற்றாது உண்டு.
இப்போதுகூட இப்படி உழைப்பது தனக்காகவே என்பதையும் அவள் அறிவாள். இருந்தும் அவளுக்கு அதில் ஏற்பு இல்லாவிட்டாலும் அவர்களோடு அதற்காக இம்மிய அளவும் முரண்பட விரும்புவதில்லை. அவர்களுடனான உறவைச் நீர் பட்ட சவக்காரத்தில் வழுக்குவது போல எந்த உராய்வும் இன்றிப் பாதுகாத்துக் கொள்ளவே விரும்பினாள். அத்தோடு அவர்கள் மேலிருக்கும் மதிப்பு வளரும் மலையாக அவள் மனதில் எழுந்து நிற்கிறது. அதன் இருப்பை அவள் விருப்போடு ஏற்று நடந்தாள்.

சில வருடங்களுக்கு முன்பே ஒஸ்லோவிலிருக்கும் வீட்டை வாங்கினார்கள். அதில் அவர்களைவிட அமுதினியே அதிகம் தங்குகிறாள். அடுத்த கிழமையிலிருந்து அவர்களும் இங்கேயே தங்கப் போவதாகக் கூறியுள்ளனர்.

கொரோனாவிற்குத் தடுப்பூசி போட்டாலும் நிலைமை வழமைக்குத் திரும்பியதாக இல்லை. வீடுகளுக்குக் குறிப்பிட்ட எண்ணிக்கையளவு நபர்கள் செல்லலாம் என்றாலும் எல்லோரும் அப்படிச் செல்வதில்லை. தொடர்ந்தும் ஸ்திரம் அற்ற, நம்பிக்கை அறுந்த, போதிய அறிவற்ற ஒரு குழப்பமான நிலையாக இருக்கிறது. கொஞ்சமாவது சிந்திப்பவர்களால் துணிவாக அந்த எல்லைகளைத் தாண்டி ஒன்று கலக்க முடிவதில்லை. ஆனால் மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதம் என்பது சர்வ நிச்சயம். அப்படியே இதற்கெல்லாம் அஞ்சாமல் ஒன்று கலந்து களித்து இருப்பவர்களும் உண்டு.

*

ரஞ்சிதாவுக்கு எல்லை தாண்டும் துணிவு கனவிலும் வருவதில்லை. இருந்தும் கலைக்குப் பிறந்தநாள் என்னும் திருநாள் வந்துவிட்டது. கலை கொரோனாக் குழந்தைகளில் ஒருத்தி. அவர்கள் வாழ்க்கை இதுவரையும் குழந்தைகள் உலகத்தில் அனுபவித்து இருக்காத தனிமையை அனுபவிப்பதாக அமைந்துவிட்டது. அதுவும் இங்கே அப்பா அம்மாவைத் தவிர வேறு முகமே தெரியாது திரையிட்டு வாழ்கிறார்கள். அவர்கள் திரை சுகாதார நிலையங்களுக்குச் செல்லும் பொழுது மட்டுமே விலக்கப்படும்.

கலையின் முதலாவது பிறந்தநாளை சிலருடனாவது கொண்டாட வேண்டும் என்பது ரஞ்சிதாவின் குட்டி ஆசை. அதற்காகச் சில திரைகளைத் தகர்ப்பதற்கு அவள் தயாராக இருந்தாள். சட்டப்படியும் அப்படிக் கொண்டாட அனுமதி இருக்கிறது என்பதை அவள் அறிவாள். அம்மாவாக அந்த இலட்சியத்தை அவள் தவறவிட விரும்பவில்லை.

ரஞ்சிதா அமுதினியோடு செல்வன் குடும்பத்தையும் அழைத்து கலையின் பிறந்தநாளைக் கொண்டாடத் திட்டமிட்டாள். இப்படியான சந்திப்புக்கள் பாதுகாப்பானது இல்லை என்றாலும் சிலவற்றைத் தவிர்க்க முடியாது என்பதை அமுதினி ஏற்றுக்கொண்டிருந்தாள்.

கலையைப் பிறந்ததிலிருந்தே அமுதினி பார்த்தது இல்லை. திறன்பேசியில் ரஞ்சிதாவுடன் உரையாடியதோடு பிள்ளைப்பேறு முடிந்து போயிற்று. அவளும்

பாவம், அவளைப் பார்க்க முடியாத தானும் பாவம் என்பது அவள் எண்ணம். இதற்கெல்லாம் காரணமான கொரோனா மீது அவளுக்கு கடும் கோபம் உண்டு.

கலைக்குப் பரிசுப் பொருளும் வாங்கிக்கொண்டு ரஞ்சிதா வீட்டிற்கு ஐந்துமணி போல் சென்றாள். அவர்கள் வீடு மங்களறுட்டிலிருந்தது. அது ஒரு அடுக்குமாடிக் கட்டடம். எட்டு வருடத்திற்கு முன்பு கட்டப்பட்ட குடியிருப்பு. பழமை ஏறாத மினுமினுப்பு எங்கும். அழைப்பு மணியை அழுத்தியதும் வெளிக்கதவோடு இருந்த சிறு திரையில் ரஞ்சிதா தோன்றினாள். 'ஓ அமுதினியே. வா உள்ள. இரண்டாவது மாடிக்கு வா' என்றுவிட்டு அவள் கதவைத் திறந்துவிட்டாள்.

அமுதினி வீட்டிற்கு உள்ளே வந்தாள். ரஞ்சிதா குழந்தை இருந்தும் வீட்டைப் பழமை ஒட்டாது பார்த்துக் கொள்வது அமுதினிக்குப் பிரமிப்பைத் தந்தது. கதவு திறந்த உடனேயே முதல் நுழைவு அறை இருந்தது. அங்கே மேலங்கி கொழுவி வைப்பதற்கு அலுமாரி இருந்தது. அமுதினியின் மேலங்கியை வாங்கி ரஞ்சிதா கொழுவிவிட்டாள். ரஞ்சிதாவுக்கு மின்னும் கூரிய கத்தி முனை போன்ற பழுப்புநிறக் கண்கள். சிறிய மரமுந்திரிப் பழம்போன்ற நீட்டான கூரிய மூக்கு. கற்றை முடி கவ்விய மூர்க்கத்தில் சிறுத்த பிறை நெற்றி. எலுமிச்சை பழத்தில் மினுமினுத்த தோல்.
மெல்லிய துடிக்கும் மேலுதடும் கீழுதடும். அதன் பின்னே பதுங்கி இருந்த விளம்பரத்தில் வரும் பற்கள். ஐந்தடி இரண்டு அங்குலம் இருப்பாள். இதற்குமேல் ரஞ்சிதாவைப் பார்ப்பது அழகில்லை என்பதை உணர்ந்த அமுதினி தனது பார்வையைக் கலை மீது செலுத்தினாள்.

பின்பு அனைவரும் உள்ளே சென்றனர்.

உள் நுழைவு அறையில் படுக்கை அறைக்கும் குழியல் அறைக்கும் செல்வதற்கான கதவுகள் இருந்தன. அதில் வேறு ஒரு மேலங்கி கொழுவும் தொங்கி இருந்தது. அத்தோடு ஒரு சிறு மேசையில் கைகளைத் துப்பரவு செய்வதற்கு எதனோல் இருந்தது. அதை எடுத்து அமுதினிக்குக் கொடுத்தாள். அமுதினி கைகளைத் துப்பரவு செய்துகொண்டாள்.

அங்கே இருந்த கண்ணாடிக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே செல்ல விலாசமான ஹோல் வந்தது. அது திறந்த சமையல் அறையுடனான ஹோல். சாம்பல் நிறத்தில் சமையல் அறை அலுமாரிக் கதவுகள். குளிர்சாதனப் பெட்டி மற்றும் பாத்திரங்கள் கழுவும் இயந்திரங்கள் என்பனவும் சாம்பல்நிறக் கதவுகளோடு... அதைவிட *Induction peak, oven, microwave* என்று அனைத்து வசதிகளும் பொதிந்த திறந்த சமையல் அறை ஹாலுக்குள் இருந்தது.

சுவருக்குப் பழுப்பு வெள்ளையாகக் கண்ணைக் குத்தாத நிறம். உயர்ந்து வளர்ந்த உள்வீட்டுத் தாவரங்கள். மரத்திலான சாப்பாட்டு மேசை, சிவப்பு குசன் வைத்த கதிரைகள், கரும் சிவப்பிலான மூலைச் சோபா, *Flat screen tv*... நோர்வேயில் வசதிக்கு என்ன குறை? அது ரஞ்சிதா வீட்டிலும் தாராளமாய்த் தஞ்சம் அடைந்திருந்தது.

அமுதினியைக் கண்டவுடன் அம்மாவின் பின்னே சென்று ஒளித்து நின்று எட்டிப் பார்த்த கலை அமுதினி உள்ளே வர முன்னே ஓடினாள். பின்பு அமுதினி சென்று சோபாவிலிருக்க மெதுவாக அவளிடம் வந்து அணைந்து கொண்டாள். அதைப் பார்த்த ரஞ்சிதா சிரித்துவிட்டு, 'கவனம் அமுதினி. அவளுக்குக் கொஞ்சம் தடிமன் மாதிரி...
இரண்டு நாளைக்கு முதல் ஓப்பிண் வாணகாகவுக்கு (இலவச குழந்தைகள் பராமரிப்பு நிலையம்) கூட்டிக்கொண்டு போனன். முதல்வேலையா வருத்தம் வாங்கிக்கொண்டு வந்திருக்கிறாள். சாதாரண தடிமன்தான். எண்டாலும் கவனமா இருங்க... நீங்கள் வேற வேலைக்குப் போவீங்கள்...'

'அதெல்லாம் பிரச்சினை இல்லை'

'சரி இரு. நான் ரீ கொண்டு வாறன்'

'அதுக்கு ஒண்டும் இப்ப அவசரம் இல்லை அக்கா'

'ரீ எல்லாம் ஒரு விஷயமா?'

ரஞ்சிதா தேநீர் தயாரிக்கச் சென்றாள். கலை தனது பிஞ்சுக் கையால் அமுதினியின் காலைக் கட்டிப்பிடித்தாள். கலைக்கு வட்ட முகம். எலுமிச்சை பழம் போன்ற நிறத்திலான தோல். சிறிய வடிவிலான ரஞ்சிதா என்று அமுதினிக்குத் தோன்றியது. அவளது குட்டிக் கண்கள், குட்டி வாய், குட்டி மூக்கு... அமுதினி அவளைத் தூக்கி மடியில் வைத்தாள். கலை 'ஆ... ஆ...' என்று சிரித்தாள். பின்பு தாயைக் காட்டி 'அம்மா... அம்மா...' என்று சொன்னாள்.

பின்பு அம்மாவிடம் போய்க் கையை நீட்டினாள். அவளுக்கு மாச்சில் கிடைத்தது. அதைக் கொண்டு வந்து அமுதினியோடு இருந்து சாப்பிட்டாள். இடையில் அமுதினியின் வாயிலும் அதை வைத்தாள். அமுதினியால் அதைத் தட்டிவிட முடியவில்லை.

சிறிது நேரத்தில் செல்வன் குடும்பத்தோடு வந்து சேர்ந்தான். செல்வனின் மனைவி ஆனந்தி பொதுநிறம். அவள் பார்ப்பதற்குப் பெண்ணையே மயக்கும் பெண் போன்று கவர்ச்சியானவள். அவள் அமுதினியைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு வந்து சோபாவிலிருந்தாள்.

செல்வனுக்கு இரண்டு பிள்ளைகள். சிவன் அவனது முத்த ஆண்பிள்ளை. அவனுக்கு ஆறு வயதாகிறது. சக்தி அவனது அடுத்த பெண்பிள்ளை. அவளுக்கு நான்கு வயது. இரண்டும் கடவுள் பெயராக வைக்க வேண்டும் என்கின்ற சபதத்தில் உதித்த பெயர்கள்.
இருந்தும் சிறிய பெயராக இருக்க வேண்டும் என்பதில் செல்வன் கவனம் எடுத்துக் கொண்டான். இங்குள்ள நடைமுறைக்கு இது அவசியமாகிறது.

செல்வன் குடும்பம் வர, அங்கே கலகலப்புக் களை கட்டியது. நேரம் சிட்டாகப் பறக்கத் தொடங்கிய கணத்தில் கேசவன் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தான்.

அவன் ஐந்தடி ஆறு அங்குலம் இருப்பான். மா நிறம் என்றாலும் ஒரு பளபளப்பு அவன் சருமத்தில். கரும் மெல்லிய கம்பிச் சுருளான கேசம். கறுத்த வைரமாக மினுங்கும் விழிகள். அவசரமாக வந்ததில் களைத்து வியர்த்துப்போய் இருந்தான். எல்லோரையும் பார்த்து, 'நான் குளிச்சிட்டு வாறன். இருந்து கதையுங்கோ என்ன…' என்றுவிட்டு அவசரமாகக் குளிக்கச் சென்றான்.

பிறந்தநாள் திருவிழா முடிய ஒன்பது மணியாகிவிட்டது. கலையோடு மேலும் நேரம் செலவிடலாம் என்று அமுதினிக்கு ஆசையாக இருந்தாலும் நாளை வேலைக்குச் செல்ல வேண்டும் என்கின்ற ஞானம் பிறக்க அவள் வீட்டிற்குப் புறப்பட்டாள். அவளுக்குத் தலை சாதுவாக இடித்தது. பலரோடு இருக்கும் போது காற்றோட்டம் சரியாக இல்லாவிட்டால் அமுதினிக்குத் தலையிடிப்பது வழமை. அது வெளியே

சென்று சுத்தமான காற்றைச் சுவாசித்தால் சரியாகிவிடும் என்பது அவள் அனுபவம். இதுவும் வெளியே சென்றால் சரியாகிவிடும் என்று எண்ணிக்கொண்டு அமுதினி புறப்பட்டாள்.

புறப்படும்போது ரஞ்சிதா பலகாரம் கேக் ஆகியவற்றைப் பொதி கட்டிக் கொடுத்துவிட்டாள். அதையும் வாங்கிக்கொண்டு விரைவாக அமுதினி வீட்டிற்கு வந்து சேர்ந்தாள்.

*

தலை தொடர்ந்தும் மூளையைக் கபால ஓட்டின் வழியே வெளியே தள்ளுவது போன்று இடித்துக்கொண்டு இருந்தது. வழமையாக வெளிக்காற்றைச் சுவாசித்தாலே அது தண்ணீர் பட்ட பொங்கும் பாலாக அடங்கிப் போய்விடும். இன்று அது அடங்காத காண்டாமிருகமாக மூர்க்கம் காட்டியது.
வீட்டிற்கு வந்து சேர்ந்த பின்பும் அது விடுவதாக இல்லை. அதற்கு மேலும் அதையொரு மாற்று வழியில் அடக்காமல் படுக்க முடியாது என்பது விளங்கியது. அமுதினி '*Ibux 400mg*' ஒன்றை விழுங்கிவிட்டுப் படுத்துக் கொண்டாள்.

காலை அலார்ம் அடித்த போது அமுதினியால் எழுந்திருக்க முடியவில்லை. தலையில் இரும்புச் சங்கிலி போட்டுப் பூட்டி வைத்தது போலத் தூக்க முடியாது கனத்தது. மூக்குத் துவாரங்கள் அடைத்ததில் வாயால் மாத்திரமே மூச்சை இழுக்க முடிந்தது.

அமுதினி ஒருவாறு அசுரப் பிரயத்தனத்துடன் எழுந்து இருந்தாள். இது சாதாரண தடிமன் என்பது அவளுக்குத் தெரியும். இருந்தாலும் வேலைக்குப் போகமுடியாது. அது கொரோனா இல்லை என்பதை உறுதி செய்ய வேண்டும். அதன் பின்பே வேலைக்குச் செல்லமுடியும்.

அமுதினி திறன்பேசிமூலம் வேலையிடத்திற்குத் தொடர்பு கொண்டு தனது நிலைமை பற்றி விளங்கப்படுத்தினாள். அவர்கள் அதற்கு நாளை கொரோனா பரிசோதனை முடித்து அதன் முடிவு வந்த பின்புதான் வேலைக்கு வருமாறு கூறினார்கள். அதுவும் கொரோனா தொற்று அவளுக்கு இல்லை என்பது முடிவானால் மட்டுமே வேலைக்குப் போகமுடியும்.

வேலைபற்றி அமுதினிக்கு இருந்த கவலையைவிட கொரோனா வருத்தமாய் இருந்தால் அது தன்னை எப்படித் தாக்கும் என்கின்ற கலக்கமே அவள் உயிர் மூச்சை நிறுத்துவதாக அச்சுறுத்தியது. அப்படி இருக்கச் சந்தர்ப்பம் இல்லை என்பது அவளுக்குத் தெரியும். அப்படி இருந்தும் அந்த நம்பிக்கையை அடிக்கடி சந்தேகம் காவுகொண்டு சென்றுவிடுகிறது.

வேலையிடத்தில் நேரம் எடுத்துத் தந்தபடி உலவோல் மருத்துவ மனைக்கு அமுதினி சென்றாள். பனி கரைந்து இறுகிப் பளிங்காக வழுக்கிய நாள் அது. எல்லா இடங்களிலும் இல்லாவிட்டாலும் சில இடங்களில் கண்ணாடியை நிலத்தில் விரித்து எண்ணெயை ஊற்றிவிட்டது போன்று இருந்தது.
கரணம் தப்பினால் மரணம் என்பது சரியாக இருக்கும். மரணம் இல்லாவிட்டாலும் மண்டை கலங்கும் என்பது நிச்சயம்.

கொரோனாப் பரிசோதனை செய்யும் இடத்திற்கு முன்பு கொட்டகை போட்டு வெப்மூட்டி பொருத்தி இருந்தார்கள். அங்கே பலர் பரிசோதனைக்காகக் காத்திருந்தனர். அதில் பல ஆண்களும் பெண்களும் வேலையை விட்டுவிட்டுக் கொரோனாவின் பிடியில் அகப்பட்ட அவதியுடன், நெருப்பில் நிற்பதாய் நின்றனர். அமுதினியும் காத்திருந்தாள். ஒரு பெண் தாதி கையில் பட்டியலுடன் ஒவ்வொருவராகச் சரிபார்த்து அழைத்துச் சென்றாள். அமுதினியின் முறையும் வந்தது. அமுதினி பரிசோதனை அறைக்குச் சென்றாள்.

அங்கே முகக்கவசத்தோடு உடற்கவசம் அணிந்து கொரோனாவிடம் முழுமையான பாதுகாப்புத் தேடிய வண்ணம் ஒரு பொன்னிறக் கேசத்துப் பெண் நின்றாள். அவளுக்கு நீல வயிரம் போன்ற கண்கள். பார்க்கும் ஆண்களின் இதயத்தை வெட்டிச்சாய்க்கும் கூர்மை அதனிடம். மெல்லிய இளவாழை போன்ற உடல். ஐந்தடி ஆறு அங்குலம் இருப்பாள்.

பெயரும் பிறந்த திகதியும் கேட்டு உறுதி செய்த பின்பு வாயைப் பொத்திக் கொள்வதற்கு ஒரு துடைக்கும் காகிதம் கொடுத்தாள். பின்பு தொண்டைக்குள் பிரிசோதனை குச்சியை விட்டு உருட்டிவிட்டு வாயைக் காகிதத்தால் பொத்திக்கொள்ளச் சொல்லிவிட்டு மூக்கிற்குள் குச்சியைவிட்டு உருட்டித் தனது பரிசோதனையை முடித்துக் கொண்டாள். தொண்டை பறுவாய் இல்லை. முக்கு மூச்சை நிறுத்தும் பெரும் சோதனையாக அவளுக்கு இருந்தது.

பரிசோதனை முடித்து வந்த பின்பு அம்மாவைத் திறன்பேசியில் அழைத்து விடயத்தைச் சொன்னாள். அம்மா மிகவும் நிதானமாய் தாங்கள் முடிவு வரும் வரையும் அமுதினியைப் பார்க்க வரவில்லை என்றும், ஏதாவது அவசரம் என்றால் தொடர்பு கொள்ளுமாறும் கூறினாள். அம்மா உணர்ச்சிவசப்படாது மூளையைப் பாவித்தது அமுதினிக்கு மகிழ்வைத் தந்தாலும், தான் தனிமையிலிருக்க வேண்டுமே என்கின்ற பயமும் ஏக்கமும் அவளை வாட்டியது. தனிமை... வருத்தம் என்ன செய்யப் போகின்றது என்கின்ற பயம், அவளை அசுரனாகப் பயமுறுத்தியது.

இந்தத் தனிமையிலிருந்து விடுதலை பெறுவதற்கு வேறு எங்காவது போகலாம் என்றால் கொரோனா விதிகளுக்கு அமைய அவள் எங்கும் போக முடியாது. வீட்டிற்குள் அடைந்து இருப்பது இப்பொழுது அவளுக்குச் சிறையில் அடைத்து வைத்த வேதனையைத் தந்தது. வெளியே சுற்றுலாச் சென்று வரலாமா? அல்லது சித்தனை அழைத்துப் பேசலாமா? என்கின்ற எண்ணம் ஏற்பட்டது. பேசுவது என்றால் தானே பேசவேண்டும் என்பது அவளுக்கு விளங்கியது. ஆனால் பேசுவதற்குத் தயக்கமாக இருந்தது. பேசினால் தன்னைத் தானே காட்டிக் கொடுத்து விடுவேனோ என்கின்ற பதட்டம் அவளைத் தடுத்தது.

வேறு யாரையாவது தொலைபேசியில் தொடர்புகொண்டு கதைத்தாலாவது நிம்மதியாய் இருக்கும் என்று தோன்றியது. யாரை அழைக்கலாம் என்று யோசித்தாள். அம்மாவோடு கதைக்க முடியாது. வேலை அம்மாவின் முதல் பிள்ளை. அவள் அந்தப் பிள்ளையைக் கொஞ்சும் போது தொந்தரவு செய்ய முடியாது. ரஞ்சிதாவுக்கு...? அவள் கதைப்பாள். ஆனால் அவளிடமே வருத்தமாக இருப்பதால் வேலைக்குப் போகவில்லை என்று கூறமுடியாது. தொடர்ந்து கதைக்க முடியாது. அது கலையிடம் இருந்து தொற்றியது என்று குற்றம்சாட்டுவதாய் அமைந்துவிடும்.

வேறு யாரைத் தொடர்பு கொள்ள முடியும்? சித்தன்? அப்படிச் செய்தால் அது மானத்தைவிட்டுச் சரணடைவது போன்று இருக்கும். மனக்கிடக்கையை வெளியே தூக்கி எறிந்ததாக அமையும். வேறு யாரையாவது தொடர்பு கொள்ளலாம். அவர்களும் இவள் ஏன் இப்போது தொடர்பு கொள்கிறாள் என்று யோசிப்பார்கள்.

'சித்தன் அப்படி நினைப்பானா?' நினைக்கமாட்டான் என்று அவளுக்குத் தோன்றியது. திறன்பேசியை எடுத்தாள். தொடர்பு நபர்களின் பட்டியலைத் தட்டினாள். '*Sitthan*' என்கின்ற பெயரைத் தெரிவு செய்தாள். அழுத்தவா என்று யோசித்தாள்.

ஒருவித பயமாக… நடுக்கமாக… உள்ளங்கை குளிராக… 'இது என்ன அவஸ்தை?' என்று அவளுக்குத் தோன்றியது.

அமுதினி சென்று சோபாவிலிருந்தாள். அவனது பெயரைப் பார்த்து ஒருவித திகைப்பு அவளிடம். இதயம் இடிப்பதில் செவிப்பறை வெடித்துவிடும் போன்று தோன்றியது.

'ச்… என்ன செய்வது?' அவளுக்கு நடுக்கத்தோடு அலுப்பாக இருந்தது. 'என்ன நடக்கப்போகிறது? தலையா போய்விடும்? இதில் நான் தோற்பதற்கு எதுவும் இல்லை. கதைப்பதால் நான் இழப்பதும் எதுவும் இல்லை' என்று எண்ணியவள் அவன் பெயரை அழுத்தி தொடர்பை ஏற்படுத்தினாள்.

'*Hello Hvem er du?*' 'ஹலோ யார் நீங்கள்?'' என்று கேட்டவாறு மறுமுனை உயிர் பெற்றுக் கொண்டது.

'நான் அமுதினி…'

'ஓ… அமுதினி… நீங்களா? சூரியன் மேற்கில் உதித்ததாக இந்த நாள் என் வாழ்நாள் வரலாற்றில் மறக்கமுடியாத நாளாகப் பதியப்படும்…'

'Ålø! (Wow) நல்லா எனக்குச் சுத்தாதேங்க. நான் ஒண்டும் சூரியனும் இல்லை. திசைமாறி உதிக்கவும் இல்லை. இது ஒண்டும் நீங்கள் சொல்லும் வரலாறும் இல்லை'

'அது உங்கள் கருத்து அமுதினி. என் மனம் எப்படி ஆர்ப்பரிக்கிறது, ஆனந்தத்தில் தத்தளிக்கிறது என்பது எனக்கு மாத்திரமே தெரியும். அதை என்னால் மட்டுமே அனுபவிக்க முடியும். உங்களிடம் இருந்து எப்போது அழைப்பு வரும் என்று காத்துக்கொண்டு இருந்தேன். இப்போது என் வானம் வெளித்துவிட்டது'

'Ålø! நீங்கள் கொஞ்சும் தமிழில் கெஞ்ச வைக்கலாம் என்று நினைக்கிறீங்களா அல்லது என்னை மிஞ்ச வேண்டும் என்று கதைக்கிறீங்களா?'

'ஓ… அமுதினி நீங்கள் சளைத்தவர் இல்லை என்பதை நிரூபிக்கும் போட்டியா இது?'

'நான் தொடங்கவில்லை. நீங்கள்தான் தொடங்கினீர்கள். பதிலளிப்பதே என் வினை'

'என் மனதில் உள்ளதைத்தான் கூறினேன் அமுதினி. உங்களைப்பற்றி ஒவ்வொரு கணமும் நினைத்த வண்ணம் இருந்தேன். நான் இப்படிச் சொல்வது சரியா என்றும்

எனக்குத் தெரியாது. ஆனால் என் உள்ளம் அப்படி இருப்பதே உண்மை. அது சரி... நீங்கள்தானே அழைத்தீர்கள்... எதற்காக அழைத்தீர்கள்?'

'எங்கள் வீட்டில் மாடு கன்று போட்டிருக்கிறது... அதைச் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன்'

'*Doof... (கூடாது)* இதெல்லாம் ஒரு பகிடி எண்டு... உங்களுக்காகச் சிரிக்கட்டா?'

'எனக்குத் தடிமன் காய்ச்சல்... வீட்டில் தனியே இருக்க வேண்டிய கட்டாயம். நீங்கள் வேற நம்பரைத் தந்து போன் பண்ணு எண்டு சொல்லி இருந்தியள். அதுதான் எடுத்தன். தப்பா?'

'அப்ப காய்ச்சல் எண்டதாலதான் எனக்கு போன் எடுத்து இருக்கிறியள். காதலால எடுக்கேல்ல'

'காதலா? அப்படி எண்டா? அது யாருக்கு யார் மேல எதுக்காக வந்தது?'

'*Tom and Jerry* ஓட்டுறியளா? தொம்மிற்கு விளையாட்டா இருக்கலாம். ஜெரிக்கு இரணகளம். உங்களுக்கு விளங்கியும் விளங்காத மாதிரி ஒரு விளையாட்டு விளையாடுறீங்களா?'

'நீங்கள் சீரியஸ்சாத்தான் கதைக்கிறீங்களா? உங்கடை எண்ணத்தைப் புகுந்து பார்க்கிற எந்த வல்லமையும் எனக்கு கிடையாது. காதலா? உங்களுக்கு என்மேல கண்டதும் காதலா? மிதிலை நகரில் சீதையைக் கண்ட இராமனாட்டம்? அது இயற்றப்பட்ட கதை சித்தன். இது நாங்கள் உயிரோட்டமாய் வாழும் வாழ்க்கை. வாழ்ந்து பார்த்த பின்பு கலியாணம் செய்து கொள்ளும் நாட்டில் வாழுகின்றவர்கள் நாங்கள். கண்டதும் காதல் என்பது காவியத்தில் வரலாம். சாதாரண வாழ்வில் அது அவசரத்தின் விளைவாக இருக்கும்'

'இந்த உலகில் நடக்காதது எதுவும் இல்லை. நாங்கள் கேள்விப்படாதவைதான் அதிகம். நாங்கள் கேள்விப்படவில்லை என்பதற்காக அது நடக்கவில்லை என்பதாகுமா? கண்டதும் காதல் என்பதும் அதை அனுபவிப்பவனுக்கு மட்டுமே தெரியும். நவீன ஆராய்ச்சிகளே அதை ஏற்றுக் கொள்கின்றன. என் அனுபவம் உங்கள் அனுபவமாகுமா? அதன் தனித்தன்மை அவரவரைப் பொறுத்தது'

'நாங்கள் இரு துருவங்களா அல்லது ஒரே துருவமா?'

'ம்... ஒரே துருவமாகவேண்டிய இரு துருவங்கள்'

'விட்டுக்கொடுப்பில்லாத உங்கள் பதில், உங்கள் உறுதிக்குச் சான்று'

'நன்றி. அதில் எந்த மாற்றமும் இருக்காது. உங்கள்மேல் உள்ள காதலும் அப்படித்தான்'

'Ålø! நீங்கள் வெற்றிபெற வேண்டும் என்றுதான் நான் எண்ணுகிறேன். அதேவேளை நான் தோல்வியுறக்கூடாது என்று எண்ணுவதும் இயல்புதானே?'

'அது சரி... உங்களுக்குக் காய்ச்சல் எதுக்காக வந்திச்சு எண்டு செக் பண்ணியாச்சா. *I mean COVID 19 test* எடுத்தாச்சா?'

'ம்... பதிலுக்கு காத்திருக்கிறன். சரி உங்களுக்கு நிறைய வேலை இருக்கும். போன் பண்ணித் தொல்லைப்படுத்துறன் எண்டு நினைக்கிறன். நீங்கள் உங்கட அலுவலைப் பாருங்க. நாங்கள் இன்னொரு நாள் கதைக்கலாம்'

'எனக்கு அப்பிடி ஒண்டும் முக்கியமான அலுவலில்லை. ஆனால் உங்களுக்கு இருக்கலாம். பறுவாய் இல்லை. இப்ப என்னிட்ட நம்பர் இருக்குது. அதால நானே உங்களுக்குப் போன் பண்ணுறன். என்ன இருந்த அவஸ்தை இன்னும் கூடியிருக்குது'

அமுதினிக்குத் தனது நிலையும் அப்படித்தான் என்று தெரியும். இருந்தாலும் குப்பற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல, 'நான் போன் பண்ணினதால நீங்கள் அப்பிடிப் பீல் பண்ணினா சொறி. நான் வைக்கிறன். *Bye*'

'*Bye*'

திறன்பேசியைத் துண்டித்த பின்பு மனதிலிருந்ததென்ன நான் கதைத்ததென்ன என்கின்ற அவஸ்தை அமுதினிக்கு. 'ஏன் நான் இப்படி?' என்கின்ற கேள்வி அதையடுத்து அவளை அடித்துப்போட்டது.

7

தைப்பிறந்தால் வழி பிறக்கும் என்பது தமிழர்களின் நம்பிக்கை. தைப்பிறந்தால் கடும் குளிர் அடிக்கும் என்பது நோர்வே மக்களின் அனுபவம். குளிர் அடிக்கிறது என்பதற்காக வீட்டிற்குள் குந்தியிருக்க முடியாத நோர்வே நாட்டின் ஜதார்த்தம். குந்தி இருந்தால் நோர்வே என்கின்ற நாடே இருந்திருக்காது. ஆப்பிரிக்காவிலிருந்து ஆசியாவுக்கு வந்தவர்களில் குந்தி இருக்க முடியாதவர்களின் இடப்பெயர்வில் உருவானவர்களே ஐரோப்பியர்கள்.

அன்று பஞ்சுத் துளிர் போலப் பனி… காற்றில் கொஞ்சிக் குலாவி… பின் நுண் வண்ணாத்திப் பூச்சிகளாகக் காற்றில் மிதந்து… தள்ளாடித் தரையிறங்கி, பூமாதேவியிடம் தஞ்சமடைந்த நாள். எங்கும் வெள்ளைக் கம்பளம் விரித்ததான ஒற்றை நிறத்திலான கோலம். கட்டடங்களின் கூரை தொடக்கம் கால் பதிக்கும் ஒவ்வொரு அடியும் வெள்ளைப் பனிக்கம்பளத்தின் விமரிசையான விரிப்பு. பல இடங்களில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தை எடுக்க முடியாது திண்டாடும் சாரதிகளின் அவஸ்தை. வாகனத்தைச் சுற்றி இருக்கும் பனியை அகற்றுவதில் களைத்துச் சுருண்டு போன அவர்கள் கோலம். பனியை வெட்டிக் கரைக்குத் தள்ளிச் செல்லும் இயந்திரங்களின் இடைவிடாத பயணம். அதனால் அணை கட்டப்பட்டு மிண்டும் சிறைப்பட்ட வாகனங்கள். அதற்காகப் போராளிகளாக மீண்டும் பனி வெட்டிகளைக் கையில் எடுத்த மனிதர்கள்.

கொட்டும் பனியின் கோரப்பிடியை அகற்றி இயங்குவதே இந்த நாட்டின் அன்றாட நடைமுறை. இருந்தும் இன்று வானத்திலிருந்து கவுட்டுக் கொட்டியதாகப் பனியின் இறக்கம். அதில் நகர இயக்கமே மூச்செடுக்க முடியாது தவித்தது. அதையும் வென்று இயங்கத் துடித்த நகரம்.

கண், வாய், மூக்கு என்கின்ற உறுப்புக்களைத் தவிர அத்தனையும் தடித்த உடுப்பால் இறுக்கமாகப் பொதியப்பட்ட மனித உருவங்கள். தேனீக்கள் மொய்த்துக் கொண்ட மனிதன் போல, பனித்துகள்கள் மொய்த்துக்கொண்ட வெள்ளை உருவங்களின் நடமாட்டம். இது ஒன்றும் எஸ்கிமோ நாடு இல்லை.
அதற்காகப் பனியிலிருந்து இவர்களுக்கு விடுதலையும் இல்லை. இயற்கையோடு போராடி அதை வென்று வாழ்வதே இவர்கள் தனித்துவமும் மகத்துவமும்.

இந்த வெள்ளை முலாம் பூசப்பட்ட பனி தேசத்தின் தலைநகரான ஒஸ்லோவில் சுபன் இன்று மனோவைச் சந்திப்பதாக மீறமுடியாத ஒப்பந்தம் செய்திருந்தான். வெள்ளை உருவமாக வரும் அவனைக் கண்டு பிடிப்பது ஒன்றும் கடினமாக இருக்கக் கூடாது என்பதற்காக ஒஸ்த்வாணஹலுக்கு வரச் சொல்லி இருந்தான். அதற்குள் வந்தவுடன் வெள்ளை உருவங்கள் கோடைக்கால நிறத்திற்கு மாறும் முயல்கள்போல வழமையான நிறத்திற்கும் உருவத்திற்கும் வந்து விடுவார்கள். அதன் பின்பு கண்டு பிடிப்பது என்கின்ற கேள்விக்கே இடம் இருக்காது.

வாழ்க்கை என்பது என்ன? பணத்தோடு கட்டிப்புரண்டு வாழ்வதா? புகழைப் பீத்தித் திரிந்து வாழ்வதா? சந்ததி விருத்தி செய்வதா? அல்லது மன நிம்மதியோடு இருப்பதா? பணம், புகழ், சந்ததி சிலருக்குத் தானாக வந்து அமைகிறது. சிலர் தேடி ஒருவாறு பெற்றுக் கொள்கிறார்கள். சிலரால் தேடியும் அதை அடைந்து கொள்ள முடிவதில்லை. அது விபத்து மாதிரியே. ஒரு சிலருக்கு மாத்திரமே மனித மூளையின் கெட்டித்தனத்தோடு அது வந்து வாய்க்கிறது. மனிதன் நிம்மதியாக வாழ்வதும் நிம்மதியற்று அலைவதும்கூட திட்டமிடல் என்கின்ற மனிதக் கற்பிதத்தைவிட விபத்து என்பதே சரியாக இருக்கும். மனித வாழ்க்கை திட்டமிட்டபடி நடக்கிறது என்றால் நாளைய வாழ்வு எப்படி இருக்கும் என்பது இன்று எவருக்கும் தெரியாத அவலம் எதற்கு? வாழ்வும் சாவும் எங்கள் கையிலில்லை என்பதை யுத்த பூமியில் நிற்பவர்கள் மூர்க்கமாக உணர்வார்கள். மற்றவர்கள் அதை மென்மையாக உணர்ந்தாலும் மனித வாழ்க்கை என்பது உண்மையில் மனிதனின் கையிலிருக்கிறதா?

மனிதக் கற்பிதத்தில், மனிதப் பேராசையில், மாற்றியமைக்கப்பட்ட இந்த உலகில், அந்த மனித வாழ்க்கையே நிரந்தரமற்ற ஒன்று என்பது மட்டுமே எப்போதும் நிரந்தரமானது. புகழ், பணம், சொத்து, அங்கீகாரம், அதிகாரம், உறவு எதுவும் நீ ஒருபிடி சாம்பலாகும்போது உன்னோடு வரப்போவதில்லை. நீ போனாய் என்று சில நாட்கள் அழுவார்கள். பின்பு போனதிற்காய் படையல் வைத்து உண்டு மகிழ்வார்கள். அதன் பின்பும் உலகம் இயங்கும். உன் சாம்பலும் கடலில் கரைந்து மறைந்து போகும்.
கோடான கோடி மனித வரலாறு இப்படி முடிந்தாலும், வாழ்வு என்பதே விபத்து என்பதை உணராது, நாளை என்கின்ற வராத நாளை எண்ணித் தேடித் தேடிச் சேர்த்து வைக்கும் ஒரே விலங்கு மனிதனாவான்.

இதற்கு மேலாகத் தனது சந்ததி பரப்புதலில் அப்படியொரு மூர்க்கம் அவனிடம். எது இல்லாவிட்டாலும் அது நடக்காவிட்டால் அவனால் நிம்மதியாக இருந்துவிட முடியாது. அப்படியான இக்கட்டிலேயே சுபன் வாழ்க்கையும் உழன்றது. அவனுக்கு இப்படி வரும் என்கின்ற கற்பனை இருந்ததில்லை. வந்தபோது மனித வாழ்வின் விபத்து அவனுக்குச் சாதுவாக வெளித்தது. இருந்தும் அந்த விபத்திலிருந்து வெளியே வர வேண்டும் என்பதில் அவன் பிடிவாதமாக இருந்தான்.

திருமணம் செய்தபின்பு சுபனும் மற்றவர்களைப் போல விதை தூவுகிறேன் முளை விடும் என்று எதிர்பார்த்தான். முளை விடவே இல்லை. முளை விடவில்லை என்றபோது விதையில் பிழையா நிலத்தில் பிழையா என்கின்ற கேள்வி. எதில் பிழை இருந்தாலும் எங்கள் அன்பில் பிழை வரக் கூடாது என்பதில் சுபனும் தேவிகாவும் உறுதியாக இருந்தனர்.

அதேவேளை வேலை செய்வது, பணம் சேர்ப்பது என்பதும் அவர்கள் கட்டுப்பாட்டை மீறி வெறியாக வளர அதிக நேரத்தை அதற்காகவும் செலவு செய்தார்கள். அதனாலேயே முளை விடாது தாமதிப்பது பற்றிக் கவலைகொள்ள நேரம் இல்லாது வாழ்ந்து வந்தார்கள். எதற்கும் நேரம் கொடுத்தால் அது சரியாகும் என்று எண்ணி இருந்தனர். காலம் போகப் போக நேரம் கொடுப்பதால் காலம் மட்டுமே கரைந்து போவதை அவர்கள் உணர்ந்து துடித்தனர். வேலை என்கின்ற அவர்கள் யாகத்தை விட்டு இதற்கும் சற்று நேரம் ஒதுக்க வேண்டும் என்கின்ற ஞானம் பெற்றனர்.

பின்பு தங்கள் வேலையை ரத்தக்கண்ணீர் சிந்திய வண்ணம் ஒரு நாள் ஒதுக்கி வைத்துவிட்டு றிக்ஸ்ஹெஸ்பிற்றலுக்குப் போய் வந்ததின் முடிவில் நிலத்தில் பிழையில்லை... விதை என்று நினைத்துப் பதரை விதைத்து வந்த உண்மை அம்பலமாகியது. அதன் பின்பு சுபன் இரவு பகல் என்று நித்திரை இல்லாது அலைந்து ஒருவாறு மனோவின் தொடர்பைப் பெற்றுக் கொண்டான்.

இன்று அவனைச் சந்திப்பதாய் செய்த ஒப்பந்தத்தின்படி 'ஒஸ்த்வாணஹாலுக்கு' வந்திருந்தான். அங்கே 'நர்வேசன்'- க்கு முன்பு இருந்த பயணிகள் இருக்கையிலிருந்தான். இன்னும் பத்து நிமிடங்கள் இருந்தன. மனோவைப் பற்றிச் சுபனுக்குத் தெரியாது. நேரத்திற்கு வருவான் என்கின்ற நம்பிக்கையோடு வந்திருந்தான். அப்படி வராவிட்டால் அலைபேசி இருந்தது. அதில் தொடர்புகொண்டு உண்மையை அறிந்து கொள்ளலாம்.

மனோ நான்குமணியாகியும் வரவில்லை. சுபனுக்கு ஆணிமேல் நிற்பதான அவஸ்தையாக இருந்தது. இன்னும் ஐந்து நிமிடம் காத்திருக்கலாம் என்று எண்ணியவாறு காத்திருந்தான். நல்லவேளையாக அபயம் கிடைத்தது போன்று அலைபேசி ஒலித்தது. அதைச் சுபன் துடித்துப் பதைத்து எடுக்க, 'தம்பி ஒஸ்த்வாணஹலுக்கு வந்திட்டன். நீங்கள் எங்க இருக்கிறியள்?' என்றான் மனோ.

'நான் நர்வேசனுக்கு முன்னுக்கு இருக்கிறன். அங்க வாங்க'

'சரி... இந்தா வாறன் தம்பி'

சிறிது நேரத்தில் மனோகரன் வந்தார். வயது ஐம்பதைத் தாண்டுவதால் வெண் நரைகள் நெருக்கமாக முகவுரை எழுதிய கோலம். எதிராளியின் எண்ணங்களை மனதுள் புகுந்து நோண்டுவது போல கண்களில் ஒருவித கூர்மை... இருந்து சாப்பிட்டு ஊளைச்சதை அங்கும் இங்கும் அவர் உடைகளைத் தள்ளியவண்ணம் எட்டிப் பார்ப்பதாய். ஆமை ஓடுபோல அணிந்திருந்த கரும் பச்சை மேலங்கி. சுபனது வாழ்வு எவ்வளவு பரபரப்பானதோ அதைப் போல மனோவின் வாழ்க்கையும் பரபரப்பானதே.

'கனநேரமா வெயிற் பண்ணுறியளே தம்பி?' என்றார் மனோகரன்.

'சீ... சீ... நீங்கள் கிட்டத்தட்ட சொன்ன நேரத்திற்கு வந்திட்டியள். தாங்ஸ் அண்ண'

'ம்... நேரத்திற்கு வரவேணும் எண்டாலும் போக்கு வரத்து... வேலை எண்டு... சிலவேளை சறுக்கீடும்'

'ம்... ஏதாவது குடிக்கச் சாப்பிட வாங்கியரட்டா?' என்றான் சுபன்.

'வீட்டுக்குப் போய்ச் சாப்பிட வேணும். இல்லாட்டி அது பெரிய பிரச்சினையாகிடும். வெளியே சாப்பிட்டுச் சாப்பிட்டு உடம்பு தாங்குதில்லை எண்டு வீட்டில நச்சரிப்பு. கோப்பி வாங்கியாரும் குடிச்சுக்கொண்டு கதைப்பம்'

சுபன் சென்று கடும்கோப்பி வாங்கிக்கொண்டு வந்தான். அதில் ஒன்றை மனோவிற்கு கொடுத்துவிட்டுப் பக்கத்திலிருந்தான்.

'அது சரி தம்பி நீங்கள் கலியாணம் செய்து எத்தினை வருசமாச்சுது?' என்றார் மனோ.

'எட்டு வருஷம் ஆச்சுது அண்ணை'

'இவ்வளவு காலமும் கவனிக்கேல்லையே தம்பி?'

'இல்லை அண்ணை. வேலை வீடு எண்டு நேரம் சிட்டாய்ப் பறந்திட்டுது. நாங்கள் வேலைக்குக் கொஞ்சம் அதிகமாக முக்கியத்துவம் கொடுத்திட்டம் எண்டு நினைக்கிறன். அதால காலம் போய்த்தான் வாழ்க்கையில எதை இழந்து இருக்கிறம் எண்டது விளங்கி இருக்குது. இப்ப கொஞ்சம் பயம் வந்திட்டுது. இப்பிடியே பிள்ளை பிறக்காட்டி எங்களுக்கு எண்டு ஒரு வாரிசு இல்லாமல் போயிடுமோ எண்டு பயமா இருக்குது'

'ம்... அது அது அந்தந்த நேரத்தில நடக்க வேணும். இல்லாட்டித் தேவையில்லாத பயம் வரும். வாரிசு எண்டது முக்கியமானதுதான். அதைப் பற்றி நீங்கள் ஏற்கனவே சிந்திச்சு இருக்கலாம். பருவாய் இல்லை... இப்ப எண்டாலும் உசாராகிட்டியள்... உங்கட பிரச்சினையோட சிலர் வந்து இருக்கினம். அவைக்கு நல்ல பலனும் கிடைச்சிருக்குது'

'சந்தோஷம் அண்ணை. எப்பிடி எண்டாலும் ஒரு பிள்ளையாவது ஆசைக்கும் பெயருக்கும் எங்களுக்குத் தேவை. அதை இப்ப எண்டாலும் சரி செய்ய வேணும் அண்ணை'

'அதைப் பற்றி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. ஏற்கனவே பலருக்கு உதவி செய்து இருக்கிறன். அவையெல்லாம் இப்ப பிள்ளையளோட இருக்கினம். உங்களுக்கும் நிச்சயம் அது பிரச்சினையா இருக்காது. நாங்கள் சொல்லுறதைக் கவனமா செய்தியள் எண்டாச் சரி'

'அது பிரச்சினை இல்லை. நீங்கள் சொல்லுகிற மாதிரிச் செய்யலாம். என்ன செய்ய வேணும் எப்பிடிச் செய்ய வேணும் எண்டு விபரமாச் சொல்லுங்க'

'இல்ல இந்த ஸ்பாம் தாறவர் அதை நிறுத்தப் போகிறாராம். இதுதான் அவர் கடைசியாகச் செய்கிற உதவியாம். உங்களுக்கு இரண்டாவது பிள்ளை வேணும் எண்டால் இவரிட்டை இருந்து உதவி கிடைக்காது'

'அது பறுவாய் இல்லை. எங்களுக்கு அப்பிடி எந்த ஐடியாவும் இப்ப இல்லை. ஒரு பிள்ளை இருந்தாலே போதும்'

'அப்ப சரி. நான் கதைக்கிறன்'

'அண்ண ஒரு முறையில சரிவருமா?'

'சிலருக்கு ஒரு முறையில சரி வந்திருக்குது. சிலருக்குப் பலமுறை முயற்சிக்க வேணும். அது உங்கட அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது. செலவாகும் எண்டு யோசிக்கிறீங்களா?'

'ஐயோ அண்ணை அதெல்லாம் எங்களுக்கு ஒரு பிரச்சினை இல்லை. அலையோணும் இல்லையே… அதைப்பற்றித்தான் கொஞ்சம் யோசினை'

'நல்லது நடக்க வேணும் எண்டா சிலவேளை தீமிதிப்புச் செய்யத்தான் வேணும்'

'ம்… விளங்குதண்ணை. எதெண்டாலும் செய்யத் தயாராகத்தான் இருக்கிறன்'

'உச்ச நாள் கண்டு பிடிச்சு வைச்சிருக்கிறியளா?'

'அதைப் பற்றி அறிஞ்சு, மூண்டு மாதமாய் தயார் பண்ணி வைச்சிருக்கிறம். அவர் சரி எண்டு சொன்னால் நாங்கள் அதுக்கேத்தமாதிரி ரிக்கெற் போடலாம்'

'ம்… நான் கதைச்சிட்டுச் சொல்லுறன். பிறகு நீங்கள் ரிக்கெற் போடுங்க'

'சரியண்ணை'

*

சுபனும் தேவிகாவும் ஒஸ்லோவிலிருந்து சொப்பன்காவன்–க்குப் கப்பலில் பயணம் செய்தார்கள். அன்று கப்பலில் திருவிழாபோல நல்ல கூட்டம். பயண ஆயத்தம் முடிந்து உள்ளே சென்று இருவரும் கதைத்துக் கொண்டு இருந்தார்கள். உள்ளே செல்வதற்கு நேரம் இருந்தது. இலங்கையில் யுத்த நிறுத்தம் வந்திருக்கும் காலம் இது.

'பிள்ளை ஒன்று இருந்தால் இலங்கைக்குப் பவுசாகச் சென்று வந்திருக்கலாம். எல்லோரும் அள்ளுப்பட்டுச் சென்றாலும் இப்போது அதை நாங்கள் செய்ய முடியாது. அப்படிச் செய்தால் அதுவே ஊரில் பெரும் துக்க விசாரணையாக இருக்கும். ஒவ்வொருவராக வந்து நலம் விசாரிப்பதாகத் துக்கம் விசாரிப்பார்கள். ஏன் உங்களுக்குப் பிள்ளை இல்லை என்று உள்ள நிம்மதியையும் திருடிச் செல்வார்கள். அப்படி இல்லாமல் யுத்த நிறுத்தம் முடிய முதல் பிள்ளை பிறந்து… கொஞ்சம் வளர்ந்து… இலங்கைக்குச் சென்று…' சுபனின் கற்பனை நீலவானைக் கிளித்துச் செல்லும் விண்கலனில் இடம்பிடித்த பறவையாக உயர உயரப் பறந்தது.

சுபன் பேசாது யோசித்துக்கொண்டு இருப்பதைப் பார்த்த தேவிகா, 'என்ன கடுமையா யோசிக்கிறியள்?' என்று அவனை இந்த உலகிற்கு இழுத்து வந்தாள்.

'இல்லை பிள்ளை இருந்திருந்தால் ஊருக்குப் போய் வந்திருக்கலாம். இப்ப நாங்கள் அதுக்காக இங்க மினக்கெட வேணும். பிள்ளை இல்லாமல் போனாலும் சனங்கள் நோண்டி நோண்டி அதைத்தான் கேட்பினம். இந்த யுத்த நிறுத்தம் முடியாமலிருந்தால் பிள்ளை பிறந்த பிறகாவது நாட்டுக்குப் போயிட்டு வரவேணும்'

'என்ன செய்யிறது அப்பா. நாங்களும் கவனிக்காமல் விட்டிட்டம். இப்பவாவது இதை நாங்கள் ஒழுங்காச் செய்ய வேணும். பிள்ளை பிறந்தபிறகு பாப்பம் அப்பா'

'ம்... நீ சொல்லுகிறது சரிதான். வேற வழி இல்லை'

இருவரும் கதைத்துக்கொண்டு இருக்கும்போது ஒரு தமிழ் குடும்பம் அங்கே வந்தனர். அவர்களுக்கு ஒரு ஆண்பிள்ளை. அவன் பிள்ளைகளுக்கான வண்டிலிலிருந்தான். அவனுக்கு நான்கு வயது இருக்கும். அவர்கள் எங்கே வந்து இருப்பார்கள் என்பது இருவருக்கும் விளங்கவில்லை. கூப்பிட்டு அவர்களை அருகிலிருக்குமாறு அழைக்கவும் தயக்கமாக இருந்தது.

வெளியே கப்பல் பெரிய அரண்மனையைக் கடலில் மிதக்கவிட்டது போன்று கரை ஒதுங்கிக் கட்டடத்துடன் பாலம் அமைத்து நின்றது. உள்ளே இருக்கும் விஸ்தீரணத்திற்கு முகவுரை எழுதுவது போல அதன் வெளித் தோற்றம். சுபன் ஏற்கனவே அதில் போய் வந்து இருந்தாலும் மீண்டும் மீண்டும் பார்க்கப் பார்க்க மலைப்பை உண்டுபண்ணும் தோற்றமது.

எங்கே இருக்கப் போகிறார்கள் என்கின்ற இவர்களின் எதிர்பார்ப்பை மண்ணைப் புரட்டிப்போடும் கலப்பை போல அவன் புரட்டிப் போட்டான்.

சட்டென்று இவர்களை நோக்கி வந்தவன், 'நான் சிவகுமார்... இவ என்ர வைப் ரூபிணி' பிள்ளைகளுக்கான வண்டியிலிருந்த சுட்டிப் பையனைக் காட்டி 'இவன் என் செல்லக்குட்டி அஜந்தன்' என்றான். அத்தோடு தாமதிக்காது அருகிலிருந்த இருக்கையில் அமர்ந்தான்.

பின்பு அனைவரும் சிறிது நேரம் கதைத்துக்கொண்டு இருக்கவும் உள்ளே போவதற்கான அழைப்பு ஒலிபெருக்கியில் வரவும் சரியாக இருந்தது. அப்போது சிவகுமார், 'எந்த அறையில நீங்கள் தங்கி இருக்கிறியள்?' என்று கேட்டான்.

'எங்களுக்கு எழுநூற்று எழு தந்திருக்கிறாங்கள். உங்களுக்கு?'

'அறுநூற்று ஐந்து'

'சரி அப்ப நீங்க ரூமுக்குப் போங்க... நாங்கள் பிறகு வந்து சந்திக்கிறம்'
'சரி வாங்க' என்றுவிட்டுச் சுபனும் தேவிகாவும் சென்றார்கள். அவர்கள் பிள்ளையுடன் மின்தூக்கிக்காகக் காத்திருந்தனர்.

கடலில் மிதக்கவிட்ட மாபெரும் மாளிகை போன்ற இந்தக் கப்பலில் அறையைத் தேடிப்பிடிப்பதும் ஒரு வேலை போலவே. சுபனும் தேவிகாவும் தங்களது எழுநூற்று ஏழாவது அறையை ஒருவாறு தேடிப் பிடித்துக் கதவைத்திறந்து உள்ளே சென்றார்கள். அந்த அறை சிறிய விடுதி அறை போன்று இரட்டைச் சொகுசுக் கட்டிலுடன் இருந்தது. அதற்குள் ஒரு குட்டிக் குழியல் அறை. கப்பல் இரவிரவாகப் பயணிக்க நிம்மதியாகப் படுத்து உறங்கும் வசதி.

சுபன் பயணப்பெட்டியை இழுத்துக்கொண்டு வந்ததால் அவனது உடல் பிசின் போலக் கசகசத்தது. தாங்கள் கொண்டுவந்த பயணப் பெட்டியை வைத்துவிட்டு ஒரு சிறு குளியல் போட்டான். குளித்து விட்டு வந்து *Apobase* (ஈரப்பதமூட்டும் களிம்பு) உடலிற்குப் பூசிக்கொண்டான். அவனது வறண்ட சருமத்தை அது வளப்படுத்தும் என்கின்ற அசையாத நம்பிக்கை அவனுக்கு.

அப்போது கதவு தட்டும் ஓசை கேட்டது. சுபன் இதை எதிர்பார்க்கவில்லை. யாராய் இருக்கும் என்கின்ற யோசனையோடு சென்று கதவைத் திறந்தான். வெளியே சிவகுமார், ரூபிணி, அஜந்தன் மூவரும் சிரித்துக்கொண்டு நின்றனர்.
இது அவனுக்கு எதிர்பாராத இன்ப அதிர்ச்சியாக இருந்ததால் பேச்சிழந்து நின்றான்.
'என்ன உள்ள வரலாமே?' என்று சிவகுமார் அவனைப் பூமிக்கு இழுத்து வந்தான். அதன் பின்பே
'ஓ... உள்ள வாங்க... உள்ள வந்து இருங்க...' என்றான் சுபன்.

அவர்கள் உள்ளே வந்து படுக்கையிலிருந்தார்கள். பின்பு இருவரையும் பார்த்த சிவகுமார் 'என்ன நீங்கள் ரெடியா... டியூட்டிபிறி திறந்திடுவாங்கள். போனாப் பார்த்து வாங்க வேண்டியதை வாங்கிக்கொண்டு வரலாம்' என்றான்.
'நாங்கள் திரும்பிப் போகேக்கை வாங்கலாம் எண்டு நினைச்சம்' என்றான் சுபன்.
'அது வேற சுபன். இது இப்ப நாங்கள் சாதுவாய் முதல்ல அடிச்சிட்டுச் சாப்பிடுகிறதுக்கு... கப்பலுக்கு வந்திட்டு இதைக்கூட அனுபவிக்காட்டி எப்பிடி?'

'அதுவும் சரிதான். அப்ப போய் டியூட்டிபிறிய ஒரு சுத்து சுத்தீட்டு வருவம்'

எல்லோரும் புறப்பட்டு டியூட்டிபிறிக்குச் சென்றார்கள். கடை திறப்பதற்கு ஐந்து நிமிடங்கள் இருந்தன. அன்னதான மடத்திற்கு முன்னே அவாவோடு பசியில் நிற்கும் சனத்தின் நெரிசல் அங்கே. அதிலும் இளைஞர்களும் யுவதிகளும் சோடி சோடியாகக் கைகளைப் பிடித்துக்கொண்டு… முத்தம் கொடுத்துக்கொண்டு…

கடை திறந்ததும் அள்ளுப்பட்டுச் சனங்கள் உள்ளே சென்றனர். இவர்களும் ஒவ்வொரு கூடையை எடுத்துக்கொண்டு சென்றார்கள். அப்படிச் செல்லும்போது, 'உங்களுக்கு என்ன பிடிக்கும்?' என்று சிவகுமார் கேட்டான்.

'விளங்கேல்ல'

'சாப்பிட முதல் என்ன அடிப்பியள்?' என்றான் சிவகுமார்.

'ஓ… அதா… வையின் அடிச்சிட்டுச் சாப்பிடுவன். ஆனால் நான் சாப்பிட்ட பிறகு குடிக்கிறது இல்லை… இண்டைக்கு கொஞ்சமா விஸ்கி ஏதாவது குடிச்சிட்டுச் சாப்பிடலாம்' என்றான் சுபன்.

'கண்டபடி குடிக்கிறேல்ல…' தேவிகா எச்சரித்தாள்.

'அதெல்லாம் பயப்படாதேங்க சிஸ்ரர்… சுபன் விஸ்கி என்ரை செலவு…
நீங்கள் வேணுமெண்டால் கலந்து குடிக்க ஸ்பிறைற், சாப்பிட எதாவது வாங்கிக்கொண்டு வாங்க. அது போதும்'

'எல்லாரும் எங்கடை ரூமுக்குப் போவம். எங்களிட்டை நிறைய றோள்ஸ், வடை, பிரியாணி எல்லாம் இருக்குது' என்றாள் ரூபிணி.

'நாங்கள் ரெஸ்டாரண்டில சாப்பிடலாம் எண்டு இருந்தம்…' என்றாள் தேவிகா.

'அதெல்லாம் தேவையில்லாத செலவு. எங்களிட்டை நிறையச் சாப்பாடு இருக்குது. நீங்கள் எங்களோடைதான் சாப்பிடுறியள்'

சுபனும் சிவகுமாரும் குடிவகை உள்ள பகுதிக்குச் செல்ல, தேவிகாவும் ரூபிணியும் அஜந்தனோடு வாசனைத் திரவியங்கள் உடுப்புகள் உள்ள பகுதிக்குச் சென்றனர். சுபனும் சிவகுமாரும் விரைவாக ஒரு *Red Label* உடன் அதற்குத் தேவையான துணைப் பொருட்களையும் எடுத்துக்கொண்டு வந்தாலும் தேவிகாவும் ரூபிணியும் தங்கள் அலுவலை முடித்ததாகத் தெரியவில்லை. வரும்போது பார்க்கலாம் என்று

அவர்களைச் சமாதானப்படுத்திக் கூட்டிக்கொண்டு, சிவகுமாரின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்கள் அறைக்குச் சென்றார்கள்.

அவர்கள் அறை நான்கு கட்டில்களைக் கொண்ட அறை. ஒரு கட்டிலின் மேல் மற்றைய கட்டிலாக இரண்டு கட்டில்கள் ஒருபக்கம், இரண்டு கட்டில்கள் மறுபக்கம். சிவகுமார் கீழே உள்ள கட்டிலிலிருந்தான். அதில் சுபனையும் இருக்குமாறு அழைத்தான். மறுபக்கத்தில் ரூபிணியும், தேவிகாவும், அஜந்தனும் இருந்தார்கள்.

அறைக்குள் இருந்து வந்த தமிழ்ச் சாப்பாட்டு மணம் தேவிகாவின் உறங்கி இருந்த பசியைத் தட்டி எழுப்புவது போல இருந்தாலும் அதற்கு நேரம் இருக்கிறது என்று தன்னைத் தானே சமாதானம் செய்துகொண்டாள். ரூபிணியைப் பார்த்துச் சிவகுமார் 'குடிக்கிற கப் எடும். அதோடை றோள்ஸ்சையும் வடையையும் எடுத்து வையும்' என்றான். அவள் கட்டிலில் ஏறிக் குவளைகளை எடுத்துக் கொடுத்தாள். அதை வாங்கிய சிவகுமார் *Red Label*-ஐ திறந்து குவளைகளில் ஊற்றி அதற்குள் ஸ்பிரைட்டைக் கலந்து ஒன்றைச் சுபனிடம் கொடுத்துவிட்டு மற்றையதைக் கையில் தூக்கிச் சியேஸ் என்றான்.
அத்துடன் அவர்கள் திருவிழா ஆரம்பமாகியது. சுபன் பொரித்த முந்திரிப்பருப்பு, *potato chips* ஆகியவற்றைத் திறந்து வைத்தான். ரூபிணி வடையையும் றோள்ஸ்சையும் எடுத்து வைத்தவண்ணம் 'இதெல்லாம் முடியச் சாப்பிட்டிட்டுத்தான் நீங்கள் போக வேணும்' என்றாள்.

'ம்… நீங்கள் தமிழ் சாப்பாட்டு மணத்தைக் காட்டி எங்களை மயக்கிப்போட்டியள்' என்றாள் தேவிகா.

'மனித வாழ்வுக்கு முதல்ல காற்று, இரண்டாவது நீர், மூண்டாவது உணவு அவசியமானது. முதல் இரண்டும் இலவசமாக, இயற்கையாகக் கிடைக்கும். உணவு மாத்திரம் நாங்கள் வாங்கிச் சமைச்சு அனுபவிச்சுச் சாப்பிடுகிறது இல்லையா? அது அப்ப சாப்பிடுறவைய சுவையால, மணத்தால, வடிவத்தால கவரவேணும் இல்லையா? அதில ரூபிணியின் கைவண்ணம் இது' என்றான் சிவகுமார். நிதானமாக இருக்கும்போது சிவகுமார் இதைவிட ஆழமாகக் கதைப்பான். குடித்தால் அவன் கதையே வேறுவிதமாக மாறும் என்பது ரூபிணிக்கு மாத்திரம்தான் தெரியும்.

'தேவிகா… நான் எடுத்து வைச்சது பாக்கிறதுக்கு இல்லை… எடுத்துச் சாப்பிடுங்கோ' என்றாள் ரூபிணி.

'ஓ… தாங்ஸ்' என்று கூறியவண்ணம் ஒரு றோள்ஸ்சை எடுத்துத் தேவிகா சாப்பிடத் தொடங்கினாள். இவர்கள் யாரையும் பொருட்படுத்தாது அஜந்தன் ஒரு றோள்ஸ்சை எடுத்துக் கொறித்தான்.

'நாளைக்கு என்ன பிளான் சுபன். கப்பலால இறங்கி நாங்கள் திவோலிக்குப் போகலாம் எண்டு பிளான் பண்ணி வைச்சிருக்கிறம். பிறகு வந்து சொப்பிங் முடிச்சுக்கொண்டு திரும்பிவரச் சரியாய் இருக்கும். உங்களுக்கு வேற ஏதும் பிளான் இருக்குதா?'

'ஓ… சொறி… நாங்கள் *one way*-யிலதான் போகிறம். திரும்பிவர இரண்டுநாள் ஆகும்' என்றான் சுபன்.

'ஓ அப்பிடியே… ஏதாவது அலுவலோ?'

'ஆறுதலாச் சுத்திப் பார்த்து வாற ஐடியா' என்றான் சுபன். அவனால் தாங்கள் எதற்குப் போகிறோம் என்பதைச் சொல்ல முடியாது இருந்தது. அவமானமும் வெட்கமும் அவனை வாய் திறவாது கட்டிப் போட்டன.
அத்தோடு தமிழர்கள் எப்படி விளங்கிக் கொள்வார்கள் என்கின்ற பயம் அவன் நாவை அண்ணத்தில் பிசின்போட்டு ஒட்டி வைத்ததாய் அசையவிடாது தடுத்தது.

சிவகுமாருக்கு மது ஆகாயத்தில் மிதக்க விட்டதான ஏற்றத்தைத் தந்தது. அதற்குச் சுதி சேர்ப்பதாகக் கப்பலின் தாலாட்டுத் தட்டிக் கொடுத்தது. வெறி இல்லாதபோது இருக்கும் பணிவும் நிதானமும் வெறி ஏறினால் பறந்துவிடும் என்பது தெரிந்திருந்தால் சுபனுக்கு அங்கே வரும் துணிவு இருந்திருக்காது. அவன் வீண் சண்டைகளைக் கண்டால் விலகித் தூர ஓடிவிடும் குணம் கொண்டவன்.

'அது சரி உங்களுக்குப் பிள்ளையள் இல்லையே?' என்று திடீரெனச் சிவகுமார் கேட்டான்.

இது எதிர்பாராத அவஸ்தையான கேள்வி. ஆயிரம் மின்னல்கள் ஒரே நேரத்தில் தாக்கியதாகச் சுபனும் தேவிகாவும் செயலிழந்து போயினர். அவர்களுக்கு என்ன பதில் சொல்வது என்று விளங்கவில்லை. சிவகுமாருக்கு ஏறியிருந்த ஏற்றத்தில் மீண்டும், 'உங்களுக்குப் பிள்ளை இல்லையா? கலியாணம் கட்டி எத்தின வருசமாச்சுது?' என்று கேட்டான்.

'இது என்ன கேள்வி? பிள்ளை இருந்தா விட்டிட்டா வருவம்' என்றான் சுபன்.

'ஏன் அப்ப பிறக்கேல்லை எண்டு செக் பண்ணேல்லையா?' என்று நோண்டினான் சிவகுமார்.

'செக் பண்ணாமலா இருப்பம்...'

'பிறகு...'

'அதைவிடும் சிவகுமார்' என்றான் சுபன்.

'அப்ப உங்களிட்டைத்தான் பிரச்சினை... இல்லையே சுபன்?'

சுபன் பேசவில்லை. இதைக் கவனித்துக் கொண்டு இருந்த தேவிகா 'நாங்கள் போவமே' என எழுந்தாள். 'இருங்க... இப்ப என்ன அவசரம்? பிரியாணி சாப்பிட்ட பிறகு ஆறுதலாகப் போகலாம்' என்று நிலைமையை விளங்கிக் கொள்ளாது ரூபிணி கூறினாள்.

'என்ன தேவிகா... பிள்ளையைப் பற்றிக் கேட்டவுடன ஓடுறியள்? ஏன் அவரைப் பற்றிச் சொல்ல வேணும் எண்ட பயமே? உதுக்குத்தானே இப்ப நிறைய வழிகள் இருக்குது. பழைய அல்லது புதிய 'நியோக்' முறையில் குழந்தையைப் பெறலாம்தானே? உதவி தேவை எண்டாச் சொல்லுங்கோ' என்றான். சுபனால் அதற்கு மேலும் பொறுமையாக இருக்க முடியவில்லை. பொறுமை வெடித்துக் கோபம் எரிமலையாகப் பொங்கியது. தன்னிலையை இழந்தவனாக, 'தேவை இல்லாமல் அதையே கேட்டுக் கொண்டு இருக்காதையுங்க... மரியாதை பண்பாடு தெரியாமல் கதைக்காதீங்க... எங்களுக்கு என்ன பிரச்சினை அதுக்கு என்ன செய்ய வேணும் எண்டது தெரியும்... நீங்கள் புத்திமதி மாதிரி நக்கல் பண்ணத் தேவையில்லை... இனி ஏதாவது சொன்னியள் எண்டா நான் சும்மா இருக்கமாட்டன்' என்றான் சுபன்.

'ஓ... என்ன செய்து போடுவீர்? ஒரு பிள்ளையப் பெறத் தெரியேல்ல என்ன பெரிசாக் கெம்பிறீர்?'

'என்னடா கதைக்கிறாய்?' சுபன் திடீரெனக் கையைத் தூக்கினான். இதை எதிர்பார்த்து இருந்தது போல் தேவிகா அவனது கையை எட்டிப் பிடித்து, 'வாங்க போகலாம்' என்று அவனை இழுத்துக் கொண்டு சென்றாள்.

'ஐயோ... இதென்ன சண்டை. நீங்கள் குடிச்சா வாயை வைச்சுக்கொண்டு சும்மா இருக்கமாட்டியளே? தேவிகா போகாதேங்கோ. பிளீஸ் போகாதேங்கோ... இவர் குடிச்சா

இப்பிடிதான். அவர் கதைக்கிறதுக்கு ஒரு அர்த்தமும் கிடையாது' என்று ரூபிணி சமாதானப்படுத்த முயன்றாள்.

வெளியே சுபனை இழுத்துக்கொண்டு வரவும் 'பசிக்குது தேவிகா' என்றான். 'சரி… வாங்க மேல ரெஸ்டாரண்டில சாப்பிட்டிட்டு வருவம்' என்று கூறிய தேவிகா அவனை மேலே அழைத்துச் சென்றாள். அங்கே பீசா கடையில் நல்ல கூட்டமாக இருந்தது. ஒருவாறு இடம்பிடித்துச் சுபனை இருக்க வைத்துவிட்டு பீசாவுக்கு ஆஞ்யை கொடுத்துவிட்டு வந்தாள்.

அடுத்த நாள் காலைப் பேருந்தில் ஏறும்வரை அவர்களைச் சுபனும் தேவிகாவும் காணவில்லை. இனி அவர்களை ஒரு பொழுதும் சந்திக்கவே கூடாது என்று தேவிகா எண்ணிக்கொண்டாள்.

8

அன்று சித்தனுக்குப் பகல் வேலை. வேலை முடிந்து பிற்பகல் வீட்டிற்கு வந்த பின்பு அவன் சரீரம் மட்டும் அங்கே ஜடமாகக் கிடந்தது. அவன் நினைவுகள் அமுதினியைச் சுற்றிச் சுற்றி ஆவியாக ஓயாது அலைந்தது. நின்றால் கொல்லும்... இருந்தால் கொல்லும்... படுத்தால் கொல்லும் என்று அவன் கேள்விப்பட்டதை இன்று ஒவ்வொரு கணமும் அனுபவித்தான். ஊமையாகக் கொல்லும் வேதனைகளை அனுபவிப்பதிலும் அவளோடு தொடர்புகொண்டு கதைத்தாலாவது நிம்மதியாக இருக்கும் என்று அவனுக்குத் தோன்றியது.

அவள் எண் அவன் கையிலிருந்தது. இருந்தும் கையைக் கட்டிப்போட்டது போன்ற தயக்கம். தயங்கிக்கொண்டு இருந்தால் தனது ஏக்கம் தணியாது என்கின்ற உண்மை உந்தித் தள்ளியது. எழுந்து நில் என்றது. அவளின் எண் மாத்திரமே அவனிடம் இருந்தது. அதைவிட அவளிடம் இருந்து முகப்புத்தக அடையாளம் போன்ற திறன்பேசித் தொடர்பு அடையாளங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் எண்ணினான். அவற்றைப் பெறவேண்டும் என்றால் அவளை நிச்சயம் தொடர்புகொண்டு கதைக்க வேண்டும் என்று விளங்கியது.

இருந்தும் தயக்கம். என்றும் அவனை விட்டுப்பிரியாது இரத்தம் குடிக்கும் அட்டையாக ஒட்டிக்கொண்டிருக்கும் தயக்கம். இழுத்து எறிந்து உதறித்தள்ளிவிட்டுப் போக வேண்டும் என்று தோன்றினாலும் பிரித்தெடுக்க முடியாது ஒட்டிக் கொண்டதான அவஸ்தை.

திறன்பேசியில் தொடர்புகொள்ள வேண்டும் என்று நினைத்தாலே அவனுக்குள் ஒருவித நடுக்கம் வந்து புகுந்து விடுகிறது. கை குளிராய் வியர்க்கிறது. அவனே மருத்துவம் படிக்கிறான். பின்பு யாரிடம் போய் இதற்கு விடை கேட்பது என்று தெரியவில்லை.

இது ஆரம்பத்திலிருக்கும் ஒரு வியாதி. பழக்கம் ஏற்பட்டால் நிச்சயம் மறைந்து விடும் என்பது அவனுக்குத் தெரியும். அது எப்போது மறையும் என்பது மட்டுமே அவனுக்குத் தெரியவில்லை.

அதற்கு அவளோடு கதைக்க வேண்டும். அதுவே இந்த நோய்க்கு மருந்து என்பது விளங்கியது.

இப்போது என்ன செய்வது என்று ஒரு கணம் தடுமாறியவன் துணிவுடன் தனது திறன்பேசியை எடுத்தான். அவளது எண்ணைத் தேடி எடுத்து தொடர்பை ஏற்படுத்தினான். மறுமுனை உயிர் பெற்று, 'ஹலோ' என்றது.

'நான் சித்தன்' என்றான். உடல் தொடர்ந்து நடுங்கியது. 'நல்லவேளை அவள் நேரே இல்லை' என்கின்ற ஆறுதல்.

'இது ஒண்டும் அனலோக் ரெலிபோன் இல்லை. உங்கடை பெயரைப் பார்த்திட்டுத்தான் நான் கதைக்கிறன். நீங்கள் விஷயத்தைச் சொல்லுங்க...' அவள் அவனைச் சிந்திக்கவிடாது தொடர்ந்தாள்.

'நீங்கள் புதிய தொழில்நுட்பம் பற்றி எல்லாம் அறிஞ்சுதான் வைச்சிருக்கிறியள். நான்தான் கொஞ்சம் முட்டாள்தனமாய் கேட்டிட்டன். உங்களோடை கதைக்கோணும் போல இருந்திச்சுது... அதுதான் எடுத்தன். நான் அப்பிடி எடுக்கலாம்தானே? அதால ஒண்டும் உங்களுக்குப் பிரச்சினை இல்லையே?' என்றான் சித்தன்.

'பிரச்சினை எல்லாம் இல்லை. பிரச்சினையை உண்டு பண்ணவும் இங்க யாரும் இல்லை. நீங்கள் பிரச்சினை தாற மாதிரி போன் பண்ண மாட்டியள் எண்டும் எனக்குத் தெரியும். என்ன கதைக்க வேணுமோ அதைச் சொல்லுங்கோ'

'எவ்வளவோ கதைக்க வேணும். ஆனால் அதை எப்பிடிக் கதைக்கிறது எண்டுதான் தெரிய இல்லை. அதைவிட உங்களை நேர சந்திச்சுக் கதைக்க வேணும் எண்டும் ஆசையா இருக்குது'

'என்ன நல்ல மூட்டில இருக்கிறியளா டொக்ரர் சித்தன்? ஏதோ எல்லாம் கதைக்கிறியள்'

'நான் ஏதோ எல்லாம் கதைக்கேல்ல... எங்களைப் பற்றித்தான் கதைக்கிறன்' என்றான் சித்தன்.

'ம்... கண்டதும் காதல்... ஏற்கனவே அண்டைக்குக் கதைச்சமாதிரி...'

'அது ஒண்டும் மாதிரி இல்ல... நிஜத்தைத்தான் கதைச்சன். என்னுடைய நிஜம் உங்களுக்கு மாதிரியாகத் தெரியுதா?

ம்... உலகத்தில பலரது நிஜம் சிலருக்கு மாதிரியாகத்தான் இருக்கும். அதாலதான் உலகத்தில பல அநியாயங்களைச் சிலர் நியாயமாக ஏற்றுக் கொள்கிறார்கள்

இல்லையா? அவர்கள் தாங்கள் நினைப்பதை உண்மை என்று எண்ணிப் போராடவும் செய்கிறார்கள்' என்றான் சித்தன்.

'அப்படி எல்லாம் நான் சர்வாதிகாரியல்ல... உங்கள் எண்ணம் எனக்குத் தெரியாமலில்லை. நீங்கள் சொன்னது போல இந்த உலகில் சிலரது நிஜம் பலருக்கு மாதிரியாக இருக்கும் எண்டதும் தெரியும். அதைவிட இந்த உலகமே மனிதரை மனிதர் சுரண்டி வாழ்வதில்தான் இயங்குகிறது என்பதும் எனக்கு விளங்கும். அதுவே ஆதியில் தொடங்கி இன்றுவரையில் நிலைத்தும் நிற்கிறது. இடையில் வந்தவை இடையில் போவதே இந்த உலகின் வரலாறு. அதை விளங்கிக் கொள்ள முடியாத அளவிற்கு நான் ஒன்றும் தத்துவக் குருடியும் இல்லை. உங்கள் நிஜமும் எனக்கு விளங்கும். அதற்காக உங்கள் நிஜம் எனது நிஜமாக இருக்க வேண்டிய அவசியமும் இல்லை' என்றாள் அமுதினி.

'உலக நியாய அநியாயங்கள் முக்கியமே. அதைவிட எனது மனதை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பது எனக்கு மிகவும் முக்கியம். நீங்கள் அதைக் கண்டும் காணாமல் வெட்டி ஓடுவது போன்ற எண்ணம் என்னிடம் இருக்கிறது. எனது மனம், அதன் துடிப்பு, என்னுள் இருக்கும் உணர்ச்சிக் கொந்தளிப்பு, எனது தத்தளிப்பு, எனது அவஸ்தை, பித்தேறிய மனிதனாய் நான் அனுபவிக்கும் வேதனை உங்களுக்கு விளங்குகிறதா? காதல் என்பது வலிமையான, வீறுகொண்ட, கட்டுப்படுத்த முடியாத உணர்ச்சியாக இருக்கும் உண்மையை உணர உங்களைக் காதல் பீடித்தால் மட்டுமே அது சாத்தியமாகும். அது உங்களைப் பீடிக்காதவரை மற்றவர் கூறுவது நகைப்புக்குரிய பிதற்றலாகத் தோன்றும். நான் இப்போது கதைப்பது உங்களுக்குப் பிதற்றலாகத் தெரிகிறது இல்லையா?" என்றான் சித்தன்.

'நீங்கள் கதைப்பதை நான் ஒருபோதும் பிதற்றல் என்று எண்ணவில்லை. நீங்கள் எப்படி உணருகிறீர்கள் என்பதை உங்களைத் தவிர மற்றவர்களால் உணர முடியாது என்பதும் எனக்குத் தெரியும். உங்கள் நிலையிலிருந்து நான் இதை எண்ணிப் பார்க்க முயல்கிறேன். அதே வேளை உங்களைப் போலவே நானும் உணர வேண்டும் அல்லது காதல் வசப்பட வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கக் கூடாது. நீங்கள் எதிர்பார்க்கமாட்டீர்கள் என்று எண்ணுகிறேன்.

ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு விதமாகவே சிந்திப்பான் என்பதும், அதில் நீங்கள் வேறு நான் வேறாகச் சிந்திப்போம் என்பதும், அதைவிட ஆண் ஒருவிதமாகச் சிந்திப்பதோடு பெண் வேறு ஒரு விதமாகச் சிந்திப்பாள் என்பதையும் நீங்கள்

ஏற்கனவே அறிந்திருப்பீர்கள். உங்கள் உணர்ச்சியை நான் மதிக்கும் அதே வேளை எனது சுதந்திரமும் பறிபோகக் கூடாது அல்லவா?'

'நீங்கள் சொல்வது சரியே. நான் உங்களைக் கட்டாயப்படுத்தக் கூடாது. கட்டாயப்படுத்தவும் முடியாது. அப்படி நீங்கள் உணர்ந்தால் அதற்காக என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். அது எனது எண்ணமும் இல்லை. இது இயற்கையாக ஒருவர் மேல் ஒருவருக்கு வரவேண்டிய உணர்ச்சி. உமக்கு என்னைப் பார்க்க அந்த உணர்ச்சி தோன்றவில்லை என்றால் இதற்கு மேல் நான் அதைப்பற்றி உங்களோடு கதைக்கக் கூடாது. அப்படிக் கதைத்தால் அதுவும் ஒருவித கட்டாயப்படுத்தலாக அமைந்துவிடும் இல்லையா?'

தன்மீது காதல் இல்லை என்று சித்தன் எண்ணி விடுவானோ என்கின்ற பயம் அமுதினிக்கு வந்தது. அவள் நிலைமையைச் சாந்தப்படுத்த வேண்டும் என்று எண்ணினாள். அவன் முழு நம்பிக்கையையும் இழந்துவிட்டால் அதனால் பாதிக்கப்படுவது அவன் மட்டுமல்ல என்பது அவளுக்கு விளங்கியது. தனது முக்காட்டிற்கும் எல்லை உண்டு என்பது அவளிற்கு ஞாபகம் வந்தது. அவள் அவனைச் சாந்தப்படுத்தும் விதமாக, 'நீங்கள் மழை போல உங்கள் உணர்ச்சியைக் கொட்டி என்னைத் திக்குமுக்காட வைத்தீர்கள். அதற்காகவே நான் அப்படிச் சொன்னேன்'

'எனக்கு விளங்கவில்லை. நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?'

'உங்கள்மீது எனக்கு எந்த எண்ணமும் இல்லை என்று நீங்கள் எண்ணத் தேவையில்லை. அது காலப் போக்கில் மெதுவாக வரும். பிஞ்சைப் பழுக்க வைப்பது போல அவதிப்படக்கூடாது என்று நினைக்கிறேன்'

'விளங்குகிறது. நான் என் உணர்ச்சிகளுக்குக் கடிவாளம் போட வேண்டும் என்று நாசுக்காகச் சொல்லுகிறீர்கள். அதுவும் சரியே. எனது உணர்ச்சிக் கொந்தளிப்பை உங்கள் மீது கவுட்டுக் கொட்டுவதற்கு எனக்கு இப்போது என்ன உரிமை இருக்கிறது?
அது நாகரிகமும் கிடையாது. என் தவறு விளங்குகிறது. கள் அடித்தவன் பாட்டுப் பாடியபடி கண்டவர்களின் படலைகளையும் தட்டுவது போலத்தான் என் நடத்தை இருந்திருக்கிறது'

'அப்படி என்று சொல்ல முடியாது... கள்ளடித்தவன் ஒரு படலையைக் கண்டபடி தட்டியது போல என்று சொல்லலாம்'

'ஓ சொறி… தயவு செய்து என்னோடு கதையுங்கள். இல்லாவிட்டால் காதல் பைத்தியம் உண்மையான பைத்தியம் ஆகிவிடுவேனோ என்று பயமாக இருக்கிறது'

'பயப்படாதீர்கள். அபயம் அளித்தேன். நான் உங்களோடு நேரம் இருக்கும்பொழுது நிச்சயம் கதைப்பேன். அது சரி உங்களுக்கு இப்போது காதல் மயக்கத்தில் இனிப்பது எல்லாம் தொடர்ந்தும் வாழ்க்கையில் இனிக்குமா? மாதங்கள் செல்லச் செல்ல மதுப் புளிப்பதைவிட வேகமாகக் காதல் புளித்து விடுமாமே?'

'என்ன சொல்கிறாய் அமுதினி?'

'உண்மையைத்தான் சொல்கிறேன். இந்தக் காதல் மயக்கம் இருக்கிறதே அது வாழ்நாள் முழுவதும் தொடர்வது கிடையாது. பொதுவாக அது ஆணும் பெண்ணும் சேர்ந்த மூன்று மாதத்தில் தணியத் தொடங்கிவிடும். அது கலியாணமாக இருக்கலாம் அல்லது கலியாணம் கட்டாது சேர்ந்து வாழ்வதாக இருக்கலாம். அதன் பின்னான வாழ்வுதான் நிஜமான வாழ்வு. காதல் போதை தணிந்த பின்பு இதுவரை பதுங்கி இருந்த மாற்றமுடியாத சுய குணங்கள் வெளியே வரும். அந்தக் குணம் காதலித்தவரின் குணத்துடன் விட்டுக் கொடுத்து ஒத்துப் போனால் வாழ்க்கை ஒருவாறு நிலை குலையாது ஓடும். அப்படி இல்லாவிட்டால் அங்கேயே மனிதனுக்கு நரகத்திற்கான கதவுகள் திறந்துவிடும். அதைவிட ஆணும் பெண்ணும் வித்தியாசமான குணம் படைத்தவர்கள். வித்தியாசமான குணம் படைத்தவர்கள் என்பதைவிட எதிர் எதிரான குணம் படைத்தவர்கள் என்பதே உண்மை. அவர்களைச் சேர்த்து வைத்து வாழ் என்கின்ற சமுதாயப் பொன் விலங்கே கலியாணம். ஆணுக்கும் பெண்ணுக்குமான மூளையின் வெள்ளை சாம்பல் பகுதிகளின் வளர்ச்சி இடது வலது பக்க மூளையின் செயற்பாடுகள் உட்படப் பல வித்தியாசங்கள் உண்டு. ஆணும் பெண்ணும் தங்களுக்குள் முழுமையாக ஒத்து இயங்குபவர்கள் அல்ல… புறநடைகள் இல்லை என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால் பொதுவாக அப்படி இருப்பதில்லை.

அதனால் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வது என்றால் அவர்கள் தங்களை அறிந்து கொள்ளத் தாராளமான நேரம் வேண்டும். இவர்களைப் போல ஆறுதலாக மெல்ல மெல்ல உறவை விருத்தி செய்ய வேண்டும். அப்படி நேரமெடுத்துச் சேர்பவர்களே பிரிந்து போவது உண்டு. அதற்குக் காரணம் இணைந்த பின்பே உண்மையான குணங்கள் வெளியே வரும் நிதர்சனம். அதுவும் காதல் போதை காலால் இறங்க உண்மையான பூதம் உள்ளிருந்து வெளியே பிய்த்துக் கொண்டு வரும். அதன் பின்பு பூதத்திற்கும் பிசாசிற்குமான நீண்டகால யுத்தம் தொடங்கும்.

நான் தேடிப் படித்ததில் அறிந்த சில உண்மைகள் இவை. இவற்றில் சில பிழைகள் இருக்கலாம். எல்லாம் பிழையாக இருக்காது'

'நீங்கள் நல்லாய் ஆராய்ச்சி செய்து இருக்கிறீர்கள். ஆனால் காதலோடு வாழ்நாள் முழுவதும் வாழும் தம்பதிகளும் உண்டு என்பதை மறுப்பீர்களா? அல்லது கலியாணம் செய்த பின்பு காதலித்து வாழ்நாள் முழுவதும் பிரியாது இருக்கும் தம்பதிகளும் இல்லை என்று சொல்கிறீர்களா? பெண்கள் இதயத்தைப் பாவிப்பார்கள், ஆண்கள் மூளையைப் பாவிப்பார்கள் என்பார்கள். நீங்கள் மூளையைக் கடுமையாகப் பாவிக்கிறீங்கள்'

'அப்படி என்றால் நீங்கள் இதயத்தை மட்டும் பாவிக்கிறீர்களா? நீங்கள் ஒரு நளாயினியை, கண்ணகியை அல்லது சாவித்திரியைப் பார்த்துக் கலியாணம் செய்ய வேண்டும். நிஜத்தில் நீங்கள் அப்படியான பெண்ணைக் காணமுடியாது. மனிதக் கற்பனையில் உதித்த கதாபாத்திரங்கள் எல்லாம் நிஜவாழ்வில் இரத்தமும் சதையும் உணர்ச்சியும் கொண்ட பெண்ணாகச் சுயநலம் விடுத்து, கணவனை நாதா என்பதற்கு இது ஒன்றும் சரித்திர நாடகம் இல்லை. இது டார்வின் தத்துவத்துக்கு ஏற்ப வல்லவர்கள் வாழும் பூமி. இங்கே சுயநலம் முதலாவது. சுற்றத்தின் நலன் இரண்டாவது. கணவன் என்கின்ற ஆண்துணை பெண்ணிற்கு இயற்கையின் கட்டளையை நிறைவேற்றி சந்ததி பெருக்க, அதைக் காப்பாற்றத் தேவையானவன். அதற்காக அந்த ஆண்துணையே அவளாக முடியாது. ஆணிற்கும் அப்படியே. அவர்கள் இணைவது இயற்கை இட்ட கட்டளை. அதை மீறும் சக்தியற்ற உயிரினங்கள். அதை மனிதன் அழகாகக் காதல் என்கிறான். இது மனித இனம் தோன்றிய போதே இருந்திருக்கும். ஏன் என்றால் இது மனிதன் உருவாக்கிய ஒன்று அல்ல... மாறாக இயற்கையின் வடிவமைப்பு. நவீன உலகத்தில் மனிதன் அதற்கு அழகான விளக்கங்கள், வியாக்கியானங்கள், அவன் வித்தக விளையாட்டுக்கள்...
இதை அறிந்தும் நீங்களும் சாதாரண மனிதர்கள் போல எண்ணுகிறீர்கள் என்பதே என்னுடைய வருத்தம்'

'நீங்கள் அறிவார்த்தமாக கதைப்பதாக நினைக்கலாம். நீங்கள் சொல்வது போலக் காதல் என்பது இயற்கையின் மாயவித்தையாக இருக்கலாம். அதன் வசப்பட்டவனால் அந்த வேறுபாடுகளை உணர முடியாது என்பது உங்களுக்கு விளங்க வேண்டும். அப்படி உணர்ந்திருந்தால் எத்தனை மனிதர்கள் இந்த உலகில் சேர்ந்து வாழ்ந்திருப்பார்களோ தெரியாது. அவர்களால் இந்த உலகம் எவ்வாறு விருத்தி கண்டு இருக்கும் என்றும் தெரியாது. மற்றைய விலங்குகளைவிட மனிதனுக்கு இந்த உணர்வை அதிகமாக நீண்ட காலத்திற்கு இயற்கை கொடுத்து இருக்கிறது. அது அவனுக்கு அப்படியே தேவைப்படுவதாகவும் இருக்கிறது. இதை

வெல்ல வேண்டும் என்று வாழ்வைத் துறந்து ஓடுபவர்கள் பலர். இருந்தும் அவர்களில் பலர் அதே வாழ்விற்குத் திரும்பி வந்து விடுகிறார்கள். நான் அதைக் காதலின் சக்தி என்று எண்ணுகிறேன். நீங்கள் வேண்டும் என்றால் அதை இயற்கையின் சக்தி என்று எண்ணலாம். காதலோ இயற்கையோ அதை நாங்கள் வெல்ல முடியாது என்பதே உண்மை' என்றான் சித்தன்.

'ஏதோ ஒன்று இருக்கிறது என்பது உண்மையாக இருக்கலாம் சித்தன். ஆனால் அதுவே வாழ்க்கையாகிவிடுமா? வாழ்வின் ஒரு சிறு பகுதியான விடயத்திற்குச் சிலர் அளவுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுப்பதால் அதுவே எல்லோரது வாழ்க்கையிலும் மகத்துவமானதும் முக்கியத்துவமானதுமாக அவர்களது முழுநேரத்தையும் ஆக்கிரமிக்குமா?' என்று கேட்டாள் அமுதினி.

'அப்படி என்றால் எனது எண்ணமும் உணர்ச்சியுமே பிழையானது, உங்களுக்கு இதனால் எந்தவித சங்கடமும் பாதிப்பும் இல்லை என்கிறீர்களா?' என்று கேட்டான் சித்தன்.

'மனிதர்கள் எல்லோருக்கும் உணர்ச்சி இருக்கத்தான் செய்யும். ஆனால் அதற்குக் கொடுக்க வேண்டிய இடத்தை மட்டும் கொடுத்தால் சரி என்று எண்ணுகிறேன்' என்றாள் அமுதினி.

'அப்படி என்றால் நான் அளவுக்கு அதிகமாக அதற்கு இடம் கொடுக்கிறேனா?' என்று கேட்டான் சித்தன்.

'தெரியவில்லை. உங்களைப்பற்றிய சுயவிமர்சனத்தை நீங்கள்தான் செய்து கொள்ள வேண்டும்' என்றாள் அமுதினி

'அது சரி... என்னைப்பற்றி நான் நிறையச் சிந்திக்க வேண்டி இருக்கிறது. உங்களோடும் நிறையக் கதைக்க வேண்டி இருக்கிறது. உங்கள் மொபையில் நம்பரை மாத்திரம்தான் சுட முடிந்தது. முகப்புத்தக அடையாளத்தையோ வேறு சமூகவலைத்தள அடையாளங்களையோ தரவில்லையே?' என்று கேட்டான் சித்தன்.

'ஏன் உங்களுக்கு இந்த அவசரம்?'

'அவசரம் இல்லை, அக்கறை அமுதினி. அதைச் சொல்வதில் உங்களுக்கு ஏதாவது சங்கடமா?'

'அப்படி என்று இல்லை. அதில் எந்த இரகசியமும் என்னிடம் இல்லை' என்றாள் அமுதினி.

'அப்ப சொல்லுங்க...'

அவள் தனது முகப்புத்தக அடையாளத்தைக் கூறினாள். சித்தன் அதைப் பதிந்துவிட்டு அவளுக்கு அழைப்பு விடுத்தான். அவள் உடனேயே அதை ஏற்றுக் கொண்டாள். அதில் அவளது பல படங்கள் இருப்பதைச் சித்தன் அவதானித்தான். தற்போது அதைத் தொடர்ந்து பார்ப்பதற்கு நேரம் இல்லாதவனாய்,

'உங்களோடு நிறையக் கதைக்க வேணும். அதுவும் நேரில சந்திச்சுக் கதைக்க வேணும் எண்டு ஆசை இருக்குது. ஆனால் கொரோனாவால அப்பிடிச் சந்திக்க முடியாமல் போச்சுது. உங்களுக்குப் பிரச்சினை இல்லை. நீங்கள் பொது விதிக்கு எதிரான பொறுமைசாலி. ஆழமாக யோசிக்கிறியள்'

'பொது விதி இருக்கலாம். உங்களுக்குத் தெரியாததே சித்தன்? ஒவ்வொரு மனிதரும் தனித்துவமானவர்கள். நான் ஒரு விதமான தனித்துவம். நீங்க ஒரு விதமான தனித்துவம். எனக்குப் பொதுவாகவே அவசரப்படுகிறது பிடிக்காது. அதனால் நீங்கள் என்னைத் தப்பாக நினைக்கிறியளோ தெரியாது'

'இந்த உலகம் அவசரமயமானது இல்லையா அமுதினி? நாளை எப்பிடி மலரும் என்று தெரியாத உலகம் இல்லையா அமுதினி? நாங்கள் ஆற அமர யோசித்து வரும் என்கின்ற நாளை வராது போய்விட்டால் என்ன செய்ய முடியும் அமுதினி?"

'நாளை இந்த உலகு இருக்குமா அல்லது கண்ணுக்குத் தெரியாத கருந்துளைக்குள் அடைக்கலமாகுமா? அல்லது மனிதர்கள்மேல் கோபம் கொண்டு வெடித்துச் சிதறுமா? விண்கல் பாதை மாறி வந்து மோதுமா? என இன்றும் மனித சக்திக்கு அப்பாற்பட்ட காரணங்களால் நாளை இந்த உலகு அழிந்து போகலாம் சித்தன். இந்த மனித வாழ்க்கை என்பது தொடர்ச்சியான சம்பவங்கள் நிறைந்தவை. இதில் என்ன சம்பவம் அடுத்ததாக வரும் என்பது யாருக்கும் தெரியாது. அடுத்த சம்பவம் துரதிர்ஷ்டவசமான விபத்தாகவும் இருக்கலாம் அல்லது வாழ்வின் அதிர்ஷ்டத்தையும் சந்தோஷத்தையும் அள்ளித்தரும் அற்புதக் கணங்களாகவும் இருக்கலாம். அதற்குப் பயந்துகொண்டு உலகத்தில் வாழாமல் யாரும் இருப்பதில்லை. இருந்துவிடவும் முடியாது. நடப்பது நடக்கும். அதைப்பற்றியெல்லாம் கவலைப்பட்டுக்கொண்டு இருக்க முடியுமா?"

'ம்... நீங்கள் சொல்வது சரியான விளக்கம்தான். என்றாலும் கைவசப்பட்ட ஒரு நாளைக் கைவிட்டு இனி வரும் என்கின்ற நம்பிக்கையில் ஒரு நாளுக்காகக் காத்திருப்பது எவ்வளவு புத்திசாலித்தனம் என்று நினைக்கிறீர்கள்? என்னைப்

பொறுத்தவரை ஒவ்வொரு கணமும் அனுபவிக்க வேண்டிய கணங்கள்' என்றான் சித்தன்.

'ஒவ்வொரு கணமும் அனுபவிக்கப்பட வேண்டிய கணங்கள் என்கின்ற அவசரம் உங்களுக்கு. நிச்சயமாக அந்தநாள் உங்களுக்குக் கிடைக்கும். கொஞ்சம் பொறுமை. அதுதான் உங்களுக்கு இப்போது தேவையானது' என்றாள் அமுதினி.

'அது இப்போதும் எப்போதும் உங்கள் கையில்தான் இருக்கிறது'

'அப்பிடியா...? நிச்சயம் அது உங்களுக்கு விரைவா கிடைக்கலாம்' என்றாள் அமுதினி.

'ஏன் இந்தக் கடும் தண்டனை எனக்கு?'

'அதுதானே சொன்னேன்... இது எல்லாம் மெல்லக் கனிய வேண்டிய விஷயம் என்று. அதுவும் இது மனது. அது மெல்லக் கனியக் காத்திருக்கத்தான் வேண்டும். காத்திருப்பீங்களா?' என்று கேட்டாள் அமுதினி.

'நிச்சயம் காத்திருப்பேன். காதலின் மூர்க்கத்தை நீங்கள் உணரமாட்டீர்கள். அதைச் சமாளிப்பதற்கு நீங்கள் அவசியம் எனக்கு வேண்டும்' என்றாள் சித்தன்.

'அப்படி என்றால் இது காதல் என்ற உணர்ச்சியுடனான சுயநலம் மட்டும்தானா? உங்கள் பிரச்சினையை தீர்த்துக்கொள்வதற்கு மட்டும்தான் நான் தேவையா?' என்று கேட்டாள் அமுதினி.

'இது நியாயமற்ற குற்றச்சாட்டு... உங்களுக்கு என்மேல் துளியளவும் காதல் இல்லையா?' என்று கேட்டான் சித்தன்.

'ம்... நீங்கள் என்னை மடக்குகிறீர்களா? இல்லை என்று சொன்னால் என்ன செய்வீர்கள்?' என்று கேட்டாள் அமுதினி.

'சொன்னால் என்ன செய்ய முடியும்? ஆனால் நீங்கள் சொல்ல மாட்டீர்கள் என்கின்ற நம்பிக்கை என்னிடம் இருக்கிறது' என்றான் சித்தன்.

'உங்கள் நம்பிக்கை எனக்கு வியப்பையும் பெருமையையும் தருகிறது. அது பிழைக்கக் கூடாது என்று பிரார்த்திக்கிறேன்' என்றாள் அமுதினி.

'நான் ஹொஸ்பிற்றலுக்குப் போக வேண்டும். நாளைக்கு உங்களுக்கு போன் பண்ணட்டுமா?' என்று கேட்டான் சித்தன்.

'சரி... ஓகே... சந்திப்பம்' என்றாள் அமுதினி.

'காத'

'காத'

திறன்பேசியைத் துண்டித்துக்கொண்ட பின்பு அமுதினிக்கு யோசனையாக இருந்தது. 'சித்தன் மேல் விருப்பு இருக்கிறது. அவனுக்கு என்மேல் இமாலயக் காதல் இருக்கிறது. இதைக் காதல் என்று சொல்லலாமா?' என்பது அவளுக்கு விளங்கவில்லை. 'இது எதனால் வந்த காதல்? உடல் கவர்ச்சியால் வந்ததா? சட்டென நடந்துவிட்ட உள இணைப்பினால் உண்டானதா? கண்டதும் காதல் என்பது எங்கள் விஷயத்தில் உண்மையானதா? காதல் என்பதே உயிரினங்களின் விருத்திக்கான திறவுகோல் இல்லையா? ஒரு கரு வயிற்றில் உருவான பின்பும் இந்தக் காதல் என்கின்ற உணர்ச்சி நிலைத்து நிற்குமா? அல்லது அது பாசமாய் அன்பாய் மாறுமா? இயற்கையின் தேவையான இனப்பெருக்கம், அதற்கு சமூகத்தால் உருவாக்கி ஒழுங்கு செய்யப்பட்ட ஒருவித கட்டமைப்பு,
மனிதர்களின் ஒன்றுகூடிவாழும் அடங்காத அவா, இனவிருத்திக்கான இணை தேடல், அதன் உச்சமான கலவி என்னும் சங்கமம் என்பன முன்னும் பின்னுமாக நடந்தேறுவதற்குக் காதல் என்கின்ற உணர்ச்சி முக்கியமாக இருக்கிறதா? இருந்தும் பணி முடிந்த பின்பு இது நிலைக்குமா? அல்லது பின்பு மெதுவாகக் கலைந்து போய்விடுமா? தேவையில்லாத மனவுளைச்சல்களை நான் இதன் மூலம் தேடிக் கொள்கிறேனா?' அமுதினிக்கு குழப்பமாக இருந்தது.
இருந்தும் தனக்கும் அவன்மேல் ஒருவித ஈர்ப்பு அல்லது காதல் இருப்பதை அதிக காலத்துக்கு மறைக்க முடியாது என்று அவளுக்குத் தோன்றியது.

அடுத்த நாள் மாலை எட்டுமணி போலத் திறன்பேசி மீண்டும் அவளை அழைத்தது. எடுத்தபோது அது சித்தன் என்பதை அவளால் வாசிக்க முடிந்தது. அதைப் பார்த்தபோதே சித்தன் விட்டதைத் தொடர்வதற்கே அழைக்கிறான் என்பது விளங்கியது. அவன் தான் காதலிக்கவில்லையோ என்கின்ற சந்தேகத்தில் இருக்கிறான் என்பது அவளுக்குத் தெரியும். அதேவேளைத் தானும் அவனைக் காதலிக்கிறேன் என்கின்ற உண்மையை நீண்ட காலத்திற்கு மறைக்க முடியாது என்பதையும் அவள் உணர்ந்தாள். எது எப்படி இருந்தாலும் ஒத்துக்கொள்வதை இயன்ற மட்டும் இழுக்க வேண்டும் என்று தோன்றியது. அமுதினி திறன்பேசியில் தொடர்பை ஏற்படுத்தி, 'சொல்லுங்க சித்தன்' என்றாள்.

'உங்களோடை கதைக்காமல் இருக்க முடியேல்லையே அமுதினி... அதுதான்... காதலுக்கு இவ்வளவு வலிமை இருக்குமா? அது மனிதனைப் பயித்தியமாக்கி வேற

ஒரு எல்லைக்கு இழுத்துச் செல்லுமா? எனக்கு அப்பிடிதான் இருக்குது. எனது கட்டுப்பாடு இப்பொழுது என்னிடம் இல்லை. உணர்ச்சியின் வசத்தில் அது தன்பாட்டிற்கு அடித்துச் செல்லப்படுகிறது. மனதின் கட்டுப்பாடு இல்லாது உங்களைத் தொந்தரவு பண்ணுகிறேனோ என்று கவலையாக, பயமாக இருக்கிறது. உங்களைத் தொந்தரவு செய்யக்கூடாது என்று நினைத்தாலும் இறுதியில் தோற்றுப்போய் விடுகிறேன். என்னை மன்னித்துவிடு அமுதினி' என்றான் சித்தன்.

'உங்கடை நிலைமை விளங்குது. அதுக்காக நீங்கள் அவசரப்படக்கூடாது. மனதைக் கட்டுப்படுத்தி மாமுனிவர் ஆகமுடியுமா எண்டு பாருங்க' என்றுவிட்டு களுக் என்று சிரித்தாள் அமுதினி.

'என்ன சிரிக்கிறியள்? புலிக்குட்டியின் விளையாட்டுக்கு அகப்பட்ட கன்றுக்குட்டியா நான்? நீங்கள் எந்தக் கவலையும் இல்லாமலிருக்கிறதைப் பார்க்க எனக்குப் பொறாமையா இருக்குது' என்றான் சித்தன்.

'ஓ… ஓ… பொறுங்க… பொறுங்க… நான் என்ன உணர்ச்சியே இல்லாத ஜடம் எண்டா நினைக்கிறியள்? எனக்கும் உணர்ச்சிகள் அதனால உண்டான குழப்பங்கள் எல்லாம் இருக்குது. அதேவேளை அது என்னை ஏறிமிதிக்கிற அளவுக்கு என்னுடைய கட்டுப்பாட்டை நான் இழக்க விரும்பவில்லை. என்னுடைய கட்டப்பாடு என்னிட்ட இருக்க வேணும். அதை நான் ஒருநாளும் விட்டுக்கொடுக்கமாட்டன். அதைப்போலத்தான் நீங்களும் உங்கடை கட்டப்பாட்டை உங்கடை கையில வைச்சிருக்கோணும் எண்டு நினைக்கிறன். காதல் எண்டா என்ன பெரும் கவலை எண்டால் என்ன அது எங்களை மீறி ஆட்சி செய்யக்கூடாது' என்றாள் அமுதினி.

'நல்ல வக்கணையா இதுக்கெல்லாம் விளக்கம் சொல்லலாம் அமுதினி. ஆனால் நிஜத்தில அதை அனுபவிக்கிறபோதுதான் அதுகின்ர கொடூரம் விளங்கும்' என்றான் சித்தன்.

'ஆண்களுக்குக் கண்டதும் காதல் வரும் என்பதைக் கேள்விப்பட்டு இருக்கிறேன். புற அழகைப் பார்த்தால் நீங்கள் திருப்தி அடைந்து தெரிவும் செய்துவிடுவீர்கள். அதை உங்களிடம் இங்கேயும் பார்க்கிறேன். அது ஆண்களுக்குச் சாத்தியமாக இருக்கலாம். பெண்களுக்கு அப்படி இருக்க முடியாது. ஆணின் பணி ஒரு கட்டத்தில் முடிந்துவிடும். அதிலிருந்து ஒரு பிள்ளையை வளர்த்துப் பெரிய மனிதனாக்குவது மட்டும் அல்லாது அவனது வாழ்நாளின் பெரும்பகுதியில் பெண்ணின் பணி தாயாகத் தொடரும். அதைச் செய்வதுபற்றி அவள் காதல்

வசப்பட முதல் சிந்திக்க வேண்டி இருக்கும். நீங்கள் சொல்வது போல் நான் ஏன் சொல்ல முடியாது என்று இப்போதாவது சிறிது விளங்குகிறதா? நீங்கள் மருத்துவராகப் போகின்றவர். உங்களுக்கு இது விளங்கும். இருந்தும் காதல் போதை உங்கள் சிந்தனையைச் செயலிழக்க வைத்திருக்கிறது' என்றாள் அமுதினி.

'நீங்கள் சொல்வது நல்ல விளக்கம்தான். அதில் சில உண்மைகளும் இருக்கின்றன. என்னால் என் உணர்ச்சியை, காதல் போதையை, காதல் வெறியைக் கட்டுப்படுத்த முடியவில்லையே. நீங்கள் திரும்பத் திரும்பக் கூறும்போது எனக்கே தோல்வி அடைந்த மனிதனான எண்ணம் தோன்றுகிறது. இருந்தும் என்னால் மீளமுடியவில்லையே. நான் என்ன செய்யமுடியும்?' என்றான் சித்தன்.

'ம்... இந்தக் காதல் போதை சில ஹார்மோன்கள் மூளையில் சுரப்பதால் உண்டாகின்றது. அதன் தாக்கத்தை இல்லாமல் செய்வதற்கு குளிகை ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டும். பலருக்கு அதனால் விடிவு உண்டாகும். ஏற்கனவே மருந்துகள் இருக்கின்றன என்று நீங்கள் நினைக்கலாம். ஆனாலும் முழுமையான நிவாரணம் தருவது போல ஒன்றைச் செய்தார்கள் என்றால் நிச்சயம் உங்களைப் போன்ற ஆண்களுக்கு விடுதலை கிடைக்கும்' என்றாள் அமுதினி.

'நீங்கள் அப்ப காதலை நோய் எண்டுகிறதோடை என்னை நோயாளனாக்கீட்டியளா? அதோடை அதுக்கு வைத்தியம் செய்து குணப்படுத்தலாம் எண்டுறியளா? நீங்கள் புது ஆராய்ச்சி ஒன்றைத் தொடங்க வேண்டியதுதான்' என்றான் சித்தன்.

'சங்க இலக்கியத்திலேயே 'பசலை நோய்' என்று ஒரு நோயைப் பற்றி பேசப்பட்டிருக்கிறதாம். பசலை என்பது உணவு, உறக்கம் செல்லாது காதலனையே சிந்தித்துக் கொண்டிருப்பவர்களுக்கு ஏற்படும் நோய். காதல் பைத்தியம் என்று சொல்லலாம். அதனால் காதல் ஒரு நோய் என்றும் எடுத்துக் கொள்ளலாம். ஒருவகையில் நீங்கள் இப்போது நோய் வசப்பட்டிருக்கிறீர்கள்' என்றாள் அமுதினி.

'நினைச்சன்... இப்பிடிதான் கொண்டந்து முடிப்பியள் எண்டு'

'பிறகு என்ன... ஒருக்கால் சொன்னால் கேட்க வேணும். உங்களுக்குக் கஸ்ரமாக இருப்பது உண்மைதான். இருந்தாலும் அப்படி மற்றவர்களுக்கும் இருக்க வேண்டும் இல்லைத்தானே? நீங்கள் கதைப்பது கண்டதும் காதல் போல, குறுந்தொகையில் அதற்கு ஒரு உதாரணம் இருக்கிறது,

'யாயும் ஞாயும் யார் ஆகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?

செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே'

அதுதான் இது. இதில் வருவது போல 'சிவந்த நிலத்தில் விழுந்த நீர் போல அன்பு கொண்ட நம் இருவரின் நெஞ்சங்கள் ஒன்றோடு ஒன்று கலந்தனவே' என்று கதைவிடுவது போல இருக்கிறது.

நீங்கள் சங்க இலக்கியக் கற்பனையோடு கதை விடவில்லையே?' என்றாள் அமுதினி.

'இப்படி எல்லாம் கேட்கிறாயே அமுதினி. உம்மைப் போல நான் இணையத்திலிருந்து சங்க இலக்கியம் படிக்க நேரம் இருப்பதில்லை. ஒரு சில முறை பார்த்திருக்கிறேன். ஆனால் என் நிலையை எப்படி உங்களுக்கு விளங்கப்படுத்துவது என்று விளங்கவில்லை. ஆனால் சங்க இலக்கியத் தலைவன் போல ஏமாற்றிவிட்டுப் போய்விடுவேன் என்கின்ற கவலை உமக்குத் தேவையில்லை' என்றான் சித்தன்.

'அப்படியா? அதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது?' என்றாள் அமுதினி.

'அதுதானே நான் உங்களிடம் அடிமையாகிக் கிடக்கிறேனே... அடிமைக்கு ஏது ஏமாற்றும் உரிமை. சொல்லுங்கள் பார்ப்போம்' என்றான் சித்தன்.

'ம்... விட்டால் நீங்களும் நன்றாகக் கதைக்கிறீர்கள்' என்றாள் அமுதினி.

'அதற்கும் இந்தக் காதல்தான் காரணம் என்பதை நம்புவீர்களா? இல்லை என்றால் எனக்கு இந்தத் துணிவு இருந்திருக்காது' என்றான் சித்தன்.

'எதற்காக என்னைக் காதலிக்கிறீர்கள்? நான் வடிவாய் இருக்கிறேன் என்பதாலா. நான் வடிவாய் இல்லாவிட்டால் என்னைக் காதலித்து இருப்பீர்களா? பெண்ணைப் பார்த்துக் காதல் வருவது என்றாலே அழகு முக்கியம் இல்லையா? பிறகு புறத்தோற்றத்தால் வந்ததை, அகத்தை விளங்கி வந்தது என்று கதைவிடலாமா?' என்றாள் அமுதினி.

'நீங்கள் தாதிக்குப் படித்ததைவிடத் தத்துவம் படித்து இருக்கலாம். இப்படி மடக்கி மடக்கி கேள்வி கேட்கிறியள்?' என்றான் சித்தன்.

'கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுங்க... தப்பியோடப் பார்க்காதையுங்க... நான் ஒண்டும் தத்துவம் கதைக்கேல்ல... இது ஒரு சாதாரண கேள்வி' என்றாள் அமுதினி.

'சரி… சரி… உங்கள் கேள்விக்கு உண்மையில் எனக்குப் பதில் தெரியாது. உங்கள் மேல் காதல் வந்தது தெரியும். ஆனால் அது எப்படி வந்தது என்று எனக்குத் தெரியாது. விளங்கி வந்தால் அது காதலாகுமா என்றும் தெரியாது. உங்களைப் பார்த்த கணத்திலிருந்து உங்களை மீண்டும் மீண்டும் பார்க்க வேண்டும் போல இருந்தது.

அதிலிருந்து உங்களை நெருங்க வேண்டும் என்று மனது துடிக்கிறது. உங்களைப் பார்க்காது இருப்பது வேதனை தருகிறது. பார்த்த கணத்தில் அந்த வேதனை பறந்து போய்விடுகிறது. அந்தக் கணங்களை இழக்காமல் உங்களைப் பிரியாது இருக்க வேண்டும் என்று மனம் அழுகிறது. பிரிந்து போவது என்று நினைத்தாலே உயிரே பிரிவதான ரணம் பிரசவிக்கிறது. இதயம் நோக் காண்கிறது. கண்கள் எப்போதும் பனிக்கின்றன. இவையெல்லாம் உண்மை. அப்படி என்றால் காதல் உண்மைதானே? அழகைப் பார்த்து மட்டுமே இந்த உணர்வுகள், ஏக்கங்கள் உண்டாகுமா? அழகு ஒரு காரணமாய்க்கூட இருந்து இருக்கலாம். அது மாத்திரமே எனது தவிப்பிற்குக் காரணம் இல்லை. இது அதற்கும் மேல். காரணமோ, களங்கமோ இல்லாத அன்பு' என்றான் சித்தன்.

'அழகு காரணம் இல்லை என்றால் நீங்கள் எனக்கு முன்பு வேறு பெண்களையே காணவில்லையா? ஏன் என்னைக் கண்டபோது மட்டும் காதல் வந்தது? முன்பு கண்ட பெண்கள் மேல் ஏன் உங்களுக்குக் காதல் வரவில்லை?' என்று கேட்டாள் அமுதினி.

'ம்… உங்கள் கேள்வியிலேயே பதிலிருக்கிறது. நான் ஏற்கனவே பார்த்த பெண்களில் உங்களைப் போன்று அழகான பெண்களே இல்லை என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அப்படி ஒரு நினைப்பு இருக்கிறதா? அழகான பெண்களை ஒரு சில நொடி பார்க்கத் தோன்றும். பின்பு போன வேலையைப் பார்த்துக்கொண்டு எனது வழியில் போயிருப்பேன். அவர்களைப்பற்றி மீண்டும் எண்ணி எண்ணி ஏக்கம் கொண்டது கிடையாது. அவர்கள் முகங்கள் ஞாபகம் இருப்பதே இல்லை. காதல் முகத்தின் ஞாபகம் என்பது எல்லோர் மீதும் வருவதில்லை. வந்துவிட்டால் அவர்களை மறக்கவும் முடிவதில்லை. இப்போது விளங்குகிறதா? நீங்களும் மற்றைய பெண்களும் எனக்கு ஒன்று அல்ல என்பது. நீங்கள் தனித்துவமானவர். கண்ணைத் தாண்டி மனதுக்குள் இறங்கியவர். அங்கே சென்று நிலையாகச் சம்மணம் போட்டு அமர்ந்து விட்டவர். அங்கிருந்து என்னைக் காதல் பித்தாக்கி அலைய வைப்பவர்' என்றான் சித்தன்.

'நீங்கள் ஒரு போதையிலிருப்பது உங்கள் வசனத்தில் தெரிகிறது. நான் இப்படியான வசனங்களை முதன்முதல் ஒரு ஆணிடம் இருந்து இப்போதுதான் கேட்கிறேன். உங்கள் மனநிலையை விளங்கிக்கொள்ள முயற்சி செய்கிறேன்.

ஆண்களுக்குப் பெண்கள் மீதும், பெண்களுக்கு ஆண்கள் மீதும் வலுவான கவர்ச்சி ஒன்று ஏற்படும். அது இயற்கையால் நீண்டகாலமாகச் செப்பனிடப்பட்டு மெருகூட்டப்பட்ட வடிவமைப்பு. ஒவ்வொரு மனிதனும் எப்படித் தனித்துவமானவனோ அப்படியே அவனது உணர்ச்சிகளும் தனித்துவமானவை. நான் உணருவது போல நீங்கள் உணர முடியாது. நீங்கள் உணர்ச்சியில் கரைவது போல என்னால் கரைய முடியாது. அது அவரவர் மூளைக்குள் ஏற்றப்பட்டிருக்கும் இரசாயனமும் அதற்கு அவர்கள் எப்படி எதிர்வினையாற்றுகிறார்கள் என்பதையும் பொறுத்தது. காதல் ஒருவருக்கு உலகில் உள்ள ஒரே ஒரு மிகப்பெரிய தாண்டி வரமுடியாத உண்மையாக இருக்கலாம். மற்றவருக்கு அது எதுவும் இல்லாத ஒன்றாய் இருக்கலாம். ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வதற்கு உண்மையான அன்பும் விட்டுக்கொடுப்பும் போதும் என்பது எனது எண்ணம். அது வாய்த்தால் நிரந்தரமாக இருக்கும். காதல் என்பது என்னைப் பொறுத்தவரை உணர்ச்சிப் போதை. போதை என்பது நேரத்தோடு தணிந்து போக வேண்டியது இல்லையா? அதனால் காதலும் கழிந்து போகும் என்று எண்ணுகிறேன்' என்றாள் அமுதினி.

'உங்கள் கருத்துக்களும் தத்துவமும் புதுமையாக, புரட்சியாக இருக்கின்றன. ஆணும் பெண்ணும் எதிர் எதிர் துருவங்கள் என்பதற்கு நானும் நீங்களும் கூட நல்ல உதாரணமாக இருக்கலாம். இருந்தும் அந்த இரண்டு துருவங்களையும் ஏதோ ஒன்று கட்டிக் குடும்பமாக வாழ வைக்கிறது. அதற்குக் காதல் என்றால் என்ன? அன்பு என்றால் என்ன? எதுவாய் இருந்தாலும் இரு துருவங்கள் இணைந்து ஒரு குடும்பம் உருவாக வேண்டியதே முக்கியம். இல்லையா?' என்றான் சித்தன்.

'இது என்ன சமாதானமா? சரணடைவா?' என்று கேட்டுச் சிரித்தாள் அமுதினி.

'அவை இரண்டும் இல்லை. நீங்கள் சொல்வது போல இயற்கையின் உண்மை' என்றான் சித்தன்.

'அது சரி உங்கடை வேலை எப்பிடிப் போகுது?' என்று கேட்டாள் அமுதினி.

'உங்களுடைய வேலை போலவே என்னுடைய வேலையும். மனிதர்களோடு சேர்ந்து இருக்கக்கூடாது என்பதே இந்த வருத்தத்திற்கான மருந்து. அதற்கு எதிராக மனிதர்களோடு நெருங்கி இருக்க வேண்டியது எங்கள் தொழில். தூரத்தில் எட்டி நின்று அவர்கள் நாடி பிடித்துப் பார்க்க முடியாது. வீரம் பேசலாம். என்றாலும் இந்த

வைரஸ் எப்படிப் பரவுகிறது என்கின்ற உண்மை முழுமையாக வெளியாகும் வரைக்கும் இது ஒருவித திகிலான அனுபவமாகவே தொடரும். *Airborne transmission* எல்லோரையும் பயமுறுத்துகிறது. அதேவேளை எவ்வளவு நேரம் நாங்கள் பாதிப்புக்கு உள்ளாகிறோம், எவ்வளவு கனதியான பாதிப்பிற்கு உள்ளாகிறோம் என்பனவும் அதில் காரணிகளாக இருக்கின்றன. ஆக மொத்தத்தில் இந்த மர்மக்கதை தொடர்கதையாகத் தொடர்கின்றது' என்றான் சித்தன்.

'ம்… நீங்கள் சொல்வது உண்மை… அறிவியலுக்குச் சவால் விடும் உயிரியல். கடந்த உலக யுத்தங்கள் செய்ய முடியாததைச் செய்து உலகத்தை ஸ்தம்பிக்க வைத்திருக்கும் பிரமிப்பு. வாழ்க்கையைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டிருக்கிறது. மனிதர்களை வீட்டிற்குள் சிறை வைத்து நாட்டை ஏன் உலகத்தையே ஆட்சி செய்கிறது. வீடே அலுவலகமாக, பாடசாலையாக, குழந்தைகள் காப்பகமாக அவஸ்தை தொடர்கிறது' என்று தொடர்ந்தாள் அமுதினி.

'இந்தத் தனிமைச் சிறை பல இளைஞர்களை மனநோயாளிகள் ஆக்கி வைத்திருக்கிறது. தனிமை தனிமை என்று ஏங்கித் தவிக்கும் இந்த நேரத்தில் காதல் மலர்வது ஒரு அழகிய அற்புதம் இல்லையா?' என்றான் சித்தன்.

'ஓ நீங்கள் சுற்றிச் சுற்றி அங்கே வந்துவிட்டீர்கள். கண்டதும் காதல் என்பது குளிர்கால ஏரியில் படர்ந்து இருக்கும் மெல்லிய உறைபனியில் நடப்பது போன்றது. எங்கே அது உடையும் என்பது யாருக்கும் தெரியாது. அதில் பயணம் செய்வதற்கு அவசரப்படக்கூடாது. மெல்லிய உறைபனித் தகடு எப்போதும் எங்கேயும் உடையலாம். ஒரு சிறு வெடிப்பு திடீரென உறைபனியில் தோன்றி குளிர் நீருக்குள் தள்ளிவிடும். சிறிது பொறுமை காத்தால் அதுவே பத்து நாள் கடும் குளிருக்குப் பின்பு தடித்த தளமாக மாறிவிடும். அந்தத்தளத்தில் பீரங்கி படைவண்டிகூடக் கடந்து செல்லலாம். அதற்குத் தேவையானது காலமும் பொறுமையும். காதலும் அப்படித்தான். யாருக்குள் என்னென்ன குணாம்சங்கள் இருக்கின்றன என்பது மற்றவருக்குத் தெரியாது. அதைத் தெரிந்து கொள்ளக் காலம் வேண்டும். ஆறுதலாக அதைத் தெரிந்து கொண்டோம் என்றால் அந்தக் காதலை நம்பிப் பயணிக்கலாம். அது அப்போது ஆழப்படிந்த உறைபனியாகிவிடும்' என்றாள் அமுதினி.

'கண்டதும் காதல் வருவது சட்டென நீரில் மெல்லிய படலமாகப் பனி படரத் தொடங்குவது போல. நீங்கள் சொல்வது போல நீண்ட காலம் பழகினால் தடித்த பனி போல உரமாகலாம். அது பின் வாழ்க்கைக்குப் பலமாகலாம். இங்கே பறுவாய் இல்லை. அதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது.

அப்படி இருந்தாலும் அப்பா அம்மா தமிழ் சமுதாயம் எனச் சுற்றி இருப்பவர்கள் 'என்ன இவை சுத்துகினம்?' என்கின்ற பார்வையோடுதான் பார்ப்பார்கள். இவர்களைப் போல சேர்ந்து வாழ்வது குற்றம் இல்லை என்கின்ற மனப்பான்மை தமிழர்களிடம் வராது. அவர்கள் அதை வேறுவிதமாகப் பார்ப்பார்கள். நாங்கள் காதலிக்கலாம். அது உண்மையா என்பதை அறிவதற்கு எல்லையை மீறமுடியுமா? எங்கள் வளர்ப்பு அப்படி. காதலித்தாலும் கை படாது வாழ்வதே எமது கலாச்சாரம். மற்றவர் மனதுக்குள் புகுந்து பார்க்க முடியாது. நீண்டகாலம் பழகினால் சில மனவோட்டங்களை அறியலாம். உண்மையான குணத்தை ஒன்றாக வாழத் தொடங்கிய பின்பே அறியமுடியும். கண்டதும் காதல் வேண்டாம் எண்டுகிறீர்களே மேற்குக் காதலில் வாழ்ந்து காதலைக் கண்டுபிடிக்க உங்களுக்குச் சம்மதமா? மேற்கில் மாத்திரம் கண்டதும் காதல் இல்லையா?' என்றான் சித்தன்.

'நாங்கள் கனநேரம் கதைச்சிட்டம் எண்டு நினைக்கிறன். காதல் கண்டுபிடிப்பும் எங்கள் கலாச்சார எல்லைக்குள்தான். அதை மீறக்கூடாது. அது '*Doof*' (கூடாத) எண்ணம். நோர்வேயில வாழ்ந்தாலும் எங்கள் கலாச்சாரத்தை நாங்கள் கைவிட முடியாது. கலாச்சாரமும் மொழியுமே எங்களை இந்த உலகில் அடையாளப்படுத்துவது' என்றாள் அமுதினி.

'எனக்கு எல்லை போட்டுவிட்டீர்கள். நான் அதை இனி மீறவில்லை' என்றான் சித்தன்.

அமுதினி மீண்டும் 'களுக்' என்று சிரித்தாள். அவள் சிரிப்பைக் கேட்டு சித்தன் ஆனந்தத்தில் திளைத்தான். அதைச் சொல்வதா விடுவதா என்கின்ற போராட்டம் அவனிடம். பின்பும் துணிவை வரவழைத்துக் கொண்டு, 'நீங்கள் சிரிக்கும் ஒலி மாயக் குரலாக மயக்குகிறது' என்றான் சித்தன்.

'அப்படி என்றால் கதைப்பது காகம் கத்துவது போலவா இருக்கிறது? இருந்தாலும் இது உங்கள் மட்டமான அணுகுமுறை. அது பொய்யாக இருந்தாலும் மெய்யாக இருந்தாலும் அதற்கு நன்றி' என்றாள் அமுதினி.

'ம்... அடுத்தமுறை நான் அசத்தலாகச் சொல்கிறேன்' என்றான் சித்தன்.

'ம்... முயலுங்கள்' என்றாள் அமுதினி.

'உங்களை நான் அதிக நேரம் மினக்கெடுத்திவிட்டேன். காத' என்றான் சித்தன்.

'காத'

9

இரண்டு நாட்கள் இரண்டு யுகங்களாகக் கழிந்ததில் களைத்துப்போன சித்தன். நேரம் என்பது காலத்தின் அளவுகோல். அது அண்டம் மிகப்பெரிய வெடிப்போடு தொடங்கியபோது உருவாகிவிட்டதாக எடுத்துக்கொள்ளலாம். காலத்தை அளக்க நிறைய வழிகள் உள்ளன. இதனை அளந்து அறிவதற்கு கால அளவியல் என்று பெயர். இந்த முறையில் காலத்தை அளப்பதற்குச் சூரியக் கடிகாரத்தில் தொடங்கி மணல் கடிகாரம், நவீன கடிகாரங்கள் என வளர்ச்சி மின்னல் வேகத்தில் போய்க்கொண்டு இருக்கிறது.

இதுதான் காலமா? மனித மூளை இதைக் காலம் என்று கற்று வைத்திருந்தாலும் அதனால் சில நேரங்களில் அதை ஒத்துக்கொள்ள முடிவதில்லை. அவன் சோகமாகிவிட்டால் காலம் அசைவதாகவும் சந்தோஷமாய் இருந்தால் அதுவே சட்டெனக் கழிந்து போவதாயும் தோன்றும். சித்தனின் காலம் கடும் பனியில் உறைந்த சிற்றாறாக அசைய மறுத்தது. அமுதினி பற்றிய எண்ணங்கள் பனிப் பந்தாகத் திரண்டு அவனை சிறைபிடித்தன. அவனுக்கு அதிலிருந்து எப்படியாவது வெளியேற வேண்டும் என்கின்ற அடங்காத துடிப்பு. அதற்கு என்ன வழி இருக்கிறது என்கின்ற யோசனைக்கு எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

அமுதினியோடு கதைக்க வேண்டும். அதை விட்டால் இதற்கு வேறு வழி இல்லை என்பது விளங்கியது. அவளுடன் திறன்பேசியில் கதைத்தது போதும் என்கின்ற எண்ணம். நேரடியாகச் சந்தித்துக் கதைப்பதே முடிவு தரும் வழி என நினைத்தான். அதற்கு அவளை முதலில் திறன் பேசியில் அழைத்து எங்கே சந்திக்க வரவேண்டும் என்று கூறவேண்டும். அவள் அங்கே வருவாளா இல்லையா என்பதுகூட அவனுக்குத் தெரியாது. அநேகமாக வருவதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது. எதுவென்றாலும் முயற்சி செய்யாது இருக்க முடியாது. அது அவனது அவஸ்தைக்கான விடுதலை இல்லை என்பதும் விளங்கியது. அவன் திறன்பேசியை எடுத்து அமுதினியைத் தொடர்பு கொண்டான். அடுத்த முனை 'ஹலோ' என்கின்ற அவளின் இனிமையான குரலுடன் உயிர் பெற்றுக்கொண்டது.

'என்ன அமுதினி... ரண்டு நாளாகியும் என்னைப் பற்றின நினைவே உங்களுக்கு வரயில்லையா? நான்தான் உங்களை மறக்க முடியாமல் இரவு பகலாக உறக்கம் உணவு இல்லாமல்...' என்று இழுத்தான் சித்தன்.

'இதெல்லாம் உங்களுக்குக் கொஞ்சம் ஓவராத் தெரியேல்லையே? உங்களில எனக்கு அன்பு இருக்குதுதான். அதுக்காக உங்களுக்கு ஏற்பட்ட காதல் என்கிற மூளைப் பிறள்வு எனக்கும் ஏற்பட வேணுமா?' என்று கேட்டு களுக்கென்று சிரித்தாள்.

'என்னுடைய அவஸ்தையும் வேதனையும் உங்களுக்கு விளையாட்டா இருக்குதா? காதல் எண்டுகிற பிசாசு மூளைக்குள்ள ஏறியிருந்து சவாரி செய்தாத்தான் அதுகின்ர அவஸ்தை விளங்கும். அப்பிடி இல்லை எண்டால் இப்பிடிதான் உங்களை மாதிரி களுக் களுக் எண்டு சிரிக்கத் தோன்றும்' என்றான் சித்தன்.

'காதலை, அதுகின்ர அவஸ்தையை மனிதன் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாதா என்ன? மனிதன் நினைச்சால் இதையும் தனது கட்டுப்பாட்டிற்குள் வைச்சிருக்கலாம். அதை நீங்கள் பயிற்சி செய்ய வேணும். பைத்தியமாகிறதிலும் பயிற்சி செய்யிறது நல்லதுதானே?' அவள் கேட்டுவிட்டு மீண்டும் களுக்கென்று சிரித்தாள்.

'தயவு செய்து சிரிக்காதீங்க அமுதினி. நீங்கள் இப்படிச் சிரிக்கிறது எனக்கே என்மேல அவமானத்தைத் தருகுது. அவமானத்தால காதல் குறையுமா எண்டு பார்த்தால் அதுவும் இல்லை' என்றான் சித்தன்.

'உண்மையான காதலில மான அவமானம் இருக்குமா? உங்களுடைய காதலே உண்மையான காதலா இருக்குமா எண்டு எனக்கு இப்ப சந்தேகமா இருக்குது' என்றாள் அமுதினி.

'ஓ இப்ப நீங்கள் இப்பிடி வாறியளா? இப்ப என்னுடைய காதலை காட்டுகிறதுக்கு நான் என்ன செய்யட்டும்? அனுமான் மாதிரி நெஞ்சைத் திறந்து காட்டட்டுமா?' என்று கேட்டான் சித்தன்.

'எப்பிடி திறந்து காட்டுவியள்? அனுமான் நேர திறந்து காட்டினார். நீங்கள் என்ன சிமாற்போனில திறந்து காட்டப்போறியளா?' என்று கேட்டு களுக் என்று மீண்டும் சிரித்தாள்.

'சிமாற்போனில திறந்து காட்டிறதுதான் இப்ப புதிய நடைமுறை அல்லது கலாச்சாரம் இல்லையா? நானும் ஒன்லையின்ல திறந்து காட்டி என் காதலை நிரூபிக்கட்டுமா?' என்றான் சித்தன்.

'நீங்கள் இண்டைக்கு நிரூபிக்காமல் விடமாட்டியள் போல இருக்குது?' என்று கேட்டாள் அமுதினி.

'அதுக்கு ஒரு வழி இருக்குது' என்றான் சித்தன்.

'என்ன அது?'

'நாங்கள் நேர சந்திச்சுக் கதைக்க வேணும்' என்றான் சித்தன்.

'ஓ இதுக்குத்தானா இந்தப் பிளான்?'

'இந்த ஒஸ்த்மார்க்காவில (ஒஸ்லோவின் கிழக்குக் காடு) ஓடி... நடந்து... கதைச்சு... பிளீஸ்' என்றான் சித்தன்.

'பிளீஸ் என்ன வம்பில மாட்டாதையுங்க... ஒஸ்த்மார்க்காவில உங்களுக்கு என்ன ஞானமா கிடைக்கப் போகுது?'

'இல்ல அமுதினி அங்கை யாரும் தெரிஞ்ச ஆள்கள் பெரிசா வரமாட்டினம். ஆறுதலாக் கதைக்கலாம். அமைதியான இடம்தானே ஞானம் தாறது' என்றான் சித்தன்.

'எனக்கு நாளைக்கு காலமை வேலை இருக்குதே சித்தன்' என்றாள் அமுதினி.

'எனக்கும் காலமைதான் வேலை. பின்னேரம் ஐஞ்சு மணிபோல போவம்' என்றான் சித்தன்.

'ஐயோ இருட்டாகீடும்' என்றாள் அமுதினி.

'நான் ஒண்டும் பொம்பிளையைக் கற்பழிக்கிற பொறுக்கி இல்லை. நீங்கள் நம்பி வரலாம்' என்றான் சித்தன்.

'அது எனக்கு நல்லாத் தெரியும் சித்தன். எண்டாலும் நீங்கள் இப்ப காதல் பையித்தியத்தில இருக்கிறியள். அதாலதான் ஒரு நடுக்கம். ஏதாவது செய்துபோட்டு நான் என்ன செய்தன் எண்டு எனக்கே தெரியாது எண்டால் நான் என்ன செய்யிறது?' என்றுவிட்டு களுக் என்று மீண்டும் சிரித்தாள் அமுதினி. சித்தன் அவள் சிரிக்கும் சத்தத்தைக் கேட்டு ரசித்தான்.

அவள் குரலே குயிலின் குரல் போன்று இனிமை என்றால் அவள் சிரிப்பது அதைவிட இதயத்தைத் தாலாட்டி மகத்தான மயக்கம் தருகிறது என்பதை அனுபவித்தான். அவள் சிரிப்பதை மட்டுமே தேவமாதரின் சங்கீதத்தைப் போலக் கேட்டுக்கொண்டே இருக்கலாம் என்று தோன்றியது. அதைச் சொன்னால் அவள் அதற்கும் சிரிப்பாள். அதையும் ரசிக்கலாம் என்றாலும் அது வழிவது போல

இருக்கும் என்று நினைத்தான். அதனால் அவன் அந்த எண்ணத்தை நடைமுறைப்படுத்தாது, 'நான் பயித்தியம் எண்டாலும் யாரையும் கட்டாயப்படுத்தாத உத்தமன். அதை நீங்கள் நம்பலாம். நம்பிவியள்தானே?' என்றான் சித்தன்.

'ம்… நம்புறன். கவலைப்படாதீங்க. பிறகு கடுமையாக்கீடும்' என்று கூறிவிட்டு அவள் மீண்டும் களுக்கென்று சிரித்தாள்.

'அப்ப நாளைக்குச் சந்திப்பமா?' என்று கேட்டான் சித்தன்.

'எங்க வருவியள்?' என்று கேட்டாள் அமுதினி.

'றேமாதுசனுக்கு பக்கத்தில…'

'சரி அப்ப நாளைக்கு ஐஞ்சு மணிக்குச் சந்திப்பம். காத'

'காத'

*

அடுத்த நாள் வேலையால் வந்து ஒரு ஆப்ளைக் கடித்துவிட்டு ஆடைகளை அவசரமாக மாற்றிக்கொண்டு அமுதினி வெளியே வந்தாள். 'அப்பா' என்கின்ற சொல் அவளை அறியாது அவள் வாயில் இருந்து தவறி விழுந்தது. மூடியிருக்கும் கண் இமைகளைப் பிரித்துக் கூர்மையான மின்னொளியை அதற்குள் அடித்ததான அவஸ்தை. நேரம் ஐந்து என்றாலும் மூர்க்கம் குறையாத வெள்ளிக் கதிர்களின் வாள் நுணி போன்ற கூர்மையான தீண்டல். அதைத் தாங்கமுடியாத கண்களின் திண்டாட்டம். கறுப்புக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு போகலாம் என்றாலும் அது ஓடும்போது ஒழுங்காக நிற்குமா என்கின்ற ஐமிச்சம். இயற்கையின் மூர்க்கமான மாற்றங்கள். மனிதனின் சேஷ்டையைத் தாங்கமுடியாத அதன் கோபம். அதை இன்றும் விளங்கிக்கொள்ளாத ஒரு பகுதி மனித இனம்… அறியாமையில் இறுமாப்போடு சிலர்… அறிந்தும் குறுகிய நோக்கோடு சிலர்…

கோபம் கொண்ட பூமியில் சட்டென மாறும் பருவகாலங்கள். குளிர்காலம் முடிவதற்கு முன்பே திடீரெனக் குதித்துவிட்ட இளவேனில் காலம். இது இளவேனில் காலம்தானா அல்லது கோடைக்காலம்தானா என்கின்ற பிரிக்க முடியாத பிறழ்வு. இயற்கையின் படிமுறைப்படி வருவதற்கு இடங்கொடுக்காத சூரியனின் வெப்பம். மனிதனின் வசதிக்கான அவசரத்தில் பூமியை எரியுலையாக்கி ஆதாயத்தை மட்டும் குறிவைத்த மனித உற்பத்திகள். பனி கனவிலும் காணமுடியாது மாயமாகிப்போன கோலம். காய்ந்த நிலத்தின் பிரசவமாக எழும்பி அடங்கும் தூசுப்

படலம். பனிக்காலத்தின் எச்சமாகத் துப்பரவு செய்யப்படாது நடைபாதையில் மிஞ்சிக்கிடக்கும் குறுணிக் கற்கள். இலையுதிர்த்து நிர்வாணமாகத் தவம் செய்த மரங்கள் ஞாயிறுவைக் கண்டு நாணம் கொண்டதாக அவசரமாக மறைக்க அரும்பும் அதன் சிறு துளிர்கள்.

வெயில் என்றாலும் குளிரின் சிறு கடுப்பு மெல்ல உரசிச் சென்றது. அதுவும் இல்லை என்றால் வெப்ப வலைய நாடாக மாறிவிட்டதோ என்கின்ற சந்தேகமே வந்துவிடும். ஓடினால் உடல் சூடாக உடைகளைக் களைந்தெறியத் தோன்றும். அப்போது மனிதக்கலங்கள் உற்பத்தி செய்யும் சக்தி உடலைக் கொதி கொள்ள வைக்கும். அதுவே உடைகளுக்கு விடுதலை கேட்கும் அவஸ்தையை உருவாக்கும்.

அமுதினி *Oppsal arena*-வின் வெளி மைதானத்தைப் பார்த்தாள். மேலும் கீழுமாக இரண்டு மைதானங்கள் அங்கே. மேல் மைதானத்தில் பதினான்கு வயது மதிக்கத்தக்க சிறுவர்கள் ஆர்வமாக உதைபந்தை விட்டுக்கலைத்துக்கொண்டு ஓடினார்கள். கொரோனாவாக இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையினர் விளையாடுவதற்கு அனுமதித்து இருந்தார்கள். அவர்களில் வியர்வைத் துளிகள் தேகம் எங்கும் முத்துக்களாக. அவர்களை வழிநடத்திய உயரமாக, ஒல்லியாகத் தோன்றிய கால்பந்துப் பயிற்சியாளர். குளிர்காலத்திலும் கோடைக்காலத்திலும் விளையாடுவதற்கு உள் மைதானமும் இங்கே உண்டு.

அமுதினி *Trasop skole*-இன் ஊடாக வந்து பிரதான பாதையில் ஏறினாள். இது குழந்தைகளுக்கான பாடசாலை. அங்கே சில சிறுவர்கள்களும் சிறுமிகளும் விளையாடிக்கொண்டு இருந்தனர்.

பிரதான பாதையில் ஏறியதும் வாகனங்களின் இடைவிடாத இரைச்சல் இதுவரை இருந்த அமைதியைக் குழப்பியதான ஒரு அந்தரம். பாதைகள் உலகின் இரத்த நாடி போன்றவை என்றால் வாகனங்கள் கரியமிலவாயுவைக் காவிவரும் இரத்தக் கலங்கள் போல. உலக உடலைவிட்டு அதை வெறியேற்றாது தொடர்ந்தும் நஞ்சூட்டுகின்றன. தொழிற்சாலைகள் மனிதத் தேவையை நிறைவேற்றுவதற்காக உருவாக்கப்பட்ட நவீன அட்சயபாத்திரங்கள். அதில் அமுதத்திற்குப் பதிலாக விஷம் விளைகிறது. இப்படியான மனிதக் கண்டுபிடிப்புகள் உடலின் கலங்களை நஞ்சூட்டுவதாக உலகம் ஷேடம் இழுக்கத் தொடங்கி இருக்கிறது.

தெருவைத் தாண்டினால் வளமான காடு. அதற்குள் புகுந்தால் இயந்திரமயமான இந்த உலகை மறந்து போகமுடியும். ஆனால் அதற்கு முன்பு சித்தனைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

அமுதினி '*Esso*' எரிபொருள் நிலையத்தைத் தாண்டி ஓடினாள். அங்கே பல மகிழுந்துகள் எரிபொருள் நிரப்பிக்கொண்டு நின்றன. ஒரு வகையில் நஞ்சை உண்டு நஞ்சைக் கக்கும் தேள்கள் போன்றவை இந்த வாகனங்கள். அவை உலகத்தை நித்தம் தீண்டுகின்றன. அதில் மனிதர்கள் மகிழ்ந்து ஊர்கிறார்கள். எப்போது இவர்கள் தங்கள் பிழையை விளங்கிக்கொள்ளப் போகிறார்கள் என்பது அவளுக்கு விளங்கவில்லை. அவள் தொடர்ந்து ஓடினாள்.

சந்திக்கு வந்தபோது அமுதினிக்காகச் சித்தன் அங்கே காத்திருந்தான். தெளிந்த ஆகாயத்தின் நீலத்தில் ஓடுவதற்கான உடையும் காலணிகளும். சித்தன் பார்ப்பதற்குக் கம்பீரமானவன். இப்போது அவன் மேலும் கம்பீரமானவனாய்த் தோன்றினான். அதற்கான காரணம் அமுதினிக்கு விளங்கியது. அவனிடம் அதை ஒத்துக்கொள்ளாது அலைக்கழிப்பதில் அப்படி ஒரு சந்தோஷம். அதை ஒப்புக்கொண்டால் இந்தப் பரபரப்பு, சந்தோஷம், எதிர்பார்ப்பு இல்லாது போய்விடுமோ என்கின்ற ஒரு பயம் அவளிடம். அது எதுவாக இருந்தாலும் அதை ஒரு நாள் ஒப்புக்கொள்ள வேண்டிய காலம் வரும் என்பது விளங்கியது. இப்போதுகூட சித்தனைக் கட்டி அணைத்துக் கொள்ள வேண்டும் என்கின்ற கள்ள ஆசை மனதில் மெல்ல எட்டிப் பார்த்தது. அதை வெளியே காட்டிக்கொள்ள முடியாது.
அது கையைத் தூக்கி எதிரியிடம் சரணடைவது போன்றது. எதிரியிடம் சரணடைவதிலும் பேச்சு வார்த்தையின்போது சமாதானம் தேடிக்கொள்வது மேன்மையானது என்பது அவன் அறிந்த வரலாறு.

'என்ன வாயைப் பூட்டி வைச்ச மாதிரிப் பார்த்துக்கொண்டே நிக்கிறியள் அமுதினி?' என்று கேட்டான் சித்தன்.

'நீங்கள் அவ்வளவு கம்பீரமா இருக்கிறியள். அதுதான் வசனம் வெளிய வராமல் தொண்டைக்குள்ள சிக்கீட்டுது' என்றுவிட்டு களுக்கென்று சிரித்தாள்.

'வாயக் குடுத்தா தப்பேலாது எண்டதை அடிக்கடி ஞாபகப்படுத்துறியள்' என்றான் சித்தன்.

'ஐயோ அப்பிடி எல்லாம் இல்லை. நீங்கள் கேட்டதிற்குப் பதில் சொன்னன்' என்றாள் அமுதினி.

'சரி சினேகிதியே... வந்த வேலையைப் பார்ப்போமா?' என்றான் சித்தன்.

'அதைத்தானே பார்க்கிறோம்' என்றுவிட்டுக் களுக்கென்று மீண்டும் சிரித்தாள் அமுதினி.

'ஓ அமுதினி… அமுதினி… என் அன்பு அமுதினி… நாங்கள் காட்டிற்குள்ள போவமா?'
'ம்… ஓடுங்க' என்றாள்.

இருவரும் றேமாதுசனால் வந்து தெருவைத் தாண்டி காட்டிற்குப் போகும் ஏற்றமான பாதையில் ஓடத் தொடங்கினார்கள். ஓடுவது என்பது சிறிது சிறிதாகத் தொடங்கி ஒழுங்காகச் செய்து வந்தால் காற்றில் பறப்பது போல இருக்கும். திடீரெனப் பாய்ந்து ஓடினால் நெஞ்சில் உள்ள நீரெல்லாம் வறண்டு, இதயம் கனத்து, மூச்சு எடுக்கமுடியாத அவஸ்தையோடு கால்களை இழுத்து நிறுத்தும்.

சித்தன் மருத்துவம் படித்தாலும் நித்தம் ஓடுபவன் அல்ல… அமுதினி அதைவிடச் சோம்பேறி. பிட்டியில் சிறிது தூரம் ஓடவே அவர்களுக்கு மூச்சு இழுக்கத் தொடங்கிவிட்டது. அவர்கள் ஓடும் பாதைக்கு வலப்பக்கம் இருந்த வீட்டிற்கு வெளியே இரு வயோதிபப் பெண்கள் கதைத்துக்கொண்டு நின்றார்கள். இவர்களைப் பார்த்துத் நட்பாகச் சிரித்தார்கள்.
இவர்களும் அவர்களைப் பார்த்துச் சிரித்தார்கள். காட்டிலிருந்து ஒரு இளம் பெண் இரண்டு நாய்களுடன் திரும்பி வந்துகொண்டு இருந்தாள். அந்த நாய்களும் வேட்டைக்குப் போய்வருவன போன்று வந்தன.

இருவருக்கும் ஓடுவது போதும் என்று ஆகியதால் நடக்கத் தொடங்கினார்கள். காட்டிலிருந்து ஒரு குடும்பம் இரண்டு பிள்ளைகளுடன் திரும்பி வந்தார்கள். அவர்கள் நீண்ட தூரம் நடந்ததால் அவர்களில் சோர்வு ஏறிச் சவாரி செய்தது. வீட்டிற்குச் சென்று சாப்பிட்ட பின்பு ஓய்வெடுக்கின்ற அவசரம் அவர்களில்.

'நாங்கள் ஓட முடியாது எண்டது முடிவாகீட்டுது. இப்பிடியே நடந்து உல்ஸ்றுட்வன் (உல்ஸ்றுட் ஏரி)–ஆல போய் றேமாதுாசனுக்கு திரும்பிப் போவமா?' என்றான் சித்தன்.
'ம்… போகலாமே…'

குறுனி கற்கள் போட்ட தெரு காட்டை ஊடறுத்துச் சென்றது. இதனால் சென்றால் ஸ்குல்லறுாட் பாடசாலை தாண்டி, பின்பு றுஸ்தாட் பாடசாலை கடந்தால் ஒஸ்தன்சோவன் (ஒஸ்தன்சோ ஏரி) வருகிறது. அதைத் தாண்டிச் சென்றால் அப்படியே உல்ஸ்றுட் றேமாத்துாசனுக்குச் சென்றுவிடலாம்.

காட்டின் உள்ளே இறங்கி வேகமாக நடக்கத் தொடங்கினார்கள். எதிரே ஒரு பெண் தனது குழந்தையை வைத்துத் தள்ளும் வண்டிலைத் தள்ளிக் கொண்டு வந்தாள். அந்தக் குழந்தை இயற்கையின் சுத்தமான காற்றைச் சுவாசித்து நிம்மதியாகத் துாங்கியது.

'குழந்தைகூட சுத்தமான காற்றைச் சுவாசித்து இயற்கையின் தாலாட்டில் எப்படித் துாங்குகிறது. அதன் இருப்பையும் அவர்களது வருங்காலத்தையும் சீரழிக்கும் இன்றைய பெரிய மனிதர்கள்' என்றான் சித்தன்.

'அது உண்மைதான் சித்தன். அது சரி இதைக் கதைக்கிறதுக்கே இங்க அவசரமாய் கூட்டிக்கொண்டு வந்த நீங்கள்?' என்றாள் அமுதினி.

'எனக்கு உங்களோடை கதைக்கிறதுக்கு நிறைய இருக்குது. கதைச்சால் அதையெல்லாம் நீங்கள் ஏற்றுக்கொள்ளுவீங்களா எண்டுதான் விளங்கேல்லை. நெஞ்சைத் திறந்துகாட்டினால் இதயத்தில் எட்டி உதைக்க மாட்டீங்களே?' என்றான் சித்தன்.

'நான் உங்களை எப்போது எட்டி உதைத்தேன்? என் மனது விளங்காது கதைக்கிறீர்கள். பறுவாய் இல்லை. நீங்கள் எதைச் சொல்ல வேண்டுமோ அதைச் சொல்லுங்கள். நான் கேட்பதற்குத் தயாராகத்தான் இருக்கிறேன். ம்... மினக்கெடுத்தாமல் சொல்லுங்க' என்றாள் அமுதினி.

'உண்மையில் நான் புதிசா சொல்லுகிறதுக்கு ஒண்டும் இல்லை. என்மனதில் என்ன இருக்குது எண்டதை நீங்கள் அறியாமலும் இல்லை. இப்பகூட இதயத்தில் நிறைய ஆசைகள் அலைமோதுகின்றன. உங்கள் கையை மென்மையாகத் தொடவேண்டும். மெதுவாக இழுத்து என்னோடு உங்களை அணைத்துக்கொள்ள வேண்டும். கையோடு கை கோர்த்து நடைபோட வேண்டும். அப்படியே உங்கள் இடையைச் சுற்றி என் கையைப் போட வேண்டும். மெல்ல என்னோடு இறுக்கி முதலில் உங்கள் கன்னத்தில் என் உதடுகள் பதிய முத்தமிட வேண்டும்' என்றான் சித்தன்.

'நிப்பாட்டுங்க சித்தன்... நீங்கள் காதல் எண்டு நினைச்சுக் காமத்தைக் கொட்டித் தீர்க்கிறியள். உண்மையான காதலில காமம் இருக்குமா சித்தன்? அல்லது கொழுத்த

காமத்தில் காதல் பிறக்குமா சொல்லுங்க... உங்கள் காதல் என்பது காமத்திற்கான முகவுரையா? முகவுரை முடிந்ததாக நினைத்து நீங்கள் உங்கள் வேலையைத் தொடங்கிவிட்டீர்களா? சொல்லுங்கள் சித்தன். உண்மைக் காதல் எண்டீங்கள், பிறகு இப்போது உடலைத் தொட வேண்டும் என்று துடிக்கிறீர்கள். உங்களை என் இதயத்தின் கருவறையில் வைத்திருந்தேன். திடீரென என் பாதத்தில் விழுந்து கிடக்கிறீர்கள். சொல்லுங்கள் உங்கள் மனதிலிருப்பதைக் காதல் என்று உணருகிறீர்களா இல்லை என்றால் காமம் என்று உணருகிறீர்களா?' என்று கேட்டாள் அமுதினி.

'உவ்... நான் என் மனதிலிருந்த ஆசையைச் சொன்னேன். இது என்னுடைய நியாயமான, மென்மையான ஆசை எண்டு எண்ணி இருந்தேன். அதை நீங்கள் கடும் காமமாக்கி என்னைத் தார்மீகக் கைதியாக்கிவிட்டீர்கள்.
என் அன்பிற்குரியவளின் கையைத் தொட எண்ணுவது அவ்வளவு பாவமா? காமமா? குற்றமா? நான் ஆசையில் ஆழமாக யோசிக்காது கேட்டுவிட்டேனா? தப்பென்றால் என்னை மன்னித்துவிடு அமுதினி' என்றான் சித்தன்.

'நான் கேட்ட கேள்விகளுக்கு நீங்கள் பதில் சொல்லேல்ல... ஆனா, குற்றத்தை ஒப்புக்கொள்ளுறன் எண்டு வாயை அடைக்கப் பார்க்கிறீங்களா? உங்கள் ஆழ் மனதில் நிறைந்து இருப்பது காமமா அல்லது காதலா சொல்லுங்க? என்னைப் பார்க்கும்பொழுது என் உடம்பு தெரியுதா அல்லது என் உள்ளத்தின் அழகு தெரியுதா? நீங்க என்னைக் கேட்டதை வைச்சு உங்களுக்கு உள்ளத்தைவிட உடல்மீது ஆசை வந்ததோ என்கின்ற ஐமிச்சம் எனக்கு. சொல்லுங்க சித்தன்... நான் நினைப்பது தப்பா?' என்று கேட்டாள் அமுதினி.

'இல்லை அமுதினி... உனக்குள் உண்டாகியிருக்கும் கேள்வி உன்னைப் பொறுத்தவரை, ஒரு பெண்ணைப் பொறுத்தவரை சரியானதே. அது பெண்களுக்கே உரிய தற்பாதுகாப்பு எண்ணம். அதற்காக எனது சிறிய ஆசைகளைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றித் தண்டனை தருவதை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. காதல் காமம் அதை விட்டால் மனிதனுக்கு என்று மென்மையான சில ஆசைகள் இருக்க முடியாதா? அதை வக்கிரமான காமத்தோடு ஒப்பிட்டுக் கதைக்கலாமா? அது நெஞ்சை உறுத்துகிறது அமுதினி. என் அன்பு வக்கிரமான காமத்திற்கானது அல்ல... உன் கையைப் பிடிக்க வேண்டும் என்று எண்ணும் போது என் மனதில் அன்போடு நிறைந்த காதலே ஊற்றெடுக்கிறது, முறுக்கி மடக்கும் முரட்டுக் காமம் அல்ல' என்றான் சித்தன்.

'ம்… உங்கடை சமாதானமும் கவனிக்கப்பட வேண்டியதுதான். திடீரென தனிமையில கையைப் பிடிக்க வேண்டும் என்று கேட்டீர்கள் அல்லவா. அதுதான் எங்கள் வரைமுறைகள் எங்கே இருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும் எண்டு எண்ணினேன்' என்றாள் அமுதினி.

'கவலைப்படாதே அமுதினி… என் மனதில் அரும்பிய ஆசையை உன்னிட்டச் சொன்னேன். அதுக்காக உன் கையைப் பிடித்தேனா? அதை வன்மையான காமமாக எண்ணி எனது மென்மையான ஆசைகளை, விருப்புகளை அதற்குள் போட்டுக் குழப்பாதீங்க' என்றான் சித்தன்.

'ம்… தாங்ஸ்… நோர்வேயில பிறந்தாலும் எங்கட வரம்புகள் எங்கே இருக்குது எண்ட தெளிவு இருப்பது நல்லதே. உண்மையான காதல் எது? காமம் எது? எண்டதில தெளிவாக இருப்பது மிகவும் நல்லதே' என்றாள் அமுதினி.

'நிச்சயமாக… விருப்பில்லாது உங்கடை எண்ணங்களைத் தீண்டுவதைக்கூட நான் விரும்புபவன் இல்லை. ஆனால் உங்களைக் கண்ட பின்பு என்னுள் ஒருவிதமான பித்து ஏறிவிட்டது என்பது உண்மைதான். அதற்காக எனது எல்லைகளை மீறுவேன் எண்டு நீங்கள் நினைத்தால் அது என்னை அவமானப்படுத்துவது போல. அதே நேரம் என்னுடைய மனது துடிப்பதை, உங்கள் அருகிலிருக்க வேண்டும் எண்டு ஏங்குவதை, உங்களைப் பார்க்க வேண்டும் எண்டு தவமிருப்பதை நீங்கள் காமமாகக் கொச்சைப்படுத்தி விடக்கூடாது என்று விரும்புகிறேன்' என்றான் சித்தன்.

'கண்ணியமான உறவை நான் கொச்சைப்படுத்தமாட்டேன். உங்கள் ஆர்வக்கோளாறு இப்போது விளங்கி இருக்கும் எண்டு நினைக்கிறேன். ஆசைகள் அற்ற மனிதர்கள் இருக்கமாட்டார்கள். அதற்குக் கடிவாளம் போடுவதுதானே நல்ல மனிதப்பண்பிற்கான அழகு' என்றாள் அமுதினி.

அவர்கள் கதைத்துக் கதைத்து '*Nøklevann*'-இற்கு இறங்கும் பாதைக்கு வந்து சேர்ந்தார்கள். '*Nøklevann*'-இல் நீர் நிறைந்து வழிந்து வாய்க்கால் தேடி *Rustad* பக்கம் சலங்கை கட்டிய குமரிப் பெண்ணாக ஜதி பிறழாது ஓடியது. இயற்கை எப்போதும் குமரிப் பெண் போல அழகாகவே இருக்கிறது. அதனால்தான் மனிதர்களும் மிருகங்களும் அதன் வசப்பட்டு, அதனிடம் தேடித் தேடி ஓடுகிறார்களா? அதன்மேல் அவர்களுக்கு ஒரு காதல்… மோகம்… என்றும் மாறாத உணர்வாய் அது தொடர்கிறதா? அதையும் தாண்டி அந்தக் குமரிப் பெண்ணை மானபங்கம் செய்யும் வியாபார நோக்கம் கொண்ட சில மனிதர்கள். அவர்கள் தங்கள் வரும்காலச்

சந்ததிகளுக்குக் கிளவியாகிப் பல்லை இழந்த ஒரு உலகைக் கையளிக்க முனைகிறார்கள்.

காட்டிற்குப் போய்விட்டுப் புத்துணர்வுடன் பலர் வாய்க்காலின் மறுபக்கமாக வந்து *Rustad* பாடசாலைப் பக்கம் நடந்து போனார்கள். அதில் சென்ற ஒரு பெண்ணை அவளது வெள்ளை நாய் இழுத்துச் சென்றது.
அதைப் பார்த்த சித்தனுக்கு அதற்குப் பசித்திருக்க வேண்டும் என்று தோன்றியது. 'காமமும் இப்படிதானா? கட்டுப்படுத்த முடியாவிட்டால் தன்பாட்டிற்கு இழுத்துச் செல்லுமா? அப்படி என்றால் அமுதினி சொல்வது சரியா? நான் காமவசப்பட்டேனா? உண்மையான காதலில் காமமே வராதா? காமம் இல்லாது காதல் மட்டும் இருந்து என்னவாகும்? இயற்கை அதற்காகவா உயிரினங்களைப் படைக்கிறது?

இயற்கை ஒவ்வொரு உயிரினத்தையும் ஒரு நோக்கத்தோடு படைக்கிறது. அதன் படைப்பின் விதி மாறியதா? இயற்கை ஒவ்வொரு உயிரினத்தையும் படைத்து, தனக்குத் தேவையான சேவையைப் பெற்று, அதன் சந்ததியை விருத்தி செய்து முடித்தபின், தனக்குத் தேவையில்லை என்றதும், மரணத்தால் இந்த உலகத்தைத் தொடர்ச்சியாகத் துப்பரவு செய்துகொண்டே இருக்கிறது. அது தன் செயலை மாற்றவில்லை. அது உயிரினங்களுக்கு இட்ட பணியை மாற்றவில்லை.

அதில் உயிரினங்களின் முக்கிய பணி இனப்பெருக்கம். அதன் வலுவான சக்தியே காமம். காமத்தின் வீற்றில் உண்டாகும் சங்கமம். சந்ததி கடத்தும் உச்சக் கணங்கள். அந்தக் காமத்தை அடைவதற்குத்தான் இந்தக் காதலா? அல்லது காதலால் வருவது காமமா? என்னைப் பித்தாக்கும் இந்த உணர்வு காமமா அல்லது காதலா? அது காமம் என்றால் இந்த உணர்வே பொய் அல்லவா?

காமம் என்றால் என்ன? மிருகங்கள் காமவசப்பட்டால் என்ன செய்கின்றன? மனிதனே காமவசப்பட்டால் என்ன செய்கிறான்? மிருகங்கள் செய்வது போலவா காதல் வயப்பட்ட மனிதன் செய்கிறான்? என் காதல் காமத்திற்கு மட்டுமானதா? அல்லது அதையும் தாண்டியதா? இது அதையும் தாண்டியதே. காமம் வரும் போகும். ஆனால் இந்தக் காதல் அதையும் தாண்டி நிலைக்கும்'

'என்ன சித்தன் கதைக்காமல் வாறியள்? நான் சொன்னது உங்களுக்குப் பிடிக்கேல்லையே?'

'நீங்கள் சொன்னதில பிடிக்காமல் போறத்துக்கு என்ன இருக்குது? அதே போல என்னுடைய மனசும் தூய்மையான காதலால, அன்பால மட்டும்தான் நிறைஞ்சிருக்குது.
அதை நீங்கள் தப்பா விளங்கமாட்டியள் எண்டு நினைக்கிறன். நான் உங்களைக் காதலிக்கிறது காமத்திற்காக அல்ல. வாழ்க்கை பூராகவும் கைகோர்த்து நடப்பதற்காய்' என்றான் சித்தன்.

'நீங்கள் இப்ப சொல்லுகிறதை நாங்கள் கலியாணம் செய்து, பிள்ளைகள் பெற்று, அவர்களின் பின்னால் ஓடும்போதும் சொல்வீர்களா? உங்களைக் கேட்டால் ஓம் எண்டுவியள். ஆனால் உண்மையான கால ஓட்டத்தில்தான் அது வெளியே வரும் என்பது எனது எண்ணம். நான் சொல்வது சரியா சித்தன்?'

'தெரியேல்ல... காதல் என்பதற்கான உங்களுடைய புரிதல் வேறுமாதிரி இருக்கிறது. காதல் என்பதற்கான என்னுடைய புரிதல் வேறுமாதிரி இருக்கிறது. என்னால் என்றும் அன்பை மாற்றிக்கொள்ள முடியாது என்கிறேன். நீங்கள் காதலே காலப்போக்கில் மாறிவிடும் என்கிறீர்கள். உங்களுடைய புரிதல் அப்படி இருந்தாலும் என் எண்ணம் தெளிவாக இருக்கிறது. எனது காதல் என்றும் நிலைத்திருக்கும் என்பதில் நான் தெளிவாக இருக்கிறேன்' என்றான் சித்தன்.

'நீங்கள் எப்படி உணருகிறீர்கள் எண்டு என்னால் ஊகிக்க முடிகிறது சித்தன். ஒரு பொருளை அடையும் வரையும் அதில் பைத்தியமாக இருப்பதும், அந்தப் பொருளை அடைந்த சில நாள்களில் அது மறைந்து போய்விடுவதும் உண்மை. உங்கடை வாழ்க்கையிலேயே யோசித்துப் பாருங்கள்? ஒரு திறன்பேசியை எடுத்துக்கொள்ளுங்கள். வாங்கிய சில நாள்களுக்கு அதில் உள்ள பரபரப்பு காலப்போக்கில் காணாமல் போய்விடும். அதன் பின்பு அது ஒரு வழமையான சாதனம் மட்டும்தான். தேவைக்காகப் பயன்படுத்துவதைத் தவிர அதற்கு எந்தச் சிறப்பு மரியாதையும் இருக்காது. காதல் எண்டது பெண்ணை அடையும்வரை உச்சப் பரபரப்பாய் இருக்கும். அந்தப் பெண்ணைக் கைப்பிடித்து அவளைக் கட்டிலில் கண்டு களித்தாலே அந்த மோகம், உணர்ச்சி தணியத் தொடங்கிவிடும். அதன்பின் வாழ்ந்து பிள்ளை பெற்றால் காதல் அப்போது எங்கே இருக்கும் என்பது தேடலுக்கு உரிய ஒரு விடயமாகும். ஆணிற்குப் பெண்ணின் கவர்ச்சி முக்கியம். அது மறையும்போது அவன் அக்கறையும் குறையத் தொடங்கிவிடும். பெண்ணின் தேவை வேறுவிதமானது. அவளுக்கு ஆண்மீது காதல் இல்லை என்றாலும் ஆணை

விட்டுப் பிரிய முடியாத தேவை இருக்கிறது. அது தங்களால் உருவாக்கப்படும் வாரிசு பற்றிய கவலையால் வருகிறது.

அந்த வாரிசின் பிணைப்பு இல்லை என்றால், பெண்ணிற்கு சுயமான பொருளாதாரம் இருந்தால், அவளும் ஆணைப் போல உணரலாம். அலுத்துப்போய் விலகி ஓடலாம். இல்லாமலா இவ்வளவு காதல் முறிவுகள் எங்கள் சமுதாயத்திலும் பரவி இருக்கிறது? இதையும் மீறிச் சிலர் புறநடையாக இருக்கலாம். நான் சொல்வதை உங்களால் இப்பொழுது ஏற்றுக்கொள்ள முடியாமலிருக்கலாம். ஆனால் அதிலும் உண்மை இருக்கிறது என்பதை ஆழ்ந்து யோசித்தால் உணர்ந்து கொள்வீர்கள்' என்றாள் அமுதினி.

'நீங்கள் என் காதலை ஏற்றுக்கொள்ள மாட்டீங்களா அமுதினி?' என்றான் சித்தன் பரிதாபமாக.

'இதுக்கு நான் என்ன பதில் சொலுகிறது? எனக்கு உங்கள் மேல் மெல்லிய காதல் அரும்புவதாய் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அது உங்களைப் போலக் கண்மூடித்தனமானது இல்லை. எனது செயல்களும் அப்படி இருக்காது. உங்களுக்கு என்னைப் பிடித்திருந்தால் முறைப்படி எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யுங்கள்' என்றாள் அமுதினி.

'என்ன செய்ய வேண்டும் எண்டு சொல்லுறீங்கள்?' என்று கேட்டான் சித்தன்.

'கலியாணம் செய்யாது சேர்ந்து வாழ்வதற்கு நாங்கள் ஒன்றும் ஐரோப்பியர் இல்லையே?' என்றாள் அமுதினி.

'ஓ... ஒழுங்கு செய்ய வேண்டும் எண்டுறீங்களா?' என்றான் சித்தன்.

'அதைச் செய்யுங்கள். உங்கள் அப்பா அம்மாவை வந்து கேட்கச் சொல்லுங்கள்' என்றாள் அமுதினி.

'நீங்கள் சொல்வது சரி. ஒழுங்காகச் சென்றால் எல்லோருக்கும் உசிதமே. நான் கேட்டு ஒழுங்கு செய்கிறேன். என் சந்தோஷத்தை எப்படிக் கட்டுப்படுத்துவது எண்டு எனக்கு இப்போது தெரியவில்லை. *Oh Thank God, Thank God'* என்று சித்தன் துள்ளினான். அமுதினி அவனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு நின்றாள்.

*

வீட்டிற்கு வந்த பின்பு சித்தனால் அமைதியாகத் தனது அறைக்குள் அடைந்து கிடக்க முடியவில்லை. அது ஒரே தளத்தில் மூன்று அறைகள் கொண்ட தனி வீடு. ஒரே தளத்தில் படுக்கை அறைகளும் சமையல் அறை மற்றும் ஹோல் என்பன இருப்பது ஒருவித வசதியே. சட்டென்று சென்று எதையும் கதைத்துவிட முடியும். அப்படி இருந்தும் குட்டியைத் தவறவிட்ட பூனையின் அவஸ்தை சித்தனுக்கு. அறைக்குள் அங்கும் இங்கும் அலைந்தான். அவனால் தொடர்ந்தும் அப்படி அலைய முடியவில்லை. அப்படி அலைவது அதற்கான விடை என்றும் தோன்றவில்லை. அம்மாவுடன் முதலில் கதைக்க வேண்டும். கதைக்க வேண்டும் என்று விளங்கினாலும் தொடர்ந்தும் தயக்கமாக இருந்தது. மனிதன் நினைப்பவற்றில் கதைப்பது எத்தனை விகிதமாக இருக்கும் என்கின்ற கேள்வி அவனிடம் உண்டாகியது. சித்தனைப் பொறுத்தவரை அவன் தான் நினைப்பதில் ஐந்து வீதத்தையே கதைத்திருப்பேன் என்று அவனுக்குத் தெரியும்.

அம்மா மாலைச்சாப்பாடு செய்துகொண்டு இருக்கிறாள் என்பதை மணத்தை வைத்து ஊகித்துக்கொண்டான். இப்போது சென்றால் அம்மாவோடு கதைக்கலாம் என்பது விளங்கியது. இது சாதாரண விடயம். இருந்தும் அவன் மனது ஏனோ தடுமாறியது. துணிவை வரவழைத்துக் கொண்டு சமையல் அறைக்குச் சென்றான்.

அம்மா இன்று தோசை வார்த்துக்கொண்டு இருந்தாள். அச்சில் வார்ப்பது போல வட்டமாக வார்ப்பதில் அம்மா மிகவும் கெட்டிக்காரி. தோசைக்குத் தோதாகப் பொரித்து இடித்த சம்பல். சித்தனுக்கு அதைச் சுவைக்கும் எண்ணம் வரவில்லை. அவன் சொல்ல வந்தது தொண்டையை அடைத்துக்கொண்டு நின்றது. இனியும் பொறுக்க முடியாது என்று முடிவு செய்த சித்தன், 'அம்மா!' என்றான்.

'வா சித்தன். வந்து இரு… சுடச்சுடத் தோசை சாப்பிடு, நல்லாய் இருக்கும். என்ன ஏதோ யோசிக்கிற மாதிரி இருக்குது? என்னடா யோசினை உனக்கு?' என்று கேட்டாள் மலர்விழி.

'அது வந்து அம்மா…'

'என்னடா இழுக்கிறாய்… அப்ப ஏதோ பெரிய விஷயமாகத்தான் இருக்க வேணும். என்ன எண்டு சொல்லடா?' என்றாள் மலர்விழி.

'இல்லை அம்மா எனக்கு ஒரு பிள்ளையை பிடிச்சிருக்குது. அவளோடை கொஞ்ச நாளாக் கதைக்கிறன். இப்ப அவளுக்கும் என்னைப் பிடிச்சிருக்குது'

'என்னடா சொல்லுறா?' அம்மாவின் முகத்தில் வழிந்த அதிர்ச்சியோடு கூடிய சந்தோஷம் அவனிற்கு மேலும் துணிவைக் கொடுத்தது.

'பெயர் அமுதினி. சீக்கப்பிளையரா வேலை செய்யிறாள்' என்று தொடர்ந்தான் சித்தன்.

'ஓ... அவளின்ர போட்டோ இருக்குதே காட்டு, ஆர் ஆட்கள் அவை எண்டு தெரியுமே?' என்றாள் மலர்விழி.

சித்தன் தனது திறன்பேசியைத் திறந்து முகப்புத்தகத்தில் இருந்து சேமித்து வைத்திருந்த நிழற்படங்களை எடுத்து மலர்விழிக்கு காட்டினான். அதைப் பார்த்த அவள் கண்கள் பிதுங்கும் முட்டையாக அகல விரிந்தன. அதில் சந்தோஷம் நிறைந்து வழிந்தது. அதைப் பார்த்த சித்தனுக்கு மேலும் துணிவு வந்திருந்தது.

'வடிவாகத்தான் இருக்கிறாள். ஆர்ற்ர பெட்டையடா இவள்? உனக்கு ஏதும் தெரியுமே?' என்றாள் மலர்விழி.

'அதெல்லாம் தெரியாது' என்றான் சித்தன்.

'அப்ப எப்பிடியெடா உனக்கு இவளத் தெரியும்? எங்க முதல்ல சந்திச்சியள்?' என்று மலர்விழி ஆர்வத்தோடு கேட்டாள்.

'தேவாணில ஒரு முதலுதவி செய்யேக்க அவளும் உதவி செய்தாள். அதில இருந்து பழக்கம்' என்றான் சித்தன்.

'யாரடா முதல்ல கேட்டது?' என்றாள் மலர்விழி.

'நான்தான் அம்மா... எனக்கு அவளைப் பார்த்தது தொடக்கம் பயித்தியம் மாதிரி... எப்பிடி உன்னிட்டை சொல்லுகிறது எண்டு தெரியாமல் தவிச்சன்' என்றான் சித்தன்.

'ஓ... நானும் உன்னைக் கொஞ்ச நாளாக் கவனிச்சுக் கொண்டுதான் வாறன். அண்டைக்குக் கேட்கவும் அது ஒண்டும் இல்லை எண்டிட்டுப் போனாய்' என்றாள் மலர்விழி.

'அது எப்பிடிச் சொல்லுகிறது எண்டு தெரியாத குழப்பம். அதோடை அவள் அப்ப முழுமையா சம்மதிச்ச மாதிரியும் இல்லை. இண்டைக்குத்தான் அவள் வெளிப்படையாச் சம்மதிச்சாள். உடன வந்து உன்னிட்ட சொல்லுறன்' என்றான் சித்தன்.

'சரி... என்ரை பிள்ளை நல்ல பிள்ளைதான். அது எனக்கு நல்லாத் தெரியும். எண்டாலும் உந்த வயசில களவும் கற்றுமற எண்ட மாதிரித் திரிவியள் அதுதான்...' என்றாள் மலர்விழி.

'அம்மா நீ ஒரு உதவி செய்ய வேணும்' என்றான் சித்தன்.

'நீ அதுக்குதான் வந்திருக்கிறாய் எண்டு எனக்குத் தெரியும். என்ன எண்டு சொல்லு...' என்றாள் மலர்விழி.

'வந்து கேட்கட்டாம். நீ அப்பாவோடை கதைச்சு அதுக்கு ஏற்பாடு செய்யோணும். அது உன்னால மட்டும்தான் முடியும்' என்றான் சித்தன்.

'அது எப்பிடியெடா போய்க் கேட்கிறது? எங்களுக்கு நீ கொஞ்ச அவகாசம் தரவேணும். நாங்கள் கொஞ்சம் முதல்ல அவையின்ர குடும்பத்தைப் பற்றி விசாரிக்கோணும். இது என்ன கத்தரிக்காய் வாழைக்காய் வாங்குகிற விஷயமே? கலியாணமடா. சும்மா எடுத்தம் கவுட்டம் எண்டு அதைச் செய்ய முடியாது' என்று கூறிய மலர்விழி தோசையோடு சம்பலையும் தட்டில் வைத்து சித்தனிடம் கொடுத்தாள்.

அதை வாங்கி மேசையில் வைத்த சித்தன் அம்மாவைப் பார்த்து, 'எதுக்கு நீங்கள் அவையின்ர குடும்பத்தைப் பற்றி விசாரிக்கோணும்? நான் என்ன அவையின்ர குடும்பத்தையே கலியாணம் செய்யப் போகிறன்? நீங்கள் கதைக்கிறது உங்களுக்கே சரியா இருக்குதா அம்மா? இவ்வளவு காலம் இங்க வாழ்ந்த பிறகும் நீங்கள் இப்பிடிக் கதைக்கிறது எனக்கு அதிர்ச்சியா இருக்குது' என்றான் சித்தன்.

'இங்க வாழ்கிறம் எண்டதுக்காய் நாங்கள் மாறீட்டம் எண்டு உனக்கு யார் சொன்னது. நாங்கள் எங்கடை அடையாளங்களை எல்லாம் கைவிட முடியாது தம்பி' என்றாள் மலர்விழி.

'என்ன விதமான அடையாளம் அம்மா அது? அதை மாதிரித்தான்... நான் உங்களிட்ட அனுமதி கேட்கிறன் எண்டு நினைக்கிறியா? அது இங்கத்தே வழமையும் இல்லை. தகவல் சொல்லுறன். உதவி கேட்கிறன்' என்றான் சித்தன்.

'ஓ அவ்வளவுக்கு வந்திட்டியே தம்பி?" என்றாள் மலர்விழி. அவளுக்கு அதைக் கேட்கக் கோபம் வந்தது.

'தோழுக்கு மிஞ்சினாத் தோழன் எண்டு நீங்கள்தானே சொல்லுவியள் அம்மா' என்றான் சித்தன்.

'சரியடா… நான் அப்பாவோடை கதைக்கிறன். அவர் என்ன சொல்லுகிறார் எண்டு பார்ப்பம்' என்றாள் மலர்விழி.

'தாங்ஸ் அம்மா' என்று கூறிய வண்ணம் எழுந்தவன் அம்மாவிற்கு ஒரு முத்தம் கொடுத்துவிட்டுக் கையைக் கழுவிவிட்டுத் தனது அறைக்குச் சென்றான்.

*

சனிக்கிழமை நான்குமணி போல அமுதினி வீட்டிற்குத் தனது தாய் தந்தையுடன் சித்தன் சென்றான். ஒரு பரீட்சை வீட்டில் நடந்து முடிந்த பின் மறு பரீட்சை அமுதினி வீட்டில் என்பது அவனுக்கு விளங்கியது. விளங்கியது மட்டும் இல்லாது அது அவனுக்குச் சங்கடமாகவும் இருந்தது. அழைப்பு மணியை அடித்ததும் தேவிகாவே வந்து கதவைத் திறந்தாள். ஏற்கனவே அமுதினி சொல்லி வைத்திருக்க வேண்டும். அன்று மலர்ந்த செவ்வலரிக் கொத்தான முகத்தோடு 'வாங்க வாங்க' என்றாள்.

அவர்கள் வீடு தனிவீடாகச் செல்வச் செழிப்பான இடத்திலிருந்தது. உள்ளே புதிதாகச் செதுக்கியதாக எங்கும் மினுங்கின. நீலத்தில் என்ன மயக்கம் என்று தெரியவில்லை. நிர்வாண வானத்தை வீட்டிற்குள் சிறை வைக்க முயன்றது போன்ற தோற்றம். செந்தில் வசதி பார்ப்பவன். அதற்காக விழுந்து விழுந்து ஆரம்பத்தில் உழைத்தவன். சண்வீக்காவில் இருந்து முழுமையாக இடம்பெயரவே அவனுக்குப் பல சகாப்தங்கள் எடுத்தன. இப்போது அவன் எண்ணம் அப்படி இல்லை என்றாலும் வருவது நல்ல இடமாக இருக்க வேண்டும் என்கின்ற சராசரி ஆசை சாகாது அவனிடம் இருந்தது.

உள்ளே சென்றதும் 'வாங்க… வாங்க… வந்து இருங்க' என்று சுபன் வரவேற்றான். மலர்விழிக்கும் செந்தில்நாதனுக்கும் சாதுவான கூச்சமாக இருந்தது. சொந்தமாகப் போகும் அன்னியர்களா அல்லது அன்னியம் மாறாத சொந்தங்களா என்கின்ற குழப்பம். இருந்தும் அதை அடைகாக்கும் நேரம் இது இல்லை என்கின்ற தெளிவை ஏற்படுத்திய வண்ணம் இருவரும் சென்று சோபாவில் அமர்ந்தார்கள்.

அங்கே ஒரு அமைதியின் அதிரடிக் குதிப்பு. அதை எப்படிக் கலைப்பது என்று யோசித்த சுபன், 'வீட்டைக் கண்டுபிடிக்கிறது ஒண்டும் கஸ்ரமாய் இல்லையே?" என்று தொடங்கினான்.

'சீ... சீ... வீட்டைக் கண்டுபிடிக்கிறது பிரச்சினை இல்லை. பாக்கிங்தான் கொஞ்சம் கஸ்ரப்பட வேண்டி இருந்திச்சுது' என்றான் செந்தில்.

'ம்... சனி ஞாயிறு எண்டா இப்படித்தான் அடுக்கி இருக்கும். இடம் எடுக்கலாம் சிலவேளைக் கொஞ்சம் நடக்க வேண்டி வரும்' என்றான் சுபன்.

'ம்... நீங்கள் சொல்லுகிறது சரிதான்' என்று ஒத்துக்கொண்டான் செந்தில்.

'என்ன சித்தன் பேசாமல் இருக்கிறியள்?' என்று சித்தனைப் பார்த்துச் சுபன் கேட்டான். சித்தன் இதை எதிர்பார்க்கவில்லை. புலி பாய்ந்ததான அதிர்ச்சி அவனுக்கு. இருந்தும் சமாளித்துக் கொண்டு, 'நீங்களும் அப்பாவும் கதைச்சு ஒரு முடிவுக்கு வந்தால் எனக்குச் சரிதான்' என்றான்.

'அமுதினி வந்தாத்தான் கதைப்பார் போல' என்று கூறிச் சிரித்தாள் தேவிகா. சித்தன் வெட்கத்தில் நெளிந்தான். அதைச் சந்தர்ப்பமாக வைத்துக்கொண்டு 'எங்க அமுதினியைக் கூப்பிடுங்கோ நாங்களும் ஒருக்கா அவவைப் பார்ப்பம்' என்றாள் மலர்விழி. யாரும் எதிர்பார்க்காத அந்த நேரத்தில் 'என்னையா கூப்பிட்டீங்கள் மாமி?' என்று கேட்டவண்ணம் வந்து சோபாவில் அமர்ந்தாள். மலர்விழியும் செந்திலும் இதை எதிர்பார்க்கவில்லை. அவர்கள் கற்சிலையாக உறைந்து இருந்தனர். அதைப் பார்த்த அமுதினி 'என்ன மாமா பேசாமல் இருக்கிறியள். சாறி கட்டிக் கோப்பியோட வரவேணும் எண்டு எதிர்பார்த்தியளா?' என்று கேட்டாள். அதையடுத்து நினைவுக்கு வந்த செந்தில், 'அப்பிடி எல்லாம் இல்லை. அதுக்கெல்லாம் இங்க முக்கியத்துவம் குடுக்கிறதுக்கு நேரமும் இல்லை. ரெஸ்டாரண்டுக்குக்குக் கூப்பிட்டு வைச்சுப் பார்க்காத வரையில சந்தோஷம்தான்' என்றான்.

'இல்லையங்கிள் சித்தனுக்கு என்னைத் தெரியும். நீங்கள் மட்டும்தான் என்னைப் பார்க்கேல்ல' என்று இழுத்தாள் அமுதினி. தான் செய்தது பிழையா என்கின்ற கலக்கம் இப்போது அவளிடம் வந்து இருந்தது.

'அமுதினி நீ கவலைப்படாதை... அவர் சும்மா பகிடிக்குக் கேட்கிறார். அது சரி... நீயும் சித்தனை லவ் பண்ணுறாய்தானே?' என்று கேட்டாள்.

'நான் சம்மதிக்காமல் வந்து அவர் உங்களிட்டைச் சொல்லுவாரா மாமி? அப்பிடியா நீங்கள் அவரை வளர்த்து வைச்சிருக்கிறியள்?' என்றாள் அமுதினி.

'அப்பிடிச் சொல்லு மருமகளே' என்றான் செந்தில்.

'அப்ப சந்தோஷம்தான். மிச்சத்த இனி நாங்கள் கதைக்கலாம்' என்றாள் மலர்விழி.

அதன் பின்பு அவர்கள் நீண்ட நேரம் கதைத்து பெரும் தொற்று முடியத் திருமணத்தை வைத்துக் கொள்ளலாம் என்கின்ற முடிவுக்கு வந்தார்கள். அது நீண்ட நாட்களுக்குத் தொடர்ந்தால் மாற்று வழியைப் பார்க்கலாம் என்றும் முடிவு செய்தார்கள். அது அனைவருக்கும் மகிழ்வைத் தரும் முடிவாக இருந்தது. அதில் சித்தனும் அமுதினியும் அகமகிழ்ந்து அன்னப் பேட்டில் ஏறிச் சொர்க்கத்தில் மிதப்பது போல மிதந்தார்கள்.

10

குடும்ப உறவு பற்றிய மரபணு ஆராய்ச்சி ஒன்றில் துணை ஆராய்ச்சியாளனாகப் பங்கேற்கும் வாய்ப்பு சித்தனுக்கு வானத்தில் வந்த தேவதைகள் பரிசளித்ததாகக் கிடைத்தது. கொரோனாவால் பல விடயங்கள் மந்தகதியில் நடந்தாலும் அவை முற்றுமாக நிறுத்தப்படவில்லை. அது சமுதாயத்தின் மூளைச்சாவாகிவிடும். சமுதாய இயக்கம் என்பது ஓயாத அலைகள் போல என்றும் ஓய்ந்துவிட முடியாதவை. சித்தனை அவனுக்குப் பொறுப்பான மருத்துவர் பரிந்துரை செய்திருந்தார். அவரின் சொல்லிற்கே இந்த ஆராய்ச்சிக் குழுவில் இடம் கிடைத்திருக்கிறது. சித்தனது வாழ்வில் முதன்முதலில் கிடைத்த மாபெரும் கௌரவம், சந்தர்ப்பம் என்கின்ற சந்தோஷம் அவனுக்கு. காண்பவரிடம் எல்லாம் தனது வாய்ப்பைப் பற்றிச் சொல்லி மகிழ்ந்து கூத்தாட வேண்டும் என்கின்ற ஆசை. இருந்தாலும் அது தற்பெருமையாகப் பார்க்கப்படும் என்கின்ற எண்ணத்தில் அடக்கி வைத்திருந்தான். அதன் பின்பு அவன் தனது வேலையில் மும்மரம் காட்டத் தொடங்கினான். பல குடும்பங்களின் மரபணுவுப் பரிசோதனைக்குத் தேவையான மாதிரிகள் வந்திருந்தன. மேலும் அதற்கான மாதிரிகள் பல தேவைப்பட்டன. அதைப்பற்றி அன்று காலை நடந்த கூட்டத்தில் கதைத்த பின்பு, சித்தன் தனது குடும்பத்தின் மாதிரிகளையும் இந்த ஆராய்ச்சிக்குக் கொடுத்து உதவ வேண்டும் என்று முடிவு செய்தான்.

அன்று வீட்டிற்கு வந்த உடனேயே தனக்கு அடுத்த நாள் காலை பரிசோதனைக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று தாய் தகப்பனைக் கேட்டுக்கொண்டான். அவர்கள் அதற்கு எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை. அவன் ஆராய்ச்சியில் வெற்றி பெறவேண்டும் என்கின்ற அக்கறையும் ஆர்வமும் அவர்களுக்கு. அவன் ஆராய்ச்சிக் குழுவில் சேர்ந்ததை அறிந்து அவர்கள் கொண்ட மகிழ்வை அவன் அறிவான். அதனால் கேள்வி இன்றி உதவி செய்வார்கள் என்கின்ற அவன் நம்பிக்கை பிழைக்கவில்லை. சொந்த அப்பா அம்மாவிடம் எடுப்பதால் இது எதற்காக எடுக்கிறேன் என்று விளக்கம் சொல்ல வேண்டும் என்று அவனுக்குத் தோன்றவில்லை. அது ஏற்கனவே அவர்களுக்குத் தெரியும் என்பது அவன் எண்ணம். விளக்கம் கேட்குமளவுக்கு அவனிடம் அவர்களுக்கு நம்பிக்கையீனம் கிடையாது. ஆனாலும் அது விதி முறைக்கு ஏற்றதல்ல என்கின்ற ஒரு உறுத்தல். எடுத்து முடிந்த பின்பு மனம் கேளாது இதற்கு விளக்கம் தரவா என்று கேட்டான். அவர்கள் அது தேவை இல்லை என்றுவிட்டார்கள்.

அது ஒரு சிறிய வேலை. பஞ்சு சுற்றிய குச்சியைத் தொண்டைக்குள் விட்டுத் துழாவி எடுத்துக் கவனமாகப் பரிசோதனைக் குழாயில் அடைத்துக் கொள்வது. அவனுக்கு அதற்கு மூன்று நிமிடங்கள் மட்டுமே தேவைப்பட்டன. அப்பா அம்மாவுக்குத் தொண்டைக்குள் விடும்பொழுது சிறிய அவஸ்தை. அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள்.

சித்தன் அன்று தனது குடும்பத்தின் மாதிரிகளுடன் இன்னும் பல மாதிரிகளையும் சேர்த்து முதலில் '*Lyse Cells*' செய்தான். அதற்கு *Bioengineer*-ஆன *Annete* உதவி செய்தாள். எல்லாம் செய்து இங்கே முடிவு வருவதற்கு சில நாள்கள் எடுக்கும். சித்தன் அவற்றைத் தனித்துச் செய்யமுடியாது. முடிவுகளைப் பதிந்து ஆராய்வதே அவன் முக்கிய வேலைகளில் ஒன்று. அதுவும் இவன் மட்டும் அதைச் செய்யவில்லை. அது செய்யும் பலரில் இவனும் ஒருவன்.

தொடர்ந்தும் அமுதினியின் நினைவுகள் சித்தனை ஓய்வின்றி விட்டுக்கலைத்தாலும் ஆராய்ச்சி பற்றிய நினைவுகளும் அதற்குப் போட்டியாக அவனை இப்போது அழுத்திக்கொண்டு இருந்தன. மூளை பற்றிய ஆராய்ச்சிக்காக நோபல் பரிசு பெற்றவர்களைக் கொண்ட நாடு இது. அவர்களைப் போலக் கடுமையாக உழைத்தால் தன்னாலும் எதையாவது சாதிக்க முடியும் என்கின்ற எண்ணம் அவனிடம் இருந்தது. அதற்கு அமுதினியும் அவளின் நினைவுகளும் குறுக்கீடாக அமையுமோ என்கின்ற பயமும் வந்தது.

அமுதினிக்கும் நேரத்தை ஒதுக்கி, ஆராய்ச்சிக்கும் நேரத்தை ஒதுக்கி வெற்றி பெறுவதிலேயே வாழ்க்கையின் பரிபூரணம் இருக்கிறது என்பது அவனுக்கு விளங்கியது. இப்போது குழம்பினால் ஆராய்ச்சியும் போய் அமுதினியும் போய்விடலாம். இருந்தும் ஆராய்ச்சி பற்றி அமுதினிக்குச் சொன்னால் அவள் நிச்சயம் ஒத்துழைப்பாள் என்கின்ற நம்பிக்கை இருந்தது.

சித்தன் அன்று வேலை முடிந்து வரும்போது அமுதினியைத் திறன் பேசியில் அழைப்போமா என்று யோசித்தான்.
பின்பு அவள் தற்போது வேலைக்குச் சென்றிருப்பாள் என்பது நினைவு வர, அவளிற்கு நீண்ட குறுஞ்செய்தி ஒன்று அனுப்பி வைத்தான். தன்னிடம் இதைச் சொல்வதற்கு இவ்வளவு நேரம் தேவைப்பட்டதா என்று கேட்பாளோ என்கின்ற

பயமும் சித்தனிடம் இருந்தது. அதற்கு மாறாக விளக்கம் எதுவும் கேட்காது, வாழ்த்துக்கள் கூறி அவள் பதில் குறுஞ்செய்தி அனுப்பி இருந்தாள். அது அவன் மனதை மெல்லத் தூக்கி ஆகாயத்தில் பறக்கவிட்டது.

கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணையாக நான்கு நாள்கள் கழிந்து போய்விட அன்று வேலைக்குச் சென்றான். அங்கே சென்ற உடனேயே வந்த முடிவுகளை அவதானமாகப் படித்து, அவற்றைப் பதிவு செய்யத் தொடங்கினான். முதலில் பல அறிமுகம் இல்லாதவர்களின் தகவல்களே அவனது பார்வைக்கு வந்தன. அந்த வேலை வறண்ட மணல்; நீரை இழுப்பது போல அவனது நேரத்தை உறிஞ்சிய வண்ணம் இருந்தது. அப்படிச் சில முடிவுகளைப் பதியவே மதிய இடைவேளை வந்துவிட்டது.

மதிய இடைவேளையில் அறைக்குச் சென்ற போது லீசா என்கின்ற பெண்ணின் பிறந்தநாள் என்பதால் அணிச்சல் (*Cake*) கொண்டு வந்து அதை வெட்டுவதற்கான ஏற்பாடு செய்து வைத்திருந்தனர். அத்தோடு சாப்பிடுவதற்கு, குடிப்பதற்கு என்று பல உணவுகளையும், குடி பானங்களையும் வைத்திருந்தனர். சித்தனுக்கு ஆராய்ச்சி முடிவுகளைப் படித்துப் பதியவேண்டும் என்கின்ற நிலைகொள்ள முடியாத அவசரம். இருந்தும் அவளின் கொண்டாட்டத்தைப் புறக்கணிக்க முடியாது என்பதால் அவளது திருவிழா முடியும் வரையும் அங்கிருந்துவிட்டு மீண்டும் அலுவலகத்திற்கு அவதியாக வரும்போது ஒருமணியாகிவிட்டது.

மீண்டும் சில ஆராய்ச்சி முடிவுகளை வாசித்துப் பதிந்த சித்தனின் கையில் அவனது குடும்ப விபரங்கள் வந்து சேர்ந்தன. அவனது முடிவு முதலில் வந்தது. அவன் அதை வாசித்துப் பதிந்தான். எல்லாம் நன்றாகவே இருந்தன. அதையடுத்து அம்மாவின் முடிவு வந்தது. அதையும் வாசித்துப் பதிந்தான். தாயைப் போல் பிள்ளை; நூலைப் போலச் சீலை என்பார்களே அதற்கான ஒற்றுமை பலவற்றை அடையாளம் கண்டுகொண்டான். அது அவனுக்கு மகிழ்வாய் இருந்தது.

இறுதியாக அப்பாவின் முடிவு வந்தது. அதை வாசிக்க வாசிக்க அவன் உள்ளம் கை வியர்க்கத் தொடங்கியது. மயக்கம் வருவதான அவஸ்தை உண்டாகியது. இது எப்படிச் சாத்தியம் என்பது அவனுக்கு விளங்கவில்லை. அவன் அழகான அப்பா அம்மா என்கின்ற உலகம் சூரியனை விட்டு விலகி அண்டத்தில் இருண்ட பாதையில் தொலைந்து போகின்ற கோளான அவஸ்தை உண்டாகியது. அதனை ஈர்ப்பின் கட்டிற்குள் வைக்க அவனால் முடியாது என்று தோன்றியது. 'இருந்தும்

அப்பா அம்மா எந்தக் கவலையும் இல்லாது வாழ்ந்து வருகிறார்களே... எப்படி அவர்களால் முடிகிறது?' என்கின்ற கேள்வி அவனுள் எழுந்தது.

'அம்மாவா இப்படி?' சித்தனால் எட்டாய் நுள்ளிய எள்ளளவு கூட நம்பமுடியவில்லை. இது கற்பனையா நிஜமா என்கின்ற கேள்வி உருவாகியது. அடுத்த கணமே கற்பனை இல்லை என்கின்ற உண்மையும் விளங்கியது. அதற்கான பரிசோதனை முடிவுகள் அவன் கையிலிருந்தன. 'பரிசோதனையில் ஏதாவது தவறுகள் நடந்திருக்குமா?' நடந்திருக்க வேண்டும் என்றுதான் தோன்றியது. 'இல்லாவிட்டால் இது எப்படிச் சாத்தியமாகும்?' அவனுக்கு விடை கிடைக்கவில்லை.

அவன் மீண்டும் அவர்களது முடிவுகளை எடுத்துப் படித்தான். படிக்கப் படிக்க அவனுக்கு அந்தரமாய் இருந்தது. என்ன நடந்தது என்று விளங்கவில்லை. உண்மை எது என்றும் பிடிபடவில்லை.

சித்தனுக்கு அதைத் தொடர்ந்து படிப்பதற்குப் பிடிக்கவில்லை. இனி என்ன செய்வது என்றும் தெரியவில்லை. வயிற்றைப் புரட்டுவது போல இருந்தது. அவன் எழுந்தான். தனது பையை எடுத்துக்கொண்டு அலுவலகத்தை விட்டுப் படபடப்போடு வெளியேறினான். அமுதினியைத் தொடர்புகொண்டு கதைக்கலாமா என்று நினைத்தான். 'என்ன கதைப்பது? எப்படிக் கதைப்பது? அதன் பின்பு அவள் என்ன நினைப்பாள்? தனக்கு உன்னுடன் எந்தத் தொடர்பும் வேண்டாம் என்று கதைப்பதையே துண்டித்துக் கொண்டாள் என்றால் என்ன செய்வது?

சீ என்ன தர்மசங்கடமான நிலை இது?' என்று அவன் மனம் சலித்தது. வெறுப்பில் துடித்தது.

இந்தக் கணம் இந்த உலகில் இல்லாது போனால் நல்லது என அவனுக்குத் தோன்றியது. எப்படிப் போவது? எங்கே போவது? என்று அவனுக்கு விளங்கவில்லை.

இப்போதே வீட்டிற்குப் போகப் பிடிக்கவில்லை. வீட்டிற்குப் போகாது எங்கே போவது என்றும் தெரியவில்லை. மத்திய சுரங்க இரத நிலையத்தில் திடீரென இறங்கினான். வெளியே வந்து ஒஸ்லோசிற்றிப் பக்கம் ஏறியவன் கால் போன போக்கில் போனான். பழக்க தோஷம் அது குரன்லாண்ட் பக்கமாகச் சென்றது. அப்படிச் செல்லும் போது தொடர்ந்து நடந்தே வீட்டிற்குச் சென்றுவிடலாம் என்று தோன்றியது. அவன்

தொடர்ந்து நடந்தான். மனது ஓயாது எங்கெங்கோ ஓடியது. 'இது எப்படிச் சாத்தியம்?' என்கின்ற கேள்வி ஓயாது அவனைக் கொட்ட வரும் தேனீயாகக் கலைத்துக்கொண்டு வந்தது. அதைப் பற்றிச் சிந்திக்காது நடக்க வேண்டும் என்று நினைத்தான். அடுத்த கணமே அந்தச் சிந்தனைதான் அவன் நினைவு முழுவதும் புழுத்து நெளிந்து வழிந்தது.

சித்தனால் அந்த அவஸ்தையைத் தாங்க முடியவில்லை. திடீரெனப் பேய் போல ஓடினான். ஓடும்போதும் நினைவு அதற்குப் போட்டியாக ஓடி அவனை 'எப்படி இது சாத்தியம்?' என்று கேள்வி கேட்டது. அவனால் ஒரு கிலோமீற்றர்கூட ஓடமுடியவில்லை. மூச்சு வாங்கி நெஞ்சை இறுக்குவது போல இருந்தது. அவன் மீண்டும் நடந்தான்.

திவைத்தாவிற்கு வந்த சித்தன் அங்கிருந்த புல்வெளியூடாக நடக்கத் தொடங்கினான். பச்சை கம்பளத்தில் நடக்கின்ற சுகத்தை அவனால் அப்போது அனுபவிக்க முடியவில்லை. அவனால் நடக்கக்கூட முடியவில்லை. சக்தி அற்றவனாய் புற்றரையிலிருந்தால் பறுவாய் இல்லை எனத் தோன்றியது. அப்போதுதான் அவன் பக்கத்திலேயே மரத்தாலான ஒரு இருக்கை இருப்பதை அவதானித்தான். அதன் பின்பு அவனால் ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. அவன் அந்த மர இருக்கையிலிருந்தான். வானம் எல்லை இல்லாத நீலக்கடலாக வெளித்திருக்கச் சூரியனிலிருந்து வந்த வெள்ளி அலைகள் பூமியை வெளிச்சத்தால் மூழ்கடித்துக்கொண்டு இருந்தன. சிலர் புற்றரையிலிருந்து அந்த வெள்ளிக் குளிப்பின் கதகதப்பை அனுபவித்தனர்.

சித்தன் இருந்த அடுத்த கணமே அவனது மனது 'உன்னால் எப்படி இங்கே இருக்க முடிகிறது?' என்று அவனை நோண்டியது. அதேவேளை வீட்டிற்குச் சென்று என்ன செய்வது என்றும் விளங்கவில்லை. அங்கே சென்றால் இந்தக் கேள்விகள் கூடு கலைந்த குழவிகளாய் கொட்டித் தீர்க்கும் என்பது விளங்கியது. அந்தக் குழவிகளிடம் இருந்து எப்படி விடுதலை பெறுவது என்கின்ற திகைப்பு எழுந்தது. விடுதலை பெறுவதற்கு ஏதாவது வழி இருக்கிறதா? அதற்கான விடை அம்மாவிடம்தான் இருக்கிறது. ஆனால் அதைக் கேட்க முடியாது என்பதும் விளங்கியது. கேட்காவிட்டால் பயித்தியம் பிடித்துவிடும் என்று தோன்றியது. அப்படி என்றால் என்ன செய்வது என்று யோசித்தவனுக்கு விடை தெரியவில்லை.

கோபம் வந்தது. கோபத்தோடு இருக்கையைவிட்டு எழுந்து மீண்டும் நடக்கத் தொடங்கினான்.

நேற்றைய நாள் அமைதியாக இருந்தது. இன்றைய நாள் இப்படி அமையும் என்று அவன் கனவுகூடக் கண்டதில்லை. கணத்திற்குக் கணம் மாறி மாறி நினைத்திருக்க முடியாதனவெல்லாம் நடக்கும் மனித வாழ்க்கை இது. சித்தனுக்கு இந்த மனித வாழ்வின் ஜதார்த்தம் விளங்கியது. மனித வாழ்வில் நடக்கும் பல விடயங்களை நிறுத்த மனிதனாலே முடியாது என்கின்ற உண்மையும் விளங்கியது. தனது வாழ்வில்… இதற்குத் தன்னால் எதுவும் செய்ய முடியாது என்பது தெளிவாகிற்று. இதைத் தெளிவாக்க வேண்டியவள் அம்மா. அவளிடம் எப்படி இதைக் கேட்பது என்கின்ற கேள்வியின் இடையறாத மீள் எழுச்சி, உயிர்ப்பு.

இத்தனை பிரச்சினை நடந்தாலும் கட்டைக்குப் போகும் மாட்டைப் போலக் கால்கள் வீட்டை நோக்கிச் சென்றன. அதன் இயக்கத்திற்குக்கூடத் தன்னால் தடைபோட முடியாது என்று அவனுக்கு அப்போது தோன்றியது. பிரச்சினையைக் கண்டு ஓடிக்கொண்டு இருந்தால் தொடர்ந்து ஓடிக்கொண்டே இருக்க வேண்டியதுதான். அதற்கு முடிவு வேண்டும் என்றால் அதைச் சந்தித்தாக வேண்டும். அதைச் சந்திப்பது என்றால் வீட்டிற்குச் செல்ல வேண்டும். அம்மாவிடமே இதற்கு விளக்கம் கேட்க வேண்டும். நடப்பது நடக்கட்டும் நடையும் அதன்பாட்டில் செல்லட்டும் என்கின்ற எண்ணத்தோடு அவன் நடந்தான்.

எதிரே ஒரு பெண் தனது குழந்தையைக் காப்பகத்திலிருந்து எடுத்துக்கொண்டு வந்தாள். எந்த வித்திலிருந்து இந்த முளை கிளம்பி இருக்கும் என்பது அந்தப் பெண்ணிற்குத்தான் முழுமையாகத் தெரியும். மற்றவர்கள் அவள் சொல்வதைத்தான் கேட்க வேண்டும். அதுவே தன்னுடைய நிலை என்பதும் அவனுக்கு விளங்கியது. அம்மா சொல்ல வேண்டும். அதுவும் உண்மையைச் சொல்ல வேண்டும். 'சொல்வாளா?' விளங்கவில்லை. அதற்காக முயற்சி செய்யாது இருக்க முடியாது என்பது விளங்கியது.

சித்தனின் அன்ன நடைகூட அவனை வீட்டிற்குக் கொண்டு வந்து சேர்த்தது. ஒவ்வொரு நாளும் வீட்டிற்கு வரும்போது ஒரு துள்ளலுடன் வருவான். இன்று

அதற்குப் பதிலாகக் கண்ணி வெடியில் கால் வைப்பது போன்ற அவஸ்தையும் நடுக்கமும். இருந்தும் உள்ளே போவதைத்தவிர வேறு வழி இருக்கவில்லை.

அவன் உள்ளே சென்றான். அம்மா சமையல் அறையில் ஏதோ அலுவலாக இருந்தாள். நிச்சயம் நோர்வேயில் ஐந்து மணிக்குச் சாப்பிடும் பிரதான சாப்பாடாகத்தான் இருக்கும். இன்று வருவதற்குப் பிந்தியதில் அம்மா பதட்டம் அடைந்திருப்பாளா என்பது அவனுக்குத் தெரியாது. அது அவளுடன் கதைத்தால்தான் தெரியும். சித்தன் தனது அறைக்குச் சென்றான். மலர்விழி அவன் போவதைப் பார்த்துவிட்டுச் சாப்பாட்டைப் பரிமாறுவதற்கான ஆயத்தம் செய்யத் தொடங்கினாள்.

அறைக்குச் சென்ற சித்தனுக்கு அறைக்குள் இருப்பது இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழி இல்லை என்று தோன்றியது,

கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும்
தேடுங்கள் கிடைக்குமென்றார்
இயேசு தேடுங்கள் கிடைக்குமென்றார்... என்பதாக அவனுக்குத் தோன்றியது. அம்மாவிடம் கேட்டால்தான் இதற்குப் பதில் கிடைக்கும் என்று இயேசுவே சொல்வது போல இருந்தது. சித்தன் துணிவை வரவழைத்துக்கொண்டு சமையல் அறைக்குச் சென்றான். அவனைக் கண்டவுடன் ஏக்கத்தோடு காத்திருந்த மலர்விழி,

'என்னடா நடந்தது உனக்கு சித்தா? வேலையால வந்து பேசாமல் கொள்ளாமல் அறைக்கு போயிட்டாய். அம்மா இங்க நிற்கிறது கண்ணில படேல்லையே? உன்ர முகமேன் கறுத்துப்போய்க் கிடக்குது. என்ன நடந்தது உனக்கு?'

'தலையிடி அம்மா...'

'அதுதான் எதால வந்தது எண்டு கேட்கிறன். சொல்லு சித்தா' என்றுவிட்டு மலர்விழி சாப்பாட்டைப் போட்டுச் சித்தன் முன்னே வைத்தாள். அன்று குத்தரிசி சோற்றுடன் மீன் குழம்பு, மீன் பொரியல், கத்தரிக்காய் பால் கறி சமைத்திருந்தாள். சித்தனுக்கு பிடித்தமான உணவுதான். மற்றும் வேளை என்றால் அவன் கதைப்பதைவிடச் சுவைப்பதில்தான் அதிகம் அக்கறை காட்டுவான். இன்று அவன் நிலைமை அப்படி இல்லை. சாப்பாட்டின் மேல் கையை வைத்திருந்தாலும் அதில் ஒரு பருக்கைகூட எடுத்து அவன் வாயில் வைக்கவில்லை. மனது ஓய்வின்றி அவன் வாழ்வின் வேர் தேடி ஓடியது.

மலர்விழி சித்தனைக் கவனித்துக்கொண்டு நின்றாள். அவளுக்குக் குருதியே கண்ணீராக வந்துவிடும் அவஸ்தை. சித்தனை இப்படிப் பார்ப்பது அவள் இதயத்தை அணுகுண்டு வைத்து நொறுக்கியது. அதற்கு மேல் பொறுக்க முடியாதவளாய், 'என்ன நடந்தது சித்தன்? ஏன் இப்பிடி இருக்கிறாய்? இந்த அம்மாவோடை அதைப்பற்றி எல்லாம் கதைக்கக் கூடாதே?' என்று கேட்டாள்.

'அம்மா நான் ஒண்டு கேட்டா உண்மையைச் சொல்லுவியா?'

'கேள் சொல்லுறன்'

'கேட்ட பிறகு பதில் சொல்லாமலிருக்கிறது இல்லை'

'இல்ல... நீ கேள் நான் சொல்லுறன்'

'நான் அண்டைக்கு எடுத்த *DNA test* முடிவுகளை இண்டைக்குப் பார்த்தன். எனக்குப் பைத்தியம் பிடிக்கிறமாதிரி அதிர்ச்சியா இருக்குதம்மா'

'ம்... அப்பிடி என்ன கண்டு பிடிச்சா?'

'அதை எப்பிடிச் சொல்லுகிறது?'

'பறுவாய் இல்ல, சொல்லு'

'உங்கட *DNA*-வும் என்னுடைய *DNA*-வும் ஒத்துப் போகுது. ஆனால் அப்பாவின்ர எந்தக் கூறும் என்னோட ஒத்துப் போகேல்லையே அம்மா'

மலர்விழி புன்னகை புரிந்தாள். அதில் பயமோ, கூச்சமோ, கவலையோ இருக்கவில்லை. அது சித்தனை மேலும் அதிர்ச்சியில் மூழ்கடித்தது. எப்படி அம்மாவால் இப்படித் துணிவாக இருக்க முடிகிறது என்பது அவனுக்குத் துளியும் விளங்கவில்லை. அம்மாவின் மறுமுகம் இதுவா என்கின்ற கேள்வி அவன் மனதில் எழுந்தது. எதற்கும் அம்மா என்ன விடை சொல்கிறாள் என்பதைக் கேட்போம் என்று காத்திருந்தான்.

'ஓ அதே உன்னுடைய பிரச்சினை. இதுக்கு நான் மட்டும் பதில் சொன்னால் நல்லா இருக்காது. அப்பா வரட்டும். அவரும் இருக்கேக்க கேட்கலாம். நீ இப்ப அதைப்பற்றிக் கவலைப்படாமல் சாப்பிடு'

'இல்லை அம்மா...'

'ச்... பேசாமல் சாப்பிடு சித்தன். அப்பா வரட்டும். நீ எது வேணுமெண்டாலும் கேட்கலாம். இண்டைக்கு கரட் கேக் செய்து இருக்கிறன். அப்பா வந்து முதல்ல சாப்பிடட்டும். பிறகு நாங்கள் கேக் சாப்பிட்டுக் கொண்டு, என்ன கதைக்க வேணுமோ அதைக் கதைக்கலாம்'

'சரி'

சித்தனுக்கு அம்மாவைப் பற்றி விளங்கவில்லை. அதற்காக இனித் தன்னை வருத்துவதில் எந்த அர்த்தமும் இல்லை என்பது விளங்கியது. அவன் சாப்பிட்டான். சாப்பிட்டு முடிந்ததும், 'நான் கொஞ்சம் வாசிக்க வேண்டி இருக்குது. அப்பா வந்து சாப்பிட்ட பிறகு என்னைக் கூப்பிடு' என்று கூறியவன் பதிலுக்குக் காத்திருக்காது எழுந்து தனது அறைக்குச் சென்றான்.

அறைக்குள் வந்தாலும் அவனால் அமைதியாக இருக்க முடியவில்லை. அம்மாவைப்பற்றி எதுவும் விளங்கவில்லை. 'அம்மா நல்லவளா அல்லது கெட்டவளா? அவளால் இவ்வளவு துணிவாக எப்படி இருக்க முடிகிறது? நான் படித்த உயிரியலுக்கும் மருத்துவத்திற்கும் அம்மா சவால் விடுகிறாளா? இது என்ன தலையிடி? இதற்கு எப்போது விடை வரும்?' சித்தன் மீண்டும் குழம்பினான்.

அவனால் மருத்துவம் பற்றி எதுவும் படிக்க முடியவில்லை. குனுாத் கம்சன் எழுதிய *SULT* (பசி) என்கின்ற நாவலை எடுத்து வாசிக்க முயன்றான். அது அவனறியாத காலத்தை, அவனறியாத மனிதர்களை, அவனறியாத பசியை, அவன் அறியாத கௌரவத்தை என்று பலதையும் பேசுவதாய் அவன் கேள்விப்பட்டு இருந்தான். இப்போது அதைத் தானும் வாசித்து அனுபவிக்க வேண்டும் என்று எண்ணிக் கையில் எடுத்தான். அடுத்த கணமே பரிசோதனை முடிவுகள் அவன் நினைவுக்கு வந்தன. எடுத்த நாவலை அவன் மீண்டும் மேசையில் வைத்தான்.

கதிரையிலிருந்து எழுந்தவன் ஜன்னலை நோக்கிச் சென்றான். பின்பு அதன் திரையை அகல விலக்கிவிட்டு வெளியே என்ன நடக்கிறது என்று கவனித்தான். ஒரு பிள்ளையை வண்டிலுக்குள்ளும், மறு பிள்ளையை வண்டிலில் கொழுவி இருந்த தட்டிலும் வைத்து அவர்களின் தாய் தள்ளிக்கொண்டு சென்றாள். 'இங்கே பலரும் தனித்தே பிள்ளைகளைக் கவனித்துக் கொள்கிறார்கள். அதற்கு அவர்கள் செய்யும் பிரயத்தனம் மதிப்பிட முடியாது. இயற்கை கொடுத்த பாசம் என்கின்ற மாய

உணர்வா? அல்லது மனித ஜதார்த்தமா?' என்று சித்தனுக்கு விளங்கவில்லை. 'அவர்கள் உழைப்பும் தியாகமும் உண்மையானவை. தன்னலம் அற்றவை. அதையே அம்மாவும் செய்தாள். சுயநலம் அற்ற தியாகம். சுத்தமான பாசம். நானே அதைச் சந்தேகப்படுவதாய் என் நடத்தை அமைந்துவிட்டது அல்லவா?' என்று சித்தன் எண்ணிக் குழம்பினான். அவன் கண்கள் முட்டி இமைகள் தாண்டின.

சித்தனால் அதற்கு மேலே அறைக்குள் இருக்க முடியவில்லை. அவன் வெளியே வந்தான். அப்பா வந்து சாப்பிட்டுக்கொண்டு இருந்தார். சித்தன் வதிவறைக்குச் சென்று தொலைக்காட்சியை இயக்கினான். தொலைக்காட்சியில் '*Food factory*' என்கின்ற நிகழ்ச்சி போய்க்கொண்டு இருந்தது. மனது குழம்பிப்போய் இருக்கும் போது காட்சிகள் மூளையில் ஏறுவதில்லை. சித்தனின் நினைவு அப்பா அம்மா என்று சுற்றியதில் பார்வை மட்டுமே தொலைக்காட்சியில் பதிந்து இருந்தது.
அவஸ்தையான காத்திருப்பு, ஆர்வமான காத்திருப்பு, கோபமான காத்திருப்பு, குளிர்ச்சியான காத்திருப்பு எனக் காத்திருப்புகள் பல வகைப்படலாம். சித்தனுக்கு இது அவஸ்தையான காத்திருப்பாய் நீண்டது.

அப்பா சாப்பிட்டு முடித்துவிட்டுச் சிரித்துக்கொண்டு சோபாவில் வந்து இருந்தார். அந்தச் சிரிப்பின் அர்த்தம் என்ன என்பதைச் சித்தனால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. அவர் சிரிப்பிலிருந்த கள்ளம் கபடம் அற்ற தன்மை சித்தனைக் காலில் போட்டு மிதிப்பதாகத் தோன்றியது. இதைப்பற்றி அம்மாவிடம் கேட்காது விட்டிருக்கலாமோ என்று ஒருகணம் தோன்றியது. இதற்குமேல் பின்வாங்க முடியாது. பின்வாங்கினாலும் அம்மா விடமாட்டாள் என்று தோன்றியது.

அம்மா பால் கோப்பியோடும் கரட் கேக்குடனும் சோபாவிற்கு வந்தாள். சோபா மேசையில் தட்டை வைத்துவிட்டு, கோப்பியை எடுத்து மூவர் முன்பும் வைத்தாள். அத்தோடு அணிச்சல் (*Cake*) வைத்துச் சாப்பிடுவதற்கு ஒவ்வொரு தட்டும் அவர்கள் முன்னே வைத்தாள். பின்பு அவற்றின் மத்தியில் அதை வைத்தாள். அதையடுத்து இருவரையும் பார்த்து, 'கேக்கை எடுங்க' என்றாள்.
'நீ கேக் செய்தால் விடமுடியுமா என்ன? பாதாம் பருப்பு, கயூ எல்லாம் போட்டிருக்கிறாய் போல இருக்குது' என்றான் செந்தில்.
'ம்… காடமொம்மவும் மணக்குது' என்றான் சித்தன்.

'அது சரி சித்தன்... இப்ப உன்ர கேள்வியைக் கேள்' என்றாள் மலர்விழி.

'இல்லையம்மா நீயே சொல்லு'

'என்னது தாயும் மகனுமாய் கதைக்கிறியள்? என்ன எண்டு எனக்குச் சொல்லுங்கோ' என்றான் செந்தில்.

'சித்தனுக்கு ஒரு சந்தேகம் வந்திருக்குது' என்றாள் மலர்விழி.

'என்ன அது?'

'*DNA test* எடுத்தவன் எல்லே. அதுகின்ர முடிவு வந்திருக்குது. அதைப் படிச்சுப் பார்த்து நீங்கள் அப்பா இல்லையோ எண்ட சந்தேகம் அவனுக்கு' என்றாள் மலர்விழி.

'ஐயோ அம்மா அப்பிடியா நான் சொன்னன்' என்று பதறினான் சித்தன்.

'எப்பிடிச் சொன்னாலும் அதுகின்ர அர்த்தம் அதுதானே' என்றாள் மலர்விழி.

'அம்மா யாரையும் எதுக்காகவும் காயப்படுத்திறது என்னுடைய நோக்கமே இல்லை. அப்படி இருக்க உன்னைக் காயப்படுத்துவனா? அதுகின்ர உண்மை என்ன எண்டு அறிய வேணும் எண்ட ஆர்வத்தில கேட்டன். அது உன்னைக் காயப்படுத்திறதா இருந்தா என்ன மன்னிச்சுக்கொள்' என்றான் சித்தன்.

'நீ சொன்னது உண்மைதான் சித்தா. இனியும் நீ அதை அறியாமலிருக்கக்கூடாது. ஏற்கனவே நாங்கள் அதைச் சொல்லி இருக்கோணும். நாங்கள் வளர்ந்தவிதம் எங்களால அதைச் சொல்ல முடியேல்ல... அதுக்காக எங்களை மன்னிச்சுக்கொள்' என்றான் செந்தில்.

'நீங்கள் ஏன் அப்பா மன்னிப்புக் கேட்கிறியள்? அம்மாவிட்ட கேள்வி கேட்டால் நீங்கள் பதில் சொல்லுறியள். எனக்கு ஒண்டும் விளங்கேல்லை' என்றான் சித்தன்.

'அதுதான்ரா எங்கடை உறவு. அவளுக்குத் தெரியாமல் நான் எதுவும் செய்ததில்லை. எனக்குத் தெரியாமல் அவளும் எதுவும் செய்ததில்லை. நீ அம்மாவிட்ட கேட்ட கேள்விக்கு எனக்குப் பதில் தெரியும் எண்டால் உனக்கு விளங்கோணும்' என்றான் செந்தில்.

'உங்கடை உறவை சந்தேகப்பட நான் யார். ஆனால் ஏன் நான் எடுத்த *DNA* றிப்போட் அப்படி வரோணும்? அதுதான் என்ரை தலையிடி' என்றான் சித்தன்.

'அதுதானடா ஏற்கனவே சொன்னன்... அந்த *DNA* றிப்போர்ட் உண்மை எண்டு' என்றான் செந்தில்.

'என்ன சொல்லுறியள் அப்பா? அது எப்பிடிச் சாத்தியம்?' என்றான் சித்தன்.

'ஏன் எண்டா உன்னுடைய உயிரியல் அப்பா நான் இல்லை. அப்பா ஆகிற தகமையும் எனக்கு இருக்கேல்லை. நீ டொக்ரருக்கு படிக்கிறாய்… உனக்கு இது ஒரு பெரிய விஷயமா இருக்காது. எங்களுக்குக் குழந்தை வேணும் எண்டு நாங்கள் விரும்பேக்க என்னுடைய ஸ்பாம் அதுக்குத் தகுதி அற்றது எண்டு கண்டு பிடிச்சாங்கள். எங்களுக்கு வேற ஒரு வழியும் இருக்கேல்லை. பல முயற்சிகளுக்குப் பிறகு நாங்கள் ஸ்பாம் தானமாக வாங்கித்தான் உன்னைப் பெத்தம். அதால நீ *DNA test*-இல என்னைத் தேடினா கண்டு பிடிக்கேலாது' என்றான் செந்தில்.

'அப்பா… என்ன சொல்லுறியள்? என்னால நம்ப முடியாமலிருக்குது' என்றான் சித்தன்.

'இதிலையும் யாரும் பொய் சொல்லுவினமா சித்தன்?' என்றான் செந்தில்.

சித்தன் பொறுக்க முடியாது தேம்பித் தேம்பி அழத் தொடங்கினான். செந்தில் அவனைத் தன்னோடு அணைத்துக்கொள்ள மலர்விழியும் அதில் சேர்ந்து கொண்டாள். சித்தன் தொடர்ந்தும் அழுதான்.

'எதுக்கட நீ இப்ப அழுகிறாய்? நீ அழுகிறதுக்கு இதில என்னடா இருக்குது? அப்பிடி இருந்தாலும் அது உன்ரை பிழை இல்லையடா' என்றாள் மலர்விழி.

'இல்லையம்மா உங்களைப்போய் நான் தேவையில்லாத கேள்வி கேட்டுக் குழப்பி இருக்கிறன் எண்டு கவலையா இருக்குது. எனக்காக நீங்கள் இரண்டுபேரும் வாழுறியள். நான் உங்களைப்போய்… சீ நான் என்ன மனிசன்…' என்றான் சித்தன்.

'இது நீ அறிய வேண்டிய விஷயம்தான். நீ கேட்டதும் சரிதான். இதுக்காக நீ கவலைப்படுகிறதுதான் எங்களுக்குச் சங்கடமாய் இருக்குது' என்றான் செந்தில்.

'நீங்கள் அப்பா அம்மா இல்லை. என்னைப் படைச்ச தெய்வங்களா உயர்ந்திட்டீங்க' என்றான் சித்தன்.

'இப்ப இவன் நல்லாய் வசனம் கதைக்கிறான்' என்றாள் மலர்விழி.

'அதைவிடுங்க… நான் ஒண்டு கேட்கட்டா? அப்படிக் கேட்கிறது சரியா எண்டு எனக்குத் தெரியாது, எண்டாலும் கேட்கோணும் போல இருக்குது' என்றான் சித்தன்.

'ம்… கேள். எங்களுக்குத் தெரிஞ்சதை நாங்கள் சொல்லுறம்' என்றாள் மலர்விழி.

'உங்களுக்கு ஸ்பாம் தந்தவரைத் தெரியுமா?' என்றான் சித்தன். அப்பா அம்மாவை நிமிர்ந்து பார்க்க முடியாத வெட்கத்தில் தலையைக் குனிந்துகொண்டான்.

'ஓ… நீ உன்னுடைய உயிரியல் அப்பாவைக் கேட்கிறாய். அது உன் உரிமை சித்தா. நாங்கள் ஸ்பாம் தமிழ் ஆளிட்ட இருந்து எடுக்கோணும் எண்டதால ஒரு தரகர் மூலம் எடுத்தம். அப்ப தானம் பண்ணுறவரை நாங்கள் தெரிஞ்சு கொள்ள முடியாத நிலை. எல்லாருடைய விருப்பமும் அப்ப அதுதான். அதால யார் தந்தது எண்டு எங்களுக்குத் தெரியாது. தரகர் சொன்ன தகவலின்படி அவர் அப்ப டொக்ரருக்கு படிச்சுக்கொண்டு இருந்தார் எண்டது மட்டும் தெரியும்' என்றான் செந்தில்.

'எங்க இது எல்லாம் நடந்தது?' என்றான் சித்தன்.

'டென்மார்க்கில. சொப்ன்காவன்னில… உனக்குப் பார்க்க வேணும் எண்டால் எங்களுக்கு தொடர்பு ஏற்படுத்தித் தந்த தரகர் இப்ப என்ன செய்யிறார், எங்க இருக்கிறார் எண்டு விசாரிச்சுப் பார்க்கிறன். அது உன்னுடைய உரிமைகூட' என்றான் செந்தில்.

'அதெல்லாம் தேவையில்லை அப்பா. சொறி அம்மா' என்றான் சித்தன்.

'ஆருக்குத் தேவையடா உன்ர சொறி எல்லாம். போ… போய் உன்ரை அலுவலைப் பார். நாளைக்கு வெதர் நல்லா இருந்தால் மூண்டுபேரும் ரூர் போட்டு வரலாம்' என்றாள் மலர்விழி.

'அது நல்ல ஐடியா' என்றான் செந்தில்.

'சரி நான் அறைக்குப் போறன். எனக்கு நிறைய வாசிக்கோணும். குநாத்'

'ம்… குநாத்'

சோபாவிலிருந்து செந்திலும் மலர்விழியும் போகும் சித்தனையே பார்த்தவண்ணம் இருந்தனர்.

அறைக்குள் வந்த சித்தனுக்குத் தனது சிறுமை விளங்கியது. சுயநலமற்றுத் தனக்காக வாழும் அப்பா அம்மாவை, அவர்களின் உறவைத் தான் இப்படிக் கொச்சைப்படுத்தினேனா என்பது நெஞ்சில் பழுக்கக் காய்ச்சிய வேலாக இறங்கியது. அவர்கள் தங்களால் இயன்றதைச் செய்து இருக்கிறார்கள். அதை விளங்கிக் கொள்ளாமல் *DNA*-யை வைத்துக் கொண்டு அவர்களைச் சந்தேகப்படுவது போலக் கேட்டது எப்படியான முட்டாள்தனம் என்று அவனுக்குத் தோன்றியது. செய்ததை மாற்ற முடியாது. கடந்ததை எட்டிப்பிடிக்க முடியாது. இனியாவது அவர்களைக் காயப்படுத்தாது இருக்க வேண்டும் என்று எண்ணினான்.

அடுத்த சில கணங்களிலேயே அதுவும் தன்னால் முடியாது போய்விடுமோ என்கின்ற பயம் வந்தது. சிகரமாய் அப்பா அம்மா பற்றிய மதிப்பு உயர்ந்து நின்றாலும் தான் ஏதோ முழுமை பெறாதவன் என்கின்ற எண்ணம் அவனுள் எழுந்தது. இவர்கள்தான் அப்பா அம்மா என்கின்ற நிலை எப்போதும் மாறப் போவது இல்லை என்றாலும் உயிரியல் அப்பா என்கின்ற ஸ்தானம் ஒன்று அதன்பின்னே மறைந்திருப்பதையும் அவனால் மறுக்க முடியாது இருந்தது.
யார் அந்தத் தரகர் என்பது தெரியாது. யார் அந்த உயிரியல் அப்பா என்பது தெரியாது. அவருக்கு என்ன பெயர்? எப்படி இருப்பார் என்பதுகூடத் தெரியாது. 'என்னைப் போல இருப்பாரா?' என்கின்ற ஒரு கேள்வி அவனிடம் தோன்றியது. திறன்பேசியைத் தட்டி தனது சில நிழற்படங்களைப் பார்த்தான். 'அம்மாவின் சாடையா அப்பாவின் சாடையா?' அம்மாவின் சாடை இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை. 'அப்படி என்றால்? எப்படி?' அவனுக்கு எதுவும் விளங்கவில்லை.

'எதுவுமே தெரியாது சொப்பன்கவுனில் யாரை, எப்படிக் கண்டுபிடிப்பது? மருத்துவர்களாய் இருக்கும் தமிழர்களின் பட்டியலைத் தயாரித்தால். சொப்பன்கவுன் பல்கலைக்கழகம், டென்மார்க் றிக்ஸ் கொஸ்பிற்றல் போன்றவற்றோடு தொடர்புகொண்டு அந்தப் பட்டியலை எடுக்க முடியுமா? முயன்றால்தான் தெரியும்' என்று அவனுக்குத் தோன்றியது.

'இப்படி உயிரியல் அப்பாவைத் தேடுவது பற்றி அப்பா அம்மா அறிந்தால் அவர்கள் மனது என்ன பாடுபடும்? ஏதோ உடலிலிருந்து வந்த திரவம் என்பதாய் கொடுத்துவிட்டு, அதை மறந்து தனது வாழ்க்கையில் மூழ்கிப் போய்விட்ட ஒரு மனிதரை அப்பா என்று தேடத்தான் வேண்டுமா? அது எனக்கே அவமானம் இல்லையா? குப்பைத் தொட்டியில் போடுவதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? வித்தியாசம் இருக்கிறது. இது தானம். உதவி என்று நினைத்துச் செய்யப்பட்ட தானம். அதற்கு ஒரு மனது இருக்க வேண்டும். அந்த மனது படைத்தவராய் இருந்ததில் அவரும் ஒரு உயர்ந்த பண்புடைய மனிதரே. அப்படி என்றால் அவரைச் சந்திப்பதா? இந்த அப்பாவா? அந்த அப்பாவா?'

சித்தனுக்கு அதற்கு மேல் சிந்திக்கப் பிடிக்கவில்லை. யாராவது நண்பர்கள் வீட்டிற்குச் சென்று குடித்துவிட்டுப் படுக்க வேண்டும் என்று தோன்றியது.

அதையும் கொரோனா வழிமறித்தது. அவன் சோர்ந்து போய் படுக்கையில் விழுந்தான்.

11

சித்தன் ஆராய்ச்சிக் குழுவில் சேர்ந்ததிற்கு அமுதினி வாழ்த்துத் தெரிவித்த பின்பு, அவன் அவளுடன் தொடர்புகொள்ளவில்லை. அவளும் தன்மானத்தை விட்டுத் தொடர்புகொள்ள வேண்டும் என்று நினைக்கவில்லை. என்றாலும் மனது எண்ணெய்ச் சட்டியில் விழுந்த கணவாயாகத் துடித்தது. தொடர்புகொள் என்று ஆசை உந்தித் தள்ளினாலும் வில்லங்கம் பிடித்த தன்மானம் வழிமறித்துக்கொண்டு நின்றது. அதை வென்று முன்னேறமுடியாத அவஸ்தையில் துடித்தாள். ஆசைக்கும் தன்மானத்திற்கும் இடையில் அசுரப் போராட்டம் நடந்துகொண்டு இருந்தது. அதில் ஆசை வெல்லுமா தன்மானம் வெல்லுமா என்கின்ற உண்மை அமுதினிக்குத் தெரியவில்லை.

மது ஒருவிதமான போதை என்றால்; காதல் இன்னொரு விதமான போதை. போதையில் விழுந்தவனுக்கு மானம் என்ன அவமானம் என்ன? அதேநேரம் அமுதினியின் மான அவமானத்திற்கான போராட்டம் மாச்சில்லைக் கண்ட பக்கத்துவீட்டு நாயாக அடிபணியத் தொடங்கியது. அது வாலைப் பதித்து அடிபணிய, சித்தனோடு கதைக்க வேண்டும் என்கின்ற ஆசையை கட்டுப்படுத்த முடியாது எழுந்து நின்றது.

அப்படிக் கதைத்தால் அவன் என்ன சொல்வான் என்கின்ற தயக்கம் அந்த ஆசையின் காலைப் பிடித்து இழுத்தது. அதனால் சில நாள்களைக் கடத்த முயன்றாலும் அது முற்றுப்புள்ளியாகவில்லை. மீண்டும் அந்த ஆசை மூர்க்கமாக அவளை உந்தித் தள்ளியது. சித்தன் வழிந்த போது அமுதினி நிதானமாக இருந்தாள். இப்போது அவன் கண்டு கொள்ளாத கணத்தில் அவனோடு கதைக்க வேண்டும் என்று துடித்தாள். தன்மீது கவனம் காட்டும்போது தேவையில்லை என்கின்ற நடிப்பு. அது தன்மீது இல்லை என்கின்றபோது ஏக்கத்திலான துடிப்பு. இதுதான் ஆணுக்கும் பெண்ணுக்குமான ஊடலா என்பது அவளுக்கு விளங்கவில்லை. இருக்கலாம் என்று தோன்றியது. அவன் வழிந்த போது இருந்த தன்னம்பிக்கையும் துணிவும் இப்போது எங்கோ தொலைந்து போனதான ஒரு உணர்வு. தோல்வி என்று நினைத்தால் அவனோடு தொடர்புகொள்ள முடியாது.

தொடர்பு கொள்ளாவிட்டால் அது நிரந்தரத் தோல்வியாகவே முடிந்துவிடும் என்பது விளங்கியது. அதற்கு ஒரு முடிவு கட்டுவது என்றால் துணிவை வரவழைத்துக்கொண்டு அவனைத் தொடர்பு கொள்ள வேண்டும். அவள் முடிவு செய்து கொண்டாள். இருமுறை மறுமுனை அனுங்கிய பின்னர், 'ஹலோ' என்று உயிர் பெற்றுக் கொண்டது.

'நான் அமுதினி'

'ம்... தெரியுது'

'என்ன பேச்சையே காணம். என்ன நடந்தது?'

'ஏதோ எல்லாம் நடந்திச்சுது அமுதினி. என்ன செய்ய முடியும்? இண்டைக்கு இருக்கிறமாதிரி நாளைக்கு இருக்க முடியாத வாழ்க்கை. நாளைக்கு இருப்பது போல அதற்கு மறுநாள் இருக்க முடியாத வாழ்க்கை. இதையெல்லாம் உமக்குச் சொல்லி ஏன் உம்முடைய நிம்மதியையும் குழப்புவான் என்று விட்டிட்டன்'

'என்ன ஒரு மாதிரிக் கதைக்கிறியள்? என்ன நடந்தது? என்னிட்ட விபரமாச் சொல்லலாம் தானே'

'அது ஒண்டும் இல்லை. நீங்கள் எப்படி இருக்கிறியள்?'

'நான் நல்லா இருக்கிறன். ஆனால் நீங்கள் கதையை மாத்தாமல் உண்மையைச் சொல்லுங்க... ஏதோ நடந்து இருக்குது. நீங்கள் அதைச் சொல்ல மறுக்கிறியள். சொன்னால்தானே உங்களுக்கும் நிம்மதியாய் இருக்கும். நான் உங்களைத் தொந்தரவு பண்ணுறன் எண்டு நினைச்சா மன்னிச்சுக் கொள்ளுங்க'

'அப்பிடி எல்லாம் இல்லை. சின்னப் பிரச்சினைதான். நேரம் வரேக்க சொல்லுறனே. நீயும் இதைப் பற்றி அறியத்தான் வேணும். அதை எப்படிச் சொல்லுறது எண்டுதான் எனக்குத் தெரியேல்ல'

'உம்... உங்கட நிலைமை விளங்குது. உங்களுக்கு வசதியா இருக்கேக்க சொல்லுங்க... நான் உங்களைக் கஸ்ரப்படுத்தினதுக்குச் சொறி'

'சீ அப்பிடி ஒண்டும் இல்லை'

'சரி அப்ப நான் வைக்கட்டே?'

'அமுதினி... உன் நினைவு அடிக்கடி வரும். அதைவிட வேலையும் அதால வந்த பிரச்சனைகளும் கொஞ்சம் என்னை ஆக்ரமிச்சிட்டுது. அதுக்காக உன்னை நான் ஒருகணம்கூட மறந்தது கிடையாது. உம்முடைய நினைவு எண்டுறது ஓயாத அலைமாதிரி. அது மனதைக் கடலாக்கி சுனாமியாகத் தொடர்ந்து அடிக்குது'

'ம் சந்தோஷம். நீங்கள் உங்கட பிரச்சினையைப் பாருங்க… நேரம் வரேக்க கதைப்பம்'

'அமுதினி என்ன அவசரம்?'

'அப்பிடி ஒண்டும் இல்ல… சொல்லுங்க'

'நாங்கள் சந்திப்பமா?'

'ம்… எப்ப? எங்க?'

'ஞூர் போகலாமா? நாளைக்கு ஐஞ்சு மணிக்கு வருவீங்களா?'

'பிரச்சினை இல்லை. எனக்கு நாளைக்கு காலமை வேலைதான். நான் ஐஞ்சு மணிக்கு வாறன். காத'

'காத'

*

சில நாள்களாகப் பூமிக்கு வெள்ளி முலாம் பூசியதாகத் தொடர்ந்து வெயில் எறித்துக்கொண்டு இருக்கிறது. காலநிலையும், மனிதர்களின் உணர்ச்சி மாற்றமும் கணிப்பிட முடியாதவை. அடிக்கடி கணிப்பிட முடியாத கோலத்தில் மாறிக் கொண்டே இருக்கும். வானிலையை ஒருநாள் அல்லது இரண்டு நாளிற்கு ஓரளவு கணிக்க முடிந்தாலும் மனித உணர்வின் மாற்றத்தைக் கணிப்பது கணிதத்தாலும் முடியாத ஒன்று.

காலநிலையின் குணத்திற்குச் சவால் விடுவது போல இந்த வெள்ளி முலாம் சிலவேளை வியக்க வைத்துவிடுகிறது. வெள்ளி முலாமாக வெயில் எறித்தாலும் மெல்லிய குளிர் தோலைச் சுரண்டிக் கொண்டு இருந்தது. சிறிது தூரம் ஓடினால் அல்லது நடந்தால் அதன் சுரண்டல் ஓட்டிற்குள் ஒடுங்கிய நத்தையாகிவிடும்.

சித்தன் ஓட்டமும் நடையுமாக வந்து றேமாதூாசனுக்குப் பக்கத்தில் காத்துக்கொண்டு நின்றான். அமுதினி இன்னும் வரவில்லை. கடைக்குப் போகின்றவர்களையும் தெருவால் போகின்றவர்களையும் பராக்குப் பார்த்தவண்ணம் நேரத்தைப் போக்கினான். நோர்வேயில் வியாபாரம் நடத்துவது என்றால் பெரிய அளவில் செய்ய வேண்டும். அல்லது பெரிய நிறுவனங்களின் கிளையாக இருக்க வேண்டும். இந்தக் கடையும் பெரிய நிறுவனமொன்றின் கிளைதான். கட்டுப்பாட்டு விலைகள் எதுவும்

இல்லாத இந்த நாடு ஒருவகையில் வியாபாரிகளின் சொர்க்கமே. அதற்குத் தடையாக இருப்பது இடமும் அதன் வாடகையும் மட்டுமே. அதைக்கூடப் பெரிய நிறுவனங்கள் சொந்தமாக வாங்கி வைத்துக் கொள்வார்கள். மக்களும் பெரிய கடைகளை விரும்புவது அவர்கள் இயல்பாக இருக்கிறது. இதில் நலிந்து, நொடிந்து இருந்த இடத்திலிருந்து இல்லாது மறைந்து போகும் பல சிறு வியாபாரிகளின் சோகம் தொடர்கிறது. நோர்வேயில் மட்டும் இல்லாது இதன் தாக்கம் உலகம் முழுமையும் பரவுகிறது. 'அது சரி... சொந்த பிரச்சனைக்கு விடை இல்லை. உலகமயமாக்கலைப் பற்றி நான் ஏன் சிந்திக்கிறேன்?' என்று எண்ணிய பொழுது அமுதினி சிரித்தவண்ணம் அவனருகே சட்டென வந்தாள். அவள் ஓடி வந்ததில் வியர்த்து இருந்தாள். அந்த வியர்வைத் துளிகள் அவளது பழுத்த எலுமிச்சைத் தோலில் வயிரக் கற்களாய் மினுங்கின. அமுதினியைப் பார்த்ததும் சித்தனுக்கும் புன்னகை தொற்றிக்கொண்டது. அவன் அவளைப் பார்த்து, 'நல்ல வெதரா இருக்குது. ஓடுவமா?' என்று கேட்டான்.

'எத்தினை மீற்றர் ஓடப்போறியள்? சரி வாங்க றை பண்ணுவம்' என்று கேட்டுச் சிரித்துக் கொண்டு அவள் ஓடத் தொடங்கினாள். சித்தனும் அவளோடு சேர்ந்து ஓடத் தொடங்கினான். இருவரும் வழமைபோல தெருவைக் கடந்து ஏற்றமான அந்தப் பாதையால் காட்டை நோக்கி கனத்த சுவாசத்தோடு ஓடினார்கள்.

ஒரு சில நூறு மீற்றர்கள் ஓடியதும் மூச்சு வாங்கத் தொடங்க, சித்தன் கால்கள் கனக்க, ஓட்டத்தின் வேகம் தடையாகி நடையாகியது. பின்பு அது மேலும் மென் நடையானது. அமுதினி சித்தனைப் பார்த்துச் சிரித்தவண்ணம் தனது வேகத்தைக் குறைத்து நடக்கத் தொடங்கினாள். பின்பு 'இவ்வளவுதான் எங்கடை ஓட்டமா?' என்று கேட்டாள்.

'இண்டைக்கு இவ்வளவுதான் அமுதினி. கொஞ்சம் கொஞ்சமாய் அதைக் கூட்டுவம். எனக்கு என்னவோ உம்மைக் கண்டபிறகுதான் மனசு கொஞ்சம் லேசானமாதிரி இருக்குது' என்றான் சித்தன்.

'அப்பிடியா... அது நல்ல தொடக்கம்தானே'

'நல்ல தொடக்கத்தோட நிக்காமல் தொடர்கதையாக வேணும்'

'அதுதானே ஏற்கனவே ஒப்பந்தம் செய்தாச்சுது. பிறகென்ன உங்களுக்குக் கவலை'

'கவலை இல்லை. பதட்டம் இல்லை. இது ஒரு ஆசை... விருப்பம்...'

'அது இருக்கட்டும். நீங்கள் சொல்ல வந்த விஷயத்தைச் சொல்லுங்க'

'ஓ அதுவா? நான் ஆராய்ச்சி குழுவில சேர்ந்ததைப் பற்றிச் சொன்னன் இல்லையா'

'ம்… சொன்னீங்க… நானும் வாழ்த்துச் சொன்னனே'

'அதுக்கு நிறைய *DNA* சாம்பிள் தேவைப்பட்டிச்சு. அதனால நான் எங்கடை குடும்ப *DNA*-ஐயும் குடுத்தன். அதுகின்ர முடிவுகளைப் பதியிற வேலையும் செய்தன்'

'அதே உங்கடை ஆராய்ச்சிக்கான வேலை இல்லையா?'

'ம்… அதிலதான் ஒரு உண்மை எனக்குத் தெரிய வந்திச்சுது'

'என்ன அது?'

'என்னுடைய *DNA*-யும் அம்மாவின்ர *DNA*–யும் ஒத்துப் போச்சுது. ஆனா அப்பாவின்ர *DNA*–யும் என்னுடைய *DNA*–யும் கொஞ்சம்கூட ஒத்துப் போகுதில்லை'

'ஓ… ஏதாவது மிஸ்ரேக் நடந்திருக்கும்'

'மிஸ்ரேக்தான். ஆனா அது பரிசோதனை முடிவில இல்லை'

'என்ன சொல்லுறியள் சித்தன்?'

'எனக்கும் முதலில விசராகத்தான் இருந்திச்சு. என்னுடைய உலகமே உருக்குலைஞ்சு போனமாதிரியான வேதனை. நான் பித்துப் பிடிச்சவன் மாதிரிதான் அண்டைக்கு வீட்டையே போனன்'

'ம்… பிறகு?'

'வீட்டுக்குப் போனபிறகு என்னால பொறுமையா இருக்க முடியேல்ல… அம்மாவிட்ட விஷயத்தைக் கேட்டன். அம்மா சிரிச்சா. பிறகு அப்பாவும் வரட்டும் கதைக்கலாம் எண்டு சொன்னா'

'பிறகு அப்பாவோடை கதைச்சியளா?'

'கதைச்சன். அப்பதான் ஒரு உண்மையைச் சொல்லிச்சினம்'

'என்ன அது?'

'என்னுடைய பிறப்பு இரகசியம். அம்மா உண்மைதான். அப்பாவின்ரை இயலாமையால அவை விந்து கடன் வாங்கி இருக்கினம். அதாலதான் அப்பாவுடைய *DNA*–யும் என்னுடைய *DNA*–யும் ஒத்துப் போகேல்ல'

'ஓ… இவர் உங்கடை உயிரியல் அப்பா இல்லையா?'

'ம்… ஆனா அவர்தான் அப்பா எண்டது எண்டைக்கும் என் மனதில இருந்தோ செயலில இருந்தோ மாறாது'
'ம்… அது எப்பிடி மாறும் சித்தன்? அவையின்ர தியாகம் அப்பிடிப்பட்டது'

அமுதினிக்கு அதிர்ச்சியாக இருந்தது. இப்படி இருக்கும் என்கின்ற கற்பனை அமுதினிக்கு இருந்ததில்லை. அதிர்ச்சியாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ள முடியாத உண்மை இல்லை என்று அவளுக்கு விளங்கியது. எது எப்படி இருந்தாலும் தனக்கு சித்தனிலிருக்கும் காதல் எப்போதும் மாறாது என்பதும் தெளிவாகியது. அவனே தனது இறுதி இலக்கு என்பதில் அவள் இதயம் உருகிக் கிடப்பதை அவள் உணர்ந்தாள். எத்தனை தடைகள் வந்தாலும் சித்தனுடன்தான் தன் வாழ்க்கை என்பதில் உறுதி பூண்டாள்.

'எனக்கு அந்த உண்மை தெரிஞ்ச பிறகு என்ன நினைக்க அவமானமாக, வெட்கமாக இருந்திச்சுது. நான் அவைய அப்படிக் கேட்டிருக்கக் கூடாது. அது அவை செய்த தியாகத்திற்கு நன்றி இல்லாமல் நான் செய்த பெரிய அவமானம் எண்டு நினைக்கிறன். நான் அவையிட்ட அதுக்கு மன்னிப்புக் கேட்டாலும் இன்னும் அது மனதில உறுத்திக் கொண்டுதான் இருக்குது' என்று தொடர்ந்தான் சித்தன்.
'தெரிஞ்சா செய்தனியள் சித்தன்? தெரியாமல்தானே செய்தியள். அவை உங்களைப் பெத்து வளர்த்தவை. அவைக்கு எப்பிடி உங்களில கோபம் வரும். தேவையில்லாமல் கவலைப்படாதையுங்க'
'ம்… அவை கோவப்படமாட்டினம் எண்டும் தெரியும். இருந்தாலும் நான் செய்தது தப்பு எண்ட உணர்வு என்னை விட்டு வைக்கிதில்லை'
'அதைப்பற்றி யோசிக்காமல் விடுங்க சித்தன்'
'ம்… அது நல்ல யோசினைதான்'
'எந்த மாற்றங்களும் உண்மைகளும் இனி எங்களை மாற்ற முடியாது இல்லையா?'
'அது அசைக்க முடியாத உண்மை அமுதினி. என் இதயத்தில் வீற்றிருக்கும் தாரகை நீ'
'ஓ நல்லா வசனம் வருகுது. பார்த்து ஓடுங்கோ'
'அது வசனம் இல்லை. என் இதயத்தின் மொழி'
'ஆஹா…'

எதிரே ஒரு தமிழ்ப் பெண்ணும் அவளது மகளும் வந்துகொண்டு இருந்தார்கள். இந்தக் காட்டிற்குள் தமிழ் ஆள்கள் அல்லது வெளிநாட்டுக்காரரைக் காண்பது அரிது. இப்போது சிலரைக் காணமுடிகிறது. அதற்கு அவர்களின் வருத்தங்களுக்கான வயித்தியம் ஒரு காரணமாக இருக்கிறது. குறிப்பாகச் சர்க்கரை வியாதி, மாரடைப்பு போன்றவற்றிற்கு இயக்கமே மருந்து. இந்தத் தாய்க்கும் அப்படி ஏதாவது காரணம் இருக்கலாம் என்று சித்தனுக்குத் தோன்றியது. சித்தனையும் அமுதினியையும் பார்த்துச் சிரித்துக்கொண்டு அவர்களைக் கடந்து அந்தப் பெண்ணும் தாயும் சென்றார்கள்.

'யாருக்கு மறுகணம் என்ன நடக்கும் என்று யாருக்கும் முழுமையாகத் தெரியாத உலகம் இது' தமது வாழ்வில் இருக்கும் சிறு காலத்தையாவது திடப்படுத்திக் கொள்ளும் அக்கறை பலருக்கு. அதைவிட அவர்கள் சமுதாயத்தின் பாரமாக மாறிவிடக்கூடாது என்கின்ற அக்கறை அரசுக்கு.

'என்ன சித்தன் பேசாமல் வாறீங்க?'

'இல்ல அமுதினி 'யாருக்கு மறுகணம் என்ன நடக்கும் எண்டு தெரியாத உலகம்' இல்லையா? அதுதான்... இந்தக் கொரோனா முடியும் வரைக்கும் நாங்கள் பொறுத்துக்கொண்டு இருக்கத்தான் வேணுமா எண்டு ஒரு யோசினை. அதால என்ன பிரயோசனம்? சும்மா நாட்கள் போய்க்கொண்டுதான் இருக்கும். நான் சொல்லுகிறது பிழை எண்டு நினைக்கிறியா?'

'மாப்பிள்ளைக்கு அவசரம் போல இருக்குது'

'பகிடி பண்ணாத அமுதினி. உனக்கு விருப்பமே இல்லையா?'

'இருக்குது சித்தன். ஆனா அவசரப்பட்டமெண்டா காதோட காது வைச்ச மாதிரி ஒண்டு ரெண்டு பேரோடதான் நடத்தோணும். கலியாணம் எண்டுறது வாழ்க்கையில ஒருக்காத்தானே வரும். அதை ஞாபகத்தில இருக்கிற மாதிரி செய்ய வேண்டாமே சித்தா'

'அது சரிதான். ஆனா அந்த வசனத்தைத் திரும்ப யோசிச்சுப் பாரும்'

'நானும் உங்களை மாதிரித்தானே சித்தன். எனக்கும் ஆசையெல்லாம் இருக்குது. யோசிப்பம் சித்தன். கொஞ்சம் பொறுப்பம். தொடர்ந்து இழுபடும் எண்டா அதைப்பற்றி கதைப்பம்'

'என்ன விளங்கிக்கொண்டதுக்கு தாங்ஸ் அமுதினி'

அவர்கள் கதையோடு றேமாத்துாசனுக்கு வந்து இருந்தார்கள்.

12

'**ஹே**மாதுூசன்'—இல் சித்தனைப் பிரிய முடியாது பிரிந்து அதைச் சொல்லமுடியாது மனதில் இரகசியமாகச் சுமந்த வண்ணம் வீட்டை நோக்கி ஓடியவளுக்குச் சில வருடங்களுக்கு முன்பு அம்மாவோடு தொடங்கி முற்றுப் பெறாத சம்பாஷனை ஒன்று ஞாபகத்திற்கு வராது போக்கு காட்டியது. அது இத்தாலியின் தலைநகர் ரோமிற்கு விமானத்தில் செல்லும் போது நடந்த சம்பாஷனை என்பது அவளுக்கு இன்றும் நினைவிருக்கிறது. அம்மா ஏதோ சொல்ல வந்தாள். அப்போது அப்பா தனக்கு விஸ்கி வேண்டும் என்று கேட்டதில் அம்மா கோபமாகிவிட்டாள். அத்தோடு அந்த உரையாடல் நின்று, அம்மாவின் மதுவுக்கு எதிரான விளக்கமான பிரச்சாரம் தொடங்கியது. அம்மாவின் கோபம் பற்றியோ பரப்புரை பற்றியோ அப்பா கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. நீ பேசுவதைப் பேசு நான் செய்வதைச் செய்கிறேன் என்பதாக விஸ்கி வாங்கிக் குடித்தார். அதைப் பார்த்த அமுதினியின் தாய் 'எருமை மாட்டிற்கு மேல மாரி மழை பெய்ஞ்ச மாதிரி' என்று அமுதினியிடம் குறைபட்டுக் கொண்டாள். அமுதினி அதைக் கேட்டுச் சிரித்தாளே தவிர எதுவும் சொல்லவில்லை. அப்பா மது அருந்துவதால் யாருக்கும் பிரச்சினை இல்லை. குடித்தால் வழமையைவிட அதிகமாகப் பகிடி பண்ணுவார். அதை எல்லாம் யாரும் பிரச்சினையாக எடுத்துக்கொள்ளமாட்டார்கள். அம்மாவுக்கும் அது பிரச்சினை இல்லை என்பது தெரியும். அவளின் பிரச்சினை மதுவைக் குடிப்பதால் அவரின் உடல் கெட்டுவிடுமே என்கின்ற பத்தினிப் பாசத்திலிருந்தது. அது அமுதினிக்குத் தெரியும். அவர்களின் இந்தப் பிரச்சினைக்கு விடையாக நடுநிலை வகிப்பது என்கின்ற கொள்கையை அவள் கடைப்பிடிப்பாள்.

திடீரென விமானம் தட்டிவான் போலக் காற்று அழுத்த வித்தியாசத்தில் இடற, அனைவரது கவனமும் வாழ்வா சாவா என்பதில் திரும்பிவிட்டது. அப்படி அன்று அவர்கள் போராட்டம் தொடர்ந்ததில் அமுதினியால் அதற்குமேல் அம்மாவுடன் அதைப்பற்றிக் கதைக்க முடியவில்லை. ரோமிற்குச் சென்ற பின்பு அங்கிருந்த பரபரப்பில் அது முற்றுமாய் மறந்து போய்விட்டது.

இன்று சித்தன் தனது கதையைச் சொன்ன பின்புதான் அமுதினிக்கு அம்மா கதைக்கத் தொடங்கியது ஞாபகத்திற்கு வந்தது. அம்மா என்ன சொல்ல வந்தாள்

என்பது சரியாகத் தெரியவில்லை. அதை அறிய வேண்டும் போல் மனதில் அடங்காத ஆசை ஒன்று எழுந்து பேயாகக் கூத்தாடியது. இருந்தும் எப்படிக் கேட்பது என்று விளங்கவில்லை.

ஒப்சால் அரேனாவில் சில சிறுவர்கள் காற்பந்து விளையாடிக்கொண்டு நின்றார்கள். அவர்களின் கவலையற்ற அந்தப் பரபரப்பையும் ஓட்டத்தையும் பார்த்த அமுதினிக்கு அங்கே நின்று அவர்களைப் பார்த்துக்கொண்டு நிற்க வேண்டும் போன்று இருந்தது. இளமை கழியக் கழியச் சந்தோசம் கழிந்து போய்விடுமா என்கின்ற ஒரு எண்ணம் அவளுள் கருநாகமாகப் படமெடுத்தது. ஏன் இன்று தான் இப்படி எண்ணுகிறேன் என்று அவளுக்கு விளங்கவில்லை. இது சித்தனின் நிலையை அறிந்ததாலா அல்லது தான் ஏதாவது அறியாமல் விட்டேனா என்கின்ற கவலையாலா? சித்தனின் நிலை அவளுக்குக் கவலையைத் தரவில்லை. அவர்கள் தெளிவாக இருக்கிறார்கள். எந்த ஒளிவு மறைவும் அவர்களிடம் இல்லை என்று எண்ணியவளுக்கு அது உண்மையா என்கின்ற எதிர்க் கேள்வியும் உருவாகியது. ஒளிவு மறைவு இல்லை என்றால் ஏன் இவ்வளவு காலமும் சொல்லாது இருந்தார்கள்? தேவையில்லாத விடயத்தை தேவையில்லாத நேரத்தில் பேசக்கூடாது என்பதாலா. அதனால் வீண் கவலைகள் உருவாகும் என்கின்ற எச்சரிக்கையாலா. அதுவும் சரியானதே என்று அவளுக்குத் தோன்றியது. தேவையில்லாததைத் தேவையில்லாத நேரத்தில் அறிந்து ஏன் இன்றைய நாளை நரகமாக்கிக் கொள்ள வேண்டும்?

அப்படி என்றால் அம்மா மறந்ததை தான் மறந்து இருந்ததை இன்று ஏன் ஞாபகம் கொண்டேன் என்கின்ற கேள்வி அவளுள் எழுந்தது. சித்தனின் வரலாறு அதைச் சீண்டிவிட்டது என்பது விளங்கியது. இருந்தும் தான் நிதானமாக இருக்க வேண்டும் என்று எண்ணினாள்.

*

அன்று இரவு அமுதினிக்குப் பஞ்சு மெத்தை முள் மெத்தையாக மாறியது போன்று நித்திரை போக்கு காட்டியது. அடுத்த நாள் அரைத் தூக்கத்தோடு நோய்க்கோழி போல வேலைக்குச் சென்றாள்.

வேலையால் வந்து சாப்பிட்டு முடியச் சித்தனை திறன்பேசியில் அழைத்துக் கதைக்க வேண்டும் போல இருந்தது. அவள் தனது அறைக்குச் சென்றாள். அவள் அறைக்குள் செல்லவும் திறன்பேசி அழைப்பு வரவும் சரியாக இருந்தது. அமுதினி திறன்பேசியைப் பார்த்தாள். அது சித்தனிடம் இருந்து வந்தது. அவளுக்கு அதை

நம்ப முடியாத சந்தோஷம். அவள் திறன் பேசியை எடுத்து 'ஹலோ சொல்லுங்கோ' என்றாள்.

'சும்மா உம்மோடை கதைக்கோணும் போல இருந்திச்சுது. எப்பவும் நினைச்சுக் கொண்டு இருக்கிறதிலும் கதைச்சுக்கொண்டு இருக்கலாம் எண்டு நினைச்சன்'

'ஓ அப்பிடியா. நீங்கள் உங்கடை காதலை எப்பவும் ஞாபகப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறியள். நான் அதைக் காதலா மாத்திரம்தான் நினைக்கிறன். நினைக்கிறது சரிதானே சித்தன்?'

'ம்... அரிச்சந்திரனைப் பற்றி ஒரு கதை அப்பா சொன்னார். அவனுக்கு வராத சோதனையா எனக்கு வந்திட்டுது. காதலுக்காகக் காத்திருப்பதும் சுகம்தான் அமுதினி. நான் அதுக்கா காத்திருப்பன்'

'நீங்கள் எனக்காகக் காத்திருப்பியள் எண்டு எனக்கும் நம்பிக்கை இருக்குது. காத்திருப்பதில் சுகம் எண்டுவினம் இல்லையா? அதால நானும் சந்தோஷமா உங்களுக்காகக் காத்திருப்பன். ஆனா நான் வேற ஒரு விஷயம் இப்ப உங்களோட கதைக்கோணும் எண்டு நினைச்சன் சித்தன்'

'சொல்லு அமுதினி... என்ன விஷயம் கதைக்க வேணும்?'

'நீங்கள் நேற்று உங்கடை கதையைச் சொல்லிப்போட்டு போயிட்டியள். அதுக்குப் பிறகு எனக்குக் குழப்பமாய் போயிட்டுது'

'ஏன் என்ரை கதை உன்னைக் குழப்பினது? அப்பா அம்மா பாவம் அமுதினி. அவை செய்ததை நான் ஒருநாளும் தப்பு எண்டு சொல்லமாட்டன். அதுக்காக நீ குழம்பத் தேவையில்லை அமுதினி. இது உலகத்தில நடக்காத ஒண்டு இல்லை'

'ஐயோ நான் அப்பிடி நினைக்கவும் இல்லை, சொல்லவும் இல்லை சித்தன். நான் நினைக்கிறதே வேற விஷயம்'

'அது என்ன எண்டு சொல்லும்...'

'ஒருக்கா ரோமிற்குப் போனபோது அம்மா ஒரு விஷயம் சொல்லத் தொடங்கினா. ஆனா அது அப்பாவுக்கும் அம்மாவுக்கும் ஏற்பட்ட வாக்குவாதத்தில தடைப்பட்டுப் போயிட்டுது. அதுக்குப் பிறகு பிளைற் வேற குலுங்கினதால எல்லாம் குழம்பிப் போச்சுது. அப்பிடியே ரோமிற்குப் போனபிறகு நாங்கள் அதை மறந்தே போயிட்டம்'

'ஆயிரம் விஷயம் கதைக்க நினைப்பம். அது கதைக்க முடியாமல் போயிடும். அதுக்காக எல்லாம் நாங்கள் கவலைப்பட்டுக்கொண்டு இருக்க முடியுமா?'

'ஆயிரம் விஷயத்தில இதுவும் ஒண்டு இல்லை சித்தன். இது சிலவேளை என்னைப்பற்றின முக்கியமான விஷயமாக இருக்கலாம் எண்டு நினைக்கிறன். நான் அதைப் பிறகு அம்மாட்ட கேட்கவே மறந்து போயிட்டன்'

'உனக்கு முக்கியமான விஷயம் எண்டு நினைச்சா கேட்டிடு அமுதினி'

'கேட்கவேணும் எண்டு ஆசையா இருக்குது. ஆனா அதை எப்பிடிக் கேட்கிறது? அம்மா என்ன நினைப்பா எண்டு பயமா இருக்குது'

'அமுதினி! அம்மாவை ஒரு கேள்வி கேட்கிறதுக்கு நீ ஏன் இப்பிடிப் பயப்பிடுகிறாய்? எனக்கு உன்ர பயத்தின்ர அர்த்தம் விளங்கேல்ல'

'இல்ல, அம்மா சொல்லத் தொடங்கின விதம் ஏதோ எண்னுடைய வாழ்க்கையின்ர இரகசியத்த சொல்லத் தொடங்கின மாதிரி இருந்திச்சுது. அதுதான் உங்கட இரகசியம் தெரிஞ்ச பிறகு எனக்கும் அப்பிடி ஏதும் இருக்குமா எண்டு பயமாக இருக்குது. இப்ப போய் அதைக் கேட்க வெட்கமாய் இருக்குது'

'அதை நீ துணிஞ்சு கேட்டியெண்டா இண்டைக்கோ அல்லது இன்னும் சில நாளிலயோ அது முடிஞ்சிடும். கேட்காமல் விட்டியெண்டா அது நித்தம் நித்தம் உன்னுடைய அமைதியைத் தின்னும். விளங்குதா அமுதினி? ஆனா இது நியாயமான சந்தேகம்தானா எண்டதையும் யோசிக்கோணும்'

'ம்… அப்ப கேட்கச் சொல்லுறியளா?'

'என் அவிப்பிராயம் அது. ஆனால் நீங்க உங்கட முடிவை சுயமா சிந்திச்சு சுயாதீனமா எடுத்துக் கொள்ளோணும். பிறகு நீங்க எடுத்த முடிவைப் பற்றிக் கவலைப்படக்கூடாது'

'நீங்க இரண்டு பக்கமும் கதைக்கிறீங்கள்'

'இல்லை அமுதினி… ஒரு நாணயத்தின் இரண்டு பக்கத்தையும் பார்க்கிற மாதிரி ஒரு விடயத்தின் இரண்டு பக்கத்தையும் பார்க்க வேணும். அதேவேளை எங்களுடைய கருத்தை மட்டும் நாங்கள் சொல்லலாம். ஆனால் முடிவை அவை அவைதான் சுயமாக எடுக்க வேணும்'

'ம்… சிலவேளை இது உப்புப் பெறாத விஷயமாக இருக்கலாம். துணிஞ்சு கேட்டால்தான் இதுக்கு முடிவு வரும் எண்டு விளங்குது'

'அது நல்ல முடிவுதான். கதையுங்க… கதைச்சாலே நிறையப் பிரச்சினை தீர்ந்திடும்'

'ம்… தாங்ஸ் சித்தன். அதுசரி உங்கடை ஆராய்ச்சி எல்லாம் எப்பிடிப் போகுது?'

'அதுக்கு இன்னும் நிறைய நேரம் செலவு செய்யவேணும். அப்பிடி செலவழிக்கத் தொடங்கினா ஆராய்ச்சியே வாழ்க்கையாகிடும். எனக்கு என்னுடைய வாழ்க்கையை வாழ வேணும் எண்டு ஆசையா இருக்குது. பிறகு வேணும் எண்டாக் கொஞ்சம் அதிகமாக நேரம் செலவழிக்கலாம். வேலையே வாழ்க்கையாகிறதுக்கு நான் அனுமதிக்க முடியாது. அதுவும் அமுதினி எண்ட என் தேவதைய விட்டிட்டு லாப்பில அடைஞ்சு கிடக்க என்னால முடியாது. அதால நான் நேரத்திற்கு வீட்ட வாறதில எந்த மாற்றமும் இருக்காது'

'நீங்கள் எடுக்கிற முடிவும், நீங்கள் கதைக்கிற கதையும் நல்லாத்தான் இருக்குது'

'அப்பிடியா… விரும்பிறவை கதைச்சா பிடிக்குமாம். அப்ப நான் கிட்ட நெருங்கீட்டன் எண்டு நினைக்கிறன்'

'ச்… அதை விடுங்க. உங்களுக்கு நான்; எனக்கு நீங்கள் எண்டு ஒப்பந்தமே செய்தாச்சுது. பிறகு என்ன நெருங்கிறன்… கையைப் பிடிக்கிறன் எண்டு கொண்டு…'

'ம்…
இனிமையான உண்மை
என் இதயம் உருகும் பிணைப்பு
ஏக்கத்திற்கு முடிவுகட்டி,
என் ஆத்மாவிற்கு
விடுதலை தந்த ஒப்பந்தம்'

'ஆங… என்ன கவிதை முயற்சியா?'

'ஐயோ என்ன வெட்கப்பட வைக்கிறீர்'

'என்ன தன்னடக்கமா?'

'இல்ல இதையெல்லாம் கவிதை எண்டால் கவிதை எழுதுகிறவர்கள் எல்லாம் சண்டைக்கு வந்திடுவினம். தயவுசெய்து அந்த விஷப்பரீட்சை எல்லாம் வேண்டாமே'

'உலகத்தின்ர அங்கீகாரத்தை எதிர்பார்த்து நின்றால் உங்களால எதுவும் செய்யமுடியாது. என்ன எதிர்வினை வந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் இயன்றதைச் செய்ய வேணும். வருங்காலம் அதற்கான விடையைத் தரும் எண்டு நம்புங்க'

'நீங்கள் சொல்லுகிறது உண்மைதான். அதேவேளை நான் எதையும் சாதிக்கவும் இல்லை, யாருடைய அங்கீகாரத்தையும் எதிர்பார்க்கவும் இல்லை. ஒரு வகையில இலக்கில்லாத வாழ்க்கையாகப் போய்க்கொண்டு இருக்குது காலம்'

'அப்பிடியெண்டா உங்கடை ஆராய்ச்சி என்ன மாதிரி?'

'அதுக்காக உழைக்கோணும் சாதிக்கோணும் எண்டு ஆசை இருக்குது. ஆனால் வாழ்க்கையைத் தியாகம் செய்யாமல் சாதிக்க முடியுமா எண்டதும் எனக்குத் தெரியாது'

'அப்ப நீங்கள் சாதிக்காமலே இருங்க சித்தன். ஏன் எண்டா எனக்கு நீங்கள் முழுமையா வேணும் எண்ட சுயநலம் என்னிட்ட இருக்குது'

'அது எனக்குத் தெரியும் அமுதினி. அதேபோல நீயும் எனக்கு வேணும் அமுதினி. அதால உன்னுடைய சந்தேகங்களைத் தெளிவாக்கி நீர் சாந்தமா இருக்கோணும்'

'நீங்கள் பயப்பிடாதையுங்க... நான் அதை அம்மாவிட்டக் கேட்டுத் தெரிஞ்சு கொள்ளுறன். சரி உங்களுக்கு அலுவல்கள் இருக்கும் நான் வைக்கிறன்'

'அப்பிடி எண்டில்லை... உம்மோட இருக்கிறது, கதைக்கிறதைவிட வாழ்க்கையில வேற சந்தோஷமான விஷயம் இருக்குமா?'

'நீங்கள் சொல்லுறியள். நான் சொல்ல இல்லை. அதுக்கான நாள் வரட்டும் சித்தன். ஆனாலும் காலம்தான் இந்த வசனங்களுக்கான இறுதி அர்த்தத்தைத் தரும்'

'ம்... விளங்குது. அவநம்பிக்கைப்படாதையும் அமுதினி. நான் உம்மைத் தேவையில்லாமல் தொந்தரவு செய்ய விரும்பேல்ல...

அதோடை எனக்கும் கொஞ்சம் வாசிக்கவேண்டி இருக்குது'

'*Okay bye, take care Sitthan*'

'*Bye and take care. Going to miss you*'

'*I know because I feel the same way. But bye for now*'

'*Bye*'

சித்தனுடன் கதைக்கும்போது இருந்த தெளிவு இப்போது சுவடு தெரியாது அழிந்து போனதாகத் தோன்றியது. அம்மாவிடம் கதைத்து அது ஏதாவது சங்கடமான விடயமாக இருந்துவிட்டால் அதன் பின்னான வாழ்க்கை எப்படி இருக்கும் என்கின்ற கலக்கம் தோன்றியது. அப்போது சித்தன் கூறியதும் ஞாபகம் வந்தது. இதைப்பற்றிக் கதைத்தால் சில காலத்திற்கான பிரச்சினை. கதைக்காவிட்டால்

வாழ்நாள் முழுவதற்குமான பிரச்சினை. அதனால் பாதிக்கப்படுவது தான் மாத்திரம் இல்லை; சித்தனும் என்பது அவளுக்கு விளங்கியது. அந்த உண்மை அவள் இதயத்தை உருவி எறிவது போன்ற வேதனையைத் தந்தது. இதயத்தை உருவும் அந்த வேதனையை இப்போதே அனுபவித்துவிடுதல் உத்தமம் என்பது தெளிவாகியது. இதைக் கிடப்பில் போட்டு அதற்குள் சித்தனைச் சிக்க வைப்பது அவனுக்குச் செய்யும் துரோகமாகும் என்பது விளங்கியது.

தேவிகா தொலைக்காட்சி பார்த்துக்கொண்டு இருக்கும் சத்தம் கேட்டது. அப்பா போய்ப் படுத்து இருக்க வேண்டும். அவர் நித்திரையைப் பல பகுதிகளாக அனுபவிப்பார். அம்மாவால் அது முடியாது. படுத்தால் அவளால் எழுந்திருக்க முடியாது. எழுந்திருந்தால் அவளால் படுக்க முடியாது. அதனால்தான் நேரம் வரும் வரைக்கும் அம்மா தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டு இருக்கிறாள் என்பதை அமுதினி அறிவாள்.

நெஞ்சிற்குள் இதயம் கெந்தி அடித்தாலும் துணிவைத் தன்னுள் ஏற்றியவண்ணம் அம்மாவை நோக்கிச் சென்றாள். அம்மா அமுதினியைப் பார்த்ததும், 'வா அமுதினி. ரீ வைச்சரட்டே?" என்று கேட்டவள், பதிலுக்குக் காத்திராது எழுந்து சமையல் அறைக்குச் சென்றாள்.

தொலைக்காட்சியில் பெருந்தொற்று எப்படிப் பரவும் என்பதைப் பற்றிய ஒரு விவரணை போய்க்கொண்டு இருந்தது. அதில் அதற்கு மனிதர்களின் இன்றைய பிரயாண நாகரிகம் எப்படி உதவுகிறது என்பதையும் விளக்கிக் கொண்டு இருந்தார்கள். அதுவும் விமானப் போக்குவரத்து அசைய முடியாத தீநுண்மியின் பெரும் அசைவுக்கு எப்படி உதவுகிறது என்பதைப் பற்றி நுணுக்கமாக விபரித்தனர்.

அம்மா அதிக நேரம் எடுக்கவில்லை. பால் தேநீருடன் மாச்சில்லும் கொண்டு வந்து மேசையில் வைத்துவிட்டு, ஒரு குவளை பால் தேநீரைத் தூக்கி அமுதினியிடம் நீட்டினாள். அமுதினி எதுவும் பேசாது அதை வாங்கிக்கொண்டாள். வாங்கிய தேநீரில் ஒருவாய் குடித்தாள். அம்மாவின் தேநீர் தேவலோகத்து அமிர்தம் போல. தேயிலை வாசம் மூக்கால் ஏறி மூளையை உசுப்பி விடும். அதன் சுவை, பாலின் சுவையுடன் சேர்ந்து கொள்ளும். அதற்குத் தகுந்தால் போல் சீனியை அளவாகப் போட்டு அவளால் மட்டுமே அப்படி அமிர்தம் போல தேநீர் தயாரிக்க முடியும்.

நாக்கில்பட்டால் மீண்டும் சுவை என்று அது மூளைக்கு நிரந்தரக் கட்டளையிட்டு விடும். அதற்காக அம்மாவின் கைக்கு ஆயிரம் முத்தங்கள் கொடுக்கலாம். இருந்தும் இப்போது அம்மாவின் கைக்கு முத்தம் கொடுக்கும் நிலையில் அவள் இல்லை.

இதைத் தேவிகாவும் அவதானித்தாள். அமுதினி இப்படிக் கடுமையாக யோசிப்பதற்கு என்ன காரணம் இருக்கிறது என்று அவளுக்கும் விளங்கவில்லை. அவளால் அதற்குமேல் அதைப் பொறுமையாகப் பார்த்துக்கொண்டு இருக்க முடியவில்லை.

'என்ன அமுதினி? ஏதாவது பிரச்சினையே? உன்ர முகமேன் இப்பிடி இருக்குது?'

'எப்பிடி இருக்குது?'

'பேயறைஞ்ச மாதிரிக் கறுத்துப்போய்க் கிடக்குது. என்ன நடந்தது உனக்கு?'

'எனக்கு ஒண்டும் இல்லையம்மா'

'பிறகு ஏன் இப்பிடி இருக்கிறாய்?'

'நான் உன்னிட்ட ஒரு விஷயம் கேட்கவேணும். அதுதான்...'

'அதுக்கே உன்ர முகம் இப்பிடிக் கிடக்குது. என்னிட்ட கேட்கிறதுக்கு உனக்கு என்ன பயம்?'

'அதை நான் கேட்ட பிறகு சொல்லம்மா'

'சரி கேள்'

'நாங்கள் ரோமிற்குப் போனது ஞாபகம் இருக்குது இல்லையா அம்மா?'

'ம்... இருக்குது சொல்லு. கொப்பர் என்னை மதிக்காமல் குடிச்சுப் பிரச்சனையாச்சுது'

'அவர் எப்பதான் குடிக்கிறேல்ல? அதால உன்னைத் தொல்லைப்படுத்துகிறாரே? இல்லைத்தானே. அது விஷயம் இல்லை அம்மா'

'ம்... அப்ப சொல்ல வந்த விஷயத்தைச் சொல்லு'

'அதுக்கு முதல் நீ ஏதோ ஒரு முக்கியமான விஷயம் சொல்லத் தொடங்கினா. ஆனா அது அந்தப் பிரச்சனையில தடைபட்டுப் போயிட்டுது. அண்டைக்கு நீ என்ன சொல்ல வந்தநீ?'

'அமுதினி! உனக்கு இப்ப கலியாணமே முடிவாகிப் போச்சுது. அதாவது எங்களோடை வாழ்கிற வாழ்க்கை முடிஞ்சு இன்னொரு வீட்டுக்குப் போய் வாழ்கிற காலம் வந்திட்டுது. இப்ப எதுக்கு உனக்குத் தேவையில்லாத விஷயங்கள் எல்லாம்?

சில கடந்து போன தேவையில்லாத விஷயங்களைக் கிளறிக்கொண்டு இருக்கிறதால வாழ்கிற காலத்தில நிம்மதியாய் இருக்க முடியாது போய்விடும் அமுதினி'

'நீ சொல்லுகிறதைப் பார்த்தா ஏதோ பெரிய விஷயமா இருக்கும் போல இருக்குதே. அது என்ன எண்டு சொல்லம்மா. அதை அறியாட்டி என்ரை வாழ்க்கை பூராகவும் அமைதி இல்லாமல் தவிக்க வேண்டி வரலாம் எண்டு நினைக்கிறன். நான் உண்மையில இதைக் கேட்கவேண்டாம் எண்டுதான் இருந்தன். என் மனசு நிம்மதியாய் இருக்குதில்லை. அதுதான் உனக்குச் சங்கடமாய் இருந்தாலும் கேட்கவேணும் எண்டு நினைச்சன். உனக்குச் சங்கடமாய் இருந்தா என்னை மன்னிச்சுக்கொள் அம்மா. ஆனா, எனக்கு விஷயத்தைச் சொல்லு அம்மா'

'நான் இதை முதல்ல சொல்ல வேணும் எண்டுதான் இருந்தன். அப்பாவுக்கும் அது சம்மதம்தான். ஆனா காலப்போக்கில உனக்கு அது தெரிகிறதால எந்த நன்மையும் இல்லை எண்டு நினைச்சம். அதுதான் சொல்ல இல்லை. ஏன் நீ கட்டாயம் தெரிஞ்சு கொள்ள வேணுமே?'

'ம்... அப்பதான் எனக்கு நிம்மதி வரும்'

'அப்ப நீ எனக்கு ஒரு சத்தியம் பண்ணித்தா'

'என்ன அது?'

'நான் சொல்லுகிறதைக் கேட்ட பிறகும் அப்பாவில இருக்கிற பாசத்தில, அன்பில மாற்றம் இருக்காது எண்டு சத்தியம் பண்ணு'

'சத்தியம் அம்மா... நீ சொன்ன பிறகும் எதுவும் மாறாது'

'ம்... அது என்ன எண்டா நானும் அப்பாவும் பிள்ளை இல்லாமல் நிறையக் காலம் இருந்தம். அப்ப எங்கள் இரண்டு பேருக்கும் எல்லாப் பரிசோதனையும் செய்தாங்கள். கடைசியா அப்பாவிற்கு விந்தணு உற்பத்தியே கிடையாது எண்டு கண்டுபிடிச்சாங்கள். அதால கற்பமாகிறதுக்கு வாய்ப்பே இல்லை எண்டு சொல்லிச்சினம். அதுக்காகப் பிள்ளையே இல்லாமலிருக்கிறதுக்கு எங்களுக்கு விருப்பமில்லை. அப்பா தன்னுடைய ஈகோவை விட்டுக் கொடுக்கத் தயாராக இருந்தார். அது அவருடைய பெருந்தன்மை. எனக்கும் எப்படி என்றாலும் ஒரு குழந்தை வேணும் எண்ட வலுவான எண்ணம் இருந்திச்சுது. அதுக்காக நான் எதையும் செய்யத் தயாராக இருந்தன். அப்பதான் எங்களுக்கு ஒரு தமிழ் தரகர் அறிமுகமானார். அவர் தன்னால டென்மார்க்கில தரமான விந்து கொடுக்கிற தமிழ் ஆளைத் தொடர்பு பண்ணித்தரமுடியும் எண்டு கூறினார்'

'டென்மார்க்கா!' என்கின்ற அமுதினியின் அதிர்ச்சி அம்மாவுக்கு விளங்கவில்லை. அவள் தொடர்ந்தாள்.
'ம்...'

அமுதினிக்கு வயிற்றின் குடல் வாய் வழியாக வந்துவிடும் போலிருந்தது. அதை அவள் காட்டிக்கொள்ள விரும்பவில்லை. தனது உணர்ச்சிகளை மறைத்து தாய் அறியாதவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டாள். அம்மா அதை அறியாதவளாய்த் தொடர்ந்தாள்.

'நாங்கள் எப்பிடி எண்டாலும் ஒரு குழந்தையைப் பெற வேணும் எண்டு இருந்தம். அதால அதுக்குச் சம்மதிச்சு டென்மார்க் போய், நீ எங்களுக்குப் பிள்ளையாகப் பிறக்கிறதுக்கு வழி செய்தம். எங்களுக்கு யார் அந்த உதவியைச் செய்தது எண்டு தெரியாது. எங்கட தொடர்பு எல்லாம் தரகரோட மட்டும்தான். மற்றும்படி எல்லாம் SMS-இல வந்த தகவலின்படி செய்தம். எங்கடை அதிர்ஷ்டம் நீ எங்களுக்குப் பிள்ளையாய் வந்து கிடைச்சாய்.
அதுக்குப்பிறகு எதுக்குத் தேவையில்லாத ஆராய்ச்சி எண்டு நாங்கள் அதை மறந்திட்டம். இடையில ரோமிற்குப் போகேக்க ஏதோ உனக்கு அதைச் சொல்லோணும் போல இருந்திச்சுது. அது ஏதோ ஒரு காரணத்தினால குழம்பீட்டுது. அதுக்குப் பிறகு அதே ஒரு சகுனமாய் இருக்கலாம் எண்டு நினைச்சிட்டு நானும் விட்டிட்டன். ஆனா திடீரெண்டு இண்டைக்கு வந்து கேட்கிறாய். அதால கொஞ்சம் குழப்பமாகத்தான் இருக்குது. இருந்தாலும் இதுதான் நடந்தது அமுதினி'
'நான் ஒண்டு கேட்டால் குறை நினைக்கமாட்டியே அம்மா'
'இல்ல சொல்லு அமுதினி'
'நான் என்னுடைய அப்பாவை, சொறி உயிரியல் அப்பாவைப் பார்க்க வேணும் எண்டால் நீங்கள் ஒண்டும் தப்பா நினைக்க மாட்டியளே'
'இதில தப்பா நினைக்கிறதுக்கு எதுவும் இல்லை. அது உன்னுடைய உரிமைகூட. சட்டப்படிகூட அதுக்கு இப்ப வழி இருக்குது'
'நீங்கள் இரண்டு பேரும்தான் அப்பா அம்மா எண்டதில எனக்கு எந்தத் தடுமாற்றமும் கிடையாது அம்மா. இருந்தும் அவரையும் ஒருமுறை பார்க்க வேணும் எண்டு ஆசையா இருக்குது'
'எனக்கு விளங்குது. ஆனால் நாங்கள் அந்தத் தொடர்பை தொடரேல்ல... தரகற்ற விபரம் இருக்க வேணும். ஆனாலும் அவர் இப்பவும் அங்கதான் இருப்பாரோ

தெரியாது. இல்லாட்டி போன் நம்பரையாவது மாத்தாமல் இருந்தால் அது எங்கடை அதிர்ஷ்டம்தான்'

'நீ அதை எடுத்துத் தருவியா அம்மா'

'நான் தேடிப் பார்க்கிறன். கிடைச்சா தாறன்'

'அம்மா!'

'என்ன நீ தப்பா நினைக்க இல்லைத்தானே. பெத்து வளர்த்த பிறகு நான் இப்பிடிக் கேக்கிறன் எண்டு கோபம் இல்லையே'

'அப்பிடி எல்லாம் எனக்கு எந்தக் கோபமும் இல்லை. அப்பாகூட அப்பிடி நினைக்கமாட்டார்'

'என்ன நடந்தாலும் நீங்கள்தான் என்ரை அப்பா அம்மா எண்டதில எந்த மாற்றமும் கிடையாது. அது புறமிஸ் அம்மா'

'எனக்குத் தெரியாதா என்ரை பிள்ளையைப் பற்றி. அதைவிட உனக்கு அப்பாவில இருக்கிற பாசம் தெரியாதா?'

'என்னில இருக்கிற நம்பிக்கைக்கு தாங்ஸ் அம்மா'

அதன்பின்பு அமுதினி எழுந்து தனது அறைக்குச் சென்றாள். அவள் இதயம் இரும்பாகக் கனத்தது. அந்தக் கனதியில் இதயம் நெஞ்சாங்கூட்டிற்குள் தங்காது இழுத்துக்கொண்டு வெளியே வந்துவிடுமோ என்கின்ற பிரமை தோன்றியது. அந்த வேதனை, கவலையின் காரணம் அவளுக்கு விளங்கி இருந்தது. இருந்தும் அதை அம்மாவிற்குக்கூடச் சொல்லிவிட முடியாத அவஸ்தை. அதன் உண்மையில் அவள் வாழ்க்கை சிறைப்பட்டுக் கிடக்கிறது என்பது விளங்கியது. அவள் சோகத்தோடு போய்த் தனது கட்டிலில் விழுந்தாள். இனியாவது இதயம் விழுந்து விடாது என்று நம்பினாள். அவள் நம்பிக்கை அவளுக்குக் கைகொடுக்க மறுத்தது.

13

வெளியே கடலின் நீலத்தைச் சுவரில் சிறைபிடித்து வைத்ததான வெளிச் சுவர்கள். கறுப்புத் தொப்பி போட்டது போன்று அதன் கூரை. வெள்ளை சாளரங்களும் கதவுகளும் அந்த நீலத்தின் கூச்சலைக் குறைப்பது போல. அது தனித்து நிற்கும் பெரிய வீடு. வெள்ளை மாளிகை போல இது ஒரு நீல மாளிகை. அந்த வீட்டின் பின்னால் வாலாக நீண்டு செல்லும் சிறிய காடும் குன்றும். அதை அலங்கரிக்கும் கிளைகளோடு கூடிய பனைகளின் உயரத்தையே தாண்டும் நெடித்த மரங்கள்.

அந்தக் காட்டினூடே நடந்து சென்றால் ஒப்சால் அரேனாவைச் சென்றடைய முடியும். அந்த வீட்டின் முன்பும் அதே மரங்கள்கொண்ட காடு. அதை ஊடறுத்துச் செல்லும் சல சலக்கும் சிறு ஓடை. அவர்கள் வீட்டைச் சுற்றியும் பல தனிவீடுகள். வீட்டின் இரண்டு பக்கங்களிலும் ட–னா வடிவில் தெருக்கள்.

வீட்டின் முன்பு நீல வைரமாய் மின்னும் '*Tesla*'. மாமாவிற்கு நீலத்தில் காதலாய் இருக்க வேண்டும் என்பது சித்தனுக்கு விளங்கியது. அமுதினிக்குத் தனியாக வாகனம் வாங்கிக் கொடுக்கும் வசதி இவர்களிடம் தாராளமாக இருக்கிறது. இருந்தும் அமுதினியின் காலநிலை மாற்றம் பற்றிய அக்கறை அதற்குத் தடைவிதித்து விட்டது. அவளுக்குத் தவிர்க்க முடியாத தேவையென்றால் அப்பா அம்மாவின் காரைப் பாவித்துக் கொள்வதாக அவள் கூறியிருந்தாள்.

வீட்டின் நீட்சியான போர்டிக்கோ. அதன் நடுவே பதுங்கி இருந்த பலமான வெள்ளைக் கதவுகள். அதன் அருகிலிருந்த அழைப்பு மணி. ஏற்கனவே வருவதாகக் கூறியிருந்தாலும் இதயத்தைப் பிடித்து அழுத்துவது போன்ற ஒரு தயக்கம். முதல் முறை அவள் வீட்டிற்கு வருவதால் ஏற்பட்டதாய் இருக்கும் என்று அவன் எண்ணிக்கொண்டான். நடுக்கமாக இருந்தாலும் நடப்பது நடக்க வேண்டும் என்பதை உறுதி செய்தவனாக அழைப்பு மணியை அழுத்தினான். அமுதினி அவனுக்காகக் காத்திருந்திருக்க வேண்டும். சட்டென மின்னல் வேகத்தில் வந்து கதவைத் திறந்தாள்.

அவள் வதனம் மலர்ந்து வெண் முத்துக்கள் பளிச்சிட, கண்களில் காதல் மின்னித் தெறிப்பதாய் சித்தனுக்குத் தோன்றியது. உன் பார்வையில் காதல் தெறிக்கிறதே என்று கேட்டால் அவள் அதற்குப் பெரியதொரு விளக்கம் கொடுப்பாள் என்பது

சித்தனுக்குத் தெரியும். அவளிடம் இருந்து மெல்லிய செயற்கை வாசனை மல்லிகை மணம்போல வந்துகொண்டு இருந்தது. செம்மையாகச் சாயம் பூசிய இதழ்களின் சிறு வளைவு நளினம் என்ன சொல்லுகிறது என்பது விளங்காத திகைப்பு. அவன் சில கணம் தன்னை மறந்து அவளைப் பார்த்த வண்ணம் நின்றான். அதிலிருந்து அவனை விடுவிப்பது போல, 'என்ன இப்பிடியே பார்த்துக்கொண்டு நிற்க போறியளே? வீட்டுக்குள்ள வரமாட்டியளே?' என்று கேட்டாள்.

'உம்மைக் கண்டதால் வந்த மயக்கம் அது. ஒவ்வொரு முறை பார்க்கிறபொழுதும் நீர் ஒவ்வொரு விதமான அழகாய் இருக்கிறீர். அதாலதான்… நீர் எண்டு நான் சொல்லலாமா?'

'ம்… சொல்லலாமே. உங்கடை கதைக்கு மாத்திரம் குறைவில்லை. என்னை இன்னும் *impress* பண்ணுறியளா. ம்… மயங்கீட்டன்… உள்ள வாங்க'

'வராமல் நான் எங்க போக முடியும்?' என்று கூறியவண்ணம் சித்தன் உள்ளே சென்றான்.

உள்ளே சென்றதும், சித்தனின் மேலங்கியைக் கொழுவுவதற்கு அமுதினி உதவி செய்தாள். அந்த முகப்பு அறையே நல்ல விஸ்தீரணமாக இருந்தது சித்தனுக்குப் பிடித்துக்கொண்டது. பாதணிகளைக் கழற்றி விட்டு வாழறைக்குள் சித்தன் அமுதினியோடு சென்றான். சோபாவில் இருந்த மாமி எழுந்து வந்து 'வாங்கோ தம்பி… எப்பிடி இருக்கிறியள்?' என்று கேட்டாள். 'நான் நல்லா இருக்கிறன். நீங்கள் எப்பிடி இருக்கிறியள்?' என்றான் சித்தன்.

'கால் குடைச்சல் தம்பி. நான் இப்ப வேலைக்கு எல்லாம் போகிறது இல்லை. அவர் ஒபீசுக்குப் போய் ஒழுங்கா வேலை நடக்குதோ எண்டு பார்த்துக்கொண்டு வருவார். அமுதினியைப் பொறுப்பு எடுக்கச் சொன்னா அவள் தனக்கு அது பிடிக்கேல்லை எண்டுறாள். கொஞ்சம் எடுத்துச் சொல்லுங்கோ தம்பி'

'என்னையும் இப்பிடிதான் வீட்டில கேட்டவை. ஆனா எனக்குப் பிடிச்சதைத்தானே நான் செய்யலாம். அப்பா அம்மா நிறைய உழைப்பை அதில போட்டிருக்கினம். தொடர்ந்து அதை ரன் பண்ண முடியுமா எண்டு பார்க்கத்தான் வேணும். அதே நேரம் என்னுடைய இலட்சியத்தையும் காப்பாற்ற வேணும் எண்டு நினைக்கிறன்'

'அது புத்தி தம்பி. வெறுங்கையோட வந்து இரத்தத்தை முதலாப்போட்டு கட்டியெழுப்பின நிறுவனங்கள் இவை. அது அழியக்கூடாது தம்பி. அது சரி, முதல்ல வந்து சோபாவில இருங்க... ஏதாவது சாப்பிடுங்க தம்பி'

'இல்ல... நான் இப்பதான் சாப்பிட்டிட்டு வந்தன்' என்று விட்டு யோசித்தான். 'வெறுங்கையோடு வந்து...' அது அவன் மண்டையைக் குடைந்தது. அப்பா அம்மாவும் இதைத்தான் எதிர்பார்ப்பார்கள் என்பது விளங்கியது.

'சரி நான் அப்ப ரீ வைச்சாறன். அமுதினி நீ அவரோடை இருந்து கதை' என்றுவிட்டுத் தேவிகா சமையல் அறைக்குச் செல்ல, அமுதினி சிரித்தவண்ணம் சோபாவில் வந்து அமர்ந்தாள். அப்படி அமரும்போது கண்களால், 'என்ன?' என்பது போலக் கேட்டாள்.

'உன்னப் பார்க்கோணும் எண்டு ஓடி வந்தன்' என்றான் மெதுவான குரலில்.

'சூ... அம்மா...' என்றாள் அமுதினி.

'சரி கொம்பனிய பார்க்கலாம் தானே'

'ஓ பார்க்கலாம்... பிறகு எப்பிடி மெடிசீன் படிச்சு முடிக்கிறது? தாங்கள் எப்பிடியாம்?'

'என்ர நிலையும் அதுதான்'

'ம் இதைப்பற்றி நாங்கள் ஆறுதலாகக் கதைப்பம்' என்று அவள் கூறிக்கொண்டு இருக்கும் பொழுதே தேவிகா தேநீரோடு வந்தாள். அதன் வாசமே நாவில் நீர் ஊறப் பண்ணியது. தேநீரைச் சித்தனிடமும் அமுதினியிடமும் கொடுத்துவிட்டு, 'நீங்கள் இரண்டு பேரும் இருந்து கதையுங்கோ. அப்பா வந்த உடன என்னை வந்து எழுப்பு அமுதினி, சரியே?' என்றாள்.

'சரியம்மா'

தேவிகா தங்களது படுக்கை அறைக்குச் சென்றதும், 'ஏதோ கதைக்கோணும் எண்டீர்... சொல்லும்' என்றான் சித்தன்.

'நான் தெளிவுபடுத்திக்கொள்ள வேணும் எண்டு தொடங்கி இப்ப குழம்பிப்போய் இருக்கிறன் சித்தன். கேட்காமலே இருந்திருக்கலாமோ எண்டு இப்ப நினைக்கிறன்'

'நடந்து முடிஞ்சதை மாற்ற முடியுமா அமுதினி? அதே மாதிரி அதைப்பற்றிக் கவலைப்படுகிறதும் எந்த மாற்றத்தையும் கொண்டு வரப்போகிறது இல்லை. அது தேவையில்லாமல் எங்களுடைய நிம்மதியை நாங்களே போட்டு உடைக்கிற மாதிரி.

கடந்து போனதை விட்டிட்டு இப்ப என்ன செய்யலாம் எண்டு யோசிக்கிறதுதான் புத்தி'

'உண்மைதான் சித்தன். கடந்தவை கடந்தவைதான் எண்டுறது எனக்கும் விளங்குது. ஆனால் உண்மைய அறியப்போய் எனக்கு உங்களைவிட பெரிய அதிர்ச்சியான உண்மை ஒண்டு தெரிய வந்திருக்குது. அது நான் எதிர்பார்த்ததைவிடப் பெரிய குழப்பமாய் போயிட்டுது'

'என்ன அறிஞ்சா? அம்மா என்ன சொன்னா? ஏன் நீ இவ்வளவு பயப்பிடுகிறாய்?'

'அதைச் சொன்னா நீங்கள் நம்பமாட்டியள். அப்பிடி ஒரு ஒற்றுமை எனக்கும் உங்களுக்கும்'

'நீர் என்ன சொல்ல வாறீர் அமுதினி? அதை விளக்கமாகச் சொல்லும்'

'அம்மா என்னுடைய பிறப்பைப் பற்றிய சில உண்மைகளைச் சொன்னா?'

'அதுவரைக்கும் எனக்கு விளங்குது. அனால் உண்மை என்ன எண்டு சொன்னால்தானே முழுமையா விளங்கும்'

'அதை எப்பிடிச் சொல்லுகிறது சித்தன். நான் அப்பா எண்டு நினைச்சுக் கையைப் பிடிச்சு வளர்ந்தது உண்மையான அப்பா இல்லை எண்டுகிறதை ஜீரணிக்க முடியேல்ல'

'என்ன சொல்லுகிறா அமுதினி?'

'உங்கடை அப்பா அம்மா மாதிரியே டென்மார்க் போய் அம்மா எனக்குப் பிறப்பு தந்திருக்கிறா எண்டதை அம்மாவே என்னிட்டைச் சொன்னா? என்னால அதை முதல்ல நம்பமுடியாமல் இருந்தாலும் அம்மா சொல்லுகிறதை நம்பித்தான் ஆகவேணும் எண்டது எனக்கு விளங்கிச்சுது. அம்மா சொல்லுகிறதை நம்பி இயங்குகிறதுதானே இந்த உலகம்'

'உங்கட அப்பாவுக்கா பிரச்சினை எண்டு சொன்னா'

'ம்... அப்பிடிதான் சொன்னா'

'டென்மார்க்கில போய் அதைச் சரி செய்து கொண்டு வந்தவையா. அதுவும் தமிழ் ஆளிட்டையா சரி செய்தவை?'

'ம்... இதையேதான் அம்மா சொன்னா'

'எப்பிடி டென்மார்க்கில இருக்கிற அந்த ஆளத் தெரியுமாம்?'

'யாரோ இங்க இருக்கிற தரகர்மூலம் அறிமுகமானதாய் அம்மா சொன்னா'

'நீ நான் சொன்னதைக் கேட்டிட்டுச் சொல்லேல்லையே?'

'இல்ல சித்தன். அதுதான் என்னால நம்பமுடியாமல் இருக்குது'

'எனக்கும் பயமா இருக்குது அமுதினி'

'எதுக்கு இப்ப நீங்க பயப்பிடுறியள் சித்தன்?'

'எங்கள் இரண்டு பேருக்குமான ஆரம்பப் புள்ளி ஒண்டாக இருந்திடுமோ எண்டு பயமாக இருக்குது. நான் அப்பிடி எண்ணக்கூடாது எண்டு நினைச்சாலும் அந்த எண்ணம்தான் மீண்டும் மீண்டும் வருகுது'

'அப்பிடியெல்லாம் இருக்காது எண்டு நம்புவம் சித்தன். எதுக்கும் நாங்கள் ஆறுதலாய், அவதானமாய் நடக்க வேணும்'

'நீர் சொல்லுகிறது சரிதான். எந்த முடிவையும் நாங்கள் அவசரமாய் எடுக்க முடியாது. யார் எண்டு தெரியாமல் எதுவும் செய்யவும் முடியாது'

'நீங்கள் அப்பிடிப் பயப்படுறியளா?'

'எதுவும் முடிவாத் தெரியாட்டி எல்லாத்துக்கும் பயப்படத்தானே வேணும். முடிவு தெரியாமல் இந்தப் பயம் மாறாது'

'ம்... என்ன செய்கிறது?'

'நான் திரும்பவும் அம்மாவோடை கதைக்கிறன். இயலுமான அளவு இதைப் பற்றிய எல்லாத் தகவலையும் கேட்டு அறியிறன். நீரும் அம்மாவோடை விளக்கமாக் கதையும். அதுக்கு பிறகு என்ன செய்யலாம் எண்டு யோசிக்கலாம். இரண்டு குடும்பமும் டென்மார்க்கில இந்த உதவியைப் பெற்றிருக்கினம் எண்டு தெரிஞ்ச பிறகும் நாங்கள் அதைத் தெரிஞ்சு கொள்ளாமல் விடுகிறது நல்லது இல்லை எண்டு நினைக்கிறன்'

'சீ... இதைக் கதைக்கவா வீட்டை வந்தியள் எண்டு இருக்குது'

'அமைதியாய் இரும் அமுதினி. நாங்கள் இதில ஏதாவது பிழை விட்டால் அது எங்களுக்கு மாத்திரம் பிரச்சினை இல்லை. எங்களுக்குப் பிறகு வாற சந்ததியையும் பாதிக்கும். அதால இதைப்பற்றி முழுமையா அறிய வேண்டியது மிகவும் அவசியம்'

'நீங்கள் சொல்லுகிறது ஒருவகையில சரிதான். இன்னொரு விதமா யோசிச்சா யாருக்காக, எந்த விதமான சரி பிழைக்காக நாங்கள் விட்டுக்கொடுத்து வாழோணும் எண்டும் இருக்குது. உங்களுக்கு எப்பிடி என்னைப் பிடிக்குமோ அப்பிடிதான்

எனக்கும் உங்களைப் பிடிக்கும். அதைக் குழப்பிற மாதிரி எது வந்தாலும் அதைப் புறக்கணிக்க வேணும் போல இருக்குது. அதே நேரம் நாங்கள் அப்பா அம்மாவைப் பற்றியும் யோசிக்க வேணும். எங்களுக்காக அவை செய்த தியாகம், விட்டுக்கொடுப்பு அளவில்லாதது. அவைய நோகடிக்கிற மாதிரி எதையும் செய்ய முடியாது. அதால நீங்கள் சொல்லுகிறபடிதான் செய்ய வேணும். வேற வழி இல்லை'

'உண்மை அமுதினி. ஆழமாய், ஆறுதலாய், அவதானமாய் இதைப்பற்றி அறிவம். ஆணுக்கும் பெண்ணுக்குமான மனித உறவு எண்டுகிறது விலங்குகளின்ர உறவு மாதிரி இல்லை. விலங்குகளின்ர உறவு எண்டுகிறது எளிமையானது. அதுக்கு தேவையானது ஆண் பெண் எண்டுகிற இரு பால் மட்டுமே. உறவு முறை பற்றி அவற்றிற்குச் சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை. மனிசருடைய உறவு அப்பிடி இல்லை. அது இருபால் இருந்தால் மட்டும் பூர்த்தியாவது இல்லை. அதைவிடத் தமிழர்களின் ஆணுக்கும் பெண்ணுக்குமான உறவு மேலும் சிக்கலானது. ஆண் பெண்ணின் உறவை நியாயப்படுத்த அதைச் சுற்றி அரணாக நிறைய விடயங்கள் சரியாய் அமையோணும். அப்பிடித் தமிழர்கள் பார்க்கிற தராதரங்களில பலது இன்றைய நவீன உலகிற்கு ஏற்றதாய் இல்லாவிட்டாலும் சில அடிப்படை விடயங்களைத் தமிழர்கள் மட்டும் இல்லை மனிதர்கள் யாரும் மீறிவிட முடியாது. அதை எல்லாரும் அனுசரிச்சுப் போக வேண்டியது அவசியம்தான். டென்மார்க்தானே… முயற்சி செய்தால் நிச்சயம் கண்டு பிடிக்கலாம்… அதைக் கண்டுபிடிச்ச பிறகு எந்த முடிவெண்டாலும் நிம்மதியாய் எடுக்கலாம்'

'நாங்கள் தேவையில்லாமல் இந்தப் பிரச்சினையைக் கிளறுகிறமோ?'

'சந்தேகம் வந்திட்டுது. இனி அதைக் கண்டு பிடிக்காமலிருந்து பிறகு தெரிய வந்தால் அதைவிட ரணம் வேறு ஒண்டும் இருக்காது.

இது சாதாரண விஷயமா; அப்பிடி அசண்டையாக விடுகிறதுக்கு'

'நீங்களே இவ்வளவுக்கு ஆர்வமா அறியோணும் எண்டா நான் குறுக்க நிற்கமாட்டன்'

'எனக்கு இதில ஆர்வம் எண்டில்லை அமுதினி. இப்பவும் என் நினைவெல்லாம் நீர்தான் நிறைஞ்சு இருக்கிறீர். எங்களுக்குள்ள இருக்கிற இந்தப் புனிதமான காதலில எந்தத் தவறும் நடக்கக் கூடாது எண்டு நினைக்கிறன்'

'சரி சித்தன். அப்ப நானும் கதைக்கிறன். நீங்களும் கதையுங்க'

'ம்… அதுதான் சரி… நான் வெளிக்கிடுகிறன் அமுதினி'

'ம்... சரி'

'மாமி, மாமாவிட்ட சொல்லும்'

'ம்... சொல்லுறன்'

'பயப்படாதையும். எல்லாம் நல்லதாய் முடியும் எண்டு நினைப்பம். காத'

'காத'

சித்தன் புறப்பட்டுச் செல்ல அவனை அனுப்பிவிட்டு வந்து சோபாவில் தொப்பென்று இருந்தாள். சித்தனின் காதல் பயித்தியம் தணியத் தொடங்கும் பொழுது தனது காதல் பைத்தியம் உச்சத்தை எட்டி இருப்பது அவளுக்கு விளங்கியது. அது இதயத்தை நசித்து இரத்தத்தை வடிய வைத்தது. சித்தன் தனக்கு இல்லாமல் போகும் சந்தர்ப்பம் வருமோ என்று எண்ணவே அவளது இதயம் பொசுங்கிப் போனது.

மனிதர்களின் உறவு முறை என்பது மிகவும் உணர்ச்சிகள் நிறைந்த சிக்கலான விஷயம். அதில் மானம், மரியாதை, கௌரவம், பாசம், பந்தம் என்று பலவிஷயங்கள் அடங்கி இருக்கின்றன. அவற்றின் சமநிலை பாதிக்கப்படக்கூடாது. பாதிக்கப்பட்டு உறவுகளில் பங்கம் வந்தால் கௌரவத்திற்காகக் கொலையே செய்வது மனித இயல்புகளில் ஒன்று. அந்த மனிதர்களின் உறவில் பழுதுகள் இருப்பதைப் பலரும் ஏற்க மறுப்பார்கள். அதைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு வன்முறைகூடச் செய்வார்கள்.

தாங்க முடியாத வேதனை என்றாலும் சித்தன் சொல்வது சரி என்றே அவளுக்குத் தோன்றியது. இந்த உறவில் சிறு சந்தேகம்கூட வந்திருக்கக்கூடாது. ஆனால் வந்துவிட்டது. இனி அதைத் தெளிவு செய்யாது எந்த முடிவிற்கும் வரமுடியாது என்பதை அவள் வேதனையோடு ஏற்றுக்கொண்டாள். அந்தக் கணத்தில் தங்கு தடையின்றி கண்ணீர் அவள் இமைகளைக் கிழித்து இறங்கியது.

14

இரத்தத்தைப் பூதாகரமான அட்டைகள் உறிஞ்சிக் குடித்ததாக வெளியே வந்த சித்தன் கால்களின் சக்தியை இழந்து தள்ளாடினான். நடப்பதை நிறுத்தி விடுவேனோ என்கின்ற பயம் அவனுக்குத் தோன்றியது. எங்களுக்கேன் இந்தச் சோதனை என்கின்ற கேள்வி அவன் மனதைத் தூண்டிலில் மாட்டிய மீனாகத் துடிக்கத் துடிக்க இழுத்துக் கரையில் போட்டது. பேருந்துத் தரிப்பிடம் சில நூறு மீற்றர் தொலைவிலேயே இருந்தது. இருந்தும் அது இன்று பல மயில்கள் தாண்டி இருப்பது போல நீண்டுகொண்டே சென்றது. இடையில் எங்காவது இருந்து களைப்பாறி, பின்பு நடக்கலாமோ என்கின்ற எண்ணம் உண்டானது. சுற்றிப் பார்த்தான். இருப்பதற்கு வசதியாக எதுவும் இருக்கவில்லை. நிலத்திலிருப்பதற்கு மனம் ஏகவில்லை. பட்டினி கிடந்த மாடு பழுவான வண்டிலில் அகப்பட்டு அதை இழுக்க முடியாது இழுப்பது போல, வலுவற்ற உடலை இழுத்தவண்ணம் பேருந்துத் தரிப்பிடத்தை நோக்கி நடந்தான்.

பேருந்தில் இயந்திர மனிதன் போல் ஏறி இருந்தவனுக்கு ஒளிமயமான தனது உலகம் இருண்டு போனதான பயம் உண்டாகியது. அமுதினியோடு அவசரப்பட்டுக் கதைத்துவிட்டேனோ என்கின்ற கேள்வி எழுந்தது. அவள் இல்லை என்றால் தன்னால் அதைத் தாங்கிக்கொள்ள முடியுமா? என்கின்ற கேள்வி உண்டாகியது. அந்த உண்மையே தன்னை வேட்டையாடிவிடும் என்பது விளங்கியது.

யாரோ இருவர் அவனோடு வந்து பேருந்தில் ஏறினார்கள். யாரோ சிலர் இறங்கிப் போனார்கள். தரிப்பிடத்திலிருந்து பேருந்து ஒரு பெருமூச்சு விட்டுக் கிளம்பியது. இது எதையும் அவதானிக்கும் மனநிலை சித்தனிடம் இருக்கவில்லை.

அற்புதமாக விரிந்த காதல் மொட்டு அவசரமாகத் தணலைத் தழுவி விடுமோ என்கின்ற பயம் அவனை இடைவிடாது வாட்டியது. 'இவ்வளவிற்கு வந்த பின்பு நாங்கள் ஏன் இதைக் கிளறவேண்டும்? உலகத்தில் காதலிப்பவர்கள், கலியாணம் செய்பவர்கள் இப்படித்தான் தேவையில்லாதவற்றைக் கிளறிக்கொண்டு இருக்கிறார்களா?

நதி மூலம் ரிஷி மூலம் பார்ப்பது தப்பில்லையா? இதனால் பாதிக்கப்படுவது நானும், அமுதினியும், எங்களது குடும்பங்களும் மட்டுமல்லவா? நதி மூலம் ரிஷி மூலம் பார்க்காமல் விட்டு ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அது தெரியவந்தால், பாதிக்கப்படுவது யார்? ஓ இரண்டு பக்கமும் எரியை வைத்து என்னை ஏன் நடுவில் வைத்தாய் கடவுளே!' என்று பல கேள்விகள் அவனுள் எழுந்தன.

பேருந்து நின்றது தெரியாது. நின்றுவிட்டு இழுத்த இழுவையில்தான் அது நின்றுவிட்டுப் புறப்பட்டது அவனுக்கு விளங்கியது. யார் ஏறினார்கள் யார் இறங்கினார்கள், அவனைச் சுற்றி என்ன நடக்கிறது என்பது பற்றி எந்த அக்கறையும் இருக்கவில்லை. அவன் உடல் மட்டும் பேருந்திலிருக்க மனசு எங்கெல்லாமோ நிம்மதி இன்றி அலைந்தது.

'இது என்ன சோதனை? இதற்கு என்ன முடிவு? இந்தப் பிரச்சினையிலிருந்து எப்படி வெளியே வருவது?' கேள்விகள் பிணத்தை உண்ணும் புழுக்களாக மூளைக்குள் நெளியத் தொடங்கின.

வீட்டிற்கு உள்ளே வந்தபோது அப்பாவும் அம்மாவும் ஏற்கனவே படுக்கைக்குச் சென்றுவிட்டார்கள். வீடு நடுச்சாமத்து மயானம் போல நிசப்தத்தில் மூழ்கிக்கிடந்தது. நிசப்தம் சிலவேளை நிம்மதி தரும். சிலவேளைப் பயத்தைத் தரும். அந்த நிசப்தம் ஒருவித பயத்தை உண்டு பண்ணியது. அவர்களோடு இப்போது கதைக்காது நாளைக்குக் கதைப்பதே நல்லது என்று சித்தனுக்குத் தோன்றியது. மனசில் உள்ள குழப்பங்கள் நேரத்தோடு தெளியத் தொடங்கலாம். குழப்பத்தோடு கதைப்பதிலும் தெளிவாக இருக்கும்போது கதைப்பதே ஏதாவது விடையைத் தேடித்தரும் என்று தோன்றியது.

அவன் தனது அறைக்குச் சென்று படுக்கையில் விழுந்தான். நேற்றுவரை பஞ்சு மெத்தையாக இருந்த படுக்கை இன்று உறைபனி மெத்தையாக மாறி நித்திரை வர மறுத்தது. எண்ணங்கள் எங்கெங்கோ குரங்கு மரத்திற்கு மரம் தாவுவது போல அந்தரத்தில் பாய்ந்துகொண்டே இருந்தன.

இப்படிப் புரளுவதிலும் வெளியே சென்று இளைக்க இளைக்க ஓடிவிட்டு, அல்லது நடந்துவிட்டு வந்தால் நித்திரை வரும் என்று தோன்றியது.
அதற்குமேல் இனி நித்திரை வராது என்பது தெள்ளத் தெளிந்த உண்மையாக, அவன் தனது உடற்பயிற்சி செய்யும்பொழுது அணியும் உடையை அணிந்துகொண்டு வெளியே புறப்பட்டுச் சென்றான்.

வெளியே எந்த மனித நடமாட்டமும் இருக்கவில்லை. தெருவில் திகில் தரும் அமைதி குடிகொண்டாலும் இடைக்கிடையே அந்த அமைதியைத் துவம்சம் செய்வது போலச் சில மகிழுந்துகள் உறுமிக்கொண்டு சென்றன. மின்சாரத்தில் ஓடும் மகிழுந்துகள் வந்த பின்பு அந்த உறுமல் குறைந்தாலும் தொடர்ந்தும் எரிபொருளில் ஓடுபவை தங்கள் இருப்பைப் பறைசாற்றிக்கொண்டு இருக்கின்றன. அவற்றிற்கான அந்திமகாலம் எப்போது வரும் என்பது யாருக்கும் தெரியாது. அதை ஆராயும் மனநிலை சித்தனுக்கு இன்று இருக்கவில்லை.

மனசும் உதடும் 'அமுதினி அமுதினி' என்று உச்சரிக்க, நினைவு எல்லாம் அவளைச் சுற்றி வட்டமடிக்க, கால்கள் இலக்கற்றதாக நடைபோட்டன. 'அமுதினி எனக்கு இல்லையா?' என்கின்ற கேள்வி வரும்போது அவனது இதயம் கல்லாய் உறைந்து போவதாய் வலித்தது. அவன் ஓடிப்பார்த்தான். நடந்து பார்த்தான். இருந்தும் அமுதினியின் நினைவும், இனி என்ன நடக்கும் என்கின்ற பயமும் அவனை இடைவிடாது துரத்திக்கொண்டு இருந்தன.

தெருவிற்கு வந்து ஓடினாலும் நினைவுகளிலிருந்து விடுதலை பெறமுடியாது என்கின்ற பொழுது அவனுக்குக் கத்தி அழவேண்டும் போலிருந்தது. 'நடுச்சாமத்தில் தெருவில் நின்று கத்தினால் யாராவது பைத்தியம் என்று காவலைக் கூப்பிடலாம். பைத்தியம் என்று காவல் வந்தால் என்ன நடந்துவிடும்?' என்று எண்ணினான். அதனால் தனக்கு உடனடிப் பாதிப்பு வராவிட்டாலும் அதை மற்றவர்கள் அறியும்போது பல பிரச்சனைகள் உருவாகும் என்பது விளங்கியது. 'அப்பா, அம்மா அந்த அதிர்ச்சியைத் தாங்க முடியாது துடிப்பார்கள். மாமா, மாமி, அமுதினி எல்லோரும் கேள்வி கேட்பார்கள். அதைவிட வேலையில், படிப்பில் என்று பல இடத்திலிருந்தும் கேள்விகள் வரலாம். எனது எதிர்காலத்தில் பல தடைகளை அது கொண்டு வரலாம். இப்போது அமைதியாகத்தான் செல்ல வேண்டும். உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தப் பழகியவன்தானே மனிதன்.
அதன் போராட்டம் அல்லவா இது. மனிதனாக இருந்தால் நான் அமைதியாகச் செல்ல வேண்டியதுதான்' என்று எண்ணியவன் மீண்டும் ஓட முயன்றான். களைப்பாக இருந்தது. அவன் நடந்தான்.

'எங்கள் வாழ்வு எப்படி அமையப் போகிறது?' என்கின்ற கேள்வி மீண்டும் மாவீரன் ஒருவனின் கணைகள் ஓய்வின்றி அடிப்பது போல அவன் மூளையைத் தாக்கிக்கொண்டே இருந்தன. தோற்ற இராவணன் தொங்கிய தலையோடு சென்றது போலச் சித்தன் மீண்டும் வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

காலைக்கடனை முடித்து உடைகளை அணிந்து கொண்டு கீழே வந்தபோது அம்மா காலைச்சாப்பாடு செய்து முடித்திருந்தாள். இன்று இடியப்பம், சம்பல், சொதி என்கின்ற யாழ்ப்பாணத்துக் காலைச் சாப்பாடு. சித்தனுக்குப் பிடித்த சாப்பாடு அது என்றாலும் இன்று இடியப்பத்தைச் சொதியில் நனைத்தாலும் தொண்டையால் இறங்குமா என்கின்ற சந்தேகம். மூளையில் புழுத்த கேள்விகள் முகத்தில் இருளாய் வடிவதான ஒரு உணர்வு. அம்மா சாப்பிட்டு முடித்த பின்பு குடிப்பதற்குப் பால் கோப்பி தயாரிப்பதற்கான ஏற்பாடு செய்தாள்.

சித்தன் போய் அமர்ந்ததும், 'என்ன முகம் பேயறைஞ்ச மாதிரி கிடக்குது... என்ன நடந்தது உனக்கு? பசியில வாடிப்போனியே? இரு... இருந்து முதல்ல இடியப்பத்தைச் சுடச்சுட சாப்பிடு'

'ம்' என்றான் சித்தன். அவனுக்கு அதற்குமேல் என்ன பதில் சொல்வது என்று விளங்கவில்லை.

'என்னடா... என்ன நடந்தது? ஏன் ஒருமாதிரியாய் இருக்கிறாய்?' அம்மா இடியப்பத்தைத் தட்டில் வைத்தவண்ணம் மீண்டும் கேட்டாள்.

'எதிர்பாராத பிரச்சனைகள்... எதிர்பாராத நேரத்தில... எனக்குமட்டும் ஏன் வரவேணும் அம்மா?' என்றான் சித்தன். அவளுக்கு அவன் கேள்விகள் அதிர்ச்சியாக இருந்தன.

'என்ன சொல்ல வாறாய் சித்தன்?' திகைப்போடு கேட்டாள்.

'உங்களை மாதிரியே மாமியும் ஒரு உண்மையைச் சொல்லி இருக்கிறா'

'என்ன உண்மைய சொன்னவா?'

'ம்... அவையும் டென்மார்க் போயத்தான் அமுதினி கிடைச்சவளாம். நீங்கள் எப்பிடி டென்மார்க்கிற்குப் போய் என்னைப் பெத்தியளோ அதைப் போலவே அவையும் செய்திருக்கினம். இரண்டு கதையும் இரட்டைப் பிள்ளையள் போல ஒரேமாதிரியா இருக்குது. அதுதான் எனக்குப் பயமா இருக்குது அம்மா'

'என்னடா சொல்லுறா சித்தன்? கேட்க எனக்கே பயமா இருக்குது. டென்மார்க்கில எங்க போனவையாம்? யாரிட்ட போனவையாம்?'

'உங்களை மாதிரித் தரகர் மூலம்தான் அங்க போயிருக்கினம். அங்க யார் உதவி செய்தது எண்டு தெரியாது. உதவி செய்யிறவர் ஒரு டொக்ரர் எண்டு அந்தத் தரகர் சொல்லி இருக்கிறார். உங்களைப் போலவே அவைக்கும் அதுக்குப் பிறகு எந்தத் தொடர்பும் இல்லை. எனக்கு அதைக் கேட்டதில இருந்து பயமா இருக்குது அம்மா'

'அப்பிடியெல்லாம் இருக்காதடா. நீ எதுக்கும் யோசிக்காதை'

'எப்பிடியம்மா யோசிக்காமலிருக்கிறது? எப்பிடியம்மா அதை முழுமையா தெரிஞ்சு கொள்ளாமல், கலியாணம், குடும்பம் எண்டு... அது தப்பில்லையா அம்மா?'

'அப்பிடி இருந்தால் அது பெரிய தப்புதான். அப்பிடி இருக்காது எண்டு நம்புவம்'

'இது நம்புற விஷயம் மட்டுமில்ல... உண்மைய ஆதாரபூர்வமாக அறிய வேணும் அம்மா. அதுக்குப் பிறகுதான் எனக்கும் அமுதினிக்குமான வாழ்க்கை தொடங்கவேணும். எவ்வளவு கற்பனையோடை, ஆசையோட இருந்தன். எல்லாம் கனவாகிப் போயிடுமோ எண்டு பயமா இருக்குதம்மா'

'இது என்ன சோதனை கடவுளே? ம்... நீ சொல்லுகிறதும் சரிதான். சுவடுகள் அழிஞ்ச பிறகு அதைத் தேடுகிற வேலையாப் போச்சுது. நீ எல்லா உண்மையையும் அறிய வேணும் எண்டால் அதை யாரும் தடுக்கக் முடியாது. அது ஒருவகையில தப்பு நடக்காமல் தடுக்கிற மாதிரி இருக்கும். ஆனால் இப்ப யார் எங்க இருக்கினம் எண்டு தெரியாது. கொரோனா பிரச்சினை வேற. நாங்கள் முதல்ல அப்பாவோடை கதைக்கோணும். அவருக்குத்தான் தரகரைப்பற்றித் தெரியும். தரகருக்கு மட்டும்தான் அந்த ஆளையும், அவர் யார் யாருக்கு உதவி செய்தார் எண்டதும் தெரியும். அவரிட்ட வேற ஆட்களும் இருந்திருக்கலாம். நாங்கள் பயப்படுகிற அளவுக்கு எதுவும் இல்லாமலும் இருக்கலாம்'

'அப்பா எங்க போயிட்டார் அம்மா?'

'அப்பா வெளிய போயிட்டார். நான் வந்ததும் அவரிட்ட கேட்கிறன். பின்னேரம் நீ வா... நாங்கள் விபரமாய் கதைப்பம்'

'சரியம்மா'

*

சித்தன் வேலையால் வந்தபொழுது அப்பா சோபாவில் நாட்டை இழந்த அரசன் போல யோசித்துக் கொண்டு இருந்தார். அவர் முகம் மழைக்கால வானமாக இருண்டு கிடந்தது. அம்மா சித்தனைப் பார்த்துச் சிரித்துவிட்டுச் சாப்பாட்டு அலுவலில் ஈடுபட்டாள்.

அப்பாவின் இந்த ஆழ்ந்த யோசனைக்குக் காரணம் என்னவாக இருக்கும் என்கின்ற ஆராய்ச்சி அவன் மூளையை ஆக்கிரமிக்க, அதில் மூளையில் பெருகிய கேள்விகளோடு, தனது அறைக்குச் சென்று பையை வைத்துவிட்டு, பின்பு கையைக் கழுவிக்கொண்டு கீழே வந்தான்.

கீழே மீண்டும் வந்தபோது அப்பா சாப்பாட்டு மேசையிலிருந்தார். அப்பா ஆலகால விஷத்தை உண்ட மாதிரியான நிறத்தில். கழுத்தில் அம்மா கை வைக்காததில் உடல் முழுவதும் கறுப்பான கோலம். சித்தன் காரணம் விளங்காத தவிப்பில். சித்தனைக் கண்ட மலர்விழி, 'வா... வந்து இரு' என்றாள்.

'நான் வந்து இருக்கிறது இருக்கட்டும். அது சரி நான் வந்ததையும் கவனிக்காமல் அப்பாவுக்கு அப்பிடி என்ன யோசனை?'

'ம்... எல்லாம் உன்னால வந்த கவலைதான்'

'ஏனப்பா, நான் உங்களுக்கு என்ன செய்தன்?'

'இந்த அப்பாவை அப்பாவா நினைச்சா, அந்த அப்பாவைப் பற்றி ஏன் இப்ப கதைக்கோணும் சித்தா? அதுதான் இந்த அப்பா நொந்துபோய் இருக்கிறார்'

'ஐயோ நீங்கள் பிழையா விளங்கீட்டியள் அப்பா... நான் இப்ப அவரைச் சந்திக்க வேணும் எண்டு நினைக்கிறது உங்களில அன்போ மதிப்போ இல்லாமலில்லை. நீங்கள் அப்பா எண்டதும் மாறப் போறதில்லை. இந்த அப்பா எப்பவும் இந்த அப்பாதான். அது எந்த அப்பாவுக்காகவும் மாறாது'

'நீ இப்ப நல்லாய் கதைக்கிறாய். எதுக்குத் தேவையில்லாத விஷயங்களைக் கிளறிக்கொண்டு இருக்கிறாய்?'

'அதுக்கு ஒரு முக்கியமான காரணம் இருக்குது அப்பா'

'என்ன அது?'

'அதை இப்ப சொல்ல வேணுமா அப்பா'

'சித்தன் என்ர நிலைமையில உன்னை வைச்சுப்பார். எனக்கெண்டு இருந்த மகன் தொடர்ந்தும் எனக்கெண்டு இருக்கிறானா இல்லையா எண்டு தெரியாத ஒரு

அப்பாவின் மனநிலை எப்பிடி இருக்கும் எண்டு யோசிச்சுப் பார். இது நரக வேதனை சித்தன். குழந்தைகளின்ர பாசம் வளர வளர அப்பாவில குறைஞ்சிடும். ஆனால் அப்பாவுக்கு குழந்தைகள் எப்பவும் குழந்தைகள்தான்'

'நான் உங்கட குழந்தைதான். அதில எந்த மாற்றமும் இல்லை. நீங்க பயப்படாதையுங்க அப்பா'

'அப்ப எதுக்கு இப்ப அவரைத் தேடுறாய்?'

'நான் சொன்னதை அம்மா சொல்ல இல்லையா?'

'அதையேன் இப்ப கிளறிக்கொண்டு இருக்கிறாய்?'

'நீங்க பிள்ளைப் பாசத்தில கதைக்கிறீங்க அப்பா. ஆனா தப்பா ஒரு பேரப்பிள்ளை பிறந்தா எப்பிடி இருக்கும் எண்டு யோசிக்கிறியள் இல்லை. அப்பிடி ஒரு தப்பு நடக்கக்கூடாது எண்டதுக்குத்தான் நானும் அமுதினியும் அதைப் பற்றி அறியவேணும் எண்டு நினைக்கிறம். எங்களுக்கே இதில விருப்பம் எண்டு இல்லை. ஆனா அது தப்பான வாழ்க்கையா, மன்னிக்கமுடியாத செய்கையா, சமுதாயம் எங்களைக் குற்றவாளிக் கூண்டில ஏற்றும் இல்லையா அப்பா?'

'எனக்கு சிலோனுக்குப் போய் அங்கேயே இருக்கோணும் போல இருக்குது' என்றான் செந்தில்.

'என்ன விசர்க் கதை கதைக்கிறியள்? அங்க உங்களை யார் பார்ப்பினம்?' என்றாள் மலர்விழி.

'யார் பார்ப்பினம்... என்னை நான் பார்க்க மாட்டனே?' என்றான் செந்தில்.

'என்னப்பா இப்பிடி எல்லாம் கதைக்கிறியள்? நீங்கள் வேண்டாம் எண்டா நாங்கள் அதைப்பற்றி அறியாமலே விடுகிறம். ஆனா அது பிழைச்சா நீங்கள்தான் அந்தப் பழிக்குக் காரணம்' என்றான் சித்தன்.

'ம்... அப்படியும் ஒண்டு இருக்குதென்ன? பலதையும் கேள்விப்படுகிறம். சரி நான் உன்னை நம்புறன். போனமாம் வந்தமாம் எண்டு அறிஞ்சுகொண்டு வாருங்கோ' என்றான் செந்தில்.

'நீங்கள் ஒரு உத்தமமான மனிதர் எண்டு நிருபிச்சிட்டியள் அப்பா'

'சித்தன் கேட்கிறதில ஒரு நியாயம் இருக்குது எண்டு அப்பவே சொன்னன் எல்லே...' என்றாள் மலர்விழி.

'ம்...'

'சரி… இப்ப எண்டாலும் இரண்டுபேரும் நிம்மதியாய் சாப்பிடுங்கோ'

அப்பா சம்மதித்தது நிம்மதியைத் தந்தாலும் அவரைக் காக்க வைப்பது போல நாள்களை இழுத்தடிக்காது குறுகிய காலத்தில் இதற்கு ஒரு விடை காணவேண்டும் என்று அவன் முடிவு செய்துகொண்டான். அதுதான் அப்பாவிற்கும் தங்களுக்கும் அமைதியைத் தரும் என்பது விளங்கியது. முடிவு என்னவாக இருந்தாலும் அது ஏற்கனவே கல்வெட்டாய் பதியப்பட்டதாகும். அதை இனி அழிக்கவோ மாற்றவோ முடியாது. அதைக் கண்டுபிடித்து அதன் வழியில் செல்வதே உசிதமானது. நிச்சயம் அது எங்களுக்குச் சாதகமாக அமையாவிட்டால் இரண வேதனை வாழ்நாள் முழுவதும் காத்திருக்கிறது. அது வேதனை மாத்திரம் இல்லை. அவமானம், ஆதங்கம், அருவருப்பு என்று துன்பங்களின் தொடர்ச் சங்கிலியாகும்.

'என்ன சித்தன் நீ இப்ப யோசிக்கிறாய்?' என்றான் செந்தில்.

'அப்பிடி ஒண்டும் இல்லை அப்பா… நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய வேணும்'

'என்ன? தரகற்ற விபரமே'

'அவற்ற பெயர் மனோகரன். முழுப்பெயர் தெரியாது. நம்பரும் இருக்கோணும். அதை மாத்தாமல் இருந்தார் எண்டா உனக்கு வேலை சுகமாய் முடியும். நான் தேடி எடுத்துத் தாறன்'

'தாங்ஸ் அப்பா'

15

அன்று காலை சித்தன் எழுந்து வந்தபொழுது கோழி இரைதேட மண்ணைக் கிண்டுவது போல தங்கள் அறை அலுமாரியைக் கிண்டிக் கண்டுபிடிக்க முடியாத அப்பா, பின்பு வாழறையிலிருந்த அலுமாரியை வேகமாகக் கிண்டிக்கொண்டு இருந்தார். அவர் எதற்கு இப்படிக் கிண்டுகிறார் என்பது சித்தனுக்கு விளங்கியது. இருந்தும் அவன் அவரைத் தடுக்க விரும்பவில்லை. அவர் அந்தத் தகவலைத் தேடி எடுத்தால் மட்டுமே இருட்டறையில் நிற்பவனிடம் கைவிளக்கைக் கொடுத்தது போன்று ஏதாவது ஒரு வழி பிறக்கும் என்று தோன்றியது. இந்தப் பிரச்சனைக்கு ஏதாவது ஒரு வழி பிறக்க வேண்டும். அதற்கு அந்தத் தரகரைக் கண்டுபிடிக்க வேண்டும். அப்பொழுதுதான் தனது வாழ்வில் விடிவெள்ளி உதயமாகும் என்பது விளங்கியது.

அப்பாவைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அவருக்கு உதவி செய்ய வேண்டும். உதவி செய்தால் ஆய்வகத்திற்குச் செல்வதற்குப் பிந்திப் போய்விடும் என்று பதட்டமாக இருந்தது. அவன் அப்பாவைப் பார்த்து, 'என்னப்பா நம்பரா தேடுறியள்?' என்று கேட்டான்.

'ஓமடா... போனில இப்ப அந்த நம்பர் இல்ல... ஒரு பழைய பச்சை டயறியில அதை எழுதி வைச்சிருந்தன். இப்ப அதை விழுந்து விழுந்து தேடினாலும் கண்ணில படாமல் போக்குக் காட்டுது'

'அவதிப்படாமல் ஆறுதலாத் தேடுங்க... நிச்சயமா அது கிடைக்கும். நானும் தேடலாம்... லாப்பிற்குப் போகப் பிந்தீடும் அப்பா. நான் சாப்பிட்டிட்டு வெளிக்கிட வேணும்'

'அது பிரச்சினை இல்லை. நீ சாப்பிட்டிட்டு வெளிக்கிடு. நான் தேடி எடுக்கிறன்'

'தாங்ஸ் அப்பா'

'போ... போய்ச் சாப்பிடு'

சித்தன் சமையல் அறைக்குச் சென்றான்.

*

வேலைக்குச் சென்றாலும் நினைவு மட்டும் வீட்டில் அப்பா தேடும் அலைபேசி எண்ணைச் சுற்றியே இருந்தது. அது அலைபேசி எண் அல்ல, வாழ்வின் திறவு கோல் என்பதை அவன் அறிவான். அதை அப்பாவிடம் இருந்து வாங்கும் கணத்திற்காய் ஏங்கியவன் விரைவாக வேலையிலிருந்து நழுவி வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

வீட்டிற்குள் வரும்போது அப்பா சித்தனைக் கண்டுவிட்டுத் தனது தேநீர்க் கறைபடிந்த அத்தனைப் பற்களையும் காட்டினார். அப்பா அப்படிச் சிரித்தால் அவர் சந்தோஷமாக இருக்கிறார் என்று அர்த்தம். அவர் சந்தோஷமாக இருக்கிறார் என்றால் இன்று அந்த எண்ணைக் கண்டுபிடித்துவிட்டார் என்பது திண்ணம். அந்த மகிழ்ச்சியான எண்ணம் அவனுள் மலர்ந்து அவனைப் பூரிக்கச் செய்தது. அதற்கு மேல் தனது ஆவலைக் கட்டுப்படுத்த முடியாதவனாய், 'என்ன இவ்வளவு சந்தோஷமாய் இருக்கிறியள் அப்பா, என்ன நம்பரைக் கண்டுபிடிச்சிட்டியளா?' என்றான்.
'ம்... உனக்கு என்னைப் பார்த்த உடனேயே மூக்கு வியர்த்திட்டுது போல இருக்குது. வா முதல்ல போய்ச் சாப்பிடுவம். அம்மா காத்திருக்கிறா'
'சரியப்பா'

*

சாப்பிட்டு முடித்த பின்பு அப்பா அந்த டயரியை எடுத்து அதிலிருந்த **45235322** என்கின்ற எண்ணைச் சித்தனிடம் கொடுத்தார். சித்தனுக்குத் தங்கச் சுரங்கத்திற்குச் சாவி கிடைத்த சந்தோஷம். அவன் அதை வாங்கிவிட்டு, 'நீங்கள் அடிச்சுப் பார்க்கேல்லையே அப்பா' என்றான்.
'அடிச்சன் சித்தன். அது மெசேஜ்க்குப் போகுது. நான் வைச்சிட்டன்'
'ஓ அப்பிடியே... சரி... நான் அடிச்சுப் பார்க்கிறன் அப்பா'
'ம்... அடிச்சுப்பார்'

சித்தன் உடனேயே தனது திறன்பேசியை எடுத்து எண்களை அழுத்தினான். அடுத்த முனை உயிர் பெற்றுக்கொண்டு, *'Hello, det er Svien Ødegår , Hvem er du?'*(ஹலோ, நான் ஸ்வென் ஓடகோர், நீங்கள் யார்?) என்று கேட்டது.

'*Jeg er Sitthan, Og jeg leter etter en person. Han hetter Manogran. Han hadde dette numere noen år tidligere'* (நான் சித்தன். நான் ஒரு ஆளைத் தேடுகிறேன். அவர் பெயர் மனோகரன். சில வருடங்களுக்கு முன்பு அவரிட்ட இந்த எண் இருந்தது)

'*Ja vel, sikkert han har ikke samme nummer nå. Beklager*' (சரி. இப்ப அவரிட்ட இந்த நம்பர் இல்லை. அதற்கு மனம் வருந்துகிறேன்)

'*Okay... takk. Ha det bra*' (சரி. நான்றி. நலமுடன் வாழ்க)

'*Ha det bra*' (நலமுடன் வாழ்க)

இதைக் கேட்டுக்கொண்டு இருந்த செந்தில் 'யார் கதைச்சது?' என்று கேட்டான்.

'அது ஒரு நொஸ்க் ஆள் அப்பா. தரகர் நம்பரை மாத்தீட்டார்'

'ம்... நிறைய மலிவு விற்பனை வரும். வேற கொம்பனிக்கு மாத்தி இருப்பினம். கவலைப்படாதை. நான் வேற ஆள்களிட்டையும் விசாரிச்சுப் பார்க்கிறன்'

'தாங்ஸ் அப்பா'

*

அறைக்கு வந்த சித்தனுக்கு அடுத்து என்ன செய்வது என்கின்ற குழப்பம். இந்தக் குழப்பத்திற்கு தானே தனித்து யோசித்து விடைகாண முடியாது என்கின்ற உண்மை விளங்கியது. அமுதினியை அழைத்துக் கதைத்தால் அவள் ஏதாவது நம்பிக்கையான யோசனை சொல்வாள் என்று தோன்றியது. அவன் திறன்பேசியை எடுத்து அவள் பெயரைச் சொடுக்கினான். அடுத்த முனை உயிர் பெற்று, 'சித்தன், என்ன விஷயம் சொல்லுங்க? என் நினைவு வந்துதான் போன் எடுத்தியளா. அப்பிடி எண்டா நான் அதிஷ்டக்காரி இல்லையா?' என்றாள்.

'உருகி உருகி நான் காதலிக்கிறன் எண்டு சொன்ன நேரம் நீ விலகி விலகிப் போனாய். இப்ப விதியே நீங்கள் சேரலாமா அல்லது பிரியலாமா எண்டு கேள்வி கேட்கிற தருணத்தில இணைய வேணும் இணைய வேணும் எண்டுறாய். பார்த்தியா வாழ்க்கை இப்பிடிதான். எதுவும் இருக்கும் போது தெரியாத அருமை அது

இல்லை அல்லது இல்லாமல் போய்விடும் எண்டு தெரிய வரும்போது முழுமையாத் தெரியும். அந்த ஞானமா உமக்கு இப்ப வந்திருக்குது அமுதினி'

'இப்ப உங்களிட்ட நான் இந்தத் தத்துவ விளக்கம் கேட்க இல்லை. தத்துவ விளக்கம் எண்டுறது என்ன சித்தன்? நான் எப்பிடி நினைக்கிறன் தெரியுமா சித்தன்? மற்றவரை ஏமாற்றச் சொல் வித்தை காட்டுகிறதுதான் தத்துவ விளக்கம். அதை நாங்கள் எப்பிடிக் கதைச்சா என்ன, விளங்கினா என்ன, வாழ்க்கை எண்டுகிறது மிகவும் எளிமையானது. அது என்ன தெரியுமா? இனவிருத்தி செய்தல். இயற்கைக்குத் தேவையானது அது ஒன்று மட்டுமே. அது முழுமையாக முடிந்த பின்பு அந்த இயற்கையே மனிதனை எப்படி அகற்றுவது என்பதில் அக்கறை காட்டும். இது மனிதனுக்கு மாத்திரம் இல்லை அனைத்து உயிரினங்களுக்கும் பொருந்தும். அதுவே மரணம். யாரும் எப்பொழுதும் தப்பித்துக் கொள்ள முடியாத மரணம். இப்படி உருப்படி அற்ற தத்துவ விளக்கம் சொல்லி தன்னையும் மற்றவர்களையும் ஏமாற்றுவதைவிட இந்த எளிய வாழ்க்கையை வாழ்ந்துவிட்டுப் போதல் மேன்மையானது இல்லையா சித்தன்?"

'நான் தத்துவம் கதைக்கிறன் எண்டிட்டு இப்ப நீர் தத்துவம் கதைக்கிறீர். மனிதன் சிக்கலாக்கி வைச்சிருக்கிறான் எண்டது உண்மை. அதே மனித சமுதாயத்தில வாழுறது எண்டா அந்தச் சிக்கல்களைச் சமாளிச்சுத்தான் வாழ வேணும் அமுதினி. பலர் கதைக்கிற தத்துவத்தில அவங்களுக்கே நம்பிக்கை இருக்காது எண்டது உண்மை. அதை விடுவம். ஆனால் சமுதாயக் கட்டுப்பாடு எண்டுறது சிக்கலான தத்துவத்தில இருந்து வரேல்ல... அதுக்குப் பதிலா எளிமையான நடைமுறையில இருந்து வந்ததுதான் அவை. அதாலதான் அதை மீற முடியாமலும் இருக்குது'

'நீங்கள் சொல்லுறதும் உண்மைதான். அது சரி இப்ப எதுக்காகப் போன் எடுத்தியள் சித்தன்?"

'அப்பா தரகற்ற போன் நம்பர் எடுத்துத் தந்தார்'

'ஓ அப்பிடியா. நல்ல விசயமாச்சே... போன் பண்ணிப் பார்த்தியளா'

'பண்ணிப் பாத்தன் அமுதினி. ஆனா இப்ப அவர் அந்த நம்பரை பாவிக்கிறேல்ல... அது இப்ப ஒரு நோர்வேக்காரரிட்ட இருக்குது. அதுதான் எனக்கு என்ன செய்யிறது எண்டு தெரிய இல்லை'

'1881, *gulasider.no*, *nett* எண்டு தேடிப் பார்த்தியளா?"

'இல்ல அமுதினி, என்ன செய்யலாம் எண்டு யோசிச்சன். நீ சொல்லுகிறது நல்ல ஐடியாத்தான். இது நல்ல தொடக்கம்'

'நீங்களும் தேடுங்க. நானும் தேடுறன். ஏதாவது ஒரு தகவல் எண்டாலும் கிடைக்கும்'

'சரி அமுதினி, நான் இப்ப வைக்கிறன். நீர் எதுவும் தகவல் கிடைச்சா போன் பண்ணும்'

'சரி... காத பிறா (நலமுடன் வாழ்க)'

'காத'

அடுத்த நாள் அமுதினி திறன்பேசியில் அழைத்தாள். சித்தனிடம் எதுவும் கண்டு பிடித்தீர்களா என்று ஆவலோடு கேட்டாள். சித்தன் எதையும் கண்டுபிடிக்க முடியாத தகவலை வருத்தத்தோடு கூறினான். அவரது பெயரைத் தேடிய பொழுது அவர் வைத்திருந்த ஒரு அலுவலகத்தின் முகவரி கிடைத்திருப்பதான செய்தியை அமுதினி கூறினாள். அவர் தரகர் வேலையோடு குறிப்புப் பார்ப்பதற்காகவும் அந்த அலுவலகத்தை வைத்திருந்தார். அந்தச் செய்தியைக் கேட்ட சித்தன் மறுகரையில் சந்தோஷம் தாங்காது கூத்தாடிய சத்தம் கேட்டது. அடுத்த நாள் நேரே சென்று அலுவலகத்தைப் பார்ப்பதாக முடிவு செய்த பின்பு திறன் பேசியைத் துண்டித்துக் கொண்டாள்.

அடுத்த நாள் மூன்று மணி போலச் சித்தன் குரன்லாண்ட் சுரங்க இரத நிலையத்திலிறங்கி அமுதினி எங்கே நிற்கிறாள் என்று பார்த்தான். அவளைக் காணவில்லை. தனது திறன் பேசியை எடுத்து தொடர்பு கொண்டான். திறன்பேசி உயிர் பெற்றதும் 'ஹலோ எங்க நிற்கிறீங்கள்?' என்று கேட்டான்.

'நான் நில்லா கடையில நிக்கிறன். நீங்கள் இப்ப எங்க நிக்கிறியள்?'

'சரி அங்கயே நில்லும். நான் தேவாணால இறங்கி வாறன்'

'சரி'

கூடு கலைந்த தேனீக்களாக மனிதப் படையெடுப்பு எப்போதும் தணியாத இடமே குரன்லாண்ட் தோர்கத் (சந்தை). அதன் ஒரு வாசலால் ஏறினால் ஒஸ்லோ காவல் நிலையத்தைத் தாண்டி செல்லும் *Schweigaards gate* வருகிறது. அதன் கடைசித்

தொங்கலே அவர்கள் செல்ல வேண்டிய முகவரி. அமுதினியைக் கூட்டிக் கொண்டு விரைவாகச் சென்றுவிட்டு வரவேண்டும் என்கின்ற எண்ணத்தில் சித்தன் துள்ளித் துள்ளி நடந்து சென்றான்.

அமுதினி நில்லா கடைக்கு முன்பு வந்து சித்தன் வருவதைப் பார்த்துக்கொண்டு நின்றாள். இன்று பச்சை மேலங்கி, பச்சை ஜீன்ஸ், பச்சைப் பாதணி, பச்சைப் பொட்டு என்று இயற்கையை ஆராதிப்பதாய் வந்து நின்றாள். அவள் கண் இமைகள் வண்ணாத்திப் பூச்சியின் சிறகுகள் போலத் துடித்தன. அவள் இதழ்கள் கனிந்த மிளகாய்ப் பழமாகக் கவர்ச்சியோடு நெளிந்தன. அவன் மனமோ இன்றே இவளை வீட்டிற்குக் கூட்டிச் செல் என்று கெஞ்சியது. வா என்று கையைப் பிடித்தால் வேண்டாம் என்று தடுக்க மாட்டாள் என்கின்ற நம்பிக்கை இப்போது இருந்தது. அதை நிர்மூலம் செய்வதாக அந்த உண்மை. அதைப் பொய்யாக்கும்வரையாவது தனது ஆசைகளையும், உணர்ச்சிகளையும் அடக்கி வைக்க வேண்டும் என்பது உறைக்க அவளைப் பார்த்து, 'வா அமுதினி போவம்' என்றான்.

'போவம்... அது சரி என்ன ஒருமாதிரி என்னைப் பார்க்கிறியள்?' என்று கேட்டாள்.

'நீங்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மாதிரி இருக்கிறீங்கள். அதைப் பார்க்கிறதும் தப்பா'

'பார்க்கிறது தப்பில்லை. ஆனால் நீங்கள் பார்க்கிற உரிமை இருக்குதா எண்டுகிற உண்மை தெரியாமல் பார்க்கிறதுதான் தப்பு. இந்த சிக்கலை நீங்கள்தானே தொடக்கி வைத்தீர்கள்'

'இருக்கிற குழப்பம் காணாது எண்டு நீர் வேறயா அமுதினி. என்ன வந்தாலும் யார் எங்கடை உயிரியல் அப்பா எண்டு பார்க்கிறதும் முக்கியம்தானே? அவரோடை உறவு தேவையில்லை. ஆனால் அவர் யார் எண்டு தெரிஞ்சிருக்கோணும். இல்லாட்டி சிம்பிளா ஒரு *DNA* அனலைஸ் பண்ணினால் உனக்கும் எனக்கும் என்ன தொடர்பு எண்டு கண்டுபிடிச்சிடலாம்'

'பாத்தியளா... இது தெரிஞ்சு கொண்டுதானே என்னைச் சும்மா அலைக்கழிக்கிறியள். எனக்கும் நிறையக் குழப்பமா இருக்குது. அதுக்கு இவ்வளவு சுலபமான வழி இருக்கிறதை சொல்லாமல் விடலாமா'

'அப்பிடி இல்லை அமுதினி. நான் ஏற்கனவே சொன்ன மாதிரி இது எங்கடை வாழ்நாளில ஒரு முறை பார்க்கிற விஷயம். வாழ்நாள் முழுவதுக்குமான தவிர்க்க முடியாத சந்தர்ப்பம். அதை எதுக்காகவும் தவறவிட முடியாது. நான் குழம்பின

அப்பாவையே ஒருமாதிரி சமாளிச்சு வைச்சிருக்கிறன். நீர் எதுக்காகவும் அதைக் குழப்பிப் போடாதையும்.... சரி போவமே'

'என் விதி... என்ன செய்யிறது... போவம்'

'பிளீஸ் அமுதினி'

'ஓகே'

இருவரும் குரன்லாண்ட் தாண்டிக் காவல் நிலையத்தை நோக்கிச் சென்றார்கள். போகும் பாதையில் பல வெளிநாட்டினரதும் சில சுதேசிகளினதும் நடமாட்டம். புதிதாகத் திறக்கப்பட்ட கிவி கடைக்கு முன்னே சில போதைப் பொருளிற்கு அடிமையானவர்கள் புயல் காற்றில் தள்ளாடும் மரங்கள் போலத் தள்ளாடியவண்ணம் ஏதோ கதைத்துக் கொண்டு நின்றார்கள். சிலவேளை அவர்கள் தங்கள் பொருளிற்காகக் காத்திருப்பதாய்க்கூட இருக்கலாம் என்று சித்தனுக்குத் தோன்றியது. வரும்பொழுது அமுதினியோடு உணவகத்திற்குச் சென்று ஏதாவது சாப்பிடலாம். அதற்கு அவள் ஒத்துக் கொள்வாளா என்பது அவனுக்கு விளங்கவில்லை. ஒத்துக்கொண்டால் நல்லது. ஆகக் குறைந்தது அந்தச் சந்தோஷமாவது கிடைக்கும் என்று எண்ணினான்.

குரன்லாண்ட் காவல் நிலையத்தின் பிரதான பாதை அடைக்கப்பட்டுத் திருத்த வேலைகள் நடந்துகொண்டு இருந்தன. அதனால் *Schweigaards gate* பக்கமாக அதன் பாதையைத் திருப்பி இருந்தார்கள். கடவுச்சீட்டு எடுப்பவர்கள் பலர் அங்கே அலுவல் முடிந்து வெளியேறினர். *Schweigaards gate* பல பழைய கட்டடங்கள் நிறைந்த பகுதி. ஒஸ்லோ சிறைச்சாலையும் அதன் அயல் வீடு போல.
அந்தச் சிறைச்சாலையின் சுவர்களைப் பார்த்தால் கோட்டைச் சுவர்கள் போன்று இருக்கும். அதற்கு மேலும் முள் கம்பிகள், மின்சாரம் என்று அதைக் கடந்துவிடாத கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள்.

Schweigaards gate முடிந்தால் *Vålerenga* வருகிறது. அது ஒஸ்லோவிலிருக்கும் பிரதான உதைபந்தாட்ட அணிகளில் ஒன்றிற்குப் பெயர் பெற்ற இடம். இருந்தும் இந்த இடத்தில் ஒருவித வறுமையின் தோற்றம். முன்பு இருந்த பல கடைகளை இப்போது மூடி இருந்தார்கள். அதற்குப் பெரும் நிறுவனங்கள் காட்டு விருட்சங்களாக வியாபாரத்தைக் கைப்பற்றிப் பல்லங்காடிகளைச் சந்திக்குச்

சந்தி திறந்தது முக்கிய காரணமாகும். அத்தோடு சுதேசிகளின் வெளியேற்றமும் ஒரு துணைக் காரணமாகும்.

அமுதினிக்கு சித்தனின் கையைப் பிடித்துக்கொண்டு செல்ல வேண்டும் போலிருந்தது. கையைப் பிடித்தால் அவன் என்ன செய்வான் என்று விளங்கவில்லை. அணைத்துக் கொள்வானா தட்டி விடுவானா; எது செய்தாலும் அவன்மீது கோபப்பட முடியாது என்பது அவளுக்கு விளங்கியது.

எதற்கும் அவரது அலுவலகத்தைக் கண்டுபிடிக்கும் வரை அமைதி காப்பது நல்லது என்று தோன்றப் பேசாது வந்தாள். அவள் அப்படி அமைதியாக வருவது சித்தனை ஊசிமுனையால் குத்துவது போன்று சோதனைக்கு உள்ளாக்கியது. அவன் பொறுக்க முடியாதவனாய், 'என்ன அமுதினி பேசாமல் வாறாய்?' என்று கேட்டான்.

'ஒஸ்லோவில ஒவ்வொரு இடமும் ஒவ்வொரு மாதிரி. அதில இந்த வோலரங்கா ஒரு மாதிரி. தரகர் இங்க ஒபிஸ் வைச்சிருந்ததுக்கும் காரணம் ஒண்டு இருக்குது' என்றாள் அமுதினி.

'ம்… வாடகை குறைவா இருக்கும்'

இருவரும் நடந்து அந்தக் குறிப்பிட்ட முகவரியை வந்து அடைந்தார்கள். அங்கே ஒரு அரேபிக்காரனின் பீசா கடை இருந்தது. அதற்குப் பக்கத்திலிருந்த கதவின் எண்ணையே இவர்கள் தேடி வந்து இருந்தார்கள். அழைப்பு மணிப் பட்டியலில் இரண்டு பெயர்கள் இருந்தன.

ஒன்று நோர்வே நாட்டவரின் பெயர். மற்றையது ஒரு இஸ்லாமியப் பெண்ணின் பெயர். அதைவிட வேறு எந்தப் பெயரும் அங்கே இருக்கவில்லை. என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டு நிற்கும்பொழுது அங்கே வந்த பாகிஸ்தான் பெண்ணொருத்தி மேலே செல்வதற்குக் கதைத்து அனுமதி பெற; கதவு திறந்து கொண்டது. அவள் உள்ளே செல்ல இவர்களும் அவளோடு பயணச்சீட்டு இல்லாது பயணம் செய்பவர்கள் போல மேலே சென்றார்கள்.

அங்கே இரண்டு அலுவலகங்கள் இருந்தன. பாகிஸ்தான் பெண்ணோடு சென்ற இவர்கள் அந்த மத்திய கிழக்கு இஸ்லாமியப் பெண்ணிடம் மனோகரனின் பெயரைக் கூறி அவரைத் தெரியுமா என்று கேட்டார்கள். அவள் தனக்குத் தெரியாது என்றும், இதற்கு முன்பு இங்கே மொரொக்கோவையும் போலந்தையும் சார்ந்தவர்கள் மட்டுமே அலுவலகத்தை வைத்திருந்தனர் என்றும் கூறினாள். அவர்கள் விலாசம் தெரியுமா

என்று சித்தன் ஆர்வத்தில் கேட்டான். அவள் தனக்கு அவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள் என்கின்ற விபரம் தெரியாது என்றாள். அதன்பின்பு கேட்பதற்கு எதுவும் இல்லை என்பது விளங்க ஏமாற்றத்தோடு வெளியே வந்தார்கள்.

குளிர்கால இரவாய் சித்தனின் முகம் இரண்டு கிடந்தது. அதைப் பார்த்த அமுதினிக்கு கவலையாகிற்று. சித்தனைச் சமாதானப்படுத்த வேண்டும் என்கின்ற எண்ணம் எழுந்தது.

'வாங்க சித்தன். யோசிச்சுக் கொண்டு இங்க நிக்கிறதில ஒரு பிரயோசனமும் இல்ல. நாங்கள் எந்தப் பாதையில எண்டாலும் முன்னேற வேணும். அவரை வேற எப்பிடிக் கண்டுபிடிக்கலாம் எண்டு யோசிப்பம். குரன்லாண்டிற்குத் திரும்பிப் போவம் சித்தன்'
'ம்... நீர் சொல்லுறதும் சரிதான். வேற ஏதாவது வழி இருக்கா எண்டு யோசிப்பம்'

மீண்டும் இருவரும் குரன்லாண்ட் நோக்கி வந்தார்கள். வரும்பொழுது அமுதினிக்கு ஒரு யோசனை வந்தது. அதைச் சித்தனிடம் சொல்வதா விடுவதா என்கின்ற தடுமாற்றம் முதலில். பின்பு எது என்றாலும் வெளிப்படையாகச் சொல்வதே மேல். அதைச் செய்வதும் செய்யாது விடுவதும் அவன் விருப்பம் என்று எண்ணியவளாய், 'சித்தன், என்னிட்ட ஒரு யோசனை இருக்குது சொல்லட்டுமா?' என்றாள்.

'பெர்மிஷன் கேட்டுக் கதைக்கோணும் எண்டமாதிரியா நான் உம்மோடை பழகிறன்?'
'ம்... இல்லை எண்டு நினைக்கிறன்'
'அப்ப சொல்லும்'
'குரன்லாண்ட் தமிழ் கடைக்கு வாறவையிட்ட விசாரிச்சுப் பார்த்தா என்ன?'
'ம்... அதுவும் ஒரு முறைதான். நடைமுறைப் படுத்திப் பார்த்திடுவம்'

குரன்லாண்டில் காலத்திற்குக் காலம் முளை விடும் காளன்கள் போலக் கடைகள் வந்து போகும். தமிழ் கடைகளும் அந்தப் பொது விதிக்குள் அகப்பட்டவையே. அப்படிப் பல தமிழ்க் கடைகள் வந்து போய் இப்போது ஒரு குட்டித் தமிழ்க் கடை முன்பு சில காலம் இருந்த குட்டித் தமிழ்க் கடை போல வந்திருந்தது. இருவரும் அந்தக் கடையடிக்கு வந்தார்கள். எல்லோரிடமும் கேட்கமுடியாது.

இளவயதினருக்குத் தெரிந்திருக்க வாய்ப்புக் குறைவு. வயது முதிர்ந்தவர்களாகப் பார்த்துக் கேட்பதே உசிதம் என்று சித்தனுக்குத் தோன்றியது.

சித்தன் கடைக்கு வெளியே நிற்க அமுதினி கடைக்கு உள்ளே சென்று ஒட்டுப் பொட்டு பார்த்தாள். அது பார்த்து முடிவதற்குள் தனது அலுவல் முடிந்துவிடும் என்பது சித்தனுக்கு விளங்கியது. அவன் தனது அலுவலைத் தொடங்கினான். அப்பொழுது அறுபது வயது மதிக்கத்தக்க, ஆறடி உயரம் கொண்ட, பழுத்த மாம்பழத்தின் நிறத்தில், டெனிமும், நீல நிறத்தில் மேலங்கியும் அணிந்த வண்ணம் ஒருவர் வந்தார். வெள்ளை நிற முகக்கவசம் அவரை அடையாளம் காணமுடியாதவாறு மறைத்தது. சித்தன் அதற்குமேல் யோசிக்கவில்லை. அவரைக் கடைக்குள் போகவிடாது மறித்து, 'மன்னிக்கோணும், உங்களிட்டை ஒரு விஷயம் கேட்கலாமா?' என்று கேட்டான்.

'என்ன தம்பி விஷயம்? என்ன கேட்கவேணும்?'

'தரகர் மனோகரனைத் தெரியுமா?'

'ஓ தெரியும் தம்பி. அவர் இங்க அனேகமாக வாறவர். இப்ப ஒரு நாலு வருசமா நான் அவரைப் பார்த்தது கிடையாது. என்ன நடந்தது எண்டு எனக்குத் தெரியாது'

'உங்களிட்டை நம்பர் இல்லாட்டி அட்றஸ் ஏதாவது இருக்குதா?'

'இல்லத் தம்பி. கண்டாக் கதைப்பம். அவ்வளவுதான். அவரிட்ட எனக்கு எந்தத் அலுவலும் இருக்கேல்ல… அதால என்னிட்ட நம்பரோ அட்றஸ்சோ இல்ல'

'விளங்குது அங்கிள். உங்களுக்குத் தெரிஞ்ச வேற யாரிட்டையாவது இருந்தா வாங்கித் தர முடியுமா'

'யாரிட்ட இருக்குமோ தெரியாது. உம்மடை நம்பரை SMS பண்ணிவிடும். கிடைச்சா அனுப்புறன்'

'தாங்ஸ் அங்கிள், இப்ப அனுப்பி விடுகிறன்'

'வாறன் தம்பி'

'வாங்க'

அவர் கடைக்குள் சென்றார். அப்போது அமுதினி அங்கே ஒரு பெண்ணுடன் கதைத்துக்கொண்டு நிற்பதைச் சித்தன் பார்த்தான். சித்தனுக்கு அது மேலும் ஊக்கத்தை அளிக்க வேறு யாரும் வருகிறார்களா என்று பார்க்கத் தொடங்கினான்.

சிறிது நேரத்தில் குள்ளமாக, எண்ணெய்க் கறுப்பான, பஞ்சை அப்பியதான வெண் நரையோடு சீட்டியடித்த வண்ணம் ஒருவர் வந்தார். அறுபதில் இளமை திரும்பும் கோலம் அவரிடம். அவர் எப்படி இருந்தால் என்ன தனக்கு வேண்டிய தகவலைப் பெறுவதே முக்கியமானது என்பது விளங்க அவன் அவரை அவசரமாக மறித்து, 'அண்ண உங்களோடை ஒரு நிமிஷம் கதைக்க முடியுமா?' என்று கேட்டான். அவர் நின்று ஒருமுறை நிதானமாகச் சித்தனைப் பார்த்தார். பின்பு, 'நீர் செந்திலின்ர மகன் இல்லையா?' என்றார்.

'ம்… உங்களுக்கு அப்பாவைத் தெரியுமா?'

'ம்… தெரியும். எப்பிடி இருக்கிறார்?'

'நல்லா இருக்கிறார்'

'ஏதோ கதைக்கோணும் எண்டீர் தம்பி… என்ன கதைக்கோணும்?'

'அதண்ண… உங்களுக்கு தரகர் மனோகரனைத் தெரியுமே?'

'தெரியும்'

'அவற்ற நம்பர் இல்லாட்டி அட்றஸ் உங்களிட்ட இருக்குதா?'

'இல்ல தம்பி… அந்த அளவுக்கெல்லாம் அவர் ஒட்டு இல்ல… சும்மா கண்டாக் கதைக்கிறதோடை சரி'

'ஓ… உங்களுக்குத் தெரிஞ்ச யாரிட்டையும் இருந்தா வாங்கித் தரமுடியுமே?'

'எனக்கு யாரையும் ஞாபகம் வருகுதில்லை. வந்தாச் சொல்லுறன். உம்மட நம்பரைத் தாரும்'

சித்தன் எண்ணைச் சொல்லச் சொல்ல அவர் திறன் பேசியில் அதைப் பதிந்துகொண்டார். பின்பு அதற்குமேல் பொறுமை அற்றவராக, 'சரி தம்பி நான் வாறன்' என்றார்.

'சரி வாங்க' என்றான் சித்தன்.

அன்று சித்தனும் அமுதினியும் இரண்டு மணித்தியாலத்திற்கு அதிகமாக மினக்கெட்டுப் பார்த்தார்கள். எதற்கும் அகப்படாது தப்பிச் செல்லும் மீன் போல எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. இப்பொழுது கிடைக்காவிட்டாலும்

வருங்காலத்தில் கிடைக்கலாம் என்கின்ற நம்பிக்கை ஒன்று மட்டுமே அவர்களிடம் மிஞ்சி இருந்தது.

தமிழ் நிகழ்ச்சிகளுக்குச் சென்றால் பலரையும் சந்திக்கலாம். அப்படிச் சந்தித்தால் அவர்களிடம் கேட்கலாம். அதற்கான அனுமதியை இன்றுவரை அரசு கொடுக்கவில்லை. இனிவரும் காலங்களில் அந்தக் கட்டுப்பாடு தளர்த்தப்படலாம். அப்படித் தளர்த்தினால் அவரைக் கண்டு பிடிப்பதற்கான சந்தர்ப்பமும் அதிகரிக்கும் என்று சித்தன் எண்ணினான். அவனது எண்ணத்தை அமுதினியிடம் கூறிய பொழுது அவளும் அதை ஒத்துக்கொண்டாள்.

அதன் பின்பும் அவர்கள் தொடர்ந்து தேடினார்கள். இருந்தும் தரகர் பற்றிய மர்ம முடிச்சு இறுக்கமாகவே நிலைத்து இருந்தது.

16

கொரோனா வருவதற்கு முன்பு வெள்ளி சனி என்பது கொண்டாட்டங்கள் நிறைந்த நாட்களாக, பலர் ஒன்றிற்கு மேற்பட்ட கொண்டாட்டங்களுக்கு நிற்க இருக்க நேரம் இல்லாது ஓடித் திரிந்தார்கள். இப்போது அந்தக் கொண்டாட்டத் திணிப்பு கொரோனாவால் முற்றுமாக ஸ்தம்பித்துவிட்டது. வாழ்க்கை உறைபனியில் போட்டதாக அசையாத காலம் இது. இப்படியான தொய்வை யாரும் எதிர்பார்க்கவில்லை. கொரோனா என்கின்ற இந்தப் பெரும் தொற்று உலகைப் பலமுறை தலைகீழாகப் புரட்டிப் போட்டது. அது மனிதர்கள் கற்பனை செய்திருக்க முடியாத அளவுக்கு அவர்களை முடக்கிப்போட்டு வைத்திருக்கிறது. இன்றும் சிங்கம் இரையின் குரல்வளையைக் கவ்வியது போன்று அதன் பிடி தொடர்ந்தும் தளர்வதாய் இல்லை. தளர்ந்துவிடும் என்கின்ற நம்பிக்கையோடு இழுத்து இழுத்து இயங்கிக்கொண்டு இருக்கும் இன்றைய உலகம்.

அன்று சனிக்கிழமை. அம்மா தொதல் செய்ய வேண்டும் என்று வெள்ளிக்கிழமையே தேங்காய் வாங்கி துருவி வைத்திருந்தாள். காலைச் சாப்பாடு முடிந்ததும் அதைச் செய்வதில் ஈடுபட்டாள். அதற்கு இரண்டு மணித்தியாலத்திற்கு மேலாகும் என்பதால் சித்தன் தனது அறையிலிருந்தான். அவன் இணையத்தில் பல வழிகளில் மனோகரனைத் தேடிப் பார்த்தான். ஆளக்கடலில் தூக்கி எறியப்பட்ட குண்டூசிபோல அவரைப் பற்றிய தகவலை மட்டும் அறியமுடியாது இருந்தது.

அவனுக்கு வெறுப்பாக இருந்தது. கீழே ஏலக்காய் வாசத்தைப் போராடி வென்று பீசா வாசம் மெதுவாகக் கசியத் தொடங்கியது. அம்மா கூப்பிட்ட பின்பும் போகலாமா அல்லது அதற்கு முன்பு போகலாமா என்கின்ற குழப்பம் அவனுக்கு வந்தது. அறைக்குள் எதுவும் செய்ய முடியாது இருப்பதிலும் அம்மாவுக்குத் தேவை என்றால் ஏதாவது உதவி செய்யலாம் என்று அவனுக்குத் தோன்றியது.

சித்தன் சமையல் அறைக்கு வந்தான். அம்மா பீசா பரிமாறுவதற்கு ஆயத்தம் செய்துகொண்டு இருந்தாள். சித்தன் வருவதைப் பார்த்துவிட்டு, 'வா சித்தா. வந்து இரு. தொதல் ரேஸ்ற் பண்ணிப் பாக்கிறியா?' என்று கேட்டாள்.

'ம்... தா அம்மா... வாசம் அப்பிடி இருக்குது'

'சரி ரேஸ்ற் எப்பிடி இருக்குதெண்டு பார்' என்று கூறியவண்ணம் ஒரு துண்டு தொதலை வெட்டி எடுத்து தட்டில் வைத்துக் கொடுத்தாள். எண்ணை மினுமினுப்போடு முந்திரிப் பருப்பும், பயத்தம் பருப்பும் கண்களாக முழிக்க, கருப்பு வைரமாய்... மென்மையாய்... ஜவ்வாய்... கையில் ஒட்டாத வழுவழுப்பாய்... சித்தனுக்கு அதற்குமேல் பொறுமை இருக்கவில்லை. அவன் ஆர்வத்தோடு எடுத்து அதைக் கடித்தான். மென்மைக்கு மேன்மையாக... ஜவ்வாக... தித்திக்கும் இனிப்பாக... முந்திரியும் பருப்புக் கடிபட... அவன் சுவைத்து அதைச் சாப்பிட்டான். பின்பு, 'நீ *expert*-தான் அம்மா. அப்பிடி ஒரு ரேஸ்ரா இருக்குது'

'சரி நல்லது. பீசா சாப்பிட்ட பிறகு அமுதினிக்கும் கொண்டு போய்க் குடுத்திட்டு வாறியா'

'சரியம்மா... நான் கொண்டுபோய்க் குடுத்திட்டு வாறன்'

சித்தன் தான் வருவதாக அறிவித்துவிட்டே சென்றான். மாமியும் அமுதினியும் சித்தனுக்காய் காத்துக்கொண்டு இருந்தார்கள். சித்தன் சோபாவில் சென்று அமர்ந்தான். பின்பு தான் கொண்டு வந்த தொதலைக் கொடுத்தான். அதை வாங்கிய அமுதினி, 'என்ன இது?' என்று கேட்டாள்.

'தொதல்... அம்மா செய்தது'

அவள் உடனேயே அதைத் திறந்து ஒரு துண்டை எடுத்துச் சுவைத்தாள். 'வாவ்... சுப்பரா இருக்குது. சாப்பிட்டுப்பார் அம்மா...' என்று தாய்க்கும் கொடுத்தாள். அதைச் சுவைத்த தேவிகா, 'மலர்விழியின்ரை கைவண்ணம் பிழைக்குமே. நல்லா இருந்திச்செண்டு அம்மாவிட்ட சொல்லுங்க தம்பி' என்றாள்.

'சரி... சரி... சொல்லுறன் மாமி'

மாமி என்று சொல்ல முடியுமா என்பது பற்றி இடைக்கிடையே அவனுள் ஒரு கேள்வி உருவாகும். இருந்தாலும் அதைப் பெரும் ஆராய்ச்சிப் பொருளாக்க அவன் விரும்பவில்லை. ஒரு நாள் உண்மை தெரியும்போது அனைத்து உறவுகளுக்குமான விளக்கம் கிடைக்கும் என்று எண்ணினான்.

அவன் நினைவுகளை, 'என்ன யோசிக்கிறியள் சித்தன்?' என்கின்ற கேள்வியால் அமுதினி கலைத்தாள்.

'ஓ... ஒண்டுமில்ல...' என்று சமாளித்தான்.

'சரி இருந்து கதையுங்க தம்பி. நான் கோப்பி வைச்சாறன்' என்று கூறிய தேவிகா இருவரும் இருந்து கதைக்கட்டும் என்பது போலச் சென்றுவிட்டாள். ஒளிந்து விளையாடும் உண்மை தெரிந்தால் மாமி இப்படி இருந்து கதைக்க விடுவாளா என்கின்ற எண்ணம் சித்தனுக்கு ஏற்பட்டது. அது வருகின்றபொழுது வரட்டும், அதைப் பற்றி இப்போது ஏன் தேவையில்லாது சிந்திக்க வேண்டும் என்று தன்னைத்தானே சமாதானம் செய்துகொண்டு, 'அமுதினி எப்பிடி இருக்குது?' என்றான்.

'என்ன தொதலா?'

'இல்ல வாழ்க்கை...' என்றான் சித்தன்.

'இனிமையா இருக்கோணும் எண்டுதான் ஆசை'

'அப்ப இனிமையா ஆக்கீடுவம்' என்றான் சித்தன்.

'என்ன ஐயா இண்டைக்கு றொமான்ஸ் மூட்டில இருக்கிறியள் போல?'

'அப்பிடி இருக்கோணும் எண்டுதானே நான் உம்மைப் பார்த்து ஆசைப்பட்டன். இடையில இப்பிடி எல்லாம் மாற்றம் வரும் எண்டு நாங்கள் நினைச்சமா? இப்ப இதில இருந்து எப்பிடி மீண்டு வாறது எண்டு யோசிக்க வேணும்'

'மீண்டு வரோணும் எண்டு யோசிச்சால் அது ஈசி'

'ம்... பிரச்சினையை மறந்தால் அது ஈசி எண்டு சொல்லவாறாய்' என்றான் சித்தன்.

'அப்பிடி இல்லையா' என்று கேட்டாள் அமுதினி.

'அது ஈசியான வழி மட்டும் இல்லை, சுயநலமான வழியும்கூட. அதைச் சிறந்த வழி எண்டும் சொல்ல முடியாது. உன்னோடு ஒவ்வொரு கணமும் பிரியாமலிருக்க வேணும் எண்டு என் மனசும் துடிக்குது. அன்பு வைக்கிறது சட்டென்று நடந்திடும். ஆனால் அதை நிறுத்துகிறது அப்பிடி இல்லை. நிறுத்தினமாதிரி நடிக்கலாம். ஆனா உண்மையா நிறுத்துகிறது லேசா நடந்திடாது' என்றான் சித்தன்.

'நாங்கள் தெரியாத ஒன்றைப்பற்றி கற்பனையிலேயே பிரச்சினையைப் பூதமாய் வளர்த்து வைச்சிருக்கிறம் சித்தன். உண்மையா அது பிரச்சினையா, சரி அப்பிடிப் பிரச்சினையா இருந்தாலும் தெரியாதவரை ஏன் நாங்கள் அதைப்பற்றி யோசிச்சு நேரத்தை வீணாக்க வேணும்?' என்றாள் அமுதினி.

'நீ சொல்லுகிறது சரி அமுதினி. அதேவேளை ஒரு நாள் இந்த விஷயம் பிழைச்சால் அது பெரும் குற்றம் இல்லையா? அப்ப இந்த உலகமே எங்களை வெறுக்கும்

இல்லையா? நாங்கள் இந்த உலகத்தைக் கண்டு பயந்து ஓட வேண்டி வரும் அல்லவா? எங்களுக்கு ஒரு குழந்தை பிறந்தா அந்தப் பிள்ளையின்ரை வாழ்நாள் முழுவதும் அந்தப் பிரச்சினை தொடரும் இல்லையா?' என்றான் சித்தன்.

'நீங்கள் சொல்லுறதைக் கேட்டால் பயமா இருக்குது. உங்களோடை சேரமுடியாத நிலை சில வேளை வந்திடுமோ எண்டு எனக்குக் கவலையாய் இருக்குது'

'அதே வலி இங்கையும் இருக்குது. உம்மை நான் தேவாணில பார்த்த அந்தக் கணத்திலிருந்து காதலிச்சன். இப்பவும் காதலிக்கிறன். எனக்கு எப்பிடி வலிக்குமெண்டு யோசி அமுதினி' என்றான் சித்தன்.

'நாங்கள் புண்ணைச் சொறிஞ்சு வலியை அனுபவிக்கிறம் சித்தன்'

'சரியாச் சொன்னாய் அமுதினி. மனித சமுதாயம் எண்டுகிறது மனித சுதந்திரத்திற்குக் கால் விலங்கு, கை விலங்கு போடுகிறமாதிரி இருக்குது. ஆதி மனிதனுக்கு இருந்த சுதந்திரம்கூட எங்களைப் போன்ற நவீன மனிதர்களுக்கு இல்லைப் பார்த்தியா?'

'மனிதன் ஒரு சமுதாய விலங்கு. அவன் சார்ந்த சமுதாயத்தின் கட்டுப்பாடுகளை அவனால் மீறமுடியாது. அது எங்களை மாத்திரம் விட்டு வைக்குமா சித்தன்?' என்றாள் அமுதினி.

'ம்… அப்பா, அம்மா, மாமா, மாமி, நண்பர்கள், கூடவேலைசெய்பவர்கள் என்று பாசத்தாலும் நட்பாலும் பிணைத்த சங்கிலிகள். அதை அறுக்கவும் முடியாது பெருமையாக அணிந்துகொள்ளவும் முடியாது. இந்தப் பிணைப்புகள் இல்லாவிட்டால் நாம் நினைத்ததைச் செய்து இருக்கலாம்' என்றான் சித்தன்.

'இந்தப் பிணைப்புகள் இல்லாமல் உலகத்தில் பிறப்பதற்கு நீங்கள் அவதாரமா. அவதாரங்கள்கூட சமுதாயப் பிணைப்பில்லாமல் பூவுலகில் வாழ்ந்ததாக எந்த இதிகாசங்களும் இல்லை. நாங்கள் சாதாரண மனிதர்கள். சங்கிலிகள் நாங்கள் பிறப்பதற்கு முதலே எங்களுக்காகத் தயாரிக்கப்பட்டவை. தூக்கிச் சுமந்துதான் வாழ வேண்டும். இயலும் என்றால் ஒருசிலவற்றைத் தொலைத்துவிட்டு மீதியைச் சுமந்துகொண்டு வாழலாம். அதையே மனிதர்கள் கலாச்சாரம், மதம், சம்பிரதாயம், பண்பாடு என்று பலவடிவங்களில் தூக்கிச் சுமந்து அதன் அழுத்தம் தாங்காமலே மாண்டு போகிறார்கள். நாங்களும் அதே வட்டத்திற்குள் அகப்பட்ட சாதாரண மனிதர்கள் இல்லையா சித்தன்?' என்றாள் அமுதினி.

'இல்லை என்று சொல்ல விருப்பம்தான். ஆனால் அது உண்மை ஆகாது என்பது வருத்தமாக இருக்கிறது' என்றான் சித்தன்.

மாமி பால்த்தேநீருடனும் தான் செய்து வைத்திருந்த முறுக்குடனும் வந்தாள். அவற்றை மேசையில் வைத்துவிட்டு, 'முறுக்கைச் சாப்பிட்டுப் பாருங்கோ. உங்களுக்கு முறுக்குப் பிடிக்கும்தானே?' என்று கேட்டாள்.

'ஓம் மாமி. முறுக்கு, பருத்தித்துறை வடை பிடிக்காதவை யாரும் இருப்பினமே? சாப்பிடத் துவங்கினா நிப்பாட்டேலாத பலகாரங்கள்' என்றான் சித்தன். அமுதினி அதைக் கேட்டுக் களுக்கென்று சிரித்தாள். அவளை இருவரும் பார்த்தார்கள். பின்பு மாமி அமுதினியைப் பார்த்து, 'இப்ப எதுக்கு நீ சிரிக்கிறாய்?' என்று கேட்டாள். அமுதினி சிரிப்பை ஒருவாறு நிறுத்திக்கொண்டு, 'முறுக்குச் சாப்பிட ரெஸ்ராத்தான் இருக்கும். அதால கொஞ்சம் கூடக்குறையச் சாப்பிடுவம். அதுக்காக மாமியும் மருமகனும் இப்பிடி சாடிக்கு ஏத்த மூடிமாதிரிக் கதைக்கக் கூடாது' என்றாள்,

'இப்பிடிதான் தம்பி இவள்' என்றாள் மாமி.

'சொல்லுகிறது எல்லாத்தையும் அப்பிடியே ஏற்றுக்கொள்ளக் கூடாது எண்டதை அமுதினி யாருக்காகவும் விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை. அதுவும் நல்லதுதான். கண்மூடித்தனமாய் எல்லாத்தையும் நம்புகிறதும் தப்புதானே'

'இந்த முறுக்குக்குமே தம்பி அந்த ஆராய்ச்சி. சரி நீங்கள் என்னவோ கதையுங்க... செல்லருக்க கொஞ்சம் அலுவலிருக்குது.
நான் அதைப் போய் பார்க்கிறன் அமுதினி! அப்பா எழும்பி வந்தார் எண்டா வந்து சொல்லு. அவருக்கு ரீ வைச்சுக் குடுக்கோணும்'

'சரியம்மா... நான் வந்து சொல்லுறன்'

தேவிகா பாதாள அறைக்குச் செல்ல, தனிமையும் அமைதியும் அங்கே மெல்லப் பரவி அவர்களைக் கள்ளப் பார்வை பார்க்க வைத்தது. இப்போது விரும்பினாலும் எல்லைகளை உடைத்து எறியலாம். இருந்தாலும் கூச்சமும், பயமும், ஒளிந்து விளையாடும் உண்மையும் அவர்களைச் சோபாவில் கட்டிப் போட்டது. அமுதினி சித்தனை தணியாத ஆசை பொங்கப் பார்த்தாள். அந்தப் பார்வையில் தனது நிதானம் இழந்து போவதை அவன் உணர்ந்தான். 'இந்த இன்பமான கணங்களை விட்டுவிட்டு எதற்காக வீண் பிடிவாதம்? இதனால் நான் என்ன செய்யப்போகிறேன்?' என்று ஒருகணம் அவனுக்கு எண்ணத் தோன்றியது. அவனது கண்களைப் பார்த்த

அமுதினி எண்ணங்களைப் படித்தவள் போல, 'தனிமை உங்களை வெறிகொள்ள வைக்குதா?' என்று கேட்டாள்.

'நான் தொடக்கத்தில் இருந்த சித்தனாய் இருந்திருந்தால் எல்லைகள் இடம் மாறி இருக்கலாம். அதையெல்லாம் தடுப்பதாக அந்த உண்மை குறுக்க நிக்குதே அமுதினி'

'அதை மறந்திடுவம் சித்தன். நாங்கள் எங்கள் வாழ்க்கையை எந்தக் கூச்சமும் இல்லாமல் தொடங்கினால் என்ன நடக்கும்? இன்றைய வாழ்க்கையை இன்றைக்கே வாழ்கிற மாதிரி... நாளைக்கு வாற பிரச்சினையை நாளைக்குப் பார்க்கலாம் இல்லையா சித்தன்'

'எனக்கும் ஆசை அப்பிடிதான் சொல்லுது. கிடைச்ச வரைக்கும் அனுபவிப்பம் எண்டுதான் பார்க்குது. ஆனால் புத்தி பயப்படுதே. நாளைக்கு என்ன நடக்குமெண்டு அது ஒவ்வொரு கணமும் எச்சரிக்குதே. இப்பகூட ஆசை உனக்குப் பக்கத்தில் வந்து இரு... கையைப் பிடி... உன் இதழில் அழுத்தி முத்தம் கொடு எண்டுது. புத்தி அப்படிச் செய்யாதே. செய்யத் தொடங்கினால் நீ உன் கட்டுப்பாட்டை இழந்து அது விபரீதத்தில் போய் முடியும் என்கிறது. இப்ப சொல்லு, நான் ஆசையின்படி நடக்கவா, புத்தியின்படி நடக்கவா?'

'நான் தப்பாகவே பதிலளிக்காது இருப்பதற்கான கேள்வியா இது? நல்ல காதலி எப்படி உங்களைத் தப்பாக ஆசையின்படி நட என்பாள். புத்தியின்படி நடந்தால் இன்றைய வாழ்வை நாங்கள் இன்று அனுபவிக்காமல் நாளைய வாழ்வைப் பற்றிய சிந்தனையில் இன்றைய வாழ்வைத் தொலைக்க வேண்டும்'

'அது இன்றைய வாழ்வைத் தொலைப்பதா, பொறுமையாக இருப்பதா என்பது எங்களைப் பொறுத்தது. பொறுமைக்கான பாத்திரம் யுதிஷ்டிரன். நீ அதைப் படித்தாயா தெரியாது. மாமி என்றாலும் உனக்கு அதைப்பற்றிச் சொல்லி இருப்பாள். அதில் யட்சன் 'எப்போது ஒரு மனிதன் பொறுமைசாலி ஆகிறான்?' என்று கேட்கிறான். அதற்கு யுதிஷ்டிரன், 'தன் புலன்களை மட்டுப்படுத்தும் போது' என்று பதில் அளிக்கிறான். இப்போது நான் புலன்களின் வழி நடந்தால் பொறுமை அற்றவன் ஆவேன். பொறுமை அற்றவர்கள் வாழ்ந்ததாகச் சரித்திரங்கள் உண்டா?'

'சித்தன்... மகாபாரதமே ஒரு புனைவுதானே? அதில் சொல்லப்படும் ஒவ்வொரு வசனமும் உண்மை என்று நம்புவது சரியா? பொறுமை பொறுமை என்று இன்றைய வாழ்வில் கிடைப்பதை அனுபவிக்காது விடுவது சரியா? பொறுமைக்குச் சொல்லப்படும் தத்துவங்கள் பல உண்டு. ஆனால் இந்தப் பொழுது கழிந்தால் அது

மீண்டும் எப்போதும் எமது வாழ்வில் திரும்பி வராது என்கின்ற தத்துவத்தை உடைப்பதற்கு நிகராக எதுவும் உண்டா? தப்பான தத்துவங்களை நம்புவதிலும் சரியான நடைமுறையைக் கடைப்பிடிப்பது பிழையா?'

'நாளை வராது என்று நினைத்துக்கொண்டு இன்று அவசரமாக அனுபவிப்பதில் உண்மையான, சாந்தமான, மகிழ்வு தோன்றுமா? நின்றவண்ணம் அவசரத்தில் வாய்க்குள் திணிக்கும் உணவு போல் இருக்காதா? எனக்கும் ஆசை இருக்கிறது. அதவும் நீ சொல்வது போல் அவசரமாகவே இருக்கிறது. இருந்தும் எனது புத்தி தடுக்கிறது. அதுவே எனக்கு மிகவும் சரியாகப் படுகிறது'

'இப்படிக் கதைத்தால் இதற்கு எப்படி முடிவு வரும்?' என்றாள் அமுதினி.

'முடிவு வரவேண்டும் என்பதற்காய் தப்பான முடிவை எடுக்கலாமா?' என்றான் சித்தன்.

அமுதினி பதில் சொல்ல முன்பு சுபன் அங்கே வந்தான்.

தந்தையைக் கண்ட அமுதினி, 'அப்பா நான் போய் அம்மாட்டை சொல்லீட்டு வாறன்' என்று கூறியவண்ணம் எழுந்து சென்றாள்.

'சரி…' என்று கூறிய சுபன் சித்தனைப் பார்த்துச் சிரித்த வண்ணம் சமையல் அறைக்குச் சென்று நீர் எடுத்துப் பருகிவிட்டு சோபாவிற்கு வர, அமுதினியும் அம்மாவிடம் சொல்லிவிட்டுத் திரும்பி வந்துவிட்டாள். சோபாவிலிருந்த சுபன், 'எப்பிடிப் போகுது வேலை படிப்பு எல்லாம் சித்தன்?' என்று கேட்டான்.

'நல்லாப் போகுது மாமா'

'சந்தோஷம் சித்தன். இரண்டு பேருக்கும் கலியாணம் நடந்தால் இன்னும் சந்தோஷமாய் இருக்கும். அதுக்கான ஏற்பாட்டைக் கெதியாச் செய்ய வேணும் சித்தன்'

'அது மாமா எனக்கு ஒரு உண்மை சொ…' அமுதினி அவன் காலை எட்டி உளக்கினாள். அப்பாவுக்குத் தெரியாதவாறு அவன் கையையும் நுள்ளினாள். சித்தனைப் பார்த்து வேண்டாம் என்று பல்லைக் கடித்தாள். சித்தன் அதிர்ச்சியோடு தயங்கினான். இதைக் கவனிக்காத மாமா, 'என்ன உண்மை சித்தன்? சொல்லும் நான் கேட்கத் தயாராக இருக்கிறன்' என்றான். சித்தன் தன்னைச்

சமாளித்துக்கொண்டு கதையை வேறு திசையில் திருப்புவதாக, 'என்னுடைய படிப்பு முடியவிட்டி கலியாணம் செய்கிறதுதான் நல்லா இருக்கும் எண்டு நினைக்கிறன். இல்லாட்டி படிப்பு குழம்பிப் போயிடுமோ எண்டு பயமா இருக்குது. அமுதினியும் அதுதான் சரியெண்டுறா'

'ஓம் அப்பா… அவருடைய படிப்பும் ஆராய்ச்சியும் குழம்பக் கூடாது. ஒஸ்லோவில மெடிசீன் கிடைக்கிறதே பெரிய விஷயம். அதை நேரத்துக்கு முடிக்கிறதுதான் எங்கள் இரண்டு பேருடைய வாழ்க்கைக்கும் நல்லது. அதுக்குப் பிறகு நான் படிக்கிறதுக்கும் வசதியாய் இருக்கும்'

சுபன் அதை ஏற்றுக்கொண்டான். முகத்தில் கிரகணம் கவ்விய சந்திரன் ஏறியதான இருட்டு. யோசனையோடு, 'படிப்பெல்லாம் முடிகிறது எண்டால் வயதும் ஏறிடும் எல்லே தம்பி' என்றான்.

'கவலைப்படாதையுங்க… எவ்வளவு கெதியா முடியுமோ அவ்வளவு கெதியா நாங்கள் ஏற்பாடு செய்வம். எங்களுக்கு என்ன சேர்ந்து இருக்க விருப்பம் இல்லையா?'

'அதுவும் சரிதான் தம்பி. அமுதினிக்கும் உங்களுக்கும் சரி எண்டுகிறதை நீங்கள் செய்யுங்க… எங்களுக்கு அதில ஒரு பிரச்சினையும் இல்லை'

'அப்பா அம்மா எப்பிடி இருக்கினம் தம்பி? நான் அதை முதல்ல கேட்டிருக்கோணும். கலியாணக் கதையில மறந்து போயிட்டன்'

'அவை நல்லா இருக்கினம். உங்களைப் போல அவைக்கும் கலியாணம் கெதியா நடக்கோணும் எண்ட அவசரம்தான்'

'எல்லாத் தாய் தகப்பனுக்கும் இருக்கிற ஆசைதானே தம்பி'

'அது உண்மைதான் மாமா'

தேவிகா தேநீர் தயாரித்துக்கொண்டு வந்தாள். அதை வைத்தவண்ணம், 'தம்பிக்கும் ரீ கொண்டரட்டே?' என்று கேட்டாள்.

'இல்ல இப்பதானே குடிச்சன். எனக்கு வேண்டாம்'

'அமுதினி உனக்கு வேணுமே?'

'இல்லையம்மா எனக்கும் வேண்டாம். நானும் அவரோடைதானே குடிச்சன்'

*

சித்தன் அன்று வேலையால் வரும்போது துண்டுப் பிரசுரம் தயாரித்து எடுத்துக்கொண்டு வந்தான். அமுதினிக்கு அன்று பிற்பகல் வேலை என்பதால் அவளால் வரமுடியாது என்று கூறிவிட்டாள். இன்று தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் என்று பார்க்கக்கூடாது. எல்லாரையும் அணுக வேண்டும் என்று முடிவு செய்துகொண்டு புறப்பட்டான்.

குரன்லாண்டில் மரக்கறிக்கடை ஒன்று இருக்கிறது. ஒஸ்லோவிலேயே இங்கேதான் மரக்கறி மிகவும் மலிவாகக் கிடைக்கும்.
இப்போது கொரோனா என்பதால் அந்தக் கடைக்கு வருபவர்களின் தொகை குறைந்தாலும் முற்றுமாக அது நின்றுவிடவில்லை. அங்கே பல தமிழர்களும் மரக்கறி மற்றும் பலசரக்கு வாங்குவதற்கு வருவார்கள். அந்தக் கடைக்குச் சென்று வரும் தமிழ் ஆள்களுக்குத் துண்டுப்பிரசுரம் முதலில் கொடுத்துவிட்டு பின்பு தமிழ்க் கடைக்குச் செல்லலாம் என்கின்ற ஒரு எண்ணம் உண்டாகியது.

சித்தன் குரன்லாண்ட் சுரங்க இரத நிலையத்திலிறங்கி முதலாவது படியால் ஏறி மேலே வந்தான். பின்பு நர்வேசனைத் தாண்டி அங்கிருந்த இரண்டாவது படியால் ஏறி இடதுபக்கம் திரும்பி நடக்க ஒரு நிமிடத்தில் கடை வந்துவிட்டது. கடையில் ஓரளவு சனம் கொரோனா விதிகளுக்கு ஏற்ப இடைவெளியைக் கடைப்பிடித்து பொருட்களை வாங்கினார்கள். எதிரே இருந்த இறைச்சிக்கடையிலும் ஆள்கள் வரிசையில் நின்றார்கள். அதில் சிலர் தமிழர் என்பது சித்தனுக்கு மகிழ்வைத் தந்தது.

சித்தன் தூர நின்றே தமிழ் ஆள்களிடம் தனது துண்டப் பிரசுரத்தைக் கொடுத்தான். அனேகமானவர்கள் அதை வாங்கினார்கள். சிலர் காகிதத்தாலும் கொரோனா பரவிவிடுமோ என்கின்ற பயத்தில் அதை வாங்க மறுத்தனர். சிலர் சித்தனின் கையிலிருக்கவே வாசித்துவிட்டு 'தெரியாதே' என்றனர். சிலர் அவனது எண்ணை எழுதி எடுத்துச் சென்றனர்.

சித்தனுக்கு எதிர்பார்த்ததைவிடத் திருப்தியாக இருந்தது. அவன் மெதுவாகத் தமிழ்க் கடையை நோக்கிச் சென்றான். தமிழ்க் கடைக்கும் பலர் வந்து சென்றார்கள். சிலர் துண்டுப்பிரசுரத்தை வாங்கினர். சிலர் தெரியாது என்று கூறிவிட்டுச்

சென்றார்கள். சிலர் தூர நின்றே அந்த எண்ணை எழுதி எடுத்துச் சென்றனர். கடலுக்குள் தூக்கி எறிந்த கல் போன்று எந்த அசுமாட்டமும் இல்லாமலிருப்பதிலும் இன்றைய முயற்சி அவனுக்குச் சிறிது நம்பிக்கையைத் தந்தது.

காலம் மின்னலைத் தோற்கடிக்கும் வேகத்தில்... பதில்கள் வரும் என்கின்ற நம்பிக்கை அண்டத்தில் தொலைந்து போன கோளாக... தொலைந்து போன நம்பிக்கையோடு சித்தனின் பொறுமையும் விடை பெற்றுக்கொண்டது.
யாருக்காவது தெரிந்திருந்தால் தகவல் வந்திருக்கும். யாருக்கும் தெரியவில்லை என்றால் தரகர் வெளிநாட்டிற்குச் சென்றிருக்கலாம் என்று சித்தனுக்குத் தோன்றியது.

சித்தன் மனம் பொறுக்காது யாராவது புதிய தமிழர்களோடு கதைத்தால் மறக்காமல் மனோகரனைப் பற்றியும் கேட்பது உண்டு. யாரும் உருப்படியான பதிலை தராதபோது அவனுக்கு மீண்டும் மீண்டும் சலிப்பு ஏற்படும். இறுதியாக அவன் கேட்பதை வரவரக் குறைத்துக் கொண்டான்.

இந்த அவஸ்தை இல்லாது அப்பா அம்மாவால் குழந்தை பெற்றிருக்க முடியும். சட்டப்படி பெற்றால் உயிரியல் தந்தையைக் கண்டுபிடிப்பது இவ்வளவு சிக்கலாக இருந்திருக்காது. அப்படி அப்பா அம்மா செய்திருந்தால் தான் அவர்களுக்குப் பிள்ளையாகப் பிறந்து இருக்கமாட்டேன் என்பது விளங்கியது.

17

இன்று வாழ்ந்துவரும் சமுதாயத்திற்கு பெரும் தொற்று என்பது வரலாற்றில் வந்து போன ஒரு வருத்தமாகவே இருந்தது. அதைக் கண்முன் கொண்டுவந்து நிறுத்தி, இந்த உலக இயக்கத்தையே நிலைகுலைய வைத்த கொரோனா. கைகொடுத்துக் கட்டிப்பிடித்த காலம் போய்க் முழங்கையால் முழங்கையை முட்டும் அல்லது கைகூப்பும் புதிய நடைமுறையை அது உலகிற்கு அறிமுகம் செய்து வைத்திருக்கிறது. அது மட்டும் இல்லாமல் கையை எப்படிக் கழுவவேண்டும், கையை எதனால் சுத்தம் செய்ய வேண்டும், கையை எப்போதெல்லாம் சுத்தம் செய்ய வேண்டும், முகக்கவசம் எப்படி அணிய வேண்டும், ஒருமனிதனிடம் இருந்து மற்றைய மனிதன் எப்படித் தூரத்தைக் கடைப்பிடிக்க வேண்டும், கை படாமல் மற்றவர்களிடம் இருந்து எப்படிப் பொருள்களை வாங்க வேண்டும், வாங்கிய பொருட்களை எப்படிச் சுத்தம் செய்து பாவிக்க வேண்டும், பாவித்த உடைகளை எப்படிச் சுத்தம் செய்யவேண்டும், கை படாமல் கதவை எப்படித் திறப்பது என்பதாகத் தொற்றுப் பரவாது இருப்பதற்குப் புத்தகத்தில் எழுதிய, எழுதாத வழிகளை அது உலகிற்குப் புதிதாக அறிமுகம் செய்து வைத்திருக்கிறது.

கொரோனா மனிதனை உயரக் கட்டிய கயிற்றில் நடக்கவிட்டு கீழே முட்களைப் பரப்பி வைத்தது. ஒவ்வொரு நாளும் யுத்தகளத்திற்குப் போவதாய் வேலைக்குச் சென்றுவரும் புதிய சூழலை நடைமுறை வாழ்க்கையாக்கியது. மூச்செடுக்க முடியாது துடிக்கும் நோயாளிகளின் காட்சியும், பிணம் வைக்க முடியாது தெண்டாடும் நகரங்களின் அவலங்களும், துடித்துத் துடித்து உயிர் போவதைச் சகிக்க முடியாது கண்ணீர்விட்டு அழும் தாதிகளையும் இந்தக் கொடுமைக்குச் சாட்சியாக்கியது.

நோயாளிகளின் உயிரைப் பலிகொண்டதோடு மட்டும் கொரோனா திருப்தி அடையவில்லை. அது பல மருத்துவர்களினதும் தாதிகளினதும் உயிரையும் கேட்டது. அதே நேரம் அவர்களுக்கான தேவை சுனாமியைத் தடுக்கக் கட்டப்படும் அணையாக வளர்ந்தது.

ஒஸ்லோ நகரமும் அதன் தாக்கத்தில் தவித்தது. இடைக்கிடையே மூச்சுவிடமுடியாமல் தவிப்பதும் பின்பு கிடைக்கும் இடைவெளியில் மூச்சு எடுப்பதுமாய் அல்லாடியது. மருத்துவருக்கான தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியாது தெண்டாடிய நாடு இது. கொரோனாவின் கோரத் தாண்டவத்தில் மருத்துவருக்கான தேவை மலைபோல வளர்ந்து நின்றது. அதைப் பூர்த்தி செய்வதற்கு நூல் போகாத ஊசிகளில்கூட நூல் கோர்ப்பதற்குத் தயாராக இருந்தார்கள்.

சித்தன் மருத்துவ மாணவன் என்பதோடு ஏற்கனவே ஆராய்ச்சியில் ஈடுபட்டு இருந்ததால் அவனையும் தொடர்புகொண்டார்கள். சித்தனுக்கு கொரோனாவின் கொடுமை விளங்கினாலும் தனது படிப்பிற்கான தார்மீகத்தை என்றும் மறவாது அதற்கு ஒப்புக்கொண்டான்.

மூச்சு எடுக்க முடியாத வேலை. அது சித்தனுக்கு மாத்திரம் இல்லை. மருத்துவ மனைக்குள் நுழையும் பலருக்கும் அந்தப் பழுவான பணி காத்திருக்கும். உடல்ரீதியான வேலை ஒருபுறம் என்றால் இழப்புக்களைப் பார்த்து மனரீதியாகத் துவண்டு போபவர்கள் பலர். சித்தனுக்கும் தாங்கமுடியாத வேதனையை அந்தக் காட்சிகள் இதயத்தில் ஊசியாக ஏற்றின. வீட்டிலிருந்து வேலைக்குப் புறப்பட்டால் அப்பா அம்மாவின் பார்வை மகன் இயமனிடம் போவதான எக்கத்தோடு பார்க்கும். அது அவனை ஒவ்வொரு நாளும் கொன்றாலும் தனது கடமையிலிருந்து துளியளவு விலகவும் அவன் விரும்பவில்லை.

ஆய்வகத்தில் வேலை செய்யும் போது அதனோடு தொடர்புடைய மென்பொருட்களுக்கே அனுமதி கொடுத்திருந்தார்கள். மருத்துவராக வேலை செய்வதால் மேலும் பல மென்பொருட்களுக்கு அனுமதி கிடைத்தன. அவை தனிநபர்களின் தகவல்களைப் பார்ப்பதற்கு வழி திறக்கும் மென்பொருட்கள்.

சித்தன் முதலில் அதைப்பற்றி அதிகம் சிந்திக்கவில்லை. அன்று மாலை வேலை செய்யும்போது ஒரு நோயாளியின் முகவரியில் சந்தேகம் வர அந்த மென்பொருளின் உதவியோடு அதை உறுதி செய்தான். அதற்கு வருமான வரி, மற்றும் முகவரி மாற்றம் என்பனவற்றின் தரவுத்தளத்துடன் நேரடித் தொடர்பு உண்டு. அதனால் மாற்றங்களை உடனடியாக அறிந்துகொள்ள முடியும்.
அப்போதுதான் சித்தனுக்கு அதில் மனோகரனின் முகவரியைத் தேடினால் என்ன என்று தோன்றியது. அது சட்டப்படி பெரும் குற்றமாகும். பிடிபட்டால் மருத்துவ

வேலையே இல்லாமல் போகலாம். இருந்தும் பிடிபடாது பார்க்கலாம் என்று தோன்றியது. பெயரைப் போட்டுத் தேடினால் முகவரி, தொலைபேசிஎண் என்பனவற்றை அவர்களது மருத்துவ அறிக்கைக்குள் போகாமலே பார்த்துவிட முடியும். மருத்துவ அறிக்கைக்குள் போகாதவரைக்கும் அது ஒரு பிரச்சினையாக இருக்காது. அல்லது பிரச்சினையாகக் கண்டுபிடிக்கமாட்டார்கள்.

நினைப்பதைக் காட்டாற்று வெள்ளம் போல நினைத்துவிடலாம். செயற்படுத்துவதை அப்படியான அசுரவேகத்தில் நடத்திவிட முடியாது. சட்டத்துக்குப் புறம்பாக, மனதிற்கு விரோதமாகத் தேடப் போகிறேன் என்று நினைக்கவே அவனுக்கு கைகள் நடுங்கத் தொடங்கிவிட்டன. இதயம் பெருத்து பலமாய்க் குருதியைப் பீச்சி அடிப்பதாய் நாடிகள்கூட வலித்தன. கைகள் வியர்த்தன. நுரைதள்ளும் பீராக கொட்டாவி இடைவிடாது வரத் தொடங்கியது. சித்தனுக்கு இது தன்னால் இயலாது என்கின்ற எண்ணமே வந்துவிட்டது. அவன் அந்த எண்ணத்தைச் செயற்படுத்தாது அப்போது விட்டான்.

இருந்தாலும் அவன் மனது அமைதி அடையவில்லை. அதைவிட்டால் அவர் முகவரியைக் கண்டுபிடிக்க வேறு வழிகள் இருப்பதாய் அவனுக்குத் தெரியவில்லை. முகவரி தெரியாது, தனது உயிர்ப்பின் இரகசியத்தைக் கண்டுபிடிக்க முடியாது. அந்த இரகசியம் தெரியாது அமுதினியைக் கலியாணம் செய்யமுடியாது. அவளைக் கலியாணம் செய்யாது இப்படி தனிமரமாக, வேலைக்காக வாழ்வதும் சாவதும் அவனுக்குப் பிடிக்கவில்லை. அதற்கு ஒரு முடிவு வரவேண்டும் என்றால் துணிவு வரவேண்டும். அதுவும் குற்றம் என்று நடுங்காத துணிவு வேண்டும். குற்றம் என்று நினைத்தாலே அவன் கை கால்கள் எகிறும் அல்லது உறைந்து போய்விடும். அந்த உறை நிலையில் அல்லது எகிறலிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு இந்த அலுவலை எப்படியாவது செய்து முடிக்க வேண்டும் என்று
திடமாக முடிவு செய்தான்.

இம்முறையும் அதே நடுக்கம், அதே பயம், தோன்றக் கன்னத்தில் மெதுவாகப் போட்டுக்கொண்டான். நடப்பது நடக்கெட்டும் என்று மென்பொருளிற்குள் புகுந்து மனோகரன் என்கின்ற பெயரைத் தேடினான். பல பெயர்கள் வந்தன.
அதில் ஒஸ்லோவில் இருப்பவர்களே பலர். நோர்வே முழுவதும் மேலும் பலர். ஐம்பது வயதிற்கு மேற்பட்டவர்கள் ஐந்து நபர்கள். ஒஸ்லோவில் இருவர். மற்றைய

இடங்களிலிருந்து மூவர். சித்தன் அந்த முகவரிகளையும் எண்களையும் எழுதி எடுத்துக்கொண்டான்.

ஐந்து நபர்களில் யார் என்பது விளங்கவில்லை. ஒவ்வொருவராக தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்பதா என்று குழப்பமாக இருந்தது. இது ஒன்றும், இரண்டில் ஒரு விரலைத் தொடு என்கின்ற விடயம் இல்லை. சரியான ஆளைக் கண்டுபிடிக்க வேண்டும். எப்படி என்கின்ற அவன் குழப்பம் தொடர்கதையானது.

அடுத்த நாள் காலை சாப்பிடும் பொழுது, 'அப்பா உங்களால தரகர் மனோகரன்ர முழுப்பெயரையும் ஞாபகப்படுத்த முடியுமா?' என்று கேட்டான்.

'எனக்குச் சரியாய் ஞாபகம் வருகுதில்லை. சுப்பிரமணியமாய் இருக்கலாம் எண்டு நினைக்கிறன்'

'சரியப்பா' என்றான்.

சித்தனிற்கு யோசனையாக இருந்தது. அதைக் காட்டாது சாப்பிட்ட பின்பு தனது அறைக்குச் சென்றான். கண்டு பிடிக்க முடியும் என்கின்ற நம்பிக்கை வந்தது. இருந்தாலும் குழப்பமாக இருந்தது.

அறைக்குள் வந்த சித்தன் திறன்பேசியை எடுத்து அவர்களது பெயர்களைப் பார்த்தான். அதில் ஒரு சுப்பிரமணியமே இருந்தது. சுப்பிரமணியம் மனோகரன். அவர் 'றமன்' என்னும் நகரத்தில் வசித்து வருகிறார். தரகர் மனோகரன் ஒஸ்லோவில் இருந்ததாக அப்பா கூறியது அவனுக்கு நன்கு ஞாபகம் இருக்கிறது. என்ன நடந்திருக்கும் என்பது சித்தனுக்கு விளங்கவில்லை. ஒன்றில் இடம் மாறி இருக்க வேண்டும். அல்லது வேறு ஆளாக இருக்க வேண்டும். ஐம்பது வயதிற்குக் குறைந்த பல மனோகரன் சுப்பிரமணியம் இருந்ததாக அவனுக்கு ஞாபகம். அப்பா கூறியதின்படி இவருக்கு நிச்சயம் ஐம்பத்து ஐந்து வயதிற்கு மேலாகவே இருக்கும். வலையில் அகப்பட்ட மீனா அல்லது வழுவி ஓடிய மீனா? சித்தன் குழம்பினான்.
அவரைத் தொலைபேசியில் அழைத்துக் கேட்பதே சரி என்பது அவனுக்கு விளங்கியது.
சித்தன் திறன்பேசியைச் சொடுக்கினான். அடுத்த முனையில் வயது போன ஆணின் குரல் 'ஹலோ' என்றது.

'ஹலோ நான் சித்தன். உங்களுக்கு என்னுடைய அப்பாவை ஞாபகம் இருக்குதா எண்டு எனக்குத் தெரியாது. அவருக்குச் செந்தில்நாதன் எண்டு பெயர். செந்தில்

எண்டு கூப்பிடுகிறவை. உங்களிட்டை இருந்து அவருக்கு 'ஸ்பாம் டொனோர்' உதவி கிடைச்சிருக்குது'

'ம்… டென்மார்க் போனவையில ஒருத்தரே?'

'ம்… நீங்கள் சொல்லுகிறது சரி'

'ம்… ஞாபகம் இருக்குது'

'உங்களோடை கதைக்கேலுமா?'

'கதைக்கலாம்'

'நேர சந்திக்கோணும்'

'அப்பிடி எண்டா றமனுக்குத்தான் வரோணும் தம்பி'

'வரலாம்'

'சரி போன் பண்ணீட்டு வாங்க'

18

அமுதன் அன்று ஐந்து மணிபோல் றமனிற்குச் செல்ல வேண்டும் என்று திறன்பேசியில் அழைத்துக் கூறியிருந்தான். அமுதினி தனது அப்பாவின் காரில் வந்து அழைத்துச் செல்வதாகக் கூறினாள். சித்தனுக்கு அப்பாவின் காரை எடுத்துச் செல்லலாம் என்று தோன்றினாலும் நீல வைரமாய் மினுங்கும் '*Tesla*'–வில் போவதை நினைக்க இனித்தது. இருந்தாலும் அவளின் காரில் செல்வது சரியா என்கின்ற கேள்வி மனதைக் குடைந்தது. அது ஒருவிதமான கூச்சத்தை உற்பத்தியாக்கி அவனை நெளிய வைத்தது. மற்றவர்களுக்காக வாழ முடியாது என்கின்ற எண்ணம் அடுத்த கணமே தோன்ற நடப்பது நடக்கட்டும் என்று காத்திருந்தான்.

நாலரை மணி போல் அமுதினி வீட்டிற்கு வந்திருந்தாள். அப்பொழுது செந்திலும் மலர்விழியும் உலாத்திவிட்டு வர வெளியே சென்று இருந்தார்கள். அமுதினி அரச குடும்பத்தில் பிறந்தவள் போலச் சித்தன் கண்ணிற்குத் தோன்றினாள். இன்று காருக்கு ஏற்ப நீல நிறத்தில் அவள் உடைகள். உதட்டிற்கும் ஒரு மெல்லிய நீல நிறத்தில் சாயம். கண்களில் சித்தனோடு செலவிடும் நேரத்தை எண்ணிய மகிழ்வு.

அமுதினியைப் பார்த்த சித்தனுக்குத் தனது எல்லைகளை இந்தக் கணத்தில் உடைத்தெறிந்தால் என்ன என்கின்ற எண்ணம் ஏற்பட்டது. அதன் விளைவு என்னவாகும் என்று எண்ணியபோது அவனது ஆசை சட்டென்று மாய்ந்தது.

உள்ளே வந்த அமுதினி தன்னையே பார்த்துக்கொண்டு நிற்கும் சித்தனைக் கவனித்துவிட்டு, 'என்னை உள்ள கூப்பிடமாட்டியளே?' என்று கேட்டாள்.

'ஓ… சொறி அமுதினி… உன்னைப் பார்த்தாலே காதல் மயக்கம் வந்திடும். பிறகு எப்பிடி உலக ஞானம் இருக்கும்? வா… வந்து சோபாவில இரு அமுதினி' என்றான்.

'ஏன் சோபவைத் தவிர வேற ஒரு இடத்திலையும் இருக்க முடியாதா?'

'ஐயோ அமுதினி. என்னைக் கொல்லாத… எல்லைகளை உடைத்தெறிய எனக்கும் விருப்பம்தான். அதை நொடிப்பொழுதில் தகர்த்துவிடலாம்.
அதன் விளைவு எப்பிடி இருக்கும் என்று யோசியும். எங்களுடைய வாழ்நாள் முழுவதும் அதுக்கு சமாதானம் சொல்லவே போதாமல் போயிடும்'

'விடுங்க சித்தன். இதைக் கதைச்சம் எண்டா இண்டைக்கு நாங்கள் றமனுக்குப் போகமுடியாது'

'அது உண்மை அமுதினி. ஏதாவது குடிக்கப் போறியா?'

'நீங்கள் வெளிக்கிடுங்க. நான் தண்ணி எடுத்துக் குடிச்சிட்டு வாறன்'

*

றமன்பூங்கா சுவர்க்கத்திலிருந்து பச்சைக் கம்பளம் ஒன்றை இந்திரன் தூக்கிப் பூமியில் எறிந்ததாக விஸ்தீரணமாக விரிந்து கிடந்தது. இடைக்கிடையே வானை முட்ட ஓங்கி உயர்ந்த மரங்கள்… அவை பரப்பும் நிழலில் பூங்கா நிரந்தரக் கிரகணத்தில் சிறைவைக்கப்பட்டதாக… அந்தப் பூங்காவில் காற்பந்தாட்ட மைதானம், விளையாட்டு மைதானம், பனிச்சறுக்கு பூங்கா, பெரிய புல்வெளி பகுதிகள், மேசைப் பந்தாட்டம், பூப்பந்து வலைகள், கழிப்பறைகள், உடற்பயிற்சி வசதிகள், மற்றும் கூடைப்பந்து மைதானம் ஆகியவை இருந்தன. பலர் அங்குமிங்கும் நடந்து தமது கொழுப்பைக் கரைக்க முயற்சி செய்தனர். கால்பந்தாட்ட மைதானத்தில் பதினான்கு வயது மதிக்கத்தக்கச் சிறுவர்கள் பந்தை விட்டுக்கலைப்பதில் உற்சாகம் காட்டினர். அவர்கள் சத்தம் நான்கு திசைகளையும் தாண்டி முன்னேறியது.

சித்தனை கால்பந்தாட்ட மைதானத்திற்கு வருமாறு மனோகரன் கூறியிருந்தார். இருவரும் சென்றபோது தமிழ் ஆள்கள் யாரையும் அங்கே காணவில்லை. அவர் எப்படி இருப்பார் என்றும் சித்தனக்குத் தெரியாது. ஆளைத் தெரியாது தேடுவது இருட்டறையில் ஊசியைத் தேடுவதான சிரமம் என்றாலும் தற்போது உள்ள திறன்பேசி வசதி அந்தச் சிரமத்தைக் குறைத்து விடுகிறது. சித்தன் திறன்பேசியை எடுத்து மனோகரனின் எண்ணைச் சொடுக்கினான். 'நாங்கள் வந்து நீங்கள் சொன்ன மாதிரி புற்போல் கிறவுண்டுக்குப் பக்கத்தில நிக்கிறம். உங்களைக் காணேல்லையே?'

'தம்பி நான் நடந்து வாறன். ஒரு ஐஞ்சு நிமிஷத்தில வந்திடுவன்'

'சரி நாங்கள் வெயிற் பண்ணுறம்' சித்தன் திறன்பேசியைத் துண்டிக்க அவனைப் பார்த்த அமுதினி, 'என்ன வாறாரே?' என்று கேட்டாள்.

'ம்… ஐஞ்சு நிமிஷத்தில வந்திடுவாராம்' என்றான் சித்தன்.

'அதுவரைக்கும் கையைப் பிடிச்சுக்கொண்டு சுத்துவமா?' என்று கேட்டுக் கண்ணை அடித்தாள் அமுதினி. சித்தன் அவளை மோகத்தோடு பார்த்துவிட்டு, 'எங்களில நம்பிக்கை இருந்தால் கையைப் பிடிக்கலாம். இது பப்பிளிக் பார்க். இங்க அதைவிட என்ன செய்ய முடியும்?' என்றான்.

'இங்க கையப் பிடிச்சா பிறகு வீட்டை போகப் பத்தாதே?' என்று கேட்டுச் சிரித்தாள் அமுதினி.

'ம்... நீரும் சரியான ஆள்தான்'

'பிறகு உங்களுக்கு அப்பிடித்தானே பயம்'

'பயம் எண்டில்லை அமுதினி. எச்சரிக்கை எண்டு வைச்சுக் கொள்ளலாம்'

'அம்மா ஏதோ இலவு காத்த கிளிகள் போல எண்டு சொன்னா. உங்களுக்கு அதுகின்ரை விளக்கம் தெரியுமே? நாங்கள் கலியாணம் முடிக்காமலிருக்கிறதைப் பற்றித்தான் சொல்லுறா எண்டு விளங்குது. அதிகின்ர கதை எனக்குத் தெரியாது'

'நொஸ்கில *'Den som intet våger intet vinner'* மாதிரி, இது முயற்சி செய்யாதவருக்குப் பலன் கிடைக்காது எண்டு வரும். ஆனால் அது பிழையான நம்பிக்கையோடை காத்திருக்கிறது எந்தப் பலனையும் தராது எண்டு வரும். நாங்கள் காத்திருக்கக் கூடாது எண்டு மாமி அதைத்தான் சொல்லி இருக்கிறா. முழுப் பிரச்சினையும் தெரிஞ்சால் இப்பிடிச் சொல்லமாட்டா எண்டு நான் நினைக்கிறன்'

'சிலவேளை எங்களுடைய *hallusinasjoner*-ஆக (பிரமைகள்) இருந்தால்?'

'எப்பிடி அமுதினி? இது ஒண்டும் எங்கடை கற்பனை இல்லையே? நிஜத்தில இருந்து பிறந்த சந்தேகம்தானே? பிறகு அதில என்ன கற்பனை எண்டுறாய்?'

'குழப்பம் வந்திட்டா எல்லாரும் சொல்லுகிறது சரி மாதிரியும் இருக்கும், அதே நேரம் எல்லாரும் சொல்லுகிறது பிழை மாதிரியும் இருக்கும். அப்பிடிதான் என்ர நிலைமையும். சரியாகவும் தெரியுது, பிழையாகவும் தெரியுது. முடிவான விடை ஒண்டு கிடைக்கேல்ல'

'பயப்படாத. அங்க பார் ஆள் வாறார். அப்ப முடிவு கிடைக்கும்' என்றான் சித்தன். அவன் பார்வை தூரத்தில் வரும் மனோகரனில் பதிந்து இருந்தது.

அறுபத்து ஐந்து வயதுக்காரர் போன்ற தோற்றம். வயது அது தானா அல்ல கூடக்குறையவாக இருக்குமா என்பதைச் சித்தனால் துல்லியமாக அனுமானிக்க முடியவில்லை. பஞ்சை நன்கு அடித்து ஒட்டியது போல இன்னும் பாலைவனமாகாத தலை. அதே பஞ்சை வஞ்சகம் இல்லாது ஒட்டியதான தாடியும் மீசையும். பருத்த

உடலோடான பெருத்த வயிறு. நிறை கூடியதால் காலில் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டிருக்கலாம். அவர் நடையில் சிறிய தாண்டல். துாரப்பார்வையை நிவர்த்தி செய்யத் தடித்த கண்ணாடி. நீல நிறத்தில் பயிற்சிக்கான உடை அணிந்திருந்தார். காலில் தரமான காலணிகள். அவர் வேலை செய்கிறாரோ இல்லையோ இப்போதும் வசதியாக இருப்பதான தோற்றம். உடல்நலத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்கின்ற கடைசிக்கால ஆசையின் மூர்க்கம்.

அவர் அருகே வந்து, 'நீங்கள்தானே சித்தன்?' என்று அவனைப் பார்த்துக் கேட்டார்.

'ஓம் நான்தான்' என்று சித்தன் கூற, கை கூப்பி வணக்கம் சொன்னார். சித்தனும் அமுதினியும் தங்களைச் சமாளித்துக்கொண்டு பதில் வணக்கம் சொன்னார்கள். அதையடுத்து சிரித்த வண்ணம் 'இவ யார் தம்பி?' என்று தொடங்கினார்.

'இவ்வத்தான் நான் கலியாணம் செய்கிறதாய் இருக்கிறன்' கல்லறைக்குப் போகப் போகிற நம்பிக்கையுடன் அதைக் கூறினான். அதை விளங்கிக் கொள்ளாமல் அவரும், 'ஓ… சந்தோஷம். வாழ்த்துகள்' என்றார்.

'உங்கடை வாழ்த்துகளைக் கேட்டுச் சந்தோஷப்பட வேணும் எண்டுதான் நினைக்கிறம். ஆனா அப்பிடி சந்தோஷப்பட முடியாத ஒரு பிரச்சினை எங்களுக்கு இருக்குது. அதுக்கான விடை உங்களிட்ட மாத்திரம்தான் கிடைக்கும். அதுதான் நாங்கள் உங்களைத் தேடி வந்திருக்கிறம்' என்று அதைப் பட்டென்று போட்டுடைத்தான்.

'என்ன தம்பி குழப்புறீர். எனக்கு ஒண்டும் விளங்க இல்லை'

'நீங்கள் தரகர் வேலையோடை டென்மார்க்கில இருந்து ஸ்பாம் டொனேசன் செயிறதுக்கும் உதவி செய்தீங்கள் இல்லையா? அதால வந்த ஒரு சிக்கல்தான் இது. அதைப்பற்றி உங்களோடை கதைக்கோணும்'

'அதில என்ன சிக்கல் தம்பி? உம்மட அப்பா அம்மா விருப்பத்தோடைதானே அதைச் செய்தவை. அவைக்கு அப்பவே எல்லா விபரமும் தெரியும்.

இப்ப அதில என்ன சிக்கல் வந்தது?'

'சிக்கல் வந்தது நீங்கள் வாழ்த்துச் சொன்ன விஷயத்திலதான்'

'நான் வாழ்த்துச் சொன்னன். அதில என்ன பிரச்சினை தம்பி?'

'இவபெயர் அமுதினி. அப்பா பெயர் சுபன், அம்மா பெயர் தேவிகா. உங்களுக்கு இந்தப் பெயர்கள் ஞாபகம் இருக்குதா? அமுதினியும் என்னப் போலதான் ஸ்பாம் டொனேசனால பிறந்தவா. அதுவும் உங்கள் மூலமாகவே அந்த உதவி கிடைச்சது எண்டதை அறிஞ்சம். அதால வந்த சிக்கல்தான் இது. நீங்கள் நல்லா யோசிச்சு சொல்லுங்க… இவவுடைய அப்பா அம்மாவை ஞாபகம் இருக்கா?'

'ம்… சாதுவா ஞாபகம் இருக்குது'

'அப்ப உங்களுக்கு எங்க இருந்து ஸ்பாம் கிடைச்சது எண்டு தெரியும் இல்லையா?'

'இதை நான் கொஞ்ச நாளாகத்தான் செய்தன். அதுவும் ஒருத்தர்தான். மற்றவர் ஒருத்தர் ஜெர்மனியில இருக்கிறவைக்கு உதவி செய்தார். இவர் ஒருத்தர்தான் இங்க இருக்கிறவைக்கு உதவி செய்தவர்'

'அப்பிடி எண்டா ரெண்டு பேருடைய டொனோரும் ஒரே ஆளா?'

'ம்… அதுதான் வருத்தமான உண்மை தம்பி'

இதைக்கேட்டுக் கொண்டு நின்ற அமுதினி கால்கள் கழன்று போனதாக நிலத்தில் திடீரென விழுந்தாள். அதைப் பார்த்த இருவரும் அதிர்ந்து போனார்கள். சித்தன் பதறியடித்தவண்ணம் நிலத்தில் இருந்து அவளைத் தூக்கி மடியில் படுக்க வைத்தான். மனோகரன் அங்கே ஓடிக்கொண்டு இருந்தவர்களை நிறுத்தி, அவர்களிடம் நீர் வாங்கி வந்து முகத்தில் தெளித்தான். அவள் மெதுவாக அசைந்தாள். பின்பு சித்தனைப் பார்த்து அழத்தொடங்கினாள். அழும்போதே, 'இதை நான் ஏத்துக்கொள்ள முடியாது சித்தன்' என்றாள்.

'பிள்ளை நீ என்ன நினைச்சாலும் சரி. உங்கள் இரண்டு பெயருக்கும் உயிரியல் அப்பா ஒருத்தர்தான். அது எனக்கு இப்ப நல்லா ஞாபகம் வருகுது.
நான் சொல்ல வேண்டியதைச் சொல்லுறன். அது என்னுடைய கடமை. அதுக்கு மேல முடிவெடுக்கிறது உங்கடை பொறுப்பு. இது ஒரு சிக்கலான விஷயம் எண்டாலும் உங்கடை பிறப்பிற்கு காரணம் ஒரே அப்பாதான் எண்டதில எந்தச் சந்தேகமும் இல்லை.
இதை ஏத்துக்கொள்ளுகிறது சிரமமா இருக்கலாம். ஆனாலும் இதைப் பற்றிக் கவலைப்படாமல் நீங்கள் எதுவும் செய்ய முடியாது. அது பலவிதமான சிக்கலைக் கொண்டுவரும்'

சித்தன் எதுவும் பேசமுடியாது விறைத்துப்போய் நின்றான். நதியில் தூக்கி எறியப்பட்ட உப்பாகப் அவனது கற்பனை வாழ்க்கை மறைந்து போனது. அமுதினி

தங்கை என்றால்? அவனுக்கு அதை நினைக்கவே தலை வெடித்துவிடும் போல இருந்தது. 'இப்படியே எங்கேயாவது ஓடிச்சென்று விடலாமோ?' என்று ஒருகணம் எண்ணத் தோன்றியது.

அமுதினி தொடர்ந்தும் மாரி ஆறாக அழுதுகொண்டு இருந்தாள். சித்தனைப் பார்த்துப் பார்த்து அடக்க முடியாது குலுங்கிக் குலுங்கி அழுதாள். அவளுக்குச் சமாதானம் சொல்லும் நிலையில் சித்தன் இருக்கவில்லை. மனோகரனுக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்று விளங்கவில்லை. இருவரும் அவள் அழுவதைப் பார்த்தவண்ணம் சிறிது நேரம் நின்றார்கள். பின்பு மனோகரன், 'நீர் அழக்கூடாது. இது மாற்ற முடியாத உண்மை. இதில யாருடைய குற்றமும் இல்லை. உண்மையை ஏற்றுக்கொண்டு இனி என்ன செய்ய வேணும் எண்டு யோசிக்கிறதுதான் நல்லது' என்றார். அவள் மனோகரன் சொல்வதைக் கேட்டாலும் தொடர்ந்து அழுதாள்.

'அமுதினி நீங்கள் அழுகிறதை நிப்பாட்டுங்க. சித்தன்! இனி என்ன செய்யலாம் எண்டு யோசியுங்க' என மனோகரன் இருவரையும் சமாதானம் செய்தான்.

'விளங்குது அங்கிள். நீங்கள் எனக்கு இன்னும் ஒரு உதவி செய்ய வேணும்'

'என்ன தம்பி?'

'எங்கடை உயிரியல் அப்பாவின்ரை முகவரியும் ரெலிபோன் நம்பரும் தரவேணும்'

'என்னை மன்னிக்கோணும் தம்பி. இது எல்லாம் குடுக்கக்கூடாது எண்டதுதான் எங்கடை ஒப்பந்தம். அதை நான் மீறமுடியாது'

'இல்லை அங்கிள். நீங்கள் உதவி செய்த காலத்திற்கும் இன்றைய நிலைமைக்கும் நிறைய வித்தியாசம் இருக்குது.

இப்ப இது இங்க சட்டப்படியே அனுமதிக்கப்பட்டிருக்குது. தயவு செய்து நீங்கள் இந்த விஷயத்தில உதவி செய்ய வேணும். இப்ப எங்கடை உயிரியல் அப்பாகூட அதை ஏற்றுக் கொள்வார் எண்டு நினைக்கிறன்'

'அதை சரியாய்ச் சொல்ல முடியாது. அவர் கலியாணம் செய்திட்டன் எண்டு பிறகு கதைச்ச போது சொன்னவர் தம்பி'

'எது எண்டாலும் பருவாய் இல்லை. நீங்கள் விபரத்தைத் தாங்க... நான் கதைக்கிறன். உங்களக்கு அதால எந்தப்பிரச்சினையும் வராமல் பார்த்துக் கொள்ளுறன். அவருக்கும்

அதால எந்தப் பிரச்சினையும் வராது. அதோடை உங்களை இங்க கண்டுபிடிக்கிறதும் லேசான விஷயமா என்ன? நானே எவ்வளவு கஸ்ரப்பட்டன் எண்டு எனக்குத்தான் தெரியும். ஆனால் அதுக்காக உங்களையோ அவரையோ சங்கடப்படுத்திற எந்த விஷயத்தையும் செய்யமாட்டம். எங்களை நம்பலாம் அங்கிள்'

'ம்... நீங்களும் விடுகிறியள் இல்ல... அதோடை உங்களை நம்பாமலில்லை. எனக்குச் செந்திலை நல்லாத் தெரியும். உங்களைப் பார்க்கவும் பாவமாகத்தான் இருக்குது. வாழ்வின் இரகசியங்களை யாருக்குத்தான் அறிய விருப்பம் இல்லாமலிருக்கும். அவர்ற்ற முகவரி என்னிட்ட இல்லை. ரெலிபோன் நம்பர் இருக்க வேணும். எடுத்துத் தரலாம். தொடர்ந்தும் அவர் அதைப் பாவிச்சால் உங்களுக்கு அதிர்ஷ்டம்தான்'

'அது பெரிய உதவியா இருக்கும், நீங்கள் தாங்க'

'சரி... நாளை மறுநாள் போன் பண்ணும். நான் எடுத்து வைச்சிருக்கிறன்'

'தாங்ஸ் அங்கிள்'

அமுதினி அழுவதை நிறுத்தி இருந்தாள். மனோகரன் புறப்படத் தயாரானான். பின்பு இருவரையும் பார்த்து, 'சரி நான் போயிட்டு வாறன்' என்றான்.

'சரி வாங்க' என்றான் சித்தன்.

'ம்...' என்றாள் அமுதினி.

19

அமுதினி பிடிக்க முடியாது நழுவிய அவதானத்தை எட்டிப் பிடித்து காரை ஓட்டிக்கொண்டு இருந்தாள். மகிழுந்து விமானத்தைப் போல வேகமாகச் சென்றாலும் உள்ளே கண்ணாடி அறைக்குள் இருப்பது போல் நிசப்தமாக இருந்தது. இருவரும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. அனைத்தும் முடிந்ததான சூனியத்தில் அந்த அமைதி பிறந்து வியாபித்தது. இயந்திரத்திற்கு மனது இல்லாது இருப்பது வசதியாகிற்று. அது கவலையான செய்தி கேட்டு இயக்கத்தை நிறுத்தி விடுவதில்லை. இத்தனை கவலைகள் தலையில் குந்தி இருந்தாலும் அமுதினி சரியாக நூறில் மிதித்தாள். இருந்தும் பின்னால் வந்த சில மகிழுந்துகள் ஸ்…க் ஸ்…க் என்று விலத்திச் சென்றன. ஒரு கணம்கூடத் தாமதிக்க முடியாது வேகமாகச் செல்லும் மனிதர்கள். முடியப்போகும் கணத்தை நோக்கி வேகமாக ஓடும் வாழ்க்கை.

சித்தன் மனம் அந்த அமைதியில் எகிறிப் பாய்ந்தது.

என்றும் அவசரம் மாறாத வாழ்க்கையில், இன்றும் அனைத்து உயிர்களுக்கும் அதே அவசரம். எதிலும் நிதானித்து நிற்கமுடியாத ஓயாத ஓட்டம். ஏற்றத்தாழ்வுகளும், எஜமானர்களும், அடிமைகளும் நிறைந்த இந்த உலகையே நாகரீக உலகம் என்கின்றனர் மனிதர்கள். நகைப்பிற்கு உரியது அல்லவா இது? மனிதரை மனிதர் சுரண்டாது நவீன மன்னர்கள் உருவாக முடியாது. என்றும் மாறாது நீடித்து நிலைத்து நிற்கும் உண்மை இது. இருந்தும் இயற்கை தனது படைப்பில் இந்த நாகரீக மனித உலகிற்காக பெரும் மாற்றத்தை ஏற்படுத்திக்கொள்ளவில்லை. யாராலும் பொன்னை உண்டுவிட முடியாது. அல்லது இறக்கும் பொழுது ஒருபிடி மண்ணை அவர்களால் களவாகக்கூட அள்ளிச் செல்ல முடியாது. இயற்கையிலிருந்து உதித்து, அதனிடத்தே மீண்டும் ஐக்கியமாவதே ஒவ்வொரு உயிர்த்தெழும் ஜீவராசிகளின் உடலுக்கான விதியாகும். ஆத்மா என்பது கடவுள் கூறியதான மனிதக் கற்பனை மட்டுமே.

பிறப்புக்கும் இறப்புக்கும் இடையிலிருக்கும் வாழ்க்கையில் மனித மிருகத்தைப் போன்ற வக்கிர மிருகம் எதுவும் இல்லை. அப்படி ஒன்று வாழ்ந்ததாகச் சரித்திரமும் இல்லை. இனிமேல் அது உருவாகப் போவதும் இல்லை.

மனிதனை நாகரீகப்படுத்துவதாய் எண்ணி அநாகரிகத்திற்குள் தள்ளிய மனித கைங்கரியங்கள் பல. அவற்றின் வழிவந்த கட்டுப்பாடுகள் இன்னும் பல. அவற்றில் சில சரியாக இருக்கலாம். சில பிழையாக இருக்கலாம். சில தேவையற்றனவாக இருக்கலாம்.

அதில் மாமன் மருமகள், மச்சான் மச்சாள் ஏற்றுக்கொள்ளப்படும் பாலியல் உறவாகச் சில இடங்களிலிருக்கின்றன. அண்ணன் தங்கை அல்லது அக்கா தம்பி என்பவர்களுக்கு இடையில் பாலியல் உறவு என்பது மன்னிக்க முடியாத குற்றமாகப் பார்க்கப்படும். வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளாவிட்டால் அது நடப்பதே இல்லை என்றாகிவிடுமா? உலகின் ஒவ்வொரு மூலையிலும் நித்தமும் மன்னிக்க முடியாத குற்றங்கள் இரகசியமாக நடைபெறுகின்றன. மாமன் மருமகள் உறவு சரியென்றால் அண்ணன் தங்கைக்கு எதற்குத் தடை என்று கேட்கும் துணிவு யாருக்கும் இருக்காது.

இன்றைய அறிவியலுக்கு ஏற்ப மரபணுக்களில் திரிபு உண்டாகி குறையுள்ள குழந்தைகளைப் பெறக்கூடாது என்றால் நெருங்கிய சொந்தத்திற்குள் எந்த உறவும் கூடாது என்பது அறிவியல். அதற்கு மாமன் மருமகள், மச்சான் மச்சாள், அண்ணன் தங்கை என்கின்ற வேறுபாடுகள் எதுவும் கிடையாது.

அதைக்கூடக் குழந்தை பெற்றுக்கொள்ளாது சேர்ந்து வாழ்வதாய் உலகின் பலபாகங்களில் பயில்கிறார்கள். அதற்கு யாரும் எதுவும் செய்துவிட முடியாது. அதைச் சட்டப்படி தடுக்காத நாடுகள் ஐரோப்பாவில், ஆபிரிக்காவில் இல்லையா? இருந்தும் நாங்கள் இருவரும் அப்படி வாழ்ந்திட முடியாது. சேர்ந்தால், அடுத்தது குழந்தை எங்கே என்கின்ற கேள்வி வரும். அதற்குப் பதில் சொல்லிச் சமாளிக்க முடியாது. மருத்துவனாய் வேறு இருப்பதால் எப்படியாவது சொந்தப் பிள்ளையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அது எமது வருங்காலச் சந்ததிக்குச் செய்யும் துரோகமாகும். தெரியாமல் செய்வது தவறு. தெரிந்து செய்வது தப்பு. தவறுதலாகச் செய்யலாம். தப்புத் தப்பாகச் செய்யக்கூடாது. அதுவும் வருங்காலச் சந்ததிகளை உருவாக்குவதில் அது நடக்கக்கூடாது என்பதாகச் சித்தனின் மனம் முடிவுசெய்தது.

மகிழுந்து ஒஸ்லோ நகருக்குள் இறங்கியது. சித்தன் அமுதினியை பார்த்தான். அதைப் பார்த்த அமுதினி,

'என்ன சித்தன் யோசிக்கிறியள்? இப்ப எங்க விடட்டும்?'

'எங்க விருப்பமோ அங்க விடும்' என்றான்.

அவள் காரைச் சித்தனின் வீட்டை நோக்கிச் செலுத்தத் தொடங்கினாள். மகிழுந்து மிக விரைவாகவே சித்தனின் வீட்டை அண்மித்தது. வீட்டிலிருந்து சிறு தொலைவில் தெருவோரமாக அமுதினி காரை மெதுவாக்கி நிறுத்தினாள். பின்பு சித்தனைப் பார்த்து, 'இப்ப என்ன செய்யலாம் சித்தன்?' என்று கேட்டாள்.

'அவருக்கு இப்பவே றிங் பண்ணிப் பார்க்கலாமே?'

'இழுத்துக்கொண்டு இருக்காமல் அதைச் செய்கிறதும் நல்லதுதான்' என்றாள் அமுதினி.

சித்தன் தனது திறன்பேசியை எடுத்து மனோகரன் கொடுத்த எண்ணைச் சொடுக்கினான். அடுத்த முனை சில தாமதத்தின் பின்பு உயிர் பெற்றுக் கொண்டது. இளமை தணிந்து முதமை பெற்ற குரல் ஒன்று 'ஹலோ' என்றது.

'ஹலோ நான் சித்தன் எண்டு நோர்வேயில இருந்து கதைக்கிறன்'

'ஓ… அப்பிடியா தம்பி? எனக்கு உங்களை யார் எண்டு தெரியல்லையே'

'எங்களுக்கு உங்களைத் தெரியும். நீங்கள் டொக்ரர் விக்னேஸ்வரன் தானே?'

'அது சரிதான். நீங்கள் யார்? இப்ப என்ன விஷயமாய் கதைக்க வேணும்?'

'நான் சித்தன். உங்களோடை ஒரு முறையில சம்பந்தப்பட்டவன்தான். நான் இப்ப ஒஸ்லோவில மெடிசீன் படிக்கிறன்'

'அது என்ன சம்பந்தம் தம்பி? ஏதாவது உதவி வேணுமா?'

'இது படிப்புச் சம்பந்தப்பட்ட உதவி இல்லை. சொந்த விஷயம்'

'அப்பிடி என்ன விஷயம்? எனக்கு உம்மையே தெரியாது. பிறகு என்ன அப்பிடி இருக்கப் போகுது?'

'ம்… அது உண்மைதான். ஆனால் உங்களுக்கு மனோகரனைத் தெரியும் இல்லையா?'

'யார்…? தரகர் மனோகரன் எண்டு, ஒஸ்லோவில இருக்கிறார், அவரையா?'

'ம்… அவர்தான்'

'தெரியும் தம்பி. இப்ப அவருக்கு என்ன? நீங்கள் என்ன கதைக்க வேணும்?'

'அவர் மூலமாக நீங்கள் ஸ்பாம் டொனேசன் செய்தீங்கள் இல்லையா?'

அடுத்த முனையில் அமைதி. வைத்து விட்டாரோ என்கின்ற சந்தேகத்தில் சித்தன் 'ஹலோ' என்றான்.

'தம்பி! அதைப் பற்றி எல்லாம் நான் உங்களோடை கதைக்க முடியாது' என்றார்.

'உங்களைக் குற்றம் சொல்லவோ, பொறுப்புக் கேட்கவோ அதைப் பற்றி நான் உங்களிட்டை கேட்க இல்லை. எங்களைப் பற்றி முழுமையா அறிஞ்சு கொள்ள வேணும் எண்டு மட்டும்தான் கேட்கிறன்'

'எங்களைப் பற்றி எண்டால் தம்பி?"

'நீங்கள் பலருக்குத் தானம் செய்து இருக்கிறியள். அதில நானும் இன்னொரு பெண்ணும் அடக்கம். அதுதான் நாங்கள் எண்டு சொன்னன்'

'ஓ... அப்பிடியா விஷயம்? ஆனால் இதைக் கிளறக்கூடாது எண்டதுதான் எங்களுடைய ஒப்பந்தம். இப்ப நீங்கள் அதைச் செய்கிறது கொஞ்சம் சங்கடமாய் இருக்குது'

'அப்ப இருந்த காலம் வேற. சட்டங்கள் வேற. இப்ப காலம் மாறீட்டுது. இப்ப இருக்கிற சட்டங்கள் வேற. இப்ப உயிரியல் தாயை அல்லது தந்தையை அறிகிறதுக்குப் பிள்ளைகளுக்கு முழு உரிமையும் இருக்குது எண்டதை நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. எங்களுக்குச் சட்டங்கள் பற்றி எல்லாம் கவலை இல்லை. உங்கட தயவு மட்டும்தான் தேவை. ஒரு முறை உங்களைச் சந்திச்சுக் கதைக்க வேணும். அவ்வளவுதான்'

'என்னை நீங்கள் சந்திக்கிறதால எந்த மாற்றமும் வரப்போகிறது இல்லை. அப்பிடி ஏதும் நடந்தால் நான் செய்த ஒப்பந்தத்திற்கும் கொடுத்த தானத்திற்கும் அர்த்தம் இல்லாமல் போயிடும். அதைவிட நீங்கள் வேற ஏதாவது அறியோணும் எண்டால் வரலாம்'

'நிச்சயமாக உங்கடை ஒப்பந்தத்தை மீறச்சொல்லி நாங்கள் கேட்கப் போகிறது இல்லை. உங்களை நேர சந்திக்கோணும். இன்னும் சில தகவல்கள் தெரிஞ்சுகொள்ள வேணும்... அவ்வளவுதான்'

'சரி... வந்து சந்தியுங்க. நான் *SMS*-இல என்னுடைய ஒபீஸ் அட்றஸ் அனுப்பிவிடுறன். டென்மார்க் வந்த உடன போன் பண்ணுங்க'

'தாங்ஸ். நாங்கள் வந்து உங்களைச் சந்திக்கிறம்'

'*Okay, Bye*'

'*Bye*'

சித்தனையே இதுவரையும் பார்த்துக்கொண்டு இருந்த அமுதினி, 'இரத்த உறவு எண்டாலும் இரக்கப்படமாட்டார் போல இருக்குது' என்றாள்.

'அவருக்கு அவருடைய பிரச்சினை அமுதினி. இரத்த உறவு எண்டால் துடிக்கும் எண்டுகிறது தமிழ்ப்பட வசனம் மட்டும்தான். பார்த்துப் பழகி வாறதுதான் பந்தம், பாசம், காதல், அன்பு எல்லாம். பிறந்தது தொடக்கம் பார்க்காமலிருந்தால் அதெல்லாம் எப்பிடி வரும்? அவரும் பார்க்கேல்ல நாங்களும் பார்க்கேல்ல... பிறகு எப்பிடி வரும்? நாங்கள் இரத்த சம்பந்தப்பட்டாலும் அந்நியர்கள்தான்'

'நாங்கள் பார்க்காட்டியும் எங்களுக்கு இருக்கிற துடிப்பும், ஆசையும் அவருக்கு இருக்கிற மாதிரித் தெரிய இல்லையே. இப்பவும் ஏதோ தவிர்க்க முடியாமல் ஒப்புக்கொண்ட மாதிரி இருக்குது'

'அது உண்மை. அவர் விரும்பி இதை ஒப்புக்கொள்ள இல்லை. அதுதானே அவர் தொடக்கத்திலேயே தெளிவாகச் சொன்னார்'

'என்னால இந்த உலகத்தை விளங்கிக்கொள்ள முடியேல்ல சித்தன். அது சரி இனி என்ன செய்கிறதா உத்தேசம்?'

'டென்மார்க் போகிறதை முதல்ல செய்ய வேணும்'

'இந்தக் காரிலேயே போயிட்டு வந்திடலாம்'

'இல்ல, பெற்றோல் கார்தான் வசதியாய் இருக்கும் எண்டு நினைக்கிறன். நிறுத்தி சார்ஜக்கு மினக்கெட வேண்டிய பிரச்சினை இருக்காது'

'டென்மார்க்கில சார்ஜ் பண்ணுறது கஸ்ரமாய் இருக்காது'

'அப்பிடி எண்டால் சரி இதையே கொண்டு போவம்'

'எப்ப போகலாம் சித்தன்?'

'வெள்ளி அரை நேரத்தோடை வர முடியுமா?'

'சொல்லி வைச்சா வரலாம். நான் வாறன்'

'வெள்ளி போனால் சனி அவரைச் சந்திச்சிட்டு, ஞாயிறு திரும்பி வந்திடலாம். இடையில கொரோனா சிக்கல் குடுக்காட்டிச் சரி'

'அப்பிடி எதுவும் நடக்காது எண்டு நம்புவம்'

'ம்…'

'அப்ப நான் இறங்கிறன்'

'இருங்க நான் வீட்டில கொண்டு வந்து விடுறன்'

'சரி எடும்'

*

சொப்பன்கவுன் சென்றடைய இரவு எட்டுமணியாகிவிட்டது. குளிர்காலம் என்பதால் வெளியே கறுப்புக் கம்பளத்தை போர்த்தியதான இருட்டு. *SCANDIC COPENHAGEN* இல் அறை எடுத்து இருந்தார்கள். அது ஒரு நான்கு நட்சத்திர விடுதி. அறைக்கு மட்டும் இரண்டாயிரம் குரோணர்கள் அறவிட்டார்கள். அதை அவதானிக்கும் நிலையில் அவர்கள் அப்போது இருக்கவில்லை. அதன் தரம் சுண்டக் காய்ச்சிய ஸ்கண்டிநேவியன் தரத்திலிருந்தது.

இந்த நேரத்தின் பின்பு அவர் அலுவலகத்திலிருக்கமாட்டார் என்பதை உணர்ந்துகொண்ட சித்தன் 'நாளை எத்தனை மணிக்குச் சந்திக்கலாம்?' என்று கேட்டுக் குறுஞ்செய்தி அனுப்பி வைத்தான். அவர் அதற்கு, 'பத்து மணிக்கு வரவும்' என்று பதில் அனுப்பி இருந்தார்.

அதன் பின்பு இருவரும் சாப்பிடச் சென்றார்கள். விடுதியிலேயே சாப்பிடலாம் என்றாலும் சித்தன் அவளை இழுத்துக்கொண்டு வெளியே சென்றான். அப்போது அமுதினி, 'நீ இப்ப என்னைத் தொடுகிற விதமே மாறி இருக்குது' என்றாள்.

'ம்… தங்கச்சியைத் தொடுகிறதுக்கும் காதலியைத் தொடுகிறதுக்கும் வித்தியாசம் இருக்குத்தானே. நீ எனக்குத் தங்கச்சி என்கிற உண்மையை இந்தப் பிரபஞ்சம் அழிஞ்சாலும் மாற்ற முடியாது என்று நான் விளங்கிக்கொண்டன். அழிக்க முடியாத, மாற்ற முடியாத உண்மைக்கு எதிராகப் போராடுவது தோல்வியைத்தவிர வேற ஒண்டையும் பரிசாகத் தராது. அதால அதை ஏற்றுக்கொள்ளுகிறதுதான் புத்திசாலித்தனம் எண்டு நினைக்கிறன்'

'வலிக்குது சித்தன்' கண்கொள்ளா நீருடன் அவள் மறுபக்கம் திரும்பி அதை வழித்து எடுத்தாள்.

'அமுதினி! எனக்கும் இதயம் அப்பிடிதான் இடைவிடாது வலிக்குது. ஆனால் அழிக்க முடியாத உண்மைக்கு எதிராகப் போராட முடியுமா?'

'உண்மை விளங்குது, இருந்தும் மனம் கேட்குதில்லை சித்தன்'

'எத்தின தரம் எத்தின விதமாச் யோசிச்சாலும் இதில எந்த மாற்றமும் வரப்போகிறதில்லை. விட்டிடு அமுதினி. நானும் அதுக்காக முழுமுயற்சியோடை ஈடுபடுகிறன்'

'ம்... உண்மையை ஒருநாளும் மாற்ற முடியாதில்லை?'

*

அடுத்த நாள் ஒன்பது ஐம்பத்து ஐந்து போல இருவரும் விக்னேஸ்வரனின் அலுவலகத்திற்குச் சென்றார்கள். முதலில் வரவேற்பறை இருந்தது. அதற்குப் பின்னே சில அறைகள். அவர் ஏற்கனவே அங்கே வந்து இருக்கலாம் என்பது அவர்கள் எண்ணம். வேறு யாரும் அலுவலகத்தில் இல்லை. வரவேற்பறை போக்குவரத்து அற்ற இரும்புரதநிலையம் போல வெறுமையாகக் கிடந்தது. வழமையாகச் சனிக்கிழமையில் அவர் அலுவலகத்தைத் திறப்பதில்லை. இன்று திறக்க வேண்டிய சிக்கல் அவருக்கு. அதனால் அங்கே உதவித்தாதிகூட இல்லாத அமைதி.
அவர் தொடர்ந்தும் மருத்துவராகப் பணியாற்றி வருவதால் அதற்கான வசதிகள் அனைத்தும் அங்கே இருந்தன.

இருவரும் வரவேற்பறையில் காத்திருந்தனர். எப்போது கதவைத் திறந்துகொண்டு வருவார் என்று விளங்கவில்லை. அவர் ஏதாவது மாற்றிச் சொல்வாரா என்கின்ற ஒரு நப்பாசை சித்தனிடம் உண்டாகியது. அடுத்த கணமே அது நடக்க முடியாத ஒன்று என்று மனம் திடமாகக் கூறியது. அவனது எண்ணங்களுக்குத் தடை போடுவது போலக் கதவு திறந்தது.

அவருக்கு ஐம்பது வயதிற்கு மேல் இருக்கும். வெள்ளிக்குள் கரியைக் கலந்தது போலத் தலைமுடி தாடி மீசை என்பன கரும் வெள்ளியாக மினுங்கின. தன்னைவிடப் பல அங்குலங்களைக் காலால் கத்தரித்தது போல அவர் உயரத்தில் குறைவாக இருப்பார் என்று தோன்றியது. சித்தனைப் போலவே அவரது நிறம். உடல் அமைப்புகூட அச்சில் வார்த்ததாய் அப்படி ஒரு ஒற்றுமை. தனக்கு முதுமை வந்தால் தான் எப்படி இருப்பேன் என்கின்ற உருவம் போல அவர் இருப்பதாய் சித்தனுக்குத் தோன்றியது. எட்டிச் செல்லவா அப்பா என்று கட்டிப் பிடிக்கவா

என்று ஒருகணம் சித்தன் எண்ணினான். அப்போதுதான் தன்னை, அமுதினியை, அவரை என்று பார்த்தவனுக்கு, அந்த ஒற்றுமை மிளகாய் சம்பலை வாயில் வைத்தது போல உறைத்தது. அமுதினிக்கும் ஆண் வேடம் போட்டால் அப்பாவைப் போலவே இருப்பாள் என்று தோன்றியது.

இவர்கள் எழுந்து நிற்பதைப் பார்த்துக்கொண்டு அருகே வந்த விக்னேஸ்வரனும் திகைத்துப்போனார். தன்னைப் போல அச்செடுத்ததாய் பிள்ளைகள் இருப்பார்கள் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. அவருக்கு முதலில் என்ன சொல்வது என்று விளங்கவில்லை. இவர்கள் என் இரத்தம் என்கின்ற பாசம் திடீரெனப் பொங்கி நெஞ்சை அழுத்துவது போன்று இருந்தது. அவர் நிலைமையைச் சமாளித்த வண்ணம், 'ஏன் எழும்பி நிக்கிறியள்? இருங்க. எந்தப் *Formality*-யும் வேண்டாம். உங்களுக்கு இங்க ஓகேயா? இல்லாட்டி பக்கத்தில துருக்கி ரெஸ்டாரண்ட் இருக்குது... அங்க போவமா?'

'இல்ல... இல்ல... அது தேவையில்லை. இங்கயே கதைச்சிட்டுப் போகலாம். பழகிப் பாசம் வைக்கிறது எல்லாம் தப்பு எண்டு நீங்கள் நினைச்சீங்கள் இல்லையா?'

'அது உண்மை தம்பி. அதில எந்த மாற்றமும் இல்லை. உங்களுக்காக அலைஞ்சு உருவாக்கின அவைதான் உங்கடை அப்பா அம்மா.
நான் ஒரு மருத்துவ உதவியாளரே தவிர உங்கடை அப்பா அம்மாவின்ரை உரிமையைத் தட்டிப்பறிக்க வரமாட்டன். என் மனசிலையும் சிலவேளை என்னால உருவான பிள்ளைகளைப் பார்க்க வேணும் எண்ட ஆசை பொங்கும்தான். ஆனால் அடுத்த கணமே அது தப்பு எண்டுது விளங்கிப் போயிடும். உங்களுக்கு எந்தச் சந்தேகமும் தேவையில்லை. மனோகரன் என் மூலமாகத்தான் அவைக்கு உதவி செய்ய வைச்சார். அதுதான் உங்களைப் பார்க்கவே தெரியுதே... உங்களை விடவும் வேற இரண்டு பேருக்கும் உதவி செய்திருக்கிறன். அதெல்லாம் உங்களுக்குத் தேவையில்லை. இப்ப உங்களுக்குச் சந்தேகம் தணிஞ்சுதா?'

'ம்... எனக்கு இதில பெரிசாச் சந்தேகம் இல்லை. அமுதினிக்குத்தான் உண்மை ஒத்துக் கொள்ள முடியுதில்லை' என்றான் சித்தன்.

'ஓ இவ பெயர் அமுதினியா? அழகான பெயர். நான்தான் உங்கட அப்பா அம்மாவுக்கும் உதவி செய்தன் எண்டதைத் திடமா நம்பலாம்'

'அப்பிடி என்றால் நீங்கள் என்னுடைய அப்பாவா?'

'இல்லை அமுதினி. நான் உமக்கு ஒருநாளும் அப்பா இல்லை. அது நியாயமும் இல்லை. தானம் எண்டு கொடுத்த பிறகு அதை உரிமை கொண்டாடுகிறதைப் போல ஈனச் செயல் வேற எதுவும் இருக்காது'

'என்னுடைய அப்பா அம்மா இல்லாத காலத்திலகூட நான் உங்களை அப்பா எண்டு சொல்ல முடியாதா?'

'ஏன் அப்பிடி எல்லாம் யோசிக்கிறியள் அமுதினி?'

'பதில் சொல்லுங்க. எனக்கு அதுக்குப் பதில் தெரிய வேணும்'

'உம்மை மகளா அந்தச் சந்தர்ப்பத்தில ஏற்றுக்கொள்ள விருப்பம் இருந்தாலும் எனக்கு இப்ப பிள்ளைகளா இருக்கிறவை அதை ஏற்றுக்கொள்ளுவினமா எண்ட கேள்வி இருக்குதில்லையா? உன்னுடைய கேள்விக்குப் பதில் சொல்ல முதல்ல அதைப்பற்றி நான் யோசிக்க வேணும் இல்லையா?'

'அவை ஒத்துக்கொண்டா நீங்கள் ஏற்றுக் கொள்வியளா?'

'நான் உங்களை வீம்புக்கு வேண்டாம் எண்டு சொல்லுறன் எண்டு நினைக்கிறியா அமுதினி. ஒரு காரணத்தோடை வேண்டாம் எண்டுறன். அந்தக் காரணமே இல்லை என்றால் நிச்சயம் நான் ஏற்றுக் கொள்ளுறதில எந்தப் பிரச்சினையும் இருக்காது'

'தாங்ஸ்... அ...' அமுதினி நாக்கைக் கடித்துக்கொண்டாள்.

'நான் ஒண்டு கேட்கட்டுமா?'

'ம்... கேளுங்க...' என்றான் சித்தன்.

'நீங்கள் இரண்டுபேரும் உங்கட அப்பா அம்மாவோட சந்தோஷமாய் இருக்கிறியளா?'

'நிச்சயமா...' என்றாள் அமுதினி.

'அதை எப்பவும் நீங்கள் காப்பாத்த வேணும். அவர்களுக்கு நீங்கள் கொடுக்கிற மரியாதை, நன்றி, அன்பு, பாசம் எல்லாமே தொடர்ந்தும் அவர்களை நீங்கள் நேசிக்கிறதிலதான் இருக்குது'

'விளங்குது. நிச்சயம் அது மாறாது' என்றான் சித்தன்.

'என்னோட வந்து இரண்டு பேரும் ஒரு ரீ குடிப்பியளா? எனக்கு அது சந்தோஷமாய் இருக்கும்'

'நிச்சயமா வாறம்' என்றான் சித்தன்.

'அமுதினி...' விக்னேஸ்வரன் அவளைப் பார்த்துக் கேட்டார்.

'நான் றெடி' என்றாள் அமுதினி.

மூவரும் அந்தத் துருக்கிக்காரனின் தேநீர்க் கடையை நோக்கிச் சென்றனர்.

20

சொப்பன்கவுனை விட்டுப் புறப்பட்டதிலிருந்து சித்தன் மகிழுந்தை செலுத்தினான். உலகத்தின் மேல் பறக்கும் அத்தனை மழைமேகத்தையும் கொண்டு வந்து நிறுத்தி வைத்ததாக அமுதினியின் முகம் இருண்டு கிடந்தது. அந்த இருட்டில் எந்த மின்னலும் தெறிக்கவில்லை. அந்தக் கவலைக்கான காரணம் என்ன என்பது சித்தனுக்கு விளங்கியது. அதே கவலை அவனிடமும் இருக்க அவளுக்கு எப்படிச் சமாதானம் சொல்வது என்று விளங்கவில்லை. அவன் தெருவைப் பார்த்து காரை ஓட்டுவதில் கவனம் செலுத்தினான். சிறிது நேரம் கவலையை மறைக்க வெளியே பராக்குப் பார்த்துக்கொண்டு இருந்த அமுதினி சித்தனைத் திரும்பிப் பார்த்தாள். அவள் வெளியே பார்த்தவண்ணம் அழுது தீர்த்தது போல அவள் முகம் வீங்கி இருந்தது. சித்தனுக்கு அதற்கு மேலம் அவளுக்குச் சமாதானம் சொல்லாமலிருக்க முடியவில்லை.

'அமுதினி என்ன அழுதியா?' என்றான்.

'ம்... நான் அழுகிறது தெரிஞ்சு என்ன செய்யமுடியும் சித்தன்? இனி இதில ஏதாவது மாறவா போகுது?'

'இது மாறாது... மாத்தவும் கூடாது. மறந்திடு அமுதினி. நாங்கள் அண்ணன் தங்கை எண்டதை மாத்திரம் நினைவில வைச்சிருப்பம்'

'உங்களால முடியமா?'

'முடியுமா எண்ட கதைக்கே இப்ப இடம் இல்லை. இதைச் செய்தே ஆகோணும். அதுதான் எல்லாருக்கும் அமைதியைத் தரும். விளங்குதா அமுதினி?'

'ம்... விளங்குது. விளங்கிற அதே அளவுக்கு மனசு வலிக்குது'

'இதையும் நாங்கள் கடந்து போக வேணும்'

'ம்...'

ஓரசுண்ட் பாலத்தால் E20 வழியாக மிக விரைவாகச் சுவீடனை நோக்கிப் பயணித்தார்கள். சுவீடன் ஒரு வித்தியாசமான நாடு.

அது கொரோனவுக்கு எதிராகக் கடுமையாக எதுவும் செய்யாது கையை உயர்த்துவது என்று அடம்பிடித்தது. நோர்வேயும் டென்மார்க்கும் அதற்கு எதிராகக்

கடுமையாகச் சட்டங்களையும் நடைமுறைகளையும் கடைப்பிடிக்கத் தொடங்கி இருந்தன. மல்மோவிற்கு வந்து பின்பு சுவீடன் வழியாக நோர்வேக்குச் செல்வதே அவர்கள் திட்டம். அவர்கள் திட்டத்தைவிட நாடுகளின் திட்டங்கள் வேகமாக நாளுக்கு நாள் மாறிக்கொண்டு இருந்தன.

சுவீடனில் பயணம் செய்த போது அவர்களுக்கு எந்த வித்தியாசமும் தெரியவில்லை. வரும் பாதையில் சாப்பிட்டார்கள். அப்பொழுது செய்தி பார்க்க முடிந்தது. நோர்வே எல்லையில் கொரோனாச் சட்டங்களைக் கடுமையாகக் கடைப்பிடிக்கத் தொடங்கியதாகச் செய்தியில் காட்டினார்கள். அத்தோடு சுவீடனிலிருந்து வருபவர்களுக்குத் தனிமைப்படுத்தலும் எல்லையிலிருந்தே நடைமுறைப்படுத்துவதாய் அது கூறியது. செய்தியைப் பார்த்த சித்தனும் அமுதினியும் ஆளையாள் பார்த்துக்கொண்டார்கள். அவர்களுக்கு என்ன செய்வது என்று விளங்கவில்லை. இருக்கிற பிரச்சனைகளுக்கு இதுவேறு வேண்டுமா என்கின்ற கேள்வி உருவாகியது. எப்படி இருந்தாலும் அதைச் சந்தித்தே ஆகவேண்டும் என்கின்ற உண்மையும் அத்தோடு விளங்கியது. அமுதினி சித்தனைப் பார்த்து மிகவும் யோசனையோடு, 'செக்கிங் இல்லாத வோடர் ஏதும் உங்களுக்குத் தெரியாதா சித்தன்?' என்று கேட்டாள். சித்தனுக்குச் சிரிப்பு வந்தது. அதைக் காட்டாமல் அடக்கிக் கொண்டு,

'அப்பிடியான வோடர் எல்லாம் தெரிஞ்சு இருக்கிறதுக்கு நான் என்ன கள்ளக்கடத்தலா செய்கிறன்?' என்று கேட்டான்.

'கள்ளக்கடத்தல் செய்யிறவைக்கு மட்டும்தான் இரகசிய வோடர் தெரிஞ்சு இருக்க வேணுமா?'

'அமுதினி! என்னைப் பற்றித் தெரியாத மாதிரிக் கதைக்கிறீர். எனக்கு இந்த வோடர் இரகசியம் தெரியாது. அது சரியான செயலும் இல்லை. அதுவும் நானும் நீயும் கனவிலகூட அப்பிடிச் செய்யக்கூடாது. அது எங்களோடை மற்றவர்களையும் ஆபத்துக்குள்ள இழுத்து விடுகிறமாதிரி இருக்கும்'

'எனக்கும் விளங்குது. ஆனால் தேவையில்லாத தாமதத்தையும், வீணாகக் கழியும் நேரத்தைப் பற்றியும் யோசிக்க வேணும்'

'மாற்ற முடியாத விஷயங்களைப் பற்றி யோசிக்கக் கூடாது. அதை அப்பிடியே ஏற்றுக்கொண்டு வாழ்க்கையைச் சுலபமா ஓட்டோணும் எண்டு சொன்னனே'

'நீங்கள் ஒரு டொக்ரர். அப்ப சொல்லுகிறதும் சரியாய், காத்திரமாய்த்தானே இருக்கும்'

'நீர் மாத்திரம் என்ன பாமரனுக்குப் பிறந்த பச்சைக் கிளியா? அதே டொக்ரர்ற்ர வாரிசுதானே?'

'ம்… உரிமை கோர முடியாத வாரிசு'

'அப்பிடி இல்ல அமுதினி. அவருடைய நிலைமை அப்படி. தேத்தண்ணி வாங்கித்தர அவர் துடிச்ச துடிப்பில அவருடைய பாசம் உனக்கு தெரியேல்லையே?'

'அப்பிடி எண்டுறியளா? எனக்கும் அது சாதுவா விளங்கிச்சுது. ஆனாலும் முழுமையா நம்ப முடியுமா எண்ட சந்தேகம்'

'ம்… அவருடைய கதைக்கும் நடத்தைக்கும் வித்தியாசம் இருக்குதுதான். வயது வந்திட்டுதானே? கொள்கைகளைப் பாசம் மெல்ல, மெல்லத்தான் செய்யும்'

'நீங்கள் சொல்லுகிறதும் சரிதான்'

நோர்வேக்கும் சுவீடனுக்கும் இடையிலான எல்லை வந்தது. சுவீடன் பக்கம் நீங்கள் போய்ச் சேர்ந்தால் போதும் என்பது போல நிறுத்தவே இல்லை. நோர்வே பக்கம் மனித தீநுண்மிகளைப் பார்ப்பதான பயத்தோடு முகக்கவசம், கையுறை, ஸ்பிறீற் என்கின்ற ஆயுதங்களுடன் போராடத் தயாராக இருந்தார்கள். அவர்கள் பார்வையிலிருந்து கொரோனா தீநுண்மிகள் தப்பக்கூடாது என்கின்ற கவனம்.

சித்தன் அமுதினி ஆகியவர்களின் முறை வந்தது. கண்ணாடியைப் பதிக்குமாறு விறைப்பாக நீல நிறத்தில் நின்ற காவலர்கள் கட்டளையிட்டார்கள். சித்தன் அதை நிறைவேற்ற அவர்கள் தங்கள் கேள்விகளைத் தொடுத்தார்கள். சில கேள்விகள் கேட்டதுமே அவர்கள் முடிவு செய்தது போல *Sarpsborg*-இல் இருக்கும் *Quality Hotel*-இற்குப் போகுமாறு பணித்தார்கள். சித்தனுக்கும் அமுதினிக்கும் அதைச் செய்வதைத் தவிர வேறுவழி இருக்கவில்லை.

விடுதிக்குச் சென்றபோது உறவு முறை எதுவும் கேட்காமலே ஒரு அறையைக் கொடுத்தார்கள். அமுதினி இன்னுமொரு அறை வேண்டும் என்று கேட்டதிற்கு அதற்குமேல் அறை இல்லை என்றுவிட்டார்கள். வேறு வழி இன்றி இருவரும் ஒரே அறையில் தங்க வேண்டி இருந்தது. அதைப் பற்றி இருவருக்கும் எந்தப்

பிரச்சினையும் இல்லை என்றாலும் வசதியாகத் தங்கலாம் என்கின்ற அமுதினியின் திட்டம் பலிக்கவில்லை. அது பலிக்காமல் விட்டதே நல்லது என்பதை சில நிமிடங்கள் கழித்து இறுதியாக வரவேற்பறையில் கடன் அட்டையைக் கேட்டபோது விளங்கியது. சொந்தச் செலவில் சூனியம் வைத்த கதையே இந்தத் தனிமைப்படுத்தல் என்பது விளங்கியது. சித்தனைக் கொடுக்க விடாது தனது கடன் அட்டையைக் கொடுத்தாள். சித்தன் அது முறையில்லை என்று தடுத்துவிட்டான்.

இருவரும் அறைக்கு வந்து குளித்துவிட்டுத் தொலைக்காட்சியில் செய்தி பார்த்துக்கொண்டு இருந்தார்கள். தொலைக்காட்சியில் கொரோனா பற்றித் தொடராகச் செய்திகள் போய்க்கொண்டு இருந்தன. அறையைவிட்டு வெளியே வரவேண்டாம் என்றும் அறைக்கே உணவு வரும் என்றும் வரவேற்பறையில் கூறியிருந்தார்கள். அமுதினிக்கு அசோகவனத்தில் அகப்பட்ட சீதையின் உணர்வு என்றாலும் இங்கே அரக்கிகளோ இராவணனோ இல்லாத சுதந்திரம். இராமனே காவலுக்கு நிற்கும் துணிவு. இருவரும் பிரதான சாப்பாட்டிற்காகக் காத்திருக்கும் பொழுது அமுதினி, 'சித்தன்!' என்றாள்.

'என்ன அமுதினி?'

'எனக்கு ஒரு கடைசி ஆசை இருக்குது'

'கடைசி ஆசை எண்டா நீர் உயிரை விடப்போறீரா என்ன?' என்றான் சித்தன். பின்பு அது வன்மமான பகிடியோ என்று எண்ணினான்.

'உங்களுக்கு கவலை இல்லையே சித்தன்? வலு குசியாக் கதைக்கிறியள்'

'அதுதானே சொன்னன், மாற்றமுடியாதது பற்றிக் கவலைப்படக்கூடாது எண்டு. முடிவு செய்திட்டு பிறகு அதைப்பற்றிக் யோசிக்கக்கூடாது. நான் முடிவு செய்திட்டன். நீரும் முடிவு செய்துகொள்ளும். சரி நீர் என்ன கடைசி ஆசை எண்டு கேட்டீர்?'

'கடைசியா ஒரு முறை *DNA test* எடுக்க முடியுமா சித்தன். பிளீஸ் எனக்காக'

'எந்த மாற்றமும் வரும் எண்டு நான் நினைக்க இல்லை. ஆனால் நான் உமக்காகச் செய்கிறன். வீட்ட போகேக்க *test* தந்திட்டுப் போங்க... இரண்டு நாளில நான் விடை சொல்லுறன்'

'*Thanks Sitthan*'

'*You Welcome*'

தனிமைப்படுத்தல் முடிந்து வீட்டிற்கு வந்தபோது அமுதினியிடம் இருந்து பரிசோதனைக்குத் தேவையான மாதிரியைப் பெற்றுக் கொண்டான். அத்தோடு தனதையும் சேர்த்து சித்தன் அமுதினியின் ஆசையை நிறைவேற்றும் பணியைச் செய்தான்.

இரண்டு நாள்கள் கழித்து சித்தன் அந்த அறிக்கையை மின்னஞ்சலில் அவளுக்கு அனுப்பி வைத்தான். அதைத் திறந்து பார்த்த அமுதினி அறைக்குள் இருந்து நீண்ட நேரம் அழுதாள். பின்பு மிகவும் நிதானமாகப் புறப்பட்டு வேலைக்குச் சென்றாள்.

–முற்றும்–